திருக்குறள் களஞ்சியம்

2 ஆம் பாகம்

முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

பதிப்பாசிரியர்

முனைவர் பி. தமிழகனார்

திருக்குறள் களஞ்சியம்

2

படைப்பாசிரியர்

முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

முனைவர் **பி. தமிழகனார்**

திருவள்ளுவர் நிலையம்

7, இராமன் தெரு, திருநகர்,

மதுரை - 625 006.

நூற்குறிப்பு

நூற்பெயர்	**திருக்குறள் களஞ்சியம் – 2**
ஆசிரியர்	இரா. இளங்குமரன்
மொழி	தமிழ்
பொருள்	திருக்குறள் ஆய்வு
முதற் பதிப்பு	பெப்ருவரி - 2019
பக்கம்	viii + 304 = 312
எழுத்து	13 புள்ளி
தாள்	மேப்லித்தோ
அளவு	1/8
படிகள்	500
விலை	உருபா : 225/-
உரிமை	ஆசிரியர்க்கு
வெளியீடு	வாலறிவன் குறள் நெறிக் கழகம் நெய்வேலி.
நூலாக்கம்	"தி பிரிண்டிங்கு அவுசு" திருச்சி - 23

நூல் கிடைக்குமிடம்:

- திரு. மேத்தா வாணர், 95004 24633
  வாலறிவன் திருக்குறள் மன்றம், நெய்வேலி
- நூலாசிரியர் 94427 60616
- பதிப்பாசிரியர் : 99407 04702

வாலறிவன் குறள்நெறிக் கழகம் வழங்கும்

திருக்குறள் களஞ்சியம் - பகுதி இரண்டு

இக்களஞ்சியத் தொகை நிலை, முனைவர் பி. தமிழகனார் வழங்குகிறார். ஆதலால் **முன்னோட்டக் குறிப்பு** இஃதாம்.

முன்னைக் களஞ்சியம் 468 பக்கங்களையுடைய பொது **நிலைக் களஞ்சியம்.** முழுதுறு **ஆய்வுக் களஞ்சியம்.** ஆதலால், பக்கங்களைச் சுருக்க வேண்டியதாயிற்று. மேலும், இக்களஞ்சிய வெளியீட்டொடு **பன்மணிக் குவியல்** என்பதும், பத்தாம் ஆண்டு நிறைவு கருதிய தொகை வெளியீடாக இணைகின்றது.

அடுத்தும் சில களஞ்சியங்கள் பெருவிழாவின் போது வெளிப்படும்.

உரையாளர் - ஆய்வாளர் - பொதுப் படிப்பாளர்க்கு - வள்ளுவர் **வகுத்த ஊழ், தவம், பிறப்பு, வினை** என்பவை பற்றிப் **பின்னூல்கள் காட்டிய மயக்கம்** உள்ளதாலும், **திருக்குறளில் பிறசொல் உண்டு** என்று காட்டுவதாலும் - அவற்றைத் **தெளிவுறுத்தும் வகையில் இக்களஞ்சியம் அமைந்தது.**

வழக்கம் போல் **'வாலறிவன் குறள் நெறிக்கழகம்'** வெளியீட்டுப் பொறுப்பை ஏற்றது. பதிப்பாசிரியப் பொறுப்பைத் **தமிழகனார்** ஏற்றார். திருச்சிராப்பள்ளி **அச்சுக்குழுமம்** தட்டில்லாது ஏற்று, அச்சீட்டுப் பணியைக் காலத்தில் செய்து உதவுகின்றது! இத்தொகையைப் பெற ஆர்வலர்களும் பெருகுகின்றனர். ஆதலால், அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்! **வள்ளுவம் பரவவேண்டும்! வாழ்வியல் துலங்க வேண்டும்!**

வாழிய நலனே! வாழிய நிலனே!

திருவள்ளுவர் நிலையம்
7, இராமன் தெரு,
திருநகர், மதுரை - 6.

இன்ப அன்புடன்,
இரா. இளங்குமரன்

❖❖❖

ஆய்வும் தோய்வும்

'திருக்குறள் களஞ்சியம் - 2' என்னும் இந்நூல் பத்துப் பிரிவுகளையுடையது. முதுமுனைவர் இரா. இளங்குமரனாரின் திருக்குறள் ஆய்வும் தோய்வும் இந்நூல். முதலில் இரண்டு 'கடிதங்கள்' சிறுகதை வடிவில். கரிவலம் வந்த நல்லூரிலிருந்து கடமலைக் குண்டு சென்று அறச்சாலை நிறுவியது, நிறைவில் 'இதனை, இதனால் இவன் முடிக்கும்' குறளுக்கு இலக்கணமாய் வாழ்ந்த செல்லப்பன் - வாழ்வின் ஒரு பகுதி, செல்வி. பொம்மியாகிப் பின் செல்வியாகிய உயிரோட்டமான கதை போலப் படைத்துள்ளார்.

இடுக்கண் அழியாமை அதிகாரக் குறட்பாக்கள் வாழ்வின் வழிகாட்டியாய் அமைந்த நிலையைப் பிறர்க்கு உதவிய பெற்றோர்க்குப் பிறந்த பிள்ளை ஒழுங்காக வளர்க்கப்படாமையால் செய்த கேடு 'அழுகைச்சிரிப்பி'ல் காட்டப்படுகிறது. 'ஒழுங்காக வளர்க்கப்படவில்லை யென்றால் பிள்ளை ஒரு தொல்லை' என்பார்.

ஊழின் பொருள் இயற்கை. அதன் பொருள் அறியாது ஊழ்வினைக்கு - விதிக்கு ஆட்பட்டு மயங்கித் தியங்கினார் பலர். காட்சிச் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் காட்டி 'ஊழ்' விளக்கும் பகுதி திருக்குறளில் ஊழ் என்பது.

வள்ளுவர் காட்டும் வினைகள் எவை? உரையாசிரியர் காட்டிய வினைகள் எவை? என்பன பற்றின விளக்கம், 'அறத்தாறு இதுவென வேண்டா குறளுக்குப் புத்துரை, வையகம் தழுவிய நூலுக்கு வானகம் தழுவிய புனைகதைகளைக் காட்டி வாழ்வியலைத் திரித்த நிலை ஆகியன காட்டுவது 'திருக்குறளில் வினை' கட்டுரை.

எழுமை, எழுபிறப்பு என்பவற்றுக்கான விளக்கம் வாழ்வியல் சான்றுகளுடன் 'திருக்குறளில் பிறப்பு' வழி காட்டுகிறார்.

தவ்-சுருங்குதற்பொருள், தவ்+அம்-தவம், தவல், தபு-நீக்குதல் என வேர்ச்சொல் வழித் 'தவம்' சொற்பொருள் காட்டி, சுருக்குதல், குறைத்தல், நீக்குதல், பொருளில் தவம் வந்துள்ளது என்பதை விளக்குவதே

'திருக்குறளில் தவம்'. அதற்கான சான்றுகளை வள்ளுவத்திலேயே காட்டுகிறார்.

வேள்வி, அமிழ்து, கற்பகம், அடியளந்தான், தாமரைக் கண்ணன், தெய்வம், புத்தேள் உலகம், மேல் உலகம் ஆகியவற்றின் புனைகதை - தொன்மம் காட்டி, அவற்றுக்கு வள்ளுவர் காட்டும் தமிழிய நெறிகளைப் புலப்படுத்துகிறார் ஏழாம் பிரிவில். அதில் இரத்தல் முதல் தற்பற்று வரை 13 தலைப்புகளில் தனிமனித நெறிகளையும், தொழில் முதல் தமிழ் வரை 12 தலைப்புகளில் சமுதாய நெறிகளையும் வள்ளுவர் வழிநின்று உணர்த்துகிறார். உணர வேண்டுவது படிப்பார் கடமை.

திருக்குறளுக்கு 'அறம்' என்னும் பெயர் பண்டே இருந்து. பிறர் பிற அறங்களைக் காட்ட, வள்ளுவர் காட்டுவது மன மாசில்லாமை அறத்தையே என விளக்கி ஐவகை மனமாசுகளைச் சுட்டிக்காட்டுகிறார். 'அறம் முதல் செயல்வீறு வரையுள்ள எட்டுக் கட்டுரைகளால் வள்ளுவர் காட்டும் அறிவியல் செய்திகளை விளக்குகிறார். அறிவு, அறிவுடைமை, காரறிவு, புல்லறிவு, அறிவின்மை, உண்மைஅறிவு, ஆகிய விளக்கங்களைத் தருவது 'அறிவு'.

இன்றைய உலகம் அறிவியல் உலகம். விரைவுலகம்: நாளும் புத்தம் புதுக் கருவிகளும் செய்திகளும், கண்டறியப்பட்டு அவற்றுக்கான சொற்கள் உருவாக்கப்பட்டுவிடுகின்றன. முன்னைப் பழமைக்குப் பழமையாம் தமிழ் மொழியும் பின்னைப் புதுமைக்குப் புதுமை பெற்று விளங்கவேண்டுமல்லவா? தமிழர் ஆக்கிய கலைச் சொற்களையும் வள்ளுவர் உதவிய கலைச்சொற்களையும் காட்டுவது 'கலைச்சொல்' கட்டுரை, நாட்காட்டி, எழுதுகோல், வாரியம், முற்பகல், பிற்பகல், உள்வீழ்தல், ஊதியம், நல்கைக்குழு, துய்ப்பு, (துப்பு) அகராதி, அகரமுதலி முதலியன வள்ளுவர்க் கொடையே என்பார்.

'பெண்மை' கட்டுரை பெண்ணியச் சிந்தனையாளர் படிக்க வேண்டிய கட்டுரை. பெண்ணே - கற்பகம். அமிழ்து. வீடுபேறு. மருந்து, குருவர். மனைமாட்சி ஆகியன கற்றார் கற்றாரே!

பொதுவாக, வள்ளுவர் வழங்கும் பத்து உடைமைகளைப் பலரும் சுட்டினர். ஐயா காட்டும் பன்னிரு உடைமைகளை நாமும் கற்று உடையவர் ஆவோமே!

ஒப்புரவு ஓர் அதிகாரம். ஆனால் ஐயா சுட்டும் ஒப்புரிமைகள் எத்தனை? பிறப்பு ஒப்புரிமை, தொழில் ஒப்புரிமை, கல்வி ஒப்புரிமை, கேள்வி ஒப்புரிமை, கொடை ஒப்புரிமை கொடைப்பயன் ஒப்புரிமை, கிழவன் கிழத்தி ஒப்புரிமை, அச்ச ஒப்புரிமை என ஏழு ஒப்புரிமைகளைக் காட்டிவிளக்கும் பாங்கு அருமை.

திருக்குறளின் விழுமியம் பலப்பல. உரை வல்லார்க்குக் கிட்டுவன பலப்பல. முறிமேனி முத்தம்...! குறளின் விழுமியம் படித்தின்புற வேண்டும்.

வள்ளுவ உழவர் தம் திருக்குறள் நிலத்தில் பயிரிட்ட ஊடுபயிர்கள் ஏழு. ஊடுபயிரின் பயனைக் கொள்பவரே தேர்ந்த உழவர். சிறந்த வளம் பெற நம்மையும் ஊக்குகிறார் ஐயா.

மதம் பரப்ப வந்து தமிழ்க் கற்ற கால்டுவெலார் திருக்குறளில் வேற்றுச் சொல் ஒன்றுதானும் இல்லை என்கிறார். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சிலர் வடசொற்கள் நிறைய உண்டு என்றதை மறுத்து 43 சொற்களைக் காட்டி அவை தமிழே என நிறுவுகிறார் ஐயா. ‘சொல்லாமல் சொல்லும்’ நுட்பம் வள்ளுவத்தில் காணப்படும் இடங்களுள் ஏழினைக் காட்டியுள்ளார்.

இறுதியில் புலவர் மு. படிக்கராமு எழுதிய ‘திருக்குறள் களஞ்சியம் – 1’ இன் மதிப்புரையாய் நிறைமணிகள். ஒவ்வொரு பகுதியின் விளக்கத்தைச் சுட்டி, நாடாளுவோர்க்கான வழிகாட்டியாக 12 நெறிகளை ஐயா காட்டுவதைக் காட்டி, வையகம் தழுவிய வாழ்வியலாக விளங்குவது திருக்குறள் என்பதையும் அதன் புகழையும் நமக்கு ஊட்டி நிறைவு செய்கிறார்.

படிப்பார் எண்ணம் வெற்றிபெற வாழ்த்துதும் யாமே!

பி. தமிழகன்

❖❖❖

உள்ளுறை

	பக்கம்
அ. இரண்டு கடிதங்கள்	1
ஆ. அழுகைச் சிரிப்பு	25
இ. திருக்குறளில் ஊழ்	53
ஈ. திருக்குறளில் வினை	74
உ. திருக்குறளில் பிறப்பு	92
ஊ. திருக்குறளில் தவம்	124
எ. தமிழியக் காவலர் - திருவள்ளுவர்	135
ஏ. திருக்குறளில் அறிவியல்	187
ஐ. திருக்குறளின் விழுமியம்	261
ஒ. திருக்குறள் களஞ்சியம் - 1 நிறைமணிகள்	293

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

அ. இரண்டு கடிதங்கள்

அன்பும் அறச் சிந்தையும் உடைய ஐயா,

தாங்கள் காலத்தால் செய்த உதவியால் இது வரை உயிர் வைத்திருக்கும் யான், என் உள்ளங் கனிந்த நன்றியறிதலுடன் எழுதும் கடிதங்கள் இவை. இவையே முதற்கடிதங்கள்; இறுதிக் கடிதங்களும் இவையே.

"யான் யார்? என் வரலாறு என்ன?" என்பன போன்ற செய்திகள் தங்கள் நினைவில் இருக்க முடியாது; இருக்கக் காரணமும் இல்லை. என்னைப் பற்றி நானே தங்களுக்கு நினைவுப்படுத்தினால் கூட நினைவுக்கு வருவது அரிதுதான். ஏனெனில் காலங் கடந்துபோன செய்தி அது.

என்னை நினைவுப்படுத்திக் கொள்ளுமாறான அருமை பெருமைகள் எதுவும் என்னிடம் இல்லை என்பதை யான் அறிவேன். எனினும் தங்களிடம் அரிய உதவிகளை வேண்டி நிற்கும் இவ்வேளையில் ஏதேனும் தொடர்பு காட்டி ஆக வேண்டுமே என்னும் தேவையால் குறிப்பிட நேர்கின்றது. எனக்கு என்னென்ன பேறுகள் இல்லையாயினும் சரி - தங்களை நெஞ்சத்தே நிறுத்திக் கொண்டு இறுதி மூச்சையும் விடக்கூடிய பேறு எனக்குண்டு என்று பெருமைப்படுகின்றேன்.

இப்பொழுது பதினைந்து ஆண்டுகள் நகர்ந்துவிட்டன. எனக்கு ஏற்ற அளவிலே ஓரிடத்தில் பெண்பார்த்துத் திருமணம் செய்து கொண்டேன். பெண் வீட்டாரைப் பற்றி என்ன சொல்வது? ஐம்பது நூறுக்குக்கூட வழியில்லாத நான், அவர்களை நினைக்கும்போது பணக்காரன்! அவர்களுக்கோ எனக்கோ பணம் இல்லாமை ஒரு குறையாகப் போய்விடவில்லை. அவர்களுக்குக் குழந்தை என்னும் பெயரால், எனக்கு மனைவி என்னும் பெயரால் - வாய்த்தாள் நிறைமதி. அவளை எங்கள் செல்வம் என்று சொல்லிக் கொள்வதிலே இப்பொழுதும் என்னை அறியாமலே ஒரு பெருமை, உண்டாகாமல் இல்லை.

எனக்கும் நிறைமதிக்கும் திருமணமாகி, எங்கள் வீட்டுக்கு அவளை அழைத்துக் கொண்டு புறப்பட இருக்கின்றேன். அப்பொழுது என்னை அறியாமலே எனக்கு ஓர் அச்சம் இருந்தது. பெண் தன் தாய் வீட்டை

விட்டுக் கணவன் வீட்டுக்குக் கிளம்ப நேரும்போது அவளை அறியாமலே கண்ணீர் விட்டுவிடுவாள். அது தாய் வீட்டுப் பற்றாலும், வளர்த்துவிட்ட வாஞ்சையாலும் ஏற்படுவது. நிறைமதி மட்டும் இதற்கு விலக்காகிவிட முடியுமா? என்று எண்ணினேன். பெற்றோர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட வேண்டிய பொழுதும் வந்துவிட்டது. முறைப்படி நானும் நிறைமதியும் சென்றோம். என் நினைவெல்லாம் நிறைமதியின் முகத்தைப் பார்ப்பதிலே தான் இருந்தது. நான் நினைத்தது போல் எதுவும் நடந்துவிடவில்லை. நிறைமதியின் தந்தையார் கந்தப்பர் தான் 'ஓ'வென்று அலறிவிட்டார். "இப்படித் தானா? பச்சைப் பிள்ளைபோல் அழுவது? இன்றைக்குப் போனால் நாளைக்கு வேண்டுமானாலும் இங்கே திரும்பலாமே. வேலம்பட்டி என்ன வீராணத்திற்குத் தொலையூரா?" என்று அங்கிருநத பலா் தேற்றிக் கூறினர். என்ன சொல்லியும் அவர் சஞ்சலம் மாறவில்லை.

எங்களுடன் வேலம்பட்டிக்கு மாமாவும் வந்தார். என்னைத் தனியாக அழைத்து, அறியாப் பிள்ளைபோல் நைந்து நைந்து கூறினார். "என் மகள் கண் கலங்க நான் பார்த்தது இல்லை. பார்த்துக் கொண்டிருக்கவும் என்னால் இயலாது. அவளுக்குக் கண்ணீர் வருமுன், என் கண்களில் குருதியே பெருகிவிடும். உங்களை நம்பித் தான் ஒப்படைத்திருக்கின்றேன். நீங்கள்தான் அவளுக்குத் தந்தை, தாய் எல்லாம்...!" என்னென்னவோ தயங்கித் தயங்கிக் கூறினார். அவர் கண்கள் பன்முறை நீரைச் சொரிந்தன. என் நெஞ்சம் என்ன இரும்பா? கல்லா?

"மாமனார் வீட்டு வாழ்வு மதிப்பு அற்ற வாழ்வு" என்னும் எண்ணம் படைத்த நான் மாமனார் வீட்டிலே குடியேறினேன் என்றால் என் மாமாவின் அன்புள்ளம் ஒன்றுதான் காரணம். எத்தகைய குறைவுமில்லாது இன்பமாக வாழ்ந்தோம். வறுமை எங்களை வாட்டவில்லை. வறுமை எண்ணம் இருப்பதுதானே கொடிய வறுமை. எங்களுக்குத்தான் அத்தகைய ஒன்றே இல்லையே.

சிரித்த அளவுக்கு அழவேண்டியதும் உலக இயற்கைதானே! இரவையும் பகலையும் அளந்து வைத்த இயற்கை இன்ப துன்பங்களை எடைபோட்டு வைக்காமலா விடும் இரண்டு ஆண்டுகள் கடந்தன. நிறைமதி ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகின்றாள் என்றும்

பெருமிதத்திலே எங்கள் வீடு மிதந்தது. அப்பொழுதினை, நொடி நொடி தோறும் எதிர்பார்த்துக் கிடந்தோம். ஆனால் எங்கள் தலையிலே பேரிடி விழுந்துவிட்டது! பிறந்த குழந்தை நிறைமதியின் உயிரையும் சேர்த்து வாங்கிக்கொண்டு தன் வாழ்வை முடித்துக் கொண்டது.

அழுது அழுது புலம்பினேன். என் மாமனார் 'நிறைமதி' என்று கதறியடித்துக் கீழே விழுந்தார். அதன்பின் பேச்சில்லை. பேச்சு மட்டுமா இல்லை - மூச்சும் இல்லை!

எங்கள் வீடு சுடுகாடு ஆகிவிட்டது. மறு நாள் இரண்டு உடல்களுக்கு - கொடுத்துவைக்காத பாவியான யான் - தீ மூட்டினேன். அங்குப் பற்றிய தீ என்னைச் சுற்றிக்கொண்டது. சுற்றாமல் விடுமா? உடலில் தீப்பற்றப் பட்டவர்கள் ஓய்ந்து ஒரே உறக்கம் உறங்க முடிந்தது. உள்ளத் தீ பற்றப்பட்ட என்னால் ஒரு கணமும் நிற்க முடியவில்லை. நடந்தேன்; எப்படியோ நடந்தேன்; என் கால்கள் மட்டுமே நடந்து கொண்டிருந்தன; பொறிபுலன்கள் தடுமாறிப் போய்விட்டன.

சில நாள்கள் சென்றிருக்க வேண்டும்; ஒரு நாள் தங்கள் அன்பு இல்லத்தின் கட்டிலிலே கிடத்தப்பட்டிருந்தேன். அதுதான் என் நினைவுக்கு வந்த முதல் காட்சி. என் நெற்றியில் கட்டுப் போட்டிருந்ததும், அது துயர் தந்து கொண்டிருந்ததும் அடுத்தடுத்து நினைவுக்கு வந்த காட்சிகள். “விறகுப் பாரம் ஏற்றிக் கொண்டு வந்த வண்டியிலே முட்டிக் கீழே விழுந்துவிட்டாய்; காயம் அவ்வளவு வலுவாக இல்லை; இழை மூட்டியிருக்கிறார் மருத்துவர் எல்லாம் சரியாகிவிடும்” என்று அப்போது தாங்கள் உரைத்த அமுதமொழிகள் என் காதுகளில் இப்பொழுதும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வெளிவந்த சொற்கள் அல்லவா அவை? அவற்றுக்கு வலிமை மிகுதிதானே!

உள்ளக் கொதிப்பாலும், வெட்டுக்காயத்தாலும் என் உடல் வெதும்பி உச்ச நிலைக்குச் சென்றது. அன்றுதான் தங்கள் உயருள்ளத்தின் உச்சக்கட்டத்தையும் காணமுடிந்தது. என் படுக்கைக்கும், சமையற்கட்டுக்கும், மருத்துவர் வீட்டுக்கும் அன்று தாங்கள் அலைந்தது எத்தனை ஆயிரம் முறைகளோ? மருந்துவர் வந்து “உடனடியாக ஊசி மருந்து போட்டாக வேண்டும்; இல்லையேல் காய்ச்சல் குறைவது கடினம் தான்” என்று சொல்லி, ஏதோ வொரு மருந்து வாங்கி வருமாறு சீட்டும்

எழுதித் தந்து விட்டுச் சென்றார். "அய்யோ! உங்களைத் துன்புறுத்துவதற்காகத்தான் நான் பிறந்தேன் போலும்" என்று ஏங்கிக் கண்ணீர் வடித்தேன். என் படுக்கையில் ஒரு பகுதியே நனைந்திருந்ததைத் தாங்கள் அறியக்கூடாதவாறும் நடித்தேன்.

தாங்கள் மருந்துவாங்க என்ன செய்வது என்னும் ஏக்கத்திலே தங்கள் மனைவியார் முகத்தைப் பார்த்தீர்கள். அவர்களோ தங்களுக்குக் குறையாத ஏக்கத்திலே தங்களைப் பார்த்தார்கள். யான் அந்தக் கொடுமையைப் பார்க்க மாட்டாதவனாகப் புரண்டு படுத்துக்கொண்டேன். சிறிது நேரம் வீடு அமைதியாகக் கிடந்தது. அம்மையார், "செல்வி! செல்வி!" என்று அழைத்தார்கள். அந்த மழலைத் தேன்குடம் "கலீர்கலீர்" என்று ஒலிக்கும் கரும்புக் கால்களுடன் ஓடிவந்தது. "வாடா, செல்வி" என்று உச்சிமுகர்ந்து தூக்கி, மார்பிலே அணைத்துக் கொண்டு "செல்வி, இந்தக் கொலுசில் அழுக்கு இருக்கிறது. போக்கித் தருகிறேன்'' என்று கழற்றினார்கள். அந்தோ! கண்கொண்டு பார்க்கப் பொறுக்கவில்லை. காதுகொண்டு கேட்கப் பொறுக்கவில்லை. திரும்பி ஒருச்சாய்த்துப் படுத்திருந்த நான் குப்புறப் படுத்துக்கொண்டு விம்மினேன். அழுக்குப் போக்குவதற்காகவோ செல்வி கொலுசை வாங்கினார்கள்?"

கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த ஆறுமுகத்தின் கன்னங்களைக் கண்ணீர் நனைத்தது. இரண்டு மூன்று துளிகள் கடிதத்திற்குப் பொட்டு வைத்தன. ஆறுமுகம் மனைவி மங்கலம் அம்மாள் படிக்கப் பொறுக்காது சமையற்கட்டுக்குச் சென்றுவிட்டார். ஆறுமுகம் தொடர்ந்து படித்தார்.

''நீங்கள் வீட்டில் இல்லை. அருமைச் செல்வி என் அருகில் துள்ளுநடையில் வந்தாள். அந்த மூன்று வயதுச் சிட்டுக்கு அவ்வயதுக்குரிய அறிவும் பண்புமா அமைந்து இருந்தன? "மாமா தேநீர் குடி" என்று என் வாயருகே கொண்டு வந்து தேநீர் வட்டையை நீட்டியது. "வேண்டாம் செல்வி, நீ குடி" என்று அதன் வாயருகே வட்டையைக் கொண்டு சென்றேன். "ஙுங்ம் ; மாட்டேன்; நீ குடி; நீ குடித்தால்தான் நான் குடிப்பேன்" என்று அடம் பிடித்தது. "செல்வி, இப்படிச் செய்யலாமா? எச்சில் தேநீரையா மாமாவுக்குக் குடிக்கக் கொடுப்பது இதோ... இந்தத் தேநீரை மாமாவுக்குக் கொடு" என்று அன்புறக் கூறினார்கள் அன்னையார். ஆனால் செல்விக்கு அமைதி ஏற்படவில்லை. முகத்தில் கவலைக் கோடுகளே தோன்றின. தோல்வியால் ஏற்பட்ட நாணத்தையும் கூர்ந்து கவனித்தேன். என் அறிவின்மைக்காக நான் வெட்கப்பட்டேன்.

"கொடு செல்வி, கொடு; நீ இப்பொழுது கொடுப்பது தேநீர் இல்லை! தேன்" என்று கூறிக் கொண்டே அவள் கையில் இருந்த தேநீர் வட்டையை வாங்கி என் உதட்டுக்குக் கொண்டு சென்றேன். சிரித்துக் கைகொட்டிக் கொண்டே, அம்மா முகத்தை நோக்கியது செல்வி! வெற்றிப் பெருமிதம் உண்டல்லவா!

"எச்சில் படுத்தியதைக் கொடுக்கலாமா? என்ன பிள்ளை" என்றார்கள் அம்மையார். அவர்கள் சொல்லில் கண்டிப்பும் கனிவும் சமஅளவில் இருந்தன. நான் சொன்னேன் : "செல்வி தெய்வக்கொடை; அவள் எச்சில் தெய்வப்படையல்; வாழ்வே வெறுத்துப்போய் இருந்தது எனக்கு. வாழவேண்டும் - உலகுக்காக வாழ வேண்டும் - என்னும் படிப்பினையே இப்பொழுது பெற்றுக்கொண்ட புதியவனாகி விட்டேன். அதனைச் செயலுக்குக் கொண்டு வருவதற்குத் தெம்பு வேண்டுமல்லவா! அதற்குத் தெய்வப் படையல் அளிக்கிறாள் செல்வி; அவள் எச்சில் தேன் என்றேன். எளிதில் கிடைக்கும் தேன் அன்று; பன்னீராண்டுகளுக்கு ஒரு முறையே மலரும் குறிஞ்சிப் பூக்களிலே எடுத்து, சந்தன மரத்திலே சேர்த்துவைத்த தேன்" என்றேன். செல்வியின் தாமரைக் கைகளைப் பிடித்து என் கன்னங்களில் அழுத்திக்கொண்டேன்.

ஆறுமுகத்தின் வீட்டிலே நடந்ததாக இருந்தும் அவருக்குப் புதிய செய்தியாகவே இருந்தது. 'மங்கலம்' என்று அழைத்து அவரிடமும் வாசித்துக் காட்டி, "இப்படி நடந்ததா?" என்றார். "நினைத்து நினைத்து அழுவதற்காக இந்த ஒரு செயலை தானா செல்வி செய்தாள். இவற்றையெல்லாம் நினைவுபடுத்தி நெஞ்சைப் புண்ணாக்க வேண்டுமா? ஏதோ நடந்தது. கடிதம் எழுதியுள்ள செல்லப்பன் நல்ல மனிதன்; நன்றியுடையவன்; இன்னும் மறக்காமல் இருக்கிறான்" என்றார் மங்கலம். "ஆ ஆ! பேர் கூட நினைவிருக்கிறதா? செல்லப்பனா பெயர்" என்று கடைசிப் பக்கத்தைத் திருப்பிப் பார்த்தார் ஆறுமுகம். "ஆமாம், ஆமாம்! செல்லப்பன் தான்! ஊர்பேர்தான் எனக்கு நிற்பதே இல்லையே! உனக்கு இருக்கும் நினைவாற்றலுக்கு உங்கள் அப்பா மட்டும் படிக்கவைத்திருந்தால்.... அடேயப்பா!" என்று செல்வி மீது ஏற்பட்ட துயரை மாற்றினார் ஆறுமுகம். வெட்கத்தால் தலைகுனிந்து வெளித் திண்ணைக்குச் சென்றார் மங்கலம் அம்மாள். செல்லப்பன் வரைந்த கடிதத்தைத் தொடர்ந்து படித்தார் ஆறுமுகம்.

“என்னால் தங்கள் வீட்டிலே தங்கியிருக்க முடியவில்லை. தங்களிடம் இருந்த அருளின் அளவுக்குப் பொருள் இல்லை என்பதை அறியாதவனா நான்? தங்கள் உயர்ந்த குணத்தினால் அறச்சாலை நடத்தினீர்களே ஒழிய, பணத்தினால் இல்லை என்பதை ஊரே அறியுமே! கையில் காசு இல்லாவிட்டாலும், செய்யும் திருப்பணிகளை மட்டும் தவறாது செய்துகொண்டு வந்தீர்கள். உங்களைப் பாராட்டுவதற்காக இதனை நான் எழுதவில்லை. பாராட்டு, வாக்கிலே நின்றால் யாருக்குப் பயன்? சுருங்கச் சொன்னால் என்னால் தங்கள் வீட்டில் மேலும் தங்கியிருக்க முடியவில்லை. தங்கள் அன்பும், தொண்டும் என்னை ‘வெளியே போ’ என்று விரட்டியடித்தன.

தங்களிடம் விடைபெற்றுக் கொண்டு நன்றியறிதலுடையவனாக நான் வந்திருக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை. அது என் தவறு என்று எண்ணக்கூடும். ஆனால் என் சூழ்நிலையை நோக்கும்போது, அன்று மட்டுமன்று இன்றும் கூட. நான் செய்ததே சரி என்றே தோன்றுகிறது. நான் போய்வருகிறேன் என்று கேட்டால் தாங்கள் விடை தந்து அனுப்பி வைத்திருப்பீர்களா? அம்மையார்தாம் இசைந்திருப்பார்களா? உடல் சரியாகட்டும் போகலாம் என்று கூறித் தடுத்திருப்பீர்கள். என் உடல் நலமாகும் அளவும் நான் அங்கிருந்தால் எவ்வளவு அல்லல்கள் தந்திருப்பேன்! அது எனக்குப் பிடிக்கவில்லை. தங்கள் இல்லத்திற்கு வந்து சேர்ந்ததை யான் அறியேன். அதுபோல் தங்கள் இல்லத்திலிருந்து யான் நான் மயங்கிக் கிடந்த பொழுதிலே வீட்டுக்கு வந்தேன். நீங்கள் உறங்கிக் கிடந்த பொழுதிலே வெளியேறினேன். இது தவறாயின் தாங்களும், அருமை அன்னையும், அன்புச் செல்வியும் என்னை மன்னிப்பீர்களாக!

என்நெடும் பயணத்தைத் தொடங்கினேன். வழிபோன பக்கமெல்லாம் போனேன். எத்தனை எத்தனையோ காடுகள், சிறுமலைகள், தொடர்மலைகள் கடந்தேன். வெளித்திண்ணையில் படுத்திருந்தாலும், எழுப்பி வைத்துச் சாப்பிடச் சொல்லும் ஏழைகள் வாழும் பட்டிகள் தமிழகத்தில் இன்னும் இருக்கின்ற காரணத்தால் உயிருடன் ஓரூரை அடைந்தேன். நோக்கும் திசையெல்லாம் தொடர் மலையாகக் காட்சியளித்த அவ்வூருக்குக் கடமலைக்குண்டு என்பது பெயரென அறிந்தேன். அங்கேயே தங்கி விட்டேன். தாங்கள் இருக்கும்

கரிவலம் வந்த நல்லூர் எங்கே, இந்தக் கடமலைக் குண்டு எங்கே? கனவு உலகில் திரிபவனுக்குக் காதம் காலடி தூரம் தானே!

கடமலைக்குண்டு போய்ச்சேர்ந்த தொடக்கக் காலத்திலே நான்பட்ட துயரங்கள் எண்ணிலடங்கா. அவற்றை நினைத்தோ எழுதியோ ஆக வேண்டியது ஒன்றும் இல்லை. ஆனால் ஒருவன் படும் துன்பத்தின் அளவுக்கு இன்பமும் தொடரும் போல் இருக்கிறது. காலணாக் காசுக்கும் வழி கெட்டிருந்த நான் இரண்டு ஆண்டுகளுக்குள் இருபது ஏக்கர் நிலத்திற்கு உரியவனாகிவிட்டேன்; இது எளிதில் ஆகக் கூடியதா? ஆனால் உண்மை!

நான் இவ்வூருக்கு வந்த நாளிலே மலைப் பகுதியில் அவரவர் முயற்சிக்குத் தக்க அளவு பாடுபட்டுக் கொள்ளலாம் என்னும் முறை இருந்தது. ஏதோ குறைந்த அளவு தீர்வைப் பணம் மட்டும் செலுத்தினால் போதும்; சில ஆண்டுகள் பாடுபட்டபின் நிலம் அவர்களுக்குச் சொந்தம் இதனைப் பயன்படுத்திக் கொண்டு முழு முயற்சியுடன் பாடுபட்டேன். என் கையிலே வெள்ளிப் பணம் திரண்டது. ஊக்கம் அதிகமாயிற்று. என் நோக்கமும் விரிவதாயிற்று. தேடுவதைப்பற்றிய சிந்தனையைப் பார்க்கிலும், இதனை நல்வழியில் எப்படிச் செலவழிப்பது என்பதே என் சிந்தனையாக இருந்தது. அப்பொழுது தங்கள் செயல்கள் எனக்கு வழிகாட்டியாக முன்னின்றன. அவற்றைச் சிக்கெனப் பற்றிச் செயலாற்றத் தொடங்கினேன்.

என் அறச் செயல்களைத் தொடங்குமுன் எனக்கென இரட்டை மாடிவீடு ஒன்றினைக் கட்டிக் கொண்டேன். என் உள்ளத்தில் உயிரோவியமாக விளங்கி, அழகொழுக வீற்றிருக்கும் நிறைமதியின் பெயரால் “நிறைமதி இல்லம் என்னும் பெயர் சூட்டினேன். என் பண்ணையை மாமாவின் பெயரால் “கந்தப்பர் பண்ணை” என்று அழைத்தேன். அவரைப்போல் மகள்மேல் அன்பு செலுத்தி வாழ்பவர் எத்தனை பேர்? இப்படி மாமா பெயராலும், நிறைமதி பெயராலும் இவற்றைச் செய்தும் என் மனத்தில் ஒரு குறை இருந்து அழுத்திக் கொண்டே நின்றது. பசியர், பிணியர், ஆதரவு அற்றோர் ஆகியவர்களைப் பேணுவதற்காகத் தங்கள் பெயரால் “ஆறுமுகம் அறச்சாலை”யை - என்னை அந்நிலைமைக்கு ஆளாக்கிய பெருமை தங்களுக்குத்தானே உண்டு - ஏற்படுத்தினேன்.

"நான் மனிதன் ; மனிதனுக்குரிய ஒப்பற்ற அடையாளமாக இருப்பது நன்றியுணர்வு; அவ்வுணர்வு பெருக இல்லாவிடினும், சிற்றளவிலேனும் இருக்கிறது. அதற்குரிய அடையாளங்களே இச்செயல்கள் என்று எண்ணி எனக்குள்ளே மகிழ்கின்றேன்.

இவற்றாலெல்லாம் நான் மகிழ்ந்தாலும் என் மகிழ்ச்சிகள் எல்லாம் தாமாக உருவானவையாக இல்லை. நானே முயன்று உண்டாக்கிக் கொண்டாலொழிய மகிழ்ச்சி வருவதாக இல்லை. உண்மை மகிழ்ச்சிக்கும், வலிந்து வரவழைத்துப் பொய்யாக நடிக்கும் மகிழ்ச்சிக்கும் வேறுபாடு இல்லையா? நான் மகிழ்ந்த பொழுதுகளை அடுத்தெல்லாம் கண்ணீர் வடித்தேன். கண்ணீர் வடிக்கச் செய்தவள் என் நிறைமதிதான்!

ஊனோடு உயிரோடு பிணைந்துவிட்ட அவளை நான் மறக்க நினைத்தாலும், முடியவில்லை. மறந்துவிட வேண்டும், மறந்துவிட வேண்டும் என்று எவ்வளவு முயன்றேனோ அவ்வளவு முயற்சிகளும் மேலும் மேலும் நினைந்து நெஞ்சம் நையச் செய்தனவே அல்லாமல் குறைந்த பாடில்லை. நெருப்பினுள் ஒருவன் உறங்கினாலும் உறங்க முடியும். ஆனால் நெஞ்சத்துயருக்கு ஆட்பட்டு உறங்க முடியுமா?

நிறைமதியை நினைத்துத் துன்பப்பட்ட வேளைகளிலெல்லாம், "இதனை எவ்வழி கொண்டேனும் மாற்றியமைக்க முடியாதா?" என்று ஏங்கினேன். வழிவகைகளையும் ஆராய்ந்து அலசி அலசி மண்டையை உடைத்தேன். மாற்று வழிகள் அனைத்தும், ஏமாற்று வழிகளாக இருக்குமே அன்றி, ஏக்கத்தை மாற்றும் வழிகளாக இரா எனத் துணிந்தேன். ஆனால் என்னுடன் அன்புறப் பழகிய நண்பர்கள் சிலர் கூட, என்னை வற்புறுத்தினர். "என்னப்பா இருபத்தேழு வயதுக்குள் மனைவியை இழந்து விட்டு இப்படியேயா இருந்து விடுவது? நீயும் மனிதன் தானே! மனைவி இல்லாத வீடு 'மனையாகுமா' இல்லாள் இல்லாத வீடு 'இல்லம்' ஆகுமா? மனைவியொருத்தி இருக்கும்பொழுதே இரண்டு மூன்று என்று கட்டிக்கொண்டு திரிபவர்களும் இருக்கிறார்களே! மனைவியை இழந்து துன்புறும் நீ திருமணம் செய்து கொள்வது என்ன தவறா? நீ பிடிவாதம் காட்டுவதுதான் தவறு! உனக்கிருக்கும் பணத்திற்கு நான் நீ என்று எத்தனை பேர் போட்டி போட்டுக் கொண்டு பெண் தருவார்கள்'' என்றெல்லாம் அவர்கள் திறமையை வெளிப்படுத்தியுரைத்தனர். ஆனால் "நிறைமதி வாழ்ந்த நெஞ்சத்திலே -

அந்த நிறைமதி ஒருத்திக்குத்தான் இடம் உண்டே ஒழிய இன்னொருத்திக்கு இடம் இல்லை. இடம் இல்லாத ஒருத்திக்கு இடம் தந்து இன்னல் அடையவேண்டுமா?" என்று உறுதியாகக் கூறிவிட்டேன். உறுதிக்குச் சிறிதும் அசைவு ஆட்டம் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று நொடி நொடி தோறும் விழிப்பாக இருந்தேன். இல்லையேல் சூறைக் காற்றிலே துரும்பாகச் சுழலத்தானே வேண்டும் . இதற்கு ஐயம் உண்டா?

பகல் பொழுதிலே என் உறுதிக்குச் சிறிதும் அசைவு ஏற்படுவது இல்லை. இரவுப் பொழுதிலே – தனிமையாக முடங்கிக் கிடக்கும் இரவுப் பொழுதிலே – நெஞ்சக் குமுறல் அடக்குவார் அற்று உயரவே கண்டேன். தலையணையிலே முகத்தை அழுத்திக் கொண்டு திணறுவேன். என்னை அறியாமல் கண்ணை மூடினால் அந்த நொடியில் என் கனவில் நிற்பது நிறைமதிதான். பின்னும் உறங்க முடியுமா? இரவென்று ஓர் பொழுதே இல்லாமல் பகலாகவே இருக்கக் கூடாதா என்று எத்தனை பொழுதுகள் ஏங்கியிருப்பேன்! ஆனால் "பகலென்று ஒரு பொழுதே இல்லாமல் இருக்கக்கூடாதா என்று எண்ணிய நாளும் உண்டே" என்றும், என் எண்ணத்திற்கு நானே தடைபோட்டுக் கொள்வேன். எல்லாம் நிறைமதி இருந்ததும் இல்லாமையும் தான் காரணங்கள்! உணர்ச்சி உள்ள நேரத்தை அறிவு பெரும்பாலும் உறங்கிவிடத்தானே செய்கின்றது, இதற்கு மேலுமா அறிவோடு நினைக்க முடியும்?

என்னை எப்படி எப்படியோ அடக்கி வைத்தேன். பயன் இல்லை. இயற்கை என்னை ஒடுக்கி விட்டது. நிறைமதியின் கவலை என்னை அணு அணுவாகத் தின்னத் தொடங்கிற்று. குருதி, தசை, எலும்பு, நரம்பு, நாடி எல்லாம் குறைக்க உருக்க ஆரம்பித்து விட்டது. ஆம்! எனக்கு எலும்புருக்கி நோய் வந்துவிட்டது. அற்ப வாழ்வுடைய மாந்தன் இயற்கையுணர்வை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி காண இயலுமா? தோற்றேன் – அம்மவோ– தோற்றேன்.

என் ஒருவனைப் பொறுத்த அளவில் நான் இருந்திருப்பேன் ஆனால் கவலையில்லை. "சாவே வா; விரைந்துவா; என் நிறைமதி போன வழியிலே என்னையும் கூட்டிச் செல்" எனறு என் நெடுங்கைகளை நீட்டியிருப்பேன். ஆனால் நான் மட்டுமா இருக்கின்றேன்? என் வீட்டில் என்னையே நம்பியிருக்கும், ஓர் அன்புப் பிழம்பு மல்லவா இருக்கின்றாள். என் வாழ்வில் வெட்டுப்போல் ஒளியும் சிலவேளைகளில்

உண்டென்றால் அதற்கு அந்த ஒளி விளக்குத்தானே காரணம். அவள் வாழவேண்டும் என்பதற்காகவே இதுவரை வாழ்ந்தேன். இன்னும் வாழ முடியுமா என்றும் நினைத்தேன். ஆனால் என் நோய் இனியும் என்னை வாழவிடாது. எல்லைக்கோடு என்னவோ அது வரைக்கும் என்னை இழுத்துக்கொண்டு போகிவிட்டது. முடிவினை எதிர் அமைந்து கிடப்பது அன்றி வேறொன்றும் என்னால் கூடுவது இல்லை. இந்நிலைமையில் தான் தங்களுக்குக் கடிதம் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டது. உங்கள் உதவியைப் பெறுவதற்கு என்றே பிறந்த நான் என்னால் இயன்ற மட்டும் தங்களுக்கு அல்லல் தராது இருப்பேனா? இறப்பேனா?

முன்னமே என் சொத்தினை இரு கூறுகளாகப் பிரித்து, ஒரு கூறினை ஆறுமுகம் அறச் சாலைக்கு எழுதிவைத்து விட்டேன். அதன் பொறுப்பாளராகத் தங்களைக் குறித்து இப்பொழுது 'இறுதி முரி'யும் (உயில்) எழுதியுள்ளேன். தங்கள் மீது பாரமேற்றும் இச்செயலைத் தங்கள் ஒப்புதல் பெற்ற பின்னர்த் தான் செய்திருக்க வேண்டும். உண்மை! ஆனால் தங்களைப் பற்றி எனக்குள்ள அன்புப் பிணைப்பாலும், தங்களையன்றி இப்பொறுப்பிற்குத் தக்க வேறொருவர் இல்லை என்று என் உள்ளம் வற்புறுத்தியதாலும் இம்முடிவினை நான் செய்தேன். என் நிலைமையை நோக்கினால் இவ்வேளையில் இம்முடிவினை அன்றி வேறெதுவும் செய்ய முடியாது என்பதைத் தாங்களும் உணர்வீர்கள். மாறாகத் தோன்றினால் பொறுத்துதவ வேண்டுகின்றேன். எப்படியும்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்னும் நன்னெறிப்படி செய்தேன் என்று அமைதியாக மூச்சு விடுவேன். அதுபோதும்.

இந்தக் கடிதத்துடன் மற்றொரு கடிதமும் இருக்கும். அதன் தலைப்பிலே எழுதியுள்ள குறிப்பினைப் படித்துப் பார்த்து, அதன் பின்னர் தங்கள் விருப்பம்போல் செய்ய மன்றாடுகின்றேன். வணக்கம்.

ஆறுமுகம் அறச்சாலை — தங்கள் உயிரன்பன்,
கடமலைக் குண்டு — செல்லப்பன்

கடிதத்தைப் படித்து முடித்தபின் பெருமூச்சுவிட்டார் ஆறுமுகம் என்றோ நடந்த ஒரு செயல் எத்தனையோ ஆண்டுகள் கழித்து நாடகம்

நடத்துவதைக் கண்டு சிந்தித்தார். அடுத்த கடிதத்தையும் உடனே படித்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அதனை எடுத்தார். தலைப்பிலே,

"ஐயா, இக்கடிதத்தைப் பிரிக்கும்முன், "இக்கடிதம் அன்பன் செல்லப்பன் எழுதியது. அவன் எனக்கு எத்தகைய கேடும் செய்யான். அவன் எழுதியுள்ளது என்னவாயினும் நிறைவேற்றி வைப்பதே என் கடமை ; அவன் விருப்பத்தை நிறைவேற்றாமல் இருக்க மாட்டேன்; இஃது உறுதி" என்று நெஞ்சுக்கு நேராக உறுதி செய்துகொண்டு படியுங்கள். "செல்லப்பன் சொல்வது யாதோ? அதைச் செய்ய முடியுமோ? முடியாதோ?" என்னும் ஐயம் இருக்குமானால் அருள்கூர்ந்து கடிதத்தைப் பிரிக்க வேண்டா. நெருப்பிலே போட்டு எரித்து விடுங்கள். இவ்வுடல் எரி நெருப்புக்கு ஆளாகவேண்டிய நேரத்திலே - என் ஒரே ஓர் எண்ணம் தாங்கிய இக்கடிதமும் அதற்கு இரையாகட்டும்."

என்னும் எழுத்துக்களைப் படித்துத் திகைப்படைந்தார். 'வருவது வரட்டும்; வாக்குத் தவறேன்" என்னும் உறுதியுடன் கடிதத்தைப் பிரித்தார். மங்கலம் அம்மாள் இன்னும் ஒரு கடிதமா என்று ஆறுமுகத்தின் பக்கத்திலே உட்கார்ந்தார். கடிதத்தை உரக்கப்படித்தார்.

"அன்புள்ள ஐயா, நான் கடமலைக்கு வந்து ஐந்தாண்டுகள் நிறைந்து ஆறாம் ஆண்டு நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது 'கழையாடும்' கலைக்கூட்டம் ஒன்று இங்கு வந்து சேர்ந்தது. இக்கூட்டத்தினர் கோவிந்த நகரில் ஆடிவிட்டு இங்கு வந்தனர். கடமலையில் ஆடியபின், மந்திச்சுனை மயிலாடும் பாறை, ஆலந்தளி வரைக்கும் சென்று திரும்பக்கூடிய கூட்டம்.

அக்கூட்டத்திலே ஒன்பது அல்லது பத்தே வயதுள்ள சிறுமி ஒருத்தியும் இருந்தாள். அவள் முகவாக்கும் பொலிவும் அக்கூட்டத்தில் இருந்தவர்களுக்குப் பெரிதும் வேறுபட்டிருந்தது. பொதுவாக அன்று அந்தச் சிறுமியை - அவள் பெயர் பொம்மி என்பது - பார்த்தவர்கள் அனைவரும் அவள்மீது இரக்கம் காட்டவே செய்தனர். ஆட்டப் பயிற்சி மிக்க ஒருத்தி தரையில் பலகழைகளை ஊன்றி அவற்றின் உச்சியிலே கயிற்றைக் கட்டி வைத்து நடந்தாள்; கால்களை மடித்துக் கயிற்றின்மேல் வைத்துக் கொண்டு நகர்ந்தாள்; ஒரு வட்டிலைக் கயிற்றின்மேல் வைத்து நின்று கொண்டு நகர்ந்தாள். அதன்பின் வட்டிலில் தலையை வைத்து கால்களை மேலே உயர்த்தித் தலைகீழாக நின்றுகொண்டு தலையாலே

தள்ளிக் கொண்டு சென்றாள். கொடுமையான உயிர்ப்போராட்ட 'விளையாட்டையும்' விளையாட்டாகவே செய்து முடித்தாள். அவள் ஒவ்வொன்றைச் செய்து முடித்து ஓய்வு கொண்டபோதும் பொம்மி அந்த ஆட்டத்தைச் செய்து வந்தாள். பொம்மி வட்டிலில் நடக்கும் வித்தைவரை விந்தையாகச் செய்து முடித்தாள். முதியவளுக்கு இல்லாத பாராட்டும், கையொலியும், ஆரவாரமும் சிறுமி பொம்மிக்குச் சேருமளவு சிறப்பாக ஆடினாள். ஆனால் வட்டிலில் நடக்கும்போது ஏறக்குறைய முடியுந் தறுவாயில் கழைக் கயிற்றிலிருந்து தவறி வீழ்ந்து விட்டாள். உயரம் எப்படியும் இருபது அடிகளாவது இருக்கும். ஆனால், அவள்மீது உயிரை வைத்துக்கொண்டு கீழே நடந்து வந்த இரண்டு பேர்கள் அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டனர். பெரிய காயம் எதுவும் ஏற்படவில்லை. இரண்டோர் இடங்களிலே தோல் வழிந்து குருதி கசிந்து கொண்டிருந்தது. நல்ல வேளை! பொம்மி பிழைத்தது தெய்வச் செயல் என்று கூட்டத்தினர் மனமார வாழ்த்தினர். ஆட்டம் முடியும் அளவும் பொம்மி முகத்தில் களையில்லை. தோல்வி கண்ட அவள் அழாக் குறையுடன் ஒருபக்க அமைதியாக உட்கார்ந்திருந்தாள். அவள் சிந்தனை எங்கெல்லாமோ வட்டமிட்டுக் கொண்டிருந்தது புலப்படாமல் இல்லை.

ஆட்டம் முடிந்தபின், ஆட்டக் கூட்டத்தினர் தாங்கள் அடித்து வைத்திருந்த கூடாரத்திற்குச் சென்றனர். நான் வீடு சென்றேன். ஆனால் எனக்குச் சிறிதும் அமைதி இல்லை. பொம்மியை அறிந்து வரவேண்டும்போல் இருந்தது. கூடாரத்திற்குச் சென்றேன். "ஐயோ, ஐயோ, அம்மா!" என்னும் அழுகையொலி மிகுந்து கேட்டது. "பளார், பளார்" என்னும் அடி ஒலியும் மீறிக்கொண்டு சென்றது. அருகில் இருந்த எவராவது தடுப்பதாகவோ, இரக்கம் காட்டுவதாகவோ தெரியவில்லை. "செருக்குச் சிறுக்கி; ஆடமுடியாமலா விழுந்தாள்; எல்லாம் தலைக்கனம்; வரத்துக்காரிகளே இப்படித்தான்" என்று பேசிக்காட்டி அடியைத் தான் மிகுதிப் படுத்திக் கொண்டிருந்தார்கள். ஒரு பெண் பதைக்க மற்றைப் பெண்கள் இந்தத் தொண்டினையா செய்யவேண்டும்? என்று வருந்தினேன்.

"என்ன ஐயா இது? விடு ; காயம்பட்ட பிள்ளையைத் தேற்றுவதை விட்டுவிட்டு அடிக்கிறாயே; விடுய்யா; பாவம், சின்ன பிள்ளை" என்றேன். அடிப்பவன் என்னை ஏற இறங்கப் பார்த்து "உங்களுக்கு என்ன தெரியும்? இந்தத் தடிக்கழுதை வந்த பிறகு எங்களுக்கு ஒவ்வோர்

இடத்திலும் இடைஞ்சல்தான் செய்கிறது. எந்தப் பொல்லாத வேளையில் இந்த சனியன் பிறந்ததோ? எங்கள் உயிரை வாங்குகின்றது. யாருமில்லாது அழுதுகொண்டு இருந்த நேரத்தில்தான் எங்கள் கூட்டத்தில் சேர்த்து உதவி தந்தோம். அதன் பயன், அன்று முதல் எங்கள் கூட்டமே அழுகின்றது. என்றுதான் எங்களை விட்டுத் தொலையுமோ?" என்றான். அவன் பேச்சிலே துடிப்பு மிக இருந்தது ஆனால் வரவர, இறங்கிக் கொண்டு வந்தது. அவன் பேச்சினைக் கேட்டுச் சிக்கலான சிந்தனைக்கு ஆளானேன். கூத்தர் தலைவனான அவனையும், பொம்மியையும் பலமுறை பார்த்துப் பார்த்துச் சிந்தித்தேன். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தேன். அவனுடன் பேசினேன்.

"என்னப்பா, இவள் இருப்பதால்தானே உனக்குத் தொல்லை; இவளை என்னிடம் கொடுத்து விடு; நான் காப்பாற்றிக் கொள்கிறேன். நன்றாக நினைத்துப் பார்த்துச் சொல். வேறு எவரிடமும் கேட்க வேண்டுமானாலும் கேட்டுச் சொல்." என்றேன். அவனோ. "ஏன் ஐயா, எங்களிடமே வழிக்கு வராத இவள் உங்களிடம் சரிக்கு வந்துவிடுவாளா? ஏன் தொல்லைப்படுகிறீர்கள்" என்று கூறி "பாவம் இளக்க மனம் போல் இருக்கிறது!" என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

"எனக்கு ஒன்றும் தொல்லையில்லை. நீ விரும்பினால் என்னிடம் இவளை ஒப்படைத்து விடு" என்று கூறினேன். பொம்மியைப் பார்த்து, "பொம்மி என்னுடன் வர உனக்குச் சம்மதமா?" என்றேன். அவள் வாயால் பதில் சொல்லவில்லை. அந்தக் கூட்டத்தை விட்டுப் போனால் போதும் போல் இருந்திருக்கிறது. 'ஆகட்டும்' என்று முகத்தை அசைத்துக் காட்டினாள்.

"சரி ஐயா, இந்தப் பிள்ளை எங்களிடம் ஐம்பத்தேழு மாதம் இருந்திருக்கிறது. நாங்கள் தான் தண்டச்சோறு துணி கொடுத்திருக்கிறோம். மாதத்திற்கு ஒரு ரூபாயாவது கொடுத்தால்தான் தேறும்" என்றான். "சரி, வா" என்று என்னுடன் அவனையும் பொம்மியையும் அழைத்துக்கொண்டு சென்றேன். அதற்குமுன் அடியுதை தந்தும், ஈவு இரக்கமில்லாது பேசியும் இருந்த கூட்டமாக இருந்தும் பொம்மி அவர்களைப் பிரிய நேர்ந்தபோது கண்ணீர் வடித்தாள். ஒவ்வொருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு வந்ததை நினைக்கும்போது "பேயோடு ஆயினும் பிரிவு அரிது" என்னும் பழமொழி என் நெஞ்சில் நின்றது.

வீட்டுக்குப் போனவுடன் ஒரு நூறு ரூபாத்தாளை அவனிடம் தந்தேன். "என்னிடம் ஏது ஐயா மீதம்? நீங்கள் சில்லறையாகவே கொடுங்கள்" என்றான். "எனக்கு ஒன்றும் சில்லறை தரவேண்டா; நூறையும் எடுத்துக்கொள்" என்றேன். "நூறுமா" என்று மகிழ்ச்சியால் பலமுறை கும்பிட்டுக் கொண்டே, தாளை கண்களில் ஒற்றி வேட்டியின் முன் தானையிலே முடிந்து இடுப்போடு செருகிக் கொண்டான்.

"பொம்மி! நல்லா இரும்'மா. நான் என்னவோ சில வேளைகளிலே கண்டித்திருப்பேன்; அடித்திருப்பேன்; எல்லாம் வயிற்றுப்பாட்டால் தான்'மா! இரக்கமில்லாமல் ஏசிப்பேசி இருந்தாலும் அதை எல்லாம் மனத்தில் போட்டுக்கொள்ளாதே அம்மா! ஐயா மனம் கோணாமல் நடந்து நல்லா இரும்மா" என்றான். "வரத்துப் பிள்ளையாக இருந்தாலும் பிரிவதற்கு வயிற்றெரிச்சல் தாங்க முடியவில்லை ஐயா, வருகிறேன்" என்று கண்ணீருடன் பிரிந்தான். அப்பொழுதும் பொம்மி அழுதாள். அன்பு நடத்தக் கூடிய அந்தக் கூத்திலே நான் பங்கு பெறாது இருக்கமுடியுமா? நானும் கண்ணீரை என் துண்டால் துடைத்துக் கொண்டேன்.

பொம்மி வந்தவுடன் நான் செய்த முதற்செயல், அவள் பெயரை மாற்றியதுதான். எப்படி மாற்றினேன்? அழகுக்காகப் பெயர் மாற்றம் செய்யவில்லை. எந்த நன்றியை மறந்தாலும் உய்வுண்டு; ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்க்கு உய்வே கிடையாது அல்லவா! அதனால் என்னவென்றறியாப் பருவத்திலே, ஊசி மருந்துக்காகக் காலணிகலத்தைத் தந்து என்னை அன்பால் அடிமையாக்கிக்கொண்ட தங்கள் அருமைச் செல்வியின் பெயரைப் பொம்மிக்குச் சூட்டினேன். இன்று பொம்மியைச் 'செல்வி' என்று அழைக்கும் பொழுதெல்லாம் செல்வியின் திருமுகமும் திருச்செயலும் இன்ப மழலையும் என் கண்முன் நிற்கின்றன. இன்று அவள் தங்கள் இல்லத்தில் இருக்கிறாளோ? அவள் எங்கிருப்பினும் இனிது வாழ்வாளாக! அவள் பெயர் கொண்டமையால் இவளும் வாழ்வாளாக"

(ஒன்றும் சொல்லாமல் முகத்தைப் பொத்திக் கொண்டு மங்கலம் அம்மையார் வீட்டுக்குள் சென்றார். சிறிது பொழுது ஆறுமுகத்தாலும் படிக்க இயலவில்லை. செல்லப்பன் வேண்டியுள்ளது என்ன என்பதை விரைவாகத் தெரிந்து விடத் துடிப்பு இருந்தது. அதனால் ஆறுமுகம் தொடர்ந்து படித்தார்.)

கரடு முரடான வழிகளில் வாழ்ந்து பழகி விட்ட பொம்மிச் செல்வியை, இளகிய நயமான வழிக்குக் கொண்டுவர தொடக்கத்தில் சங்கடமாகவே இருந்தது. என்றாலும் அவளிடம் இயற்கையறிவும், பண்பும் இருந்த காரணத்தால் எளிதில் மாற்றியமைக்க முடிந்தது. எழுத்தறிவு பெறுவதற்கும் நான் வழி செய்தேன். ஓரளவு நிம்மதியாகவே வளர்ந்தாள். வீட்டிலே செல்வமாக அவள் வளர்க்கப்பட்டதால் நல்ல பொலிவுடனே வளர்ந்தாள்.

செல்வியைப் பற்றிப் பலரும் புகழ்வது கண்டு மகிழ்ந்தேன். காலத்தால் செய்யப்பட்ட என் செயலையும், செல்வியைப் பேணுகின்ற முறையையும் பலபடியாகப் பலர்பலர் பாராட்டியதையும் என் காதாரக் கேட்டு மகிழ்ந்தேன். ஊரார் பாராட்டுக்காக நான் இச்செயலில் இறங்காவிட்டாலும்கூட ஊரார் புகழ்ச்சி செல்வியை உயிராகப் போற்றிக்காக்கத் துணைசெய்தது. அவளும் ஒருநாள் மலர்ந்து பூங்கொடியானாள்.

அதற்குமுன் இல்லாத அளவு, அப்பொழுது எனக்கு மகிழ்ச்சியாயிற்று. ஆனால் அம்மகிழ்ச்சிக் கோடுகள் தோன்றி மறையுமுன்னமே கவலைக் கோடுகள் படர்வதையும், மகிழ்ச்சிக் கோடுகள் தோன்றியதைக் கூட மறைத்து விட்டதையும் கண்டேன். செல்வியும் என்னதான் எண்ணிக்கொள்வாளா? ஏதோ என் முன்னிலையில் மலர்ந்த முகத்துடன் நடித்தாள். நான் வீட்டில் இல்லாத வேளைகளிலும் சரி, வீட்டிலே தனித்து இருந்து ஏதாவது செயல் செய்யும் போதும் சரி, 'செல்வி' தனித்திருந்து கண்ணீர் வடிப்பதே வழக்கமாகிவிட்டது. "என்ன இருந்தாலும் மற்ற மற்றவர்களைப்போல எனக்கும் தாய் இல்லையே; எவ்வளவு அன்பு உடையவராக இருந்தாலும் தந்தை தந்தை தானே; தாய் ஆகமாட்டாரே" என்னும் சிக்கலான சிந்தைக்கு அவள் ஆட்பட்டிருப்பதைக் குறிப்பாலும் பிறரிடம் அவள் சொல்லிய சொல்லாலும் அறிய முடிந்தது. இவ்வேளையில் ஊர்ப்பெண்கள் வந்து வந்து உள்ளன்புடன் சொல்லுவதாகச் சொல்லும் சொற்கள் பெருந் தொல்லை தந்தன. எனக்கும் செல்விக்கும் உள்ள அன்பில் சற்றும் மாற்றமில்லாமல் வளர்ந்துகொண்டு வந்தாலும் கூட, ஏதோவொரு பெருத்த இடைவெளி ஏற்பட்டுக்கொண்டு வருவது தெளிவாயிற்று.

என் முன்னால் நிற்பதையும், மலர்ந்த முகத்துடன் பார்த்துப் பேசுவதையும், 'கலகல' வென்று களங்கமற்றுச் சிரிப்பதையும் ஏற்று இன்புறும் நிலைமை தொலைந்து போய்விட்டது. எங்கிருந்து கொண்டோ குரல் கொடுப்பாள். 'ஆம்' 'இல்லை' இவ்விரண்டு பதில்களுடன் பேச்சைச் சுருக்கிவிடுவாள். அவளாக வந்து எந்த வொன்றையும் பேசுவது இல்லை. இந்த நிலைமையும் வாழ்வும் என் நெஞ்சைக் குடைந்தது. இது "பூங்கொம்புப் பருவம் செய்யும் பொலிவு விளையாட்டு" என்பதை நான் உணராது செல்வியைப் பற்றி உள்ளுக்குள்ளாக என்னென்னவோ நினைத்து என்னை வருத்திக்கொண்டேன். காலம் எத்தனை நாடகங்களைத்தான் என் ஒருவன் வாழ்வில் நடத்திக் காட்டுவது?

முன்னெல்லாம் பண்ணைக்குப் போன பொழுதுகளில் நான் செல்வியை அழைத்துக் கொண்டு போனது உண்டு. வீட்டினுள்ளே அடைபட்டுக் கிடப்பது அவளுக்குப் பிடிப்பது இல்லை. மாலைப் பொழுது வருவதை எதிர்பார்த்திருந்து அவளே புள்ளிமான் போல் துள்ளி வந்துவிடுவாள் தோட்டத்திற்கு. அவள் ஓட்டத்தையும் நடையையும் கண்டு என் நெஞ்சம் படபடக்கும். கால் முழுமையும் தரையில் படிய நடப்பதைக் காணமுடியாது. இளங் கன்று அச்சம் அறியுமா? ஆனால், அவளோ இப்பொழுது தோட்டத்தைப் பற்றிய நினைவை அறவே விட்டுவிட்டாள். வீட்டைவிட்டு வெளியேறும் நினைவே அவளுக்கு இல்லை. நானும் வலியுறுத்தவும் இல்லை.

என் தோடடத்திற்கு அடுத்த தோட்டம் பாலப்பன் என்பவருக்குரியது. அவர் பொதுவாக நல்ல மனிதர்; நன்றாகப் பழகும் பண்புடையவர். அவருக்குச் செழியன் என்னும் பெயருடைய மகன் ஒருவன் உண்டு. அந்த மலைக்காட்டிலே மருத்துவக் கல்லூரி அளவுக்கு படிக்க வைத்த ஒரே ஒருவர் அந்த பாலப்பர் தாம் என்றால் அவர் துணிவும், அறிவுவேட்கையும் புலனாகும் என்றே நினைக்கின்றேன். அவர் இயல்புக்குத்.தகவே செழியனும் சிறந்தவனாகவும், அறிவாளியாகவும் விளங்கினான். அவன் விடுமுறையாக ஊருக்கு வந்த பொழுதுகளில் தோட்டத்திற்கு வரவும், வந்து என்னோடு பழகவும் தவறுவது இல்லை. இவ்வேளைகளில் செல்வியும் இருப்பாளாயின் எங்கள் உரையாடல் இடையே அவள் கலந்துகொள்வதும் உண்டு. எல்லாரும் மகிழ்ச்சியாகப் பேசி இன்புறுவோம்.

ஒருநாள் நான் தோட்டத்தில் இருந்தேன் செழியன் என்னிடம் வந்தான். அதற்கு முன் காணாத அளவு தயக்கத்துடன் பேசினான் "ஒரு வாரத்திற்கு முன்னாகப் படிப்பு முடிந்து விட்டது. இனி எங்காவது என் தொழிலைத் தொடங்க வேண்டும். தேர்வில் உறுதியாக வெற்றி கிடைக்கும்; தொழிலைத் தொடங்கவேண்டிய இந்த வேளையிலே, திருமணமும் நடத்திவிட வேண்டும் என்று அப்பா, அம்மா சொல்கிறார்கள்" என்று எங்கேயோ பார்த்துக்கொண்டு பேசினான். "நல்லது தம்பி; அப்படித்தான் செய்யவேண்டும். எந்த எந்தக் காலத்தில் எந்த எந்தச் செயலைச் செய்யவேண்டுமோ அந்த அந்தக் காலத்தில் அந்த அந்தச் செயலைச் செய்துவிடுவது தான் நல்லது. இதனைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அப்படியே செய்ய வேண்டியதுதான்" என்றேன்.

செழியன் சொன்னான் : "என் தந்தையாரைப் பற்றி நான் சொல்ல வேண்டியது இல்லை. நீங்களே அறிவீர்கள். என் விருப்பத்திற்கு அவர் தடையாக இருக்கமாட்டார். ஆலந்தளியிலே முதல் முதல் படித்த பெண் எங்கள் அம்மாதான். அவரும் தொடக்கத்தில் 'ஆயா'வாகத் தொண்டு செய்திருக்கிறர். இன்றும் உள்ளூர் மருத்துவர் அவர்தான். அவர் விருப்பத்தாலும் தூண்டுதலாலும் தான் நான் மருத்துவக் கல்லூரியில் படிக்க முடிந்தது. அவருக்கு நான் என்றால் உயிர்."

"நல்ல குடும்பம்; இப்படித்தான் ஒரு குடும்பம் இருக்க வேண்டும். வேறு என்னதான் கடைசியில் அள்ளிக் கட்டிக்கொண்டு போகப் போகிறோம்" என்றேன் நான்.

"எனக்கு ஓர் எண்ணம் இருக்கிறது. அது இரண்டு ஆண்டுகளுக்கு முன் இத்தோட்டத்தில்தான் ஏற்பட்டது. தாங்கள் ஒத்துக்கொள்வதாயின் தங்கள் செல்வியைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்பது என் கருத்து. எனக்குச் செல்வியை மணந்துகொள்வதில் முழு நிறைவு இருக்கிறது. தாங்கள் இசைவதாயின் உடனே பெற்றோர்களிடம் சொல்லி வேண்டிய ஏற்பாடுகளை செய்துவிடலாம். இதனால் அவர்கள் திட்டம் நிறைவேறுவதுடன். என் ஆவலும் நிறைவேறும்" என்று செழியன் நிறுத்தினான்.

படித்த நாகரிகம் வாய்ந்த வாலிபன் அல்லவா செழியன். தொடக்கத்தில் தயக்கத்தோடு பேசினாலும் அவன் குரலில் தெளிவு

இருந்தது. எனக்குள் அவனைப் பாராட்டினேன். "இதைப் பார்க்கிலும் நான் கேட்க வேண்டிய நல்ல செய்தியும் உண்டா?" என்று எனக்குள் மகிழ்ந்தேன். "உன் பெற்றோர்களிடம் கலந்து கொள்; மற்றவற்றைப் பார்த்துக் கொள்ளலாம். நானும் செல்வியின் காதில் போட்டு வைக்கிறேன்" என்றேன். எனக்கு முழு நிறைவு இருக்கிறது என்பதை என் முகத்திலிருந்து அவன் அறிந்துகொண்டிருக்க வேண்டும். அவன் முகம் அவ்வளவு பொலிவுடன் விளங்கியது.

மறு நாளே செழியன் வந்தான். "அப்பா ஏற்றுக் கொண்டு விட்டார். அம்மா அடுத்த வாரத்தில் தங்கள் வீட்டுக்கு வர இருக்கிறார்." என்று சொல்லி, நான் செல்வியிடம் கேட்டிருப்பேன், அவள் கூறியதைக் கூறுவேன் என்று எதிர்பார்த்து நின்றான். நான், "நல்லது ஆகட்டும்" என்று விடை தந்து அனுப்பினேன். செல்வியினிடம் கேட்கவில்லை என்பதைச் செழியனிடம் சொல்லிக் கொள்ள வேண்டுமா? எனக்கோர் எண்ணம்; திட்டப்படியே நடந்து விட்டால் கவலையில்லை. ஏதேனும் ஏற்ற மாற்றம் ஏற்படுமானால் மெல்லிய உள்ளம் தாங்கமாட்டாமல் எவ்வளவு அல்லல்கள் அடையும்? எல்லாம் செயல் முறைக்கு வரும் போது சொல்லிக் கொள்ளலாம். பெண்ணைப் பார்க்காமலா மாப்பிள்ளை வீட்டார் ஒத்துக் கொள்வார்கள்; அப்பொழுது தெரிந்து கொள்ளட்டுமே" என்றிருந்தேன்.

அடுத்த நாள் நான் தோட்டத்தில் இருக்கும்போது பாலப்பர் என்னைத் தேடி வந்தார். "தோட்டத்திற்கு வந்தேன். அப்படியே..." என்று சொல்லிவிட்டு "செழியன் சொன்னான். அவன் அம்மாவும் வர இருக்கிறாள். இப்படி அடுத்து அடுத்து இருக்கும் தோட்டக்காரர்களான நமக்குள் தொடர்பு ஏற்படுவது எவ்வளவு பொருத்தமான செயல்" என்றார். என் மகிழ்ச்சியைப் புன் முறுவலால் தெரிவித்து வணக்கத்துடன் அனுப்பி வைத்தேன்.

செழியன் கூறியவாறு, அவன் தாய் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவருடன் மூன்று முதிய பெண்களும் வந்திருந்தார்கள். நெடு நேரம் என்னிடமும், செல்வியிடமும் பேசிக் கொண்டிருந்தார்கள். உடன் வந்தவர்கள் தான் என்ன என்னவோ விளக்கங்களைக் கேட்டனர். அவர்கள் கேளாமலே "என் சொத்தில் ஒரு பாகத்தை ஆறுமுகம் அறச் சாலைக்கு எழுதி வைத்து விட்டேன். இன்னொரு பாகம் செல்விக்கு என்று ஒதுக்கி வைத்துள்ளேன். இப்பொழுது இருக்கும் கையிருப்புப் பணமும்

செல்விக்கு உரியதுதான். அவளுக்கு எவ்வளவு என்னால் கூடுமோ அவ்வளவும் செய்வேன். எனக்கு இனி என்ன வேண்டும்? ஏதோ இருக்கும் வரை கொஞ்சம்..." என நானே சொன்னேன்.

விருந்துக்கும் ஏற்பாடாகி இருந்தது. வேறோர் உறவினர் வீட்டுக்குப் போய் வருவதாகக் கூறிப் போயினர். அவர்களை நெடு நேரம் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் "நீங்கள் இன்னும் சாப்பிடவில்லையா? நாங்கள் அங்கே சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்து விட்டோம். இங்கே சாப்பிட வேண்டும் என்று எவ்வளவோ சொன்னோம்; விட மாட்டேன் என்று இலை போட்டு விட்டார்கள்." என்று உடன் வந்தவர்களுள் ஒருத்தி சொன்னாள். "சரி, அதனால் என்ன? வேண்டியவர்கள் வற்புறுத்தும் போது எப்படித் தட்டுவது?" என்று என் வாய் சொல்லியது. ஆனால் உள்ளுக்குள் துயரமாக இருந்தது. வீட்டை விட்டு அவர்கள் போகுமுன் இருந்த பேச்சும் முகமலர்ச்சியும், போய் வந்த பின் இல்லாது இருந்தது எனக்குத் தெளிவாயிற்று. போன இடத்திலே ஏதோவோர் மாற்ற நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்று மட்டும் உறுதி செய்தேன். அதனைத் தெளிவாக்குவது போல "பெண்ணைப் பிடித்திருக்கிறது; குடும்பத்திற்கு ஏற்றவள் தான். எல்லாம் போய்ச் சொல்லி அனுப்புகிறோம். திருமணம் வாழ்நாள் தொடர்பு அல்லவா? வருகிறோம்" என்று சொல்லிக் கொண்டு விடை பெற்றுச் சென்றனர். என்னால் தாங்கிக் கொள்ள முடியாத அளவு துயர் ஏற்பட்டது. என் எண்ணக் கோட்டை துகள் துகளாக நொறுங்கப் போகின்றது என்பதை உணர்ந்தேன். ஆனால் கள்ளம் கபடம் அற்ற செல்வியினிடம் எத்தகைய மாற்றமும் காணவில்லை. நான், செழியன் விருப்பத்தைச் சொல்லி அவள் கருத்தைக் கேளாது இருந்தது எவ்வளவு நன்மையாகப் போய்விட்டது என எண்ணினேன். ஆனால் அதற்காக இன்பப் படவோ, சிரித்து மகிழவோ, முடியாத அளவு துயரம் அழுத்திக் கொண்டிருந்தது.

செழியனிடமிருந்தோ, அவன் பெற்றோரிடமிருந்தோ செய்தி வரும் என்னும் நம்பிக்கை எனக்கு அறவே இல்லை. 'ஏதோ ஒரு வழியில் தடைப்பட்டு' விட்டது ; இனி என்ன செய்வது ?' என்று அமைதியாக இருக்கவும் முடியவில்லை. பெண் பார்க்க வந்தவர்கள், உறவினர் வீட்டுக்குப் போயிருந்த பொழுதிலே செல்வியின் தொடக்க வரலாற்றை அறிந்திருக்கக் கூடும்; தாய், தந்தையர், ஊர், குலம் எதுவும் அறிய முடியாத ஆட்டக்காரியான ஒரு பெண் அவள் என்று அறிந்திருக்கவும்

கூடும்; பணமும் பண்பும், படிப்பும் நிறைந்த எத்தனையோ பேர் எதிர்பார்த்துக் கொண்டிருக்க செழியனுக்குப் போயும் போயும் இவளை பார்த்தோம் என்னும் முடிவுக்கு வந்திருக்கக் கூடும்" என்று பலவாறாக எண்ணிக் கொண்டேன். வேறென்ன காரணம் சொல்ல இருக்கிறது?

செழியன் என்னிடம் திருமணப் பேச்சை எடுக்கும் வேளையிலேயே வெளிப்படையாகச் செல்வியின் வரலாற்றைச் சொல்லியிருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறிவிட்டேன். இப்பொழுது நினைக்கிறேன் என்ன பயன்? நான் சொல்லவும் தான் எப்படி முடியும்? செல்வியை எதிரி என்று எண்ணியிருந்தால் அல்லவோ என் பேச்சில் வந்திருக்கும். என் செல்வ மகள் அல்லவா? அவளை எப்படி எதிரி என்று சொல்லியிருப்பேன்?

பெண் பார்த்துச் சென்று பத்து நாட்கள் பறந்து விட்டன. அடுத்த நாள், ஒருவன் செழியன் தந்தார் என்று ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து நீட்டினான். என் பதிலுக்கோ பதில் கடிதத்திற்கோ எதிர்பாராதவனாகக் கடிதம் கொண்டு வந்தவன் சொல்லியும் கொள்ளாமல் நழுவி விட்டான். அதுவே கடிதத்தில் என்ன செய்திருக்கும் என்பதைத் தெளிவாகக் காட்டியது. எனினும் பிரித்துப் படித்தேன். அதில் இருந்த வரிகள் சில என்னைக் கொல்லாமல் கொன்றன. செழியன் நல்லவன்; என்பால் அன்பன்; அன்பு காரணமாகவே தன் உள்ளத் துள்ளவற்றைக் களங்க மில்லாது எழுதியிருக்கிறேன். ஆனால் எனக்கு அதுவே சாக்காட்டுத் துயராக இருக்கும் என்பதை மருத்துவக் கல்லூரியில் படித்திருந்தும் உணரத் தவறிவிட்டான்.

எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்; விளக்கிக் காட்டினேன்; பயனில்லை; பல ஆண்டுகள் ஆயாவாகவும் மருத்துவராகவும் பணியாற்றி வரும் என் அம்மா உங்களை நினைத்துத் திருமணத்தை ஒத்துக் கொள்ள மறுத்து விட்டார். எனக்கு நேரிட்டுள்ளது தாங்க முடியாத இக்கட்டான நிலைமைக்கு ஆட்பட்டு விட்டேன்." என்று செழியன் எழுதியனுப்பிய வரிகளைப் படிக்கும் வேளையில் என்னால் நிற்க முடியவில்லை; உட்கார்ந்தேன்; என் தலையை நேராக நிறுத்தி வைக்கவும் ஆற்றல் இழந்தேன். நான் நினைக்காத காரணம் ஒன்று குறுக்கிடக் கண்டேன். என் நோய் எனக்குக் குற்றமானதாகத் தெரியவில்லை. மற்றவர்களுக்கும் அப்படியே இருக்கும் என்று சொல்ல முடியுமா? நான்

இருப்பது செல்வி திருமணத்திற்குத் தடையாக இருக்கும் என்பதை அதுவரை உணரவில்லை. உணரச் செய்தது செழியன் கடிதம். அன்று வீட்டுக்கு வந்து படுத்தேன்; அதற்கு மேல் வெளியேறவே இல்லை. ஏன்? வீட்டுக்குள் நடந்து திரியவும் இல்லை. நோய்ப்பூச்சிகளுக்கு என் படுக்கை கொண்டாட்டமாகி விட்டது. நன்றாக விளையாடட்டும் என்று மருந்து சாப்பிடுவதையும் விடுத்தேன். எப்படியோ வாழ்வை விரைவில் முடித்துக் கொள்ள வேண்டும். என் வாழ்வு எவ்வளவு விரைவில் முடிகின்றதோ அவ்வளவு விரைவில் செல்விக்கு நல்ல காலம் ஏற்பட முடியும் என்னும் முடிவுக்கு வந்து விட்டேன். என்னால் வேறென்ன செய்ய முடியும்? மருத்துவத் தொழிலிலே ஊறிப்போன ஒரு குடும்பமே எனக்குள்ள நோய் கருதி, என் வளர்ப்புப் பிள்ளையைத் திருமணம் செய்ய மறுத்தது என்றால் மற்ற குடும்பங்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? நான் எப்படி என் பிள்ளையின் நல்வாழ்க்கைக்காகத் துடிக்கின்றேனோ அவ்வளவு துடிப்பும் தம்பிள்ளையின் நல்வாழ்வுக்காக அவர்களுக்கு இருக்கத்தானே செய்யும். “தொற்று நோயாளி பிள்ளையை மணந்து தொல்லைப்பட நேரிட்டு விட்டால்?” என்ற கவலை இருக்கத்தானே செய்யும்! நான் ஆத்திரப்படுவதற்கும் அன்புதான் காரணம். அவரவர் பக்கம் நீதி இருக்கிறது. அடுத்தவர்களைப் பற்றி குறை கூறுவது தான் நீதியற்றது என்னும் விதிக்கு வந்து விட்டேன்.

என் வளர்ப்புப் பிள்ளை எனச் செல்வியை எண்ணியிருக்க மாட்டார்களோ, என் சொந்த மகள் என்றே எண்ணி, பரம்பரை நோய் இவளுக்கும் பற்றிவிடும் என்று எண்ணியிருப்பார்களோ என்றும் எண்ணினேன். ஆனால், “என் அம்மா, தாய் தகப்பன் இன்னார் என்று அறியாத கழைக் கூத்துப்பிள்ளை” என்றார். “அது பழைய குப்பை; அதைப்பற்றி நமக்கென்ன “பிள்ளை எப்படி?” என்று கேட்டார் அப்பா. என்று செழியன் கடிதத்தில் எழுதியிருந்தது என் ஐயத்தை துடைத்தது. என் உயிர் மேல் வாஞ்சை கொண்டு வேண்டுமானால் வேறு வேறு காரணங்கள் காட்டி மழுப்பலாம். ஆனால் என் சாவு அன்றிச் செல்விக்கு நன்மை எதுவும் தராது!

இந்நேரத்தே என் வரலாறு முழுமையும் ஒருமுறை சிந்திக்கிறேன், திருப்பிப் பார்க்கிறேன். அதன் முடிவு இதுதான். அறியாமையால் யான் என்னைப் பலமுறை துன்புறுத்திக் கொண்டேன். அது என் தெளிவில்லாமை ஒன்றால்தான் என்பதை இப்பொழுதே

உணர்கின்றேன். உணரவும் இப்பொழுதுதான் முடிந்தது. என் வாழ்வில் நடந்தவை அனைத்தும் நன்மையானவையே. இயற்கை நடத்தும் எதுவும் தவறானதாக இருக்கமுடியாது. அதனை எதிர்க்கவோ மாற்றவோ நினைத்து மனிதன் வாடுவது தான் அறியாமையாகத் தோன்றுகின்றது.

நிறைமதியை என் முன்னே நிறுத்தியது இயற்கை, எளிமை வாழ்விலே அன்பும் இன்பமும் நுகர இயலும் என்பதைத் தெள்ளிதின் எடுத்துக் காட்டியது. அதே நிறைமதியைப் பறித்தும் கொண்டது. அவ்வாறு ஆகியிருக்கா விட்டால் - ஒரு வேளை - அவளோடு என் இல் வாழ்க்கையைச் செவ்வையாக நடத்தியிருப்பேன். எனக்காகவும் அவளுக்காகவும் எங்கள் குடும்பத்திற்காகவுமே வாழ்ந்துவிட்டிருப்பேன். அதனை மாற்றிச் சற்று விரிந்த பார்வையை அடையச் செய்ய வேண்டியது தேவையாயிற்று. அதற்காகவே, மயங்கி விழுந்து தங்கள் முற்றத்திலே கிடக்கவும், தங்கள் அன்பிலே எழும்பவும் ஏற்பட்டது. அதன் பயன் முயற்சியாளனாகிப் பொருள் தேடவும், அதனை நன்முறையில் பயன்படுத்தவும் நேரிட்டது. எல்லாவூரும் எம்மூர்; எல்லாரும் நம்மவர் என்னும் உயரிய எண்ணமும் வலுத்தது. இதற்கோர் முத்திரையாக அமைந்தது கழைக்கூத்து. பொம்மி என்னிடம் வளர்ந்தாள். என்னிடம் அவள் வளரவேண்டிய கால எல்லை முடிந்தது. வேறொருவர் அன்பும் அரவணைப்பும் அவளுக்குத் தேவை. அதற்கு நான் இருப்பது தடையாக இருக்கிறது. அத்தடை இனி நீக்கப்பட்டுத்தான் தீர வேண்டும். இயற்கை நியதி அது. அவளுக்குரிய இடத்தை கண்டடையும் வரை இடைத் தாங்குதல் வேண்டும் அல்லவா! அவ்வாறு தாங்குபவர் யார்? அதற்காகவே தாங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்தப் படுகின்றீர்கள்.

இன்னும் என்ன சொல்வது? உடனடியாக நீங்கள் இங்கு வரவேண்டும். வரும்வரை இருப்பேனோ? இருக்க மாட்டேனோ? என் கையில் அது இல்லை. யான் இருந்தாலும் சரி, இல்லையானாலும் சரி. இக்கடிதத்துடன் நான் செல்விக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்து விட்டேன். இனி என்னால் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை. தாயும் நீங்களே; தந்தையும் நீங்களே; எல்லாமும் நீங்களே, நான் என் உள்ளம் முழுமையையும் ஒன்று கூட்டி உங்களைத் தவிர்த்து யாரும் எதுவும் செல்விக்கு இல்லை என்று உறுதி மொழிகின்றேன். அவள் வாழ்வும், தாழ்வும் தங்களைச் சேர்ந்தது அன்றி வேறில்லை.

இக்கடிதம் எழுதியபின் எனக்குச் சற்று அமைதியுள்ளது. நல்லவர் ஒருவர் கையிலே ஒப்படைக்கும் படியான பேற்றைக் காலம் எனக்குச் சுட்டிக் காட்டியதே என்பது தான் அமைதிக்குக் காரணம். அந்த அமைதியிலே என் மூச்சும் அமைதியாக ஊசலாடுவதும் எனக்குத் தெரியாமல் இல்லை.

தங்களை நெஞ்சார நினைக்கும்

நிறைமதி இல்லம் அன்பன்,

கடமலைக்குண்டு **செல்லப்பன்**

✦✦✦

மங்கலம் அம்மையாரும் ஆறுமுகமும் உடனே கடமலைக்குண்டு வந்து சேர்ந்தனர். செல்லப்பன், படுக்கையில் கிடந்து கொண்டே கைதூக்கி வணங்கினான். தன் நெற்றியிலே கூப்பி வைத்த கையை எடுக்கவும் முடியாதவனாகக் கிடந்தான். ஆறுமுகம் தான் கையையெடுத்து மார்பின் மீது கிடத்தினார். அவன் நிலைமை கண்டு ஆறுமுகம் கண்ணீர் பெருக்கினார். கண்ணீர்த் துளிகள் சில செல்லப்பன் மீதும் பட்டன. அதனை உணரச் செல்லப்பனால் முடியவில்லை.

செல்லப்பனை நினைத்து அழுது கொண்டிருந்த செல்வியின் பக்கத்தில் மங்கலம் அம்மையார் உட்கார்ந்திருந்தார். "இது யார்?" என்று சுவரைச் சுட்டிக் காட்டினார் அவர். "நான்தான் இந்த ஊருக்கு வந்த புதிதில் எடுத்த படம்; எனக்கு அப்பொழுது எட்டு ஒன்பது வயதிருக்கும்" என்று அழுகை கண்ணீருக்கிடையே கூறினாள் செல்வி. "உன் படம் தானா?" ஆவலோடு கேட்டார் மங்கல அம்மை. செல்லப்பன் மூடியிருந்த கண்களைத் திறந்து 'ஆம்' என்றான். "என் செல்வி இவள் தான்; என்றார் மங்கலம். "செல்வியா?" என்றார் ஆறுமுகம். "ஆம்; இந்தப் படத்தைப் பாருங்கள்" என்று சுவரைக் காட்டினார் அம்மையார். 'செல்வி' என்று கத்திக் கொண்டு, ஓடிப்போய்த் தழுவிக் கொண்டார் ஆறுமுகம் மதுரை எங்கே? கடமலைக் குண்டு எங்கே? திருவிழாவில் காணாமல் போன செல்வி, என் செல்லப்பனிடம் வளர்ந்திருக்கிறாள் "வியப்பின் உச்ச நிலையிலே நின்று பேசினார். "நம் செல்வியா இவள்? நான் பேறு பெற்றவன்" என்று கண்ணைத் திறந்து பார்த்தான் செல்லப்பன். அடுத்த நொடியில் அவன் கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன. ஆம்! நல்லவனுக்காகக் கண்ணீர் வடிக்க வேண்டிய நாட்களுள் ஒன்றாயிற்று அந்நாள்.

(செய்ந்நன்றி மறவாச் செல்லப்பனை நினைக்கும் பொழுது ஒன்றிரண்டு குறள்களா நினைவுக்கு வருகின்றன? செய்ந்நன்றி அறிதல் அதிகாரக் குறள்களில் பெரும்பாலும் நினைவில் நிற்கின்றன)

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 101

காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 102

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது. 103

திணைத் துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். 104

உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து 105

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 106

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கள்
விழுமம் துடைத்தவர் நட்பு. 107

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. 108

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 110

❖❖❖

ஆ. அழுகைச் சிரிப்பு

'கடகட' என்னும் ஒலியுடன் இரண்டு பேர்கள் கட்டை வண்டிகளை இழுத்துக்கொண்டு வந்தனர். காலைத் தரையில் ஊன்ற முடியாத அளவு, கடுமையான வெயில் இருந்தது. வெப்பம் தாங்கமாட்டாமல் துண்டால் தலையைச் சுற்றிக் கட்டிப் பிடர்க் கழுத்தையும் மறைத்திருந்தனர். ஒருவன் வெயிலையோ வண்டிப் பாரத்தையோ பொருட்டாய் நினைத்ததாகத் தெரியவில்லை. அவன் குழந்தைப் பருவம் முதற் கொண்டே வெயில், மழை, பனி, காற்று, பசி இவற்றுக்கு ஆய்வுச் சாலையாகிக் கிடந்து கிடந்து மரத்துப் போனவன். இனி இவையெல்லாம் ஒன்றும் செய்துவிட முடியாது என்னும் அளவுக்கு உடலையும் உள்ளத்தையும் உரமாக்கிக் கொணடவன்.

குண்டும் குழியுமாகக் கிடந்த சாலையிலே வண்டியை இழுத்துச் செல்லச் சங்கடப்பட்டான் மற்றொருவன். அவனுக்கு வண்டியிழுப்பது புதிய தொழில் - தொடக்கத் தொழில். வெயில் மழை இவற்றின் தாக்குதலுக்கு அவ்வளவாக ஆட்படாது வளர்ந்துவிட்டவன். அவனுக்குத் தான் தாங்கமுடியாத் தொல்லையாக இருந்தது.

முன்னவன் அளவுக்கு மிகுதியான சுமை ஏற்றியிருந்தாலும் கூட, கரடு முரடான அந்தப் பாதையிலே எளிதாக இழுத்துச் செல்வதையும், பின்னவன் குறைந்த அளவுப் பாரத்தையும் இழுத்துப்போகத் திண்டாடுவதையும் பார்த்தவர்கள் பழக்கத்தின் சிறப்பினை உணராமல் போகமுடியாது.

மிதிவண்டி விடக் கற்றுக்கொண்டவன் எளிதாக வண்டியை விடுகின்றான். வண்டி விடுவது விளையாட்டாக இருக்கிறது. வண்டியைத் தள்ளிக்கொண்டு போவதும் எளிதாக இருக்கிறது. வண்டியைத் தள்ளும் நினைவே இல்லாமல் ஒரே ஒரு விரலால் பிடித்து உருட்டுகின்றான். வண்டியும் அவன் நினைவுப்படியெல்லாம் எளிதில் வளைந்தும், திரும்பியும் செல்கின்றது.

புதியவன் வண்டிவிடுவதும் தொல்லையான வேலையாகி விடுகின்றது. அதை உருட்டிச் செல்வதும் சங்கடமான வேலையாகிவிடுகின்றது. இரு கைகளாலும் எவ்வளவு அழுத்திப்

பிடித்தாலும் தன்மீது சாய்த்துக் கொள்கிறான்; அல்லது அதன் மீது சாய்ந்து மோதிக்கொள்கிறான்; இல்லையேல் இளைத்து அலுத்துத் தள்ளுகின்றான். இவ்வளவு ஏன்? நடை கற்கத் தொடங்கும் குழந்தை, நடை வண்டியைத் தள்ள என்ன பாடுபடுகின்றது. நாட்கள் செல்லச் செல்ல நடைவண்டி அலறிச் சக்கரங்களும் தூள் ஆகுமாறு கயிற்றால் கட்டி இழுத்துக்கொண்டு ஓடுவது இல்லையா? பழக்கம் தானே காரணம்! இப்பழக்கம் முன்னவனிடம் இருந்தது. அவனுக்கு வேலைத் தொல்லையும் இல்லை; வெயில் தொல்லையும் இல்லை. பின்னவனுக்குப் பழக்கம் இல்லை. அதனால் வேலைத் தொல்லையும் உண்டு; வெயில் தொல்லையும் உண்டு.

முன்னவனும் வண்டி தள்ள வந்த தொடக்கத்தில் தொல்லைப்பட்டது உண்டு. எவ்வளவோ கசப்பான வேப்பிலையும் தின்று தின்று, பழக்கப்பட பழக்கப்பட, கசப்பே இல்லாததாகித் தீனியும் ஆய்விடுவதுபோல்தான் - பழக்கமாகிவிட்டது. பின்னவன் புதிதாக வேப்பிலை தின்னத் தொடங்கியிருக்கிறான். வரவரப் பழக்கமாகிவிடும். அவன் பழக்கமாக்கிக் கொள்வதற்கு ஏற்ற உறுதி இல்லாதவனாக இருந்தால் பழக்கத்தையே விட்டு ஓட்டம் எடுக்க வேண்டியும் நேரலாம். நல்ல நண்பன் ஒருவன் கிடைத்தால் உள்ளத்தில் உறுதிப்பாடு இல்லாதவனையும் உறுதியுடையவனாகச் செய்துவிடலாம். போட்டியும் பொறாமையும் குடிகொண்ட ஒருவனாக இருந்தால் 'புதியவனை'த் தொழிலைவிட்டு ஓடவும் படுத்திவிடலாம்.

"இருளாண்டி, புதுப் பழக்கம் இல்லையா உனக்கு! கொஞ்சம் நாட்கள் சென்றால் சரியாகிவிடும். நான் தொடக்கத்தில் இப்படித்தான் பெரும்பாடு பட்டேன். உனக்காவது வயிற்றுப் பாட்டுக்கு வழி இருக்கிறது. எனக்கு அதுவும் இல்லாமல் நடுப்பகல் வரை வண்டி இழுத்து ஏதோ காசு கிடைத்தால் கஞ்சி வைத்துச் சாப்பிட்டதும், அதற்கு வழியில்லாவிடில் உண்ணாமல் கிடந்ததும் உண்டு. இன்று கவலையற்ற சாப்பாடு சாப்பிட முடிகிறது. நான் கட்டை வண்டி இழுக்கும் இத்தொழிலை விட முடியாவிட்டாலும் என் பிள்ளைகளாவது ஒரு கும்பிடு போட்டு விட்டு விடலாம் என்னும் நிலைமை ஆகிவிட்டது. எப்படியோ நாள்தோறும் கொஞ்சம் மீதம் வைத்துச் சின்னதுகளைப் படிக்க வைக்க முடிகின்றது. இன்னும் இரண்டோர் ஆண்டுபாடு. பிறகு இந்தத் தொழிலுக்கு நானும் ஒரு வேளை முழுக்குப் போட்டாலும் போட்டு விடலாம்" என்று புதிதாக

வண்டி இழுக்க வந்த இருளாண்டியிடம், பழக்கப் பட்ட வண்டிக்காரன் தலைமலை சொன்னான்.

"நீ முயற்சியாளன் ; மனிதனாகப் பிறந்தால் இவ்வளவாவது உறுதி வேண்டும். நீ ஒருவன் எவ்வளவோ செயல்களைச் செய்திருக்கிறாய் முயற்சியாளி, முயற்சியாளி என்று எவரெவரையோ பேசுகிறார்கள் - உன்னை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் எளிய கட்டை வண்டிக்காரன் தானே நீ! உன் முயற்சியை உயர்வாக எத்தனை பேர் நினைப்பார்கள்" என்று உள்ளத்தைத் திறந்து இருளாண்டி பேசினான்.

தலைமலை சிரித்தான். "தம்பி, என்னவோ பெரிய முயற்சியாளன் என்று என்னைச் சொல்கிறாயே. நீ பைத்தியக்காரன்! புதியவன்தானே! நம் வண்டிப்பேட்டை முதலாளி இருக்கிறாரே – மணிக்காளை – அவரைப் பற்றித் தெரியுமா? தெரிந்திருந்தால், என்னை இவ்வளவு பெரிது பண்ணிப் பேசியிருக்கமாட்டாய்!"

"அண்ணே, இப்பொழுது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. நம் முதலாளியினிடம் அழைத்துக் கொண்டுபோய் "இவன் புதியவன்; நல்லவன்; வேலைக்கு வைத்துக்கொள்ளலாம்; இவனைக் கவனித்துக் கொள்கிறேன்" என்று என்னை வேலையில் சேர்த்துவிட்டாய் அல்லவா! அன்று முதலாளி உட்கார்ந்திருந்த இடத்தில் அவர் தலைக்கு மேலே சுவரில் இரண்டு படங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று கட்டை வண்டிப்படம். என்னால் தெளிவாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. நம் முதலாளியைப் போல் முக வாக்குள்ள ஒருவர் – ஆனால் நல்ல வாலிபர் – வண்டி இழுத்துப் போவதுபோல் இருந்தது. அது பற்றி உன்னிடம் கேட்க நினைத்தேன்; மறந்து போனேன்."

"அதைத்தான் நானும் சொல்லப்போகிறேன். நீயும் சரியான சமயத்தில் நினைவுக்குக் கொண்டு வந்தாய். வண்டியை நம் முதலாளியைப் போல் முகவாக்குடைய ஒருவர் இழுக்கவில்லை; நம் முதலாளியேதான்! அப்படி வண்டியிழுத்துப் பிழைத்தவர்தான் இவ்வளவுக்கு முன்னேறியிருக்கிறார்."

இருளாண்டி வண்டி இழுப்பதை மறந்து விட்டான். எளிதில் நம்ப முடியாத செய்தியாக இருந்தது அவனுக்கு! "என்ன இருளாண்டி, பேச்சும் நடக்கவேண்டும்; காரியமும் நடக்க வேண்டும். நின்றால் கட்டி வருமா? நீ இதை இவ்வளவு பொருட்டாக எண்ணுகிறாய். இதற்கே இவ்வளவு

வியப்படையும் நீ, துன்பமோ இன்பமோ எதிலும் இப்படித்தானே நின்றுவிடுவாய். மணிக்காளை அடிக்கடி சொல்வான் - எனக்கு அவன் இவன் என்று சொல்லிப் பழக்கமாகி விட்டது. இப்பொழுது நாம் பழகுவதுபோலத் தானே நானும் அவனும் பழகினோம். பழக்கம் எளிதில் மாறுமா? நானும் அவனும் தனித்துச் சந்தித்தால் அவன் இவன் என்று குடும்பச் செய்திகளையும் அளவளாவிப் பேசிக்கொள்வோம். வேறு எவரும் இருந்தாலும் கூட என்னை நண்பனாக எண்ணித்தான் பேசுவான். ஆனால் நான்தான் கொஞ்சம் கொஞ்சம் ஒதுங்கிக்கொள்வேன். மதிப்பாகவும் பேசிக்கொள்வேன்."

"நீ செய்வதுதான் சரி; இவ்வளவு செல்வன் ஆன பின்னும் உன்னை முன்புபோலவே நண்பனாக நினைக்கிறார் என்பதே விந்தைதான்."

"தம்பி, அவன் தன்னை முதலாளி என்று நினைப்பதே இல்லை. இன்னும் தன்னைக் கை வண்டிக்காரனாக நினைத்துக் கொண்டிருக்கும் ஒரே ஒரு காரணத்தால் தான் அப்படி இருக்கிறான். பிறவியிலேயே முயற்சியும், முன்னேற்றமும், பண்பும் அறிவும் பெற்றவன் மணிக்காளை. தன் நிலைமை என்றைக்கேனும் மாறிவிடக் கூடாதே என்றுதான் அந்தக்கட்டை வண்டியை விற்காமல் பத்திரமாக வைத்திருக்கிறான். படம் எழுதியும் தொங்கவிட்டிருக்கிறான்.

"வியப்பான மனிதர்தாம் மணிக்காளை.

ஆமாம் ; வியப்பானவர்தாம் பேச்சோடு காரியமும் நடக்கட்டும்; கொஞ்சம் தண்டி...வா."

"கைவண்டி! ஒரு மூடை. இருக்கிறது, கொண்டு போகிறாயா?" என்று ஒரு குரல் கேட்டது.

"ஒரு மூடையா? சரி; எங்கே இருக்கிறது?" என்றான் தலைமலை.

கடையொன்றைச் சுட்டிக் காட்டினான் மூடைக்காரன். "மூடையைச் சந்தைப்பேட்டைக்குக் கொண்டு செல்ல வேண்டும்; கூலி எவ்வளவு?"

"எட்டணாக் கொடுங்கள்."

"எட்டணாவா?"

"என்னசாமி! மூடையைத் தூக்கணும்; பிறகு பேட்டை வரை இழுக்கணும்; நீங்கள் சொல்லுகிற இடத்தில் இறக்கணும்; எட்டணா வா'ங்கிறீக."

"சரி! சரி! விரைவாகப் போகவேண்டும்; மூடையைப் பிடி வா!"

"இருளாண்டி, வண்டியை ஓரமாக நிறுத்து. போக்குவரத்து நெருக்கடியான இடம்."

தலைமலை மூடையைக் கொண்டு வந்தான். "அண்ணே! உன் வண்டியில் இருக்கும் சுமையை இரண்டு வண்டிகளில் கூட ஏற்ற முடியாதே, நீ இன்னும் மூடை ஏற்றுகிறாயே!"

"தம்பி, கொஞ்சம் சங்கடந்தான். ஆனால் எட்டணா வருமானம். வெற்று வண்டியாக - குறை பாரமாக - இருக்கும் போதுதான் கூலி கிடைக்கும் என்று சொல்ல முடியுமா? நம் வாய்ப்பை நோக்கிக் கொண்டிருந்தால் கூலி கட்டவே கட்டாது. ஏதோ சமயங்களிலேதான் சாதிக்க வேண்டும். வெயில், மழை, இரவு, பசி இப்படியெல்லாம் பார்த்தோம் என்றால் வயிற்றுப் பாட்டுக்குக் கூட வழி வராது. நீயே பாரேன், இழுமிதிக்காரன் மழை நேரத்தில் என்ன சுற்றுச் சுற்றுகிறான்? அவன் எத்தனை நாள் வெயிற் பொழுதுகளில் தேட முடியாத துட்டைச் சிறிது நேர மழையில் தேடி விடுகின்றான் இல்லையா? உலகத்தைக் கண்டு படிக்க வேண்டியது நிறைய இருக்கிறது."

"உன்னைக் கண்டு படித்தாலே உலகத்தில் பாதி படித்த மாதிரிதான்."

"நீ சொல்கிறாய்; நானும் இப்படித்தான் நினைத்துக் கொண்டேன் மணிக்காளை சொற்களைக் கேட்டுக் கேட்டு. அவன் தந்த 'பிச்சை' தான் என்னுடைய அறிவு கருத்து எல்லாம். பள்ளியிலே ஐந்தாறு வகுப்புகள் கூடப் படிக்காதவன் அவன். இருந்தாலும் நுட்பமான அறிவாளி! பள்ளிக்கூடத்தில் ஏற்படுவதுதான் அறிவு என்பது இல்லையே! ஒவ்வொரு நிகழ்ச்சியும் காட்சியும் ஆசிரியர்கள் அல்லவா!" என்று இருளாண்டியின் முகத்தை நோக்கினான் தலைமலை.

"ஆமாம்! மணிக்காளைக்கு இவ்வளவு பணம் எப்படிச் சேர்ந்தது? கைவண்டி தள்ளி இவ்வளவு பணம் சம்பாதித்து விட முடியுமா?"

"பருத்தி வியாபாரம், பருத்தி விதைக் கடை, பருத்தித் தரகுக் கடை, வண்டிப்பேட்டை இவ்வளவும் பார்த்துப் பரம்பரைச் செல்வர்களும் பெரிய பெரிய வணிகர்களும் கூட வியப்படைகிறார்கள். தம்பி, 'நூற்றுக்குமேல் ஊற்று' என்பது பழமொழி. தொடக்கத்தில் பணம் சேர்வதுதான் அரிது. சேர்ந்து விட்டால் வெள்ளப் பெருக்குத்தான். கூத்தாட்டம் நடந்தால் நொடிப்பொழுதில் எப்படியும் கூட்டம் திரண்டு விடுகின்றது இல்லையா?

இதுபோல் செல்வம் சேரும் என்று வாழ்க்கை நுட்பம் தெரிந்த திருவள்ளுவர் கூறுகிறார். இப்படித்தான் மணிக்காளைக்குப் பணம் சேர்ந்தது.

“யோ, கைவண்டி; இந்தச் சுமையைக் கொண்டு போகிறாயா?” என்று ஒரு குரல் எதிரிட்டது. “நீங்கள் கொடுப்பதைக் கொடுங்கள் நான் கொண்டு போகின்றேன்” என்று ‘சுமை தூக்கி’ ஒருவன் கேட்டான். ‘போ, போ, நீ கேட்கும் காசு சுமைக்காக இல்லை, விலைக்குக் கேட்பதுபோல் இருக்கிறது. இதற்குப் பத்தணாவா? போ! நான் வண்டியில் போட்டுப் போகிறேன் என்றான் சுமைக்குரியவன்.

“எங்களுக்குப் பாரம் நிரம்பிக் கிடக்கிறது;” என்று சொல்லிப் பற்றற்றவன் போலாகத் தலையை நிமிர்த்திக்கூடப் பார்க்காமல் வண்டியை இழுத்தான் தலைமலை.

“சின்ன சுமைதான்; பெரிய பாரம் இல்லையே” என்று மீண்டும் சொன்னான் சுமைக்குரியவன்.

“சரி ஒரு ரூபா கொடுங்கள்.”

“ஒரு ரூபாயா? பரவாயில்லையே! நல்ல ஆளையா நீ” என்று ‘சுமை தூக்கி’ மீது கண்பார்வையைச் செலுத்தினான் சுமைக்குரியவன்.

“தம்பி இருளாண்டி, காசு தேட ஆசை வேண்டும்; முயற்சியும் வேண்டும். ஆனால் எப்படிக் கிடைத்தாலும் சரி என்ற மனம்கூடாது. இந்த ஒரு சுமையில்லை. இதைப் போல் ஏழு சுமைகளை ஏற்றி வைத்தாலும் இழுக்க முடியும். இருந்தாலும் நான் இச்சுமையைத் தூக்கிக் கொள்வதால் ஏழைக் குடும்பம் ஒன்றின் வயிற்றில் அடிப்பதாக எண்ணுகிறேன். சுமை தூக்கும் ஏழைப் பையனுக்கு நான் எதிராளியாக விரும்பவில்லை. ஏதோ ஓரணா, இரண்டணா அதிகம் கேட்டிருப்பான். இவனுக்கு அவ்வளவு தர மனம் வரவில்லை. பேய், பூதம், நாய், காக்கை என்று பயம் காட்டிச் சிறு குழந்தைகளைச் சாப்பிட வைக்கும் பெற்றோர்களைப்போல் இவனும் நம் வண்டியைக் காட்டி அவன் கூலியைக் குறைக்கவும், தூக்கச் செய்யவும் பார்க்கிறான். நான் இச்சுமையைத் தூக்காததினால் ஒன்றும் கெட்டுப்போகப் போவது இல்லை. ஆனால் அந்தப் பையன் நிலைமை அப்படிப்பட்டது அன்று. ஒரு குருட்டுக் கிழத்தாயைக் காப்பாற்ற வேண்டிய சுமை அவனுக்கு உண்டு. அவனுக்குப் போடும் காசு, கோயிலுக்குத் தருமம் போடும் காசைப் பார்க்கிலும் புண்ணியமான காசு. அதனைக்

கிடைக்கச் செய்வதும் புண்ணியம்தான். அதிலும், கூடக் கொஞ்சம் கிடைத்துப் போகட்டுமே!"

"மனிதப் பண்பாடு உள்ளவர்கள் எந்த மூலை முடுக்கிலும் இருக்கத்தான் செய்கின்றார்கள். உலகம் என்ன போக்கில் போனாலும் அவர்கள் தங்கள் தொண்டினை விடாமல் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள், உலகம் எப்படி எப்படி மாறினாலும், புழு பூச்சிகள் அரித்துத் தொல்லை தந்தாலும் தான் செய்யும் தொண்டினை மண் புழு விடுகின்றதா?" இருளாண்டி தனக்குள் எண்ணினான்.

"இருளாண்டி ஓரமாக இழுத்துப் போ! நான் சந்தைப் பேட்டையில் இந்த மூடையை இறக்கி விட்டு வந்து விடுகிறேன். அதோ பார்! ஒரு வண்டி என்ன விரைவாக வருகின்றது.' ஊரே மக்கள் நடமாட்டம் மிகுந்த இடமே என்று நினைக்கிறானா பார். உலகம் முன்னேற வேண்டியது தான் - ஆனால் இந்தக் கோலத்தில் முன்னேற வேண்டாம் ; இது ஊரில் இருப்பவர்களுக்குத் தெரியாமலா இருக்கிறது. தெரியத்தான் செய்கின்றது. தெரிந்தாலும் கண்டித்துக்கூற - குரலெழுப்ப - ஆள் இல்லை. 'எப்படியோ போகிறது' என்று நினைத்து நினைத்து ஒதுங்குகின்றார்கள். 'வேகக் கட்டுப்பாடு விதி' இருக்கத்தான் செய்கின்றது. குற்றாலம் என்றால் குளுமை ஏற்பட்டு விடுமா? போய் அருவியில் நின்றால் தானே! நல்ல திட்டங்கள் இருந்து பயனில்லை. நடைமுறைக்கு வந்தால்தான் நன்மை. நடைமுறைக்கு வராத திட்டங்கள் இருந்தென்ன? போயென்ன?

"வேறொன்றும் இல்லை; அவரவருக்கு வந்தால்தான் அதைப்பற்றிக் கவலைப்படுவது என்ற நிலையில் மக்கள் இருக்கும்வரை திட்டம் அப்படித்தான் இருக்கும்; நடைமுறையும் அப்படித் தான் இருக்கும்" என்றான் இருளாண்டி.

"சரி, ஒதுக்கமாக நிறுத்து."

தலைமலை மூடையைத் தூக்கிச் சென்றான். இருளாண்டி வண்டியைச் சாலையின் பக்கமாக நிறுத்தி வியர்வையைத் துடைத்தான் புதுப்பழக்கம் ஆனமையால் கையில் வலி இருந்தது. இரு கைகளையும் தேய்த்துச் சிறிது வெதுப்பமாக்கினான்.

"கை வலிக்கிறது இல்லையா! கொஞ்சம் இழு ; தோப்புக்குப் போய் ஓய்வெடுக்கலாம்" என்று வண்டியைப் பிடித்தான் தலைமலை.

"போக்குவரத்தைப் பற்றி இவ்வளவு கவலைப்படுகிறேனே ; காரணம் என்ன?" என்று நினைக்கிறாயா. அவ்வளவு விரிந்த உள்ளம் இன்னும் ஏற்பட்டுவிடவில்லை. நான் போக்குவரத்துப் பற்றிக் கவலைப்படத் தொடங்கியதே ஒரு கொடுமையான நிகழ்ச்சியால்தான். மணிக் காளையைப் பற்றிய பேச்சு இப்படித் திரும்பி விட்டதே என்று நினைக்கிறாயா?

"இந்த வண்டிப் பேட்டையில் வாடகை வண்டியும் கிடைக்கிறது அல்லவா! சொந்த வண்டி இல்லாதவர்கள் வாடகைக்கு எடுத்து இழுப்பது உண்டு. இப்படி வாடகை வண்டி எடுத்துச் சம்பாதித்த ஒருவரைத்தான் சொல்கின்றேன்."

மிக மிகச் சிக்கனக்காரர் அவர். ஒரு சல்லி செலவழிப்பது ஆனாலும் பத்துத் தடவைகளாவது எண்ணிப் பாராமல் செலவழிக்கமாட்டார். எப்படியாவது அந்தச் சல்லியையும் செலவழிக்காது இருக்க முடியுமானால் அவ்வழியைத்தான் பின்பற்றுவார். வீட்டிலும் அவர், மனைவி, ஒரே மகள் இவ்வளவு பேர்கள்தான். அந்த அம்மாள் கணவனுக்கு ஏற்றவள். அவர் எவ்வளவு தந்தாலும் அதற்குள் குடும்பத்தை நடத்திவிடுவாள். துட்டு முடிவது அவள் அறியாத பழக்கம். அவள் உதவியாலும் கணவன் திறத்தாலும் குடும்பம் நன்றாக நடந்து வந்தது. எப்படியும் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாயாவது முடிபோட்டு வைத்து விடுவார் அவர்.

'பொருளில்லார்க்கு இவ்வுலம் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டவர்' என்றான் இருளாண்டி.

"எல்லாம் வறுமை சொல்லி வைத்த பாடம் தான். சிறிது சிறிதாகப் பொருள் சேர்ந்தது. இருந்தாலும் இன்பமாக இல்வாழ்வு நடத்த அவரால் முடியவில்லை. பொருளால் மட்டும் வாழ்வு இல்லை. மனைவி, மக்கள் ஒட்டு, உறவு எல்லாவற்றையும் பொறுத்தல்லவா உள்ளது."

"அவர் பேறு பெற்றவர் என்று சொல்லிவிடலாம் – அவருக்கு வாய்த்த மனைவியை நினைத்து ஆனால் மகனை நினைக்கும்போது அப்படிச் சொல்லிவிட முடியாது. என்னென்னவோ பெரும் பாவங்களெல்லாம் பண்ணிய பயன்தான் இப்படி மகன் பிறந்தது என்று கூறாதவர் இல்லை. அவ்வளவு கெட்டவன்."

“தந்தை முடிபோட்டு வைத்த காசையும் ஏதாவது காரணம் காட்டித் தட்டிப் பறிக்கப் பார்ப்பான். வழி கிடைக்காவிடில் அயர்ந்த நேரம் பார்த்து அவிழ்த்துக் கொண்டு போய்விடுவான். வீட்டில் வைத்தால், எந்த ஒளிவு மறைவு ஆனாலும் எடுத்து விடுவான். தாயாரிடம் இருந்தால் வாய் வரிசை அன்றிக் கைவரிசை காட்டியும் பறிப்பான். இத்தகையவன் ‘காலடி’ பட்ட இடத்திலாவது காசு சேருமா?

“மணிக்காளைமேல், கைவண்டிக் கிழவருக்கு ஒரு நம்பிக்கை. அவரென்ன - கைவண்டி இழுப்போருக்குச் சங்கம் என ஒன்று இல்லை என்றாலும்கூட, சங்கம் அதன் தலைவர் - காப்பாளர் எல்லாமே மணிக்காளை என்றால் தகும். அவ்வளவு நம்பிக்கையும் பெருமையும் வைத்திருந்தனர். நான் சொல்லிய கிழவர் பொன்னுத் தாத்தாவும் மீதப்பட்டதை மணிக்காளையினிடமே தந்தார். மணிக்காளைக்குக் கிழவர் குடும்பநிலை நன்றாகத் தெரியும். இருந்தாலும் தொடக்கத்தில் கிழவர் தந்த மீதப் பணத்தை வாங்கி வைக்க அவனுக்குச் சம்மதமில்லை.” நான் பணம் வாங்கி வைப்பதில் எனக்குத் தயக்கம் ஒன்றும் இல்லை. இருந்தாலும் அச்செயல் தங்கள் குடும்பத்தைப் பிளவு பண்ணிவிடக் கூடாதே” என்று தடுத்தான். குடும்பம் பிளவுபட்டுவிட வேண்டும் என்று நான் நினைக்கிறேனா? அப்படி ஆகக் கூடாது என்று என்னால் ஆனமட்டும் பார்க்கிறேன். வெற்றி பெற முடியவில்லை. அந்த முயற்சியை மீண்டும் மீண்டும் செய்து கொண்டே நான் பிச்சைக்காரனாகிவிட வேண்டுமா? இனி என்னால் ஒன்றும் முடியாது. எனக்காக இல்லாவிடினும், என்னையே தஞ்சமாகக் கொண்டிருக்கும் மனைவிக்காகவாவது உன்னிடம் இந்த மீதத்தைச் சேர்த்து வைக்க வேண்டும் என்னும் நிலைமை உண்டாக்கி விட்டது.” என்று கிழவர் மன்றாடினார். மணிக்காளையும் பொன்னுத்தாத்தா குடும்பத்தில் ஒருவனாகப் பழகிக் கொண்டும் கிழவர் மகனைத் திருத்த முயன்றான். முடியவில்லை. அதற்குப் பின் அவர் பெயரால் குறித்துக் கொண்டு பணத்தை இருப்பு வைத்தான். இது கிழவர் மகனுக்கு எவ்வளவு வெறுப்பாக இருந்தது என்பதை நான் அறிவேன்.

“இதில் என்ன இருக்கிறது. தாத்தா என்ன தலையிலா கொண்டுபோகப் போகிறார். வீட்டிலே வைத்திருக்க உள் பயம் இருக்கிறது; வெளிப்பயமும் இருக்கிறது. வங்கியிலேபோட்டு வைப்பது போலப் போட்டு வைக்கிறார். நாணயமும் நம்பிக்கையும் உடைய மணிக்காளையிடம்

போட்டுவைப்பது வங்கியில் போட்டு வைப்பது போன்றதுதானே" என்றான் இருளாண்டி.

தோப்பில் வண்டியை நிறுத்திவைத்து, இரண்டு வடைகளைத் தெருக்கடையில் வாங்கித் தின்று, தண்ணீர் குடித்தனர். இருளாண்டிக்கு அயர்ச்சி மிகுதியாக இருந்தது. தலையைக் கீழே போட்டால் உறங்கி விடுவான். ஆனால் தலைமலை சொன்னான்.

"எடுத்த சுமையைக் கொண்டு சேர்க்காமலோ, ஏற்றிய பாரத்தை உரியவரிடம் ஒப்படைக்காமலோ உறங்கி விடுபவன் ஒருவேளை இல்லாவிட்டாலும் ஒருவேளை இழந்து போவான். மூட்டை யடிப்பவனை வலியக் கைந் நீட்டி அழைத்து எடுத்துக்கொண்டு போ என்று கொடுப்பது போன்றது" என்று மணிக்காளையிடமும், என்னிடமும் பொன்னுத் தாத்தா பல தடவைகள் சொன்னது உண்டு" என்றான் தலைமலை.

தாக்குதலைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான் இருளாண்டி. கைகளைத் தேய்த்துக் கண்களைச் சூடாக்கினான். 'மேலே சொல்' என்று பேசத் தூண்டினான்.

கிழவருக்கும் மகனுக்கும் கொஞ்சம் கொஞ்சமாகச் சச்சரவு வளர்ந்தது. ஏச்சுப் பேச்சுக் கூட முற்றியதும். தந்தை மகனுக்கு இடையே தாயும் மணிக்காளையும் பலப்பல அல்லல்கள் பட்டனர். திட்டும் வசையும் வாங்கினர். என்ன இருந்தாலும் கிழவர் பெயரால் பணம் ஏறிக்கொண்டு வந்தது.

பணத்தை எந்த வழி கொண்டாவது பறித்து விட வேண்டும் என்று முனைந்து நின்ற மகன், அவனுக்குப் பிடித்தமான சிலரை ஏவி வைத்து வணிகம் செய்ய, தொழில் செய்ய என்றெல்லாம் கேட்டனுப்பினான். உள்ளதை வைத்துக் காப்பாற்றத் தெரியாதவன் வளர்த்து விடுவானோ என்று மறுத்து விட்டார் கிழவர். இச்சமயம்தான் குடும்பம் கலகலக்கத் தொடங்கியது. ஓயாச் சண்டையைக் கண்டு நொந்தத் தாய்க்கும் மணிக் காளையிடம் இருக்கும் பொருளை வாங்கி இந்தக் கிழவர் இவனிடம் எறிந்து விட்டால் என்ன? என்னும் எண்ணம் கூட ஏற்பட்டது. வரிந்து கட்டும் சண்டைக்கு ஆளாகியும் கிழவர் உறுதியாகவே இருந்தார். 'என் காலம் எவ்வளவு நாளோ? கிழவிக்காக வேண்டும். என் மகனை நம்புவதற்குப் பதில் ஆற்றையோ, குளத்தையோ நம்புவது மேல்" என்று கூறி விட்டார். நெடுநாட்கள் ஆகவில்லை.

"ஒருநாள் பகல் மூன்று மணி இருக்கும் வண்டியை நிறுத்தி வைத்து, அதன் கீழே உட்கார்ந்தார் கிழவர். அதிகக் களைப்பு ஏற்பட்டிருக்கிறது. உறங்கிவிட்டார்.

"ஏதாவது பாரம் இருந்ததா?" என்று இடைமறித்தான் இருளாண்டி.

"ஓ ஓ! நான் சொன்னதை நினைத்துக் கொண்டாயா? உள்ளொன்று உதட்டிலொன்று என்பது அவர் அறியாதவை. பாரம் எதுவும் இல்லை. நல்ல உறக்கம். அந்நேரம் சரக்குந்து ஒன்று வந்திருக்கிறது. வண்டி மீது மோதி - வண்டி உருண்டு - ஐயோ! அதன் கீழே கிடந்த கிழவர் தலையும் உருண்டு விட்டது."

"ஐயோ! செத்தே போனாரா? அட கொடுமையே என்றான் இருளாண்டி."

'இப்பொழுதுதான் நீ சுமையுந்துக்காரனைக் கண்ட போது காட்டிய கடுகடுப்பின் காரணம் புலனாகின்றது' என்றான். சற்று நேரம் அமைதியாக இருந்த இருளாண்டி "கிழவர் போன பின்னாவது மகனுக்கு அறிவு வந்ததா? பழைய கதைதானா?" என்றான்.

கிழவர் அமைதியாக வாழ்வை முடித்துக் கொண்டார். அவருக்கு மைந்தன் என்ற முறையில் மணிக்காளை இருந்தான் என்று சொல்வது ஒழிய வேறொன்றும் சொல்ல இல்லை. சுமையுந்துக்காரனை. வெருட்டி வெருட்டிப் பணம் பிடுங்கித் தின்பதுதான் மகன் தொழிலாயிற்று. பணம் பறிப்பதற்காகக் காவல் தரப்பில் இருந்த நேர்மையைக் கூட மாற்றியடித்தான். எப்படியோ அவன் கதை நடந்து கொண்டுதான் இருந்தது.

தள்ளாத வயதில் கணவனை இழந்த கிழவிக்கு மணிக்காளை தேறுதலாக இருந்தான். "என்னைப் பெற்ற அம்மா இல்லை. அந்தக் குறையை நீங்கள் நிறைத்தீர்கள்" என்று பேணி வந்தான் மணிக்காளை. அவளும் கொஞ்சம் தேறியிருந்தாள்.

பல வேளைகளில் மகன் வந்து "அப்பா கொடுத்த பணத்தை வாங்கித் தருகிறாயா?" என்று தாயை வற்புறுத்தினான். நாலுபேர் கூடிய இடங்களிளெல்லாம் மணிக்காளையைப் பற்றி வசை பொழிந்தான். 'இது என்ன கேவலம்!' என்று கிழவர் கணக்குகளையெல்லாம் காட்டி, சல்லியும் பாக்கி வைக்காமல் தீர்த்தான். அவன் தாய்க்குப் பணம் தருவதில் சம்மதமில்லை என்பதை அறிந்து, அவள் அறியாமலே தான் கணக்குத்

தீர்த்தான். உட்கார்ந்து தின்றால் ஊரளவு சொத்தே நிற்காதே! ஓட்டம் பிடித்தது ஓராண்டுக்குள் – எண்ணூறு ரூபா எந்த மட்டுக்கும்?

இதற்குள் மணிக்காளைக்கு நல்ல காலம் போல் இருக்கிறது. தேடிச் சேர்ந்திருந்த பணத்தைக் கொண்டு இரண்டு கை வண்டியக் வாங்கினான். வந்த இலாபத்தை அழிக்காது மேலும் ஒன்றிரண்டாக வண்டிகள் தொடுத்து வாங்கினான். பொன்னுத் தாத்தா "மண்டை உடைந்தாலும் ஒருவேளை கூடிக் கொள்ளும்; ஆனால் ரூபா நோட்டை உடைத்தால் (சில்லறை யாக்கினால்) ஒரு நாளும் கூடவே கூடாது" என்பார். அது மெய்யாயிற்று.

மணிக்காளைக்கு வேண்டிய வண்டித் தரகர் ஒருவர் இருந்தார். அவர் மணிக்காளையுடன் நெடுங்காலம் பழகியவர். நன்றாக அறிந்தவர். அவருக்கு அவர் தொழில் வழியாக நல்ல வருவாய் இருந்தும் கூட வெளியூருக்குக் குடியேற வேண்டியவராக இருந்தார். ஒரே மகளை நல்ல இடத்திற்குத் திருமணம் செய்து, அவளுடன் குடும்பத்துடன் போக வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

இவ்வேளையிலே அவர் கண்ணோட்டம் மணிக்காளை மேல் விழுந்தது. இடத்திற்காகவும், வாடிக்கைப் பெயருக்காகவும் இரண்டாயிரத்து இருநூறு ரூபா வாங்கிக் கொண்டு மணிக் காளைக்கே விற்று விட்டார்.

"மணிக்காளைக்கு எதிர்பாராத வாய்ப்பு இது. இருந்த இடத்திலேயே வருபவர்களிடம் பேசிப் பேசிப் பணம் வாங்க வேண்டிய வாய்ப்பு அல்லவா!" என்றான் தலைமலை.

"ஆமாம்! மனம் போல் வாழ்வு" என்பது சரியாகி விட்டது. இப்படிப் பட்டவர்கள் முன்னுக்கு வந்தால் தான் நீதி நேர்மை கடவுள் இவற்றின்மேல் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட முடியும்" என்றான் இருளாண்டி.

"கேள்; தரகர் வேலை ஒப்பந்தமானதற்கு நாங்கள் கொண்ட மகிழ்ச்சி அளவு கூட மணிக்காளை கொள்ளவில்லை. இது சூதாட்டம் – இப்பொழுது இப்பக்கம் சாய்ந்திருக்கிறது. அடுத்த வேளை எப்பக்கமோ? என்று சொன்னான். அவன் அவ்வாறு சொல்வது கண்டு 'பைத்தியம்' என்று நாங்கள் திட்டினோம். எங்கள் வாடிக்கை நண்பன் அல்லவா!

மணிக்காளை சொல்லியதில் உண்மையும் உண்டு என்பது அந்த வார இறுதியிலே வெளிப்பட்டது.

பொன்னுத் தாத்தா மனைவி மணிக்காளை பொறுப்பில் தானே இருந்தாள்! அவள் ஒரு வாரம் கழித்து ஒரே படுக்கையாகி விட்டாள். எழுந்திருக்க வில்லை. சோறு தண்ணீர் மருந்து எதுவுமே ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டாள். 'நோய் நோய்' என்று தத்தளித்தான் மணிக்காளை. கிழவி பேச்சையும் நிறுத்திக் கொண்டாள். யாரிடம்? அவளை உயிராக எண்ணிக் கொண்டிருக்கும் மணிக்காளையினிடம்.

என் முன்னாக எத்தனையோ முறை மணிக்காளை கண்ணீர் வடித்திருக்கிறான்; என்ன இருந்தாலும் பெற்ற மகனாக இருந்தால் அவனிடம் இப்படிக் காரணமில்லாது பேச மறுப்பாளா? பார்க்கப் போகும் போது முகத்தைத் திருப்பிக் கொள்வாளா? ஏதாவது வேண்டுமா? மருந்து தரட்டுமா? மருத்துவரைக் கூட்டி வரட்டுமா? என்றால் ஏதேனும் அன்பான சொல் சொல்லாது "மானமில்லாமல் வாழ விரும்பும் எவளுக்காவது மருந்து கொடு; சோறு கொடு. எனக்கு வேண்டாம் என்பாளா? நான் என்ன தவறு செய்தேன் என்பது எனக்குப் புரியவில்லையே என்று பல முறைகள் அழுதான். கிழவியின் காலில் விழுந்தும் மன்றாடிக் கேட்டான். கிழவியின் நிலைமையில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை."

"அப்பாடா! இது என்ன கேடு! கிழவிக்கு ஏன் இவ்வளவு கெட்ட பிடிவாதம் நன்றாகத் தானே இருந்தாள்" என்றான் இருளாண்டி,

"மணிக்காளை உன் வீட்டில் தங்குவதே பாவம்; தண்ணீர் குடிப்பதும் பழி ; வேறெங்கும் போய்ச் செத்தாலும் சாவேனே ஒழிய இங்கிருக்க மாட்டேன்" என்று சொன்னாள். "மானம் பெரிதா? உயிர் பெரிதா? என்றால் நான் உயிரை விட மானம்தான் பெரிது என்பேன். சிலருக்கு மானத்தைப் பார்க்கிலும் உயிர் சிறந்ததாக இருக்கலாம். அவர்கள் போகட்டும். என்னைப்பற்றித்தான் பேச்சு. உயிரை விட்டாவது மானத்தைத்தான் காப்பேன், உன் வீட்டில் இன்னும் இருந்து மானம் இழக்கமாட்டேன்" என்றாள்.

"அம்மா! நீ தானே என் தாய். நீ பெற்று எடுக்காத ஒன்று தவிர்த்து வேறு ஒன்றும் இல்லையே! நானும் உன் வயிற்றில் பிறக்காவிட்டாலும் பெற்றெடுத்த தாயைப் போன்று தானே பேணினேன். ஏதாவது தவறு இருந்தால் என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லலாமே!

அதற்காக இப்படியா என்னைத் துயருக்கு ஆளாக்க வேண்டும்" என்று கண்ணீர் கசியக் கேட்டான்.

"மணிக்காளை உன்னைச் சொல்ல வாயில்லை; காலக்கோளாறு; என் தலைவிதி. எத்தனை இருந்தாலும் என் வயிற்றில் பிறந்த மகனாக இருந்தால் இப்படி ஒரு காரியம் செய்திருக்க மாட்டான்" என்றாள். எதையோ உள்ளே வைத்துக் கொண்டு கிழவி புண்பட்டிருக்கிறாள். இல்லாவிடில் வெள்ளையுள்ளம் படைத்த அக்கிழவி இப்படிப் பேசியிருப்பாளா?

"ஆமாம் பிறகு!"

"பிறகென்ன! கிழவி சொல்ல மறுத்து விட்டாள். "கிழவியின் சொந்த வாழ்க்கை சம்பந்தப்பட்டது. வெளிப்படையாகச் சொன்னால் அவள் மானம் சம்பந்தப்பட்டது. அதற்கும் நமக்கும் தொடர்பு இல்லையென்றாலும் நாம் அறிந்தோ அறியாமலோ தொடர்பு கற்பித்துக் கொள்ளத்தக்க ஒன்று நடந்து விட்டிருக்கிறது. அதைக் கிழவி சொல்ல விரும்பவில்லை. சொல்ல முடியாததாக இருக்கும் போது சொல்லித்தான் ஆக வேண்டும் என்று நாம் வற்புறுத்த நமக்கு என்ன உரிமை உண்டு? உண்மை வெளிப்படும் வரை நாம் ஊமையாக இருக்க வேண்டியது தவிர்த்து வழியென்ன? அல்லது பேசிப் பயனுண்டா? எத்தனையோ குற்ற மற்றவர்கள் உலகுக்கு உண்மை புலப்படும் வரை குற்றவாளிகளாகக் கருதப்பட்டுக் கடுந்துயரம் அடைந்ததும், அத்துயரிலே மாண்டு மறைந்ததும் கூட இல்லையா? எல்லாம் பட்டு முடிந்த பின்னும் ஓரிருவர் ஆராய்ந்து உண்மை கூறியபின் உலக மன்றத்தில் அசையாத ஓரிடம் கொண்டு கொலுவீற்றிருக்க வில்லையா? கடமையைச் செய்ய வேண்டுவது நம் பொறுப்பு. பயனைப்பற்றி நமக்கென்ன கவலை" என்று மணிக்காளை சொன்னான். நானும் வேறு வழியின்றி ஒப்பினேன். கிழவி அவள் வீட்டுக்குச் சென்றாள்."

கிழவர் இருக்கும் பொழுதே கட்டுப்பாடற்று வாழ்ந்த மகன் பாவம்! கிழத்தாயைப் பொருட்டாக எண்ணுவானா? சிலருக்கு இத்தகைய வேளைகளில் தான் நல்லறிவு வந்து புதுப் பிறவி எடுத்தது போல் நடந்து கொள்கிறார்கள். அவர்களைப் பாராட்டலாம். ஆனால் கிழவி மகன் அத்தகையவன் இல்லையே.

மணிக்காளை தந்த பணம் போன போக்குத் தெரியவில்லை. வயிற்றுப்பாட்டுக்கு ஏதேனும் வேண்டுமே! உழைக்க உரம் இருந்தது. ஆனால் பின் பற்றிச் செல்லும் நல்லறிவுஇல்லை. ஆதரிப்பதற்கு ஆள்இருந்தது. ஆனால் அவர்களையும் பகையாக்கும் பண்பு இருந்தது. என்ன செய்வது? ஏமாற்றிப் பிழைக்கும் பிழைப்பையே பிழைப்பாகக் கொண்டவன் - உருட்டல் புரட்டலே தொழிலாகக் கொண்டவன் வாழ்வு எப்படி இருக்கும். இதில் கிழவி சுமையும் சேர்ந்து கொண்டால்?

இதற்கு யார் என்ன செய்ய முடியும்! நான் கெட்டே தீர்வேன் என்பவர்களை யாராலும் திருத்த முடியுமா? என்றான் இருளாண்டி.

"நேரமாகி விட்டது! வண்டியைப் பிடி புறப்படலாம்." என்று தலைமலை எழுந்தான். இருளாண்டி வண்டியைப் பிடித்தான்.

அன்று வேலை முடிந்தது. இருளாண்டியும் தலைமலையும் பிரிந்து சென்றனர். இருளாண்டிக்குப் பலப்பல நினைவுகள் எழுந்தன. அவை கனவாகவும் அரும்பின. மணிக்காளையைப் பற்றி சிந்தனையிலே மூழ்கிக் கிடந்தான். தலைமலையின் கூடிய மூளையைப்பற்றி எண்ணினான். பொன்னுத் தாத்தாவின் சிக்கன வாழ்வைச் சிந்தித்தான். அவர் மணிகாளையைப் பற்றிப் பிடித்துக் கொண்ட மதியுடைமையை மனமாரப் போற்றினான், கிழவியின் பிடிவாதத்தையும், அவள் மகனின் மாசுபடிந்த வாழ்வையும் மனத்திற் கொண்டு வந்தான். 'முழுவதும்' இன்று தெரிந்து விட வேண்டும் என்னும் ஆவலில், கை வண்டியுடன் புறப்பட்டான் இருளாண்டி.

அன்று காலையிலே கூலி ஒன்றும் கிடைப்பதாக இல்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு வண்டி மேல் உட்கார்ந்தனர், இருளாண்டியும் தலைமலையும். "என்ன காலைப் பொழுதே இப்படி இருக்கிறதே" என்றான் இருளாண்டி.

"இக்கால இளைஞர்கள் கீரைத் தண்டுகள் போல் எளிதில் வாடி விடுகின்றார்கள். அதுபோல் எளிதில் பொங்கிப் பூரித்தும் போகின்றார்கள் அதனால் இன்ப துன்பங்களைத் தாங்கும் வலிமை அவ்வளவாக இருப்பது இல்லை. இப்பொழுது என்ன ஏற்பட்டு விட்டது. கப்பல் கவிழக் கொடுத்தவன் போல் முகத்தைத் தொங்கப் போட்டு விட்டாய். இன்னும் பொழுதில் இல்லையா? கூலி கிடைக்காதா? அப்படியே கிடைக்காவிட்டாலும் நாம் கவலைப் படுவதால் பயன் உண்டா? இதற்கெல்லாம் இவ்வளவு

சோர்ந்தால் எந்தவொரு காரியத்தையும் சாதிக்க இயலவே இயலாது" என்றான் தலைமலை.

"பட்டுப் பட்டுத் தெளிவு கண்டவன் நீ. தொடக்க பாடந்தானே எனக்கு, அது இருக்கட்டும், மணிக்காளையைப் பற்றி ஏதாவது கேட்க ஆசை." என்றான் இருளாண்டி.

"மணிக்காளையை விட்டு வெளியேறியதிலும் கிழவிக்கு மன நிறைவு இல்லை. ஆனால் மணிக்காளையுடன் வந்து இருக்கவும் மனஉறுதி இடம் தரவில்லை. நான் அவனைப் பார்க்கப் போன நேரங்களிலெல்லாம் தான் பெற்றெடுத்த மகனைப் பற்றி ஒரு தாய் கேட்பது போலவே கேட்பாள். அவனது நலத்தைப் பற்றிக் குறைந்தது பத்து முறைகளாவது கேட்பாள். அவனது பண்புகளை மணிக் கணக்காகப் பாராட்டுவாள் அவனைப் பிரிந்து மனத்தோடா வந்தேன். எனக் கென்ன குறை வைத்தான். அவனை ஏதாவது குறைவாக நான் எண்ணினால் நான் மனிதப் பிறவி இல்லை. நன்றியறிதலுடைய பொன்னுத் தாத்தாவின் மனைவியும் இல்லை. ஆனால் மான மற்ற வாழ்வு வாழ்பவள் பெண்ணாக இருக்க முடியாதே. அதைக் காக்க வேண்டுமல்லவா! என்று கூறுவாள். கிழவி உண்மையைச் சொல்லாது புதிர் போட்டுக் கொண்டே இருக்கிறாளே. இந்த விடுகதைக்கு விடை இல்லையா? என்று ஏங்கி ஏங்கித் திரும்புவேன்."

"இன்று சொல்லி விடமாட்டாளா? நாளைச் சொல்லி விடமாட்டாளா?" என்று தொடர்ந்து போனேன். எனக்கு மேல் மணிக்காளைக்கு உண்மையை அறிய ஆவல் இருந்தது. எனினும் கிழவி மூட்டையை அவிழ்க்க வில்லை. மறைக்கப்படும் ஒன்று ஆவலைக் கிளப்பு மல்லவா!

"உங்களுக்கு இருந்த ஆவலில் எனக்கும் ஒரு பங்காவது வேண்டும் என்று தானே கதையின் கருவைச் சொல்லாது வளர்த்துகின்றாய்? என்றான் இருளாண்டி."

மணிக்காளைக்குத் திருமண ஏற்பாடும் இடை இடையே நடந்து வந்தது. எப்படியும் சில பெரியவர்கள் பெண் பிள்ளை வீட்டுக்காகவோ, ஆண் பிள்ளை வீட்டுக்காகவோ முன் வந்து தூண்டுவார்கள் அல்லவா! அப்படித்தான் மணிக்காளைக்கும் ஏற்பாடு ஆயிற்று.

பெண் வீட்டார் பெருஞ் செல்வர் என்றும், நல்ல சுற்றஞ்சூழல் உடையவர் என்றும், பெண்ணுடன் ஆணும் பெண்ணுமாகப் பலர் பிறந்து

நல்ல நிலைமையில் இருக்கின்றார்கள் என்றும், எல்லாருக்கும் கடைசிப் பிள்ளையே பெண் என்றும், அவளுக்குத் தாய்வழிச் சொத்து 20 ரூபாய்க்குத் தேறும் என்றும், தந்தையார் எத்தகைய குறைவும் இல்லாது சீர்வரிசை செய்வார் என்றும், மாப்பிள்ளையின் குணம், செல்வம், சீர் இவற்றைக் கேள்விப்பட்ட அளவிலே பெண் வீட்டார்க்குப் பிடித்திருக்கிறது என்றும், செய்திகள் பறந்தன. இங்கிருந்தும் அங்கிருந்தும் சில பெரியவர்கள் போய் வந்து கருத்துக்களைப் பரிமாறினர். மணமகன் வீட்டார் மணமகள் வீட்டுக்குச் சென்று 'மண உறுதி' செய்வதற்காக ஒரு நாள் குறிக்கப் பெற்றது.

மணிக்காளை மணம் குறித்து மகிழ அவன் பெற்றோர் இல்லையாயினும், சுற்றத்தார்க்கும் நண்பர்க்கும் குறைவு இல்லை. நாளை எதிர் நோக்கியிருந்தோம்.

ஒவ்வொரு நாளும் ஏதாவது புதுப் புதுச்செய்திகள் வந்த வண்ணமிருந்தன. நம் ஊரிலிருந்து அவ்வூருக்குப் போய் வந்த அனைவர் வாயும் மணிக்காளை திருமணம் பற்றியே பேசின. அங்கிருந்து இங்கு வந்தவர்களும் அதுபற்றியே பேசினர். இங்குள்ள சிறப்புப் பற்றியும், அங்குள்ள வாய்ப்புப் பற்றியும் பேசுவது பலருக்கும் பொழுது போக்கு ஆகிவிட்டது. சிலர் இதனைப் பற்றிய செய்தியைச் சேர்த்துப் பிறருக்குக் கூறுவதிலும் பெருமகிழ்ச்சி கொண்டனர். பொதுவாக மக்கள் பேச்சிலே மணமகள் வீட்டாரின் பணச் சிறப்பே புலப்பட்டது. மணிக்காளை பற்றி, குணமே முதலிடம் பெற்றது. நான் மகிழ்ந்தேன். மணிக்காளை இன்னும் பழைய கைவண்டிக்காரன் நிலைமையிலேயே வாழ்கின்றானே என்று வாழ்த்தினேன்.

ஒரு நாள் ஒரு பெரியவர் மணமகள் வீட்டிலிருந்து வந்தார். நாங்கள் நினைத்துக் கொண்டோம் திருமணத்திற்கு உறுதி செய்வது பற்றிக் கலந்து பேச வந்துள்ளார் என்று. எனக்கு எவ்வளவோ வேலையிருந்துங்கூட அவையெல்லாம் பொருட்டாக இல்லை. நான் ஏதோ வேறு வேலை காரணமாகச் சந்திப்பது போன்று காட்டி, மண உறுதிக்குப் போகும் நாளைத் தெரிந்துகொள்ள நின்றேன். அப்பொழுது வேறு யாரும் இல்லை. நான், மணிக்காளை, மணமகள் வீட்டிலிருந்து வந்த பெரியவர், பெரிய கணக்குப்பிள்ளை ஆகிய நான்கு பேருந்தான் இருந்தோம்.

"தம்பி! உங்களிடம் தனித்துப் பேச வேண்டிய செய்தியாக இருக்கிறது. இவர்கள்..." என்றார் வந்த பெரியவர். உடனே கணக்கரைப்போகச் சொன்னான் மணிக்காளை. 'இந்தத் தம்பியும்' என்று என்னைச் சுட்டிக் காட்டினார். 'தவறு செய்து விட்டோம்; நாமே குறிப்பறிந்து சென்றிருக்க வேண்டும்' என்று எண்ணினேன். "அவனுக்குத் தெரியாமல் பேச வேண்டிய மறைவுச் செய்தி ஒன்றுமில்லை" என்றான் மணிக்காளை. "இல்லை; இல்லை; நீங்கள் பேசுங்கள். நான் பிறகு வருகிறேன்" என்று நடந்தேன்.

"கொஞ்ச நேரங்கழித்து மணிக்காளை எனக்கு ஆளனுப்பினான். நான் போனேன். "பெண் வீட்டிலிருந்து பெரியவர் வந்தாரே என்ன சொன்னார் என்பது தெரியுமா?" வேடிக்கையான உலகமப்பா! இந்த உலகத்திற்கு உண்மை அறிவோ, நிலையான அறிவோ இல்லை போல் இருக்கிறது" என்றான். இடையிடையே பல தடவைகள் சிரித்தான்.

ஏதோ ஓர் அதிர்ச்சியான ஒரு செய்தியைப் பெரியவர் சொல்லிப் போயிருக்கிறார் என்றும், அதனைப்பற்றி மணிக்காளையின் முகக்குறி காட்டவில்லை என்றாலும் சொல் காட்டுகின்றது என்றும் எண்ணினேன்.

"வந்தவர் இப்பொழுது திருமணம் செய்ய வசதி இல்லை என்றும், கொஞ்ச காலம் செல்ல வேண்டும் என்றும், அதுவரை எதிர்பார்த்திராமல் வேறு எங்கேனும் பெண் பார்த்துக் கொள்வது நலம் என்றும் சொல்லிப் போனார் – அதாவது பெண் தரமுடியாது என்பதுதான் முடிவு" என்றான் மணிக்காளை.

இந்தச் சொற்களை என்னால் தாங்க முடியவில்லை. தலை சுற்றுவது போல் இருந்தது. மணிக்காளை "ஆவது ஆகும்; போவது போகும் வருந்த முடியுமா?" என்று என்னைத் தேற்றினான்.

"ஏன் உன்னைப் பார்க்கிலும் பணக்காரன் எவனும் வந்து விட்டானா? அப்படியிருந்தால் தான் இத்தகைய ஏற்ற மாற்றங்கள் நடக்கும். பெரியவர் என்ன சொன்னார்?" என்று வற்புறுத்தினேன்,

"எவனோ ஒருவன் நம்மைப் பற்றி ஏதோ சொல்லியிருக்கிறான். எந்தச் சொத்து எவனோ ஓர் அப்பாவியினிடம் பறித்துக் கொண்டதாம்! தரகு வேலை வஞ்சகத்தால் எவனிடமிருந்தோ கவர்ந்துகொண்டதாம்! எனக்கு ஊரோ, உறவோ, ஒட்டோ எதுவும் இல்லையாம்! என் பரம்பரைக்குச் சிறப்பு ஏதும் இல்லையாம்! ஒழுங்கற்ற வாழ்வு

உடையேனாம் இன்னும் கொஞ்ச நாட்களில் சொத்து எல்லாம் இழந்து நடுத்தெருவில் நிற்பேனாம்! என்னை நம்பிப் பெண் தருவதற்குப் பதில் பெண்ணைக் கிணற்றிலே தள்ளினாலும் கவலையில்லையாம்! ஏதோ சொன்னார். பெண் கொடுக்குமுன் அவர்கள் சிந்திக்க வேண்டியது தேவை தானே" என்று என் ஒப்புதலையும் எதிர்பார்த்தான்.

என்னால் நிற்க முடியவில்லை. ஒன்றும் சொல்லாமல் வந்தேன். எப்படியோ நாட்கள் நடந்தன. நானும் ஓய்வு வந்த வேளைகளிலெல்லாம் மணிக்காளையையும் கிழவியையும் பார்த்து வந்தேன். அவ்வப்போது நடைமுறையிலுள்ள செய்திகளைக் கலந்து பேசிக்கொண்டோம்.

ஒரு சமயம் மணிக்காளை என்னைத் தேடி வந்தான். அப்பொழுதுதான் வண்டியை வீட்டில் கொண்டுபோய் நிறுத்தினேன். அப்படியே என்னைத் தனியே அழைத்துக் கொண்டு சென்றான். ஏதோ ஒரு செய்தி இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு அவனைத் தொடர்ந்து நடந்தேன். ஆள் நடமாட்டம் இல்லாத ஓரிடத்தை அடைந்து உட்கார்ந்தோம்.

தலைமலை. "தக்கார் தகவிலர் என்பது அவரவர், எச்சத்தால் காணப்படும்" என்னும் குறளிலுள்ள எச்சத்தால் என்னும் சொல்லை மக்களால் என்று ஒருவர் மாற்றினாராமே! அது பற்றி உன் கருத்தென்ன? என்றான் மணிக்காளை.

"என் கருத்து என்ன? உலகமெல்லாம் பாராட்டும் தாசுமகாலில் ஒரு கல்லைப் பெயர்த்துப் பெயர்த்த இடம் தெரியாதவாறு மற்றொரு கல்லை வைத்தாலும் வைத்துவிடலாம் ஆனால், திருக்குறளில் அப்படி ஒரு சொல்லைப் பெயர்த்து மற்றொரு சொல்லைப் போட்டுக் காட்ட முடியாது என்பது என் அசையாத நம்பிக்கை" என்றேன்.

"நீ இப்படிச் சொல்வாய் என்பது தெரியும். எச்சம் என்பது விரிந்து பரந்த பல பொருள்களைக் காட்டும் நுட்பமான ஓர் சொல். இதனைப் பல தடவைகள் நாம் பேசியிருப்பது நினைவிருக்கும். தெளிவு செய்து கொள்வதற்காக எத்தனையோ பேர்களின் வாழ்க்கைகளையும் அலசிப் பார்த்திருக்கிறோம். "கைவண்டி இழுப்பவன் கையிலே திருக்குறளும், வாயிலே வாய்மையும், நெஞ்சிலே திருக்குறளும், வாயிலே வாய்மையும், நெஞ்சிலே அறமும் இருந்தால் வாழமுடியுமா? என்று நம்மை எத்தனைபேர் கேலி செய்தார்கள். வாழத் தெரியாதவர்கள் என்று எள்ளி

நகையாடினார்கள். அதை நினைக்க நினைக்க எனக்கு இன்றும் வேடிக்கையாக இருக்கிறது" என்றான்.

மக்களைக் கொண்டு பெற்றோர் தகுதியை முடிவு காட்டினால் பொன்னுத் தாத்தா நிலைமை என்னவாக இருக்கும்? சிறிதளவாவது மதிக்க முடியுமா? அவர் விட்டுச் சென்ற சென்ற செல்வம், செயல், தொண்டு, அறிவு, பண்பு, புகழ் என வைத்துச் சென்ற எல்லாவற்றையும் (எச்சத்தையெல்லாம்) எண்ணிப் பார்ப்பதல்லவா சரியாகும்" என்றேன்.

"ஆம்; நான் சொல்லப் போவதற்கு ஏற்ற முகவுரையைத்தான் நீ கூறினாய்; பெரும்பாலும் நான் எண்ணுவதையே நீயும் எண்ணுகிறாய்; நான் பேசப்போவதையே நீயும் பேசுகிறாய் இது நம் ஒன்றுபட்ட உள்ளத்தைக் காட்டுகிறது" என்று பேசினான்.

"தாத்தா வீட்டிற்குப் போயிருந்தாயா ஏதாவது செய்தி உண்டா? அவர் மகனைப்பற்றி ஏதாவது கேள்விப்பட்டாயா?" என்றான்.

எனக்குப் பல செய்திகள் தெரிந்திருக்கின்றன என்றும், அவற்றைப் பற்றி நான் அவனிடம் கலந்து பேசவில்லை என்றும் அவன் கேள்விகளால் அறிய முடிந்தது. பின்பு, அவன் எதையோ சொல்ல விரும்புகிறான் என்றும் அதில் ஏதாவது எனக்குத் தெரியுமா என்று மேலோட்டம் பார்க்கிறான் எனத் தெளிந்தேன்.

"பெண் வீட்டார் என்னைப்பற்றித் தவறான கருத்துக் கொள்ளுமாறு செய்தவன் தாத்தாவின் மகன்தானாம். அதை நேற்றுத்தான் அறிந்தேன்" என்றான்.

"என்ன இது உண்மையா? நம்பிக்கையானவன் சொன்னானா?" என்றேன்.

"தெளிவில்லாத ஒன்றைச் சொல்வதால் யாருக்கு என்ன நன்மை? பொழுது வீணாவது அன்றி வேறென்ன உண்டு" என்றான். நான் ஏன் இப்படிக் கேட்டேன் என்று வெட்கப்பட்டேன். மணிக்காளை பேசினான் :

"அவன் சொத்தை நான் பறித்துக் கொண்டதாகவும், அவன் சொத்தால்தான் நான் இந்த நிலைமையில் இருப்பதாகவும், இவ்வாறு இருந்தும் அவன் தாயை நான் சரிவரப் பேணாமையினால் தான் வெறுத்து வெளியேறிவிட்டாள் என்றும் எண்ணியிருக்கிறான். அவ்வெண்ணத்தால் பெண் வீட்டில் சொல்லித் திருமணத்தை

நிறுத்திவிட்டான். திருமணம் நின்றது பற்றிக் கவலையில்லை. இவன் பெயராலே நின்றிருக்க வேண்டுமா? என்பதுதான் கவலை.

"ஆமாம்! தலைமலை. எவனாவது பிறக்கும் போது பொருளைக் கொண்டு வந்தானா? கொண்டு போகத்தான் போகின்றானா? இது என்ன நாம் அறியாததா? அவன் மட்டும் சரியானவனாக இருந்தால் இந்தச் செல்வத்தில் பாதியைப் பிரித்துத் தரவும் எனக்குச் சம்மதந்தான். இந் நிலைமையில் அவனிடம் சொத்தைத் தந்தேன் என்றால் அவன் கெடுவதற்குத் துணை செய்ததாக இருக்குமே அல்லாமல் திருந்த வழி செய்தது ஆகுமா? நான் சொல்வதில் தவறோ ஐயமோ இருந்தால் சொல்" என்றான்.

"சரி, சொல்" என்றேன்.

"ஒருநாள் நான் படுக்கும் அறையின் சன்னலண்டை அவன் வந்தான். அவன் நண்பன் இருக்கிறானே 'க' அவனும் வந்தான். நான் படுக்கும் கட்டிலைச் சுட்டிக் காட்டிப் போனான். தற்செயலாக நான் கண்டுவிட்டேன். அது பற்றி எவ்வளவோ எண்ணினேன். ஏதோ நடக்க இருக்கின்றது; எச்சரிக்கை தேவை என்னும் முடிவுக்கு வந்தேன். நான் நினைத்தது போலவே நள்ளிரவில் கறுப்புடையுடன் இரண்டு உருவங்கள் வந்தன. எனக்குத்தான் உறக்கமே இல்லையே. ஓர் உருவம் அறைக்குள் வந்தது, நல்ல இருள்; மெதுவாக வந்து போர்வைக்குள் மறைத்து வைத்திருந்த கத்தியால் மார்பைக் குறிபார்த்து ஒரு குத்துக் குத்தியது. நான் கத்தினேன். குத்திய கத்தியை எடுக்காமல் ஓடினான். ஆட்கள் வளைத்துக் கொள்ளும் என்ற அச்சம்தான்! வெறி கொண்டு ஓடியிருக்கிறான். நம் நாய் அவனை வெருட்டி வெருட்டிக் கடித்தது. எனினும் அவன் தப்பிவிட்டான். நாயின் தாக்குதலிலிருந்து - மறைந்திருந்தானே அவன் - தப்ப முடியவில்லை. அலறினான்; விழுந்தான்; புரண்டான். நாய் கடித்து நன்றாக வெருட்டியது; அந்த அதிர்ச்சியிலே மதி மயங்கி விட்டான். என்ன செய்வதென்றே தெரியாமல் சாக்கடையில் தவறி விழுந்தான். என்னால் மேலும் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. நாயை விலக்கினேன். தாத்தாவின் மகன்தான் அவன் என்பதை அறிந்து வருந்தினேன். நாடி நரம்புகள் துடிக்கத் தள்ளாடித் தள்ளாடிச் சென்றான். என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவனும் நிற்கவில்லை" என்றான்.

“உன் மீது குத்துப் படவில்லை; நல்ல காலம்” என்றேன்.

‘நான் எச்சரிக்கை தவறியிருந்தால் உன்னிடம் இதனைச் சொல்லுமாறு இருந்திருக்க மாட்டேன். வா!’ ‘என்று அழைத்துச் சென்றான். அவன் படுத்திருந்த அறைக்கே போனோம். இதோ பார்! என்று பஞ்சும் துணியும் கொண்டு செய்த துணிப் பொம்மையைத் தூக்கி என்முன் போட்டான். அதன் மார்புப் பகுதி இரண்டாகப் பிளந்து கிடந்தது. “ஐயோ, உன் மீது பட்டிருந்தால்” என்றேன்.

“மனத்திற்காவது அமைதியுண்டு! தலைமலை அவ்வாறுதான் ஆகவேண்டும் மென்றால் அதைத் தடுக்க முடியுமா? இதை உனக்குமா நான் சொல்லியாக வேண்டும்” என்று என் வாய்க்குப் பூட்டுப் போட்டான்.

“சரி பிறகு என்ன ஆனான்” என்றேன்.

“அவன், வீடு போய்ப் படுத்திருக்கிறான் காய்ச்சல் மிகுதியாகியிருக்கிறது. குளிரும் வெதுப்பும் மாற்றி மாற்றி மாட்டியிருக்கின்றன. நான் மருத்துவரை அனுப்பி வைத்தேன் அவன் போக்கே மாறியிருக்கிறது என மருத்துவர்கள் சொல்லுகிறார். அளவுக்கு மிஞ்சின அந்த அச்சம் அவன் மூளையைக் குழப்பி விட்டிருக்கிறது. உளறுகிறான், சிரிக்கிறான் என்கிறார். என்ன செய்வது? நானும் போய்ப் பார்க்கவேண்டும் என்றுதான் துடிக்கிறேன். ஆனால் கிழவியை நினைக்கும்போது சங்கடமாக இருக்கிறது. உண்மையாக என் தாயாக இருந்தால் என்ன காரணம் கொண்டும் என்னை இப்படி ஏங்க விடுவாளா?” என்று சொன்னான்.

“அவள் என்னவோ உள்ளே வைத்திருக்கிறாள். அதைச் சொல்லி விட்டால் சரியாகிவிடும். உன்மீது அவளுக்கு வாஞ்சை இல்லை என்றா எண்ணுகிறாய். ஏன் அவள் சொல்வது போல நீயும் மானம் போவதாக எண்ணுகிறாயா?” என்றேன்.

“இல்லை; இல்லை; இப்படி நினைத்து நினைத்து நம் முன்னோரும் நாமும் கெட்டது போதும்; இன்னும் அந்தப் போலி மானத்தை எண்ணிக்கெட வேண்டாம்; இருவரும் போவோம்” என்றான்.

“இருவரும் போனோம் ; கிழவி வீட்டின் முன்னால் நின்றாள். எங்களைக் கண்டபோது வலுவாகச் சிரிப்பு வரவழைத்துக் கொண்டாள். அது நடிப்பே அன்றி உண்மையன்று என்பது தெளிவாக இருந்தது. அகத்தின் அழகு முகத்தில் தெரியாதா? வீட்டின் உள்ளேயிருந்து புலம்பல்

பலவாறாகக் கேட்டது. "அவன் நிலைமை எப்படியாகுமோ? நம் கையில் இல்லை" என்றாள் கிழவி. அவளது சுருக்கம் விழுந்த கன்னங்களைக் கண்ணீர்த் துளிகள் நனைத்தன. மணிக்காளை எதுவும் பேசவில்லை. அமைதியாக உள்ளே சென்றான். நானும் அவனைத் தொடர்ந்தேன்.

எங்களைக் கண்டதும் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தான் தாத்தாவின் மகன். நாங்கள் தடுத்து நிறுத்தினோம். நாய் கடித்த இடங்களிலிருந்து இரத்தமும் சீழும் வடிந்து கொண்டிருந்தன. யாரையும் நெருங்கவிடாமல் செய்திருக்கிறான். அவன், "ஐயோ! நான் குத்தவில்லை; கொல்லவில்லை; என்னை அடிக்க வேண்டாம்; கொல்ல வேண்டாம்" என்று கத்தினான். தெரு முழுதும் கேட்குமாறு அலறினான். உனக்கு ஒன்றும் இல்லை, நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். பயப்படாதே" என்றோம். "அவனைக் கொன்றதற்கு என்னைப் பிடிக்கவா? போ. வெளியேபோ!" என்று விழுந்து புரண்டான்.

"இப்படித்தான் யார்வந்தாலும் சொல்கிறான். ஒன்றும் புரியவில்லை. என் தலைவிதி இன்னும் என்ன வெல்லாம் பார்க்க வைத்திருக்கிறதோ" என்று நொந்தாள்.

"உன்னைக் காப்பாற்றாமல் மணிக்காளை அனுப்பி விட்டான் என்னும் சினத்தால் இவ்வளவு செயல்கள் செய்திருக்கின்றான்" என்று நடந்ததை விவரமாகக் கூறினேன்.

நெடுநேரம் அவள் பேசவில்லை; எல்லாம் என்னால் ஏற்பட்டது. எந்தப் போராட்டத்தையும் சமாளிக்கலாம்; ஆனால் மனப் போராட்டத்தைச் சமாளிப்பதுதான் அரிது. அந்த மனப்போராட்டம் செய்த சீரழிவுதான் இது" என்று உண்மையாக உணர்ந்து சொன்னாள் கிழவி.

கிழவி தன் மனப் போரைச் சொல்வாள் போல் இருந்தது. அது அப்படிப்பட்ட வேளையல்லவா! ஆனால் மணிக்காளையை வைத்துக் கொண்டு சொல்ல மாட்டாள் என்பதும் உணர்ந்தேன். சரி நேரம் வரட்டும் என்னும் எண்ணத்துடன் "இவனுக்கு என்ன ஏற்பாடு செய்வது?" என்றேன்.

"அதைப் பற்றித்தான் நானும் எண்ணுகிறேன்; இங்கு வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. மருத்துவர்களால் தீர்க்க முடியாத மூளைக் கோளாறையும் குற்றால அருவி தீர்த்து விடும் வாய்ப்புப்

பெற்றிருக்கிறது. அங்கு அனுப்பி வைக்க வேண்டியது தவிர்த்து வேறு வழியில்லை" என்றான் மணிக்காளை.

"குற்றாலமா? விழுந்து சாவார்களே! அங்கேயா? நான் மாட்டேன்" என்று கத்தினான் மகன்.

பெற்றெடுத்த வயிற்றைப் பிசைந்து கொண்டு கண்ணீருடன் வெளியே போனாள் கிழவி. நோய் தீர்ந்தாலும் சரி; தீராவிட்டாலும் சரி; குற்றாலம் வேண்டாம்; வேறெங்காவது அனுப்பு" என்று கூறியது தாங்க மாட்டாத அந்தத் தாய்மனம்.

"சரி, அப்படியானால் கீழ்பாக்கத்திற்குத் தான் அனுப்பி வைக்க வேண்டும்" என்னும் முடிவுக்கு வந்தோம். மணிக்காளையை அழைத்துக் கொண்டு வீட்டில் சேர்த்து விட்டு, நான் கிழவியினிடம் போனேன். அப்பொழுதுதான் உன்மையைச் சொன்னாள்" என்று சற்றுத் தயக்கத்துடன் பேச்சை நிறுத்தினான். சுற்றுமுற்றும் பார்த்தான். இச்செய்தி அடுத்தவர்கள் காதில் விழுந்து விடக்கூடாது அல்லவா!

கட்டைவண்டிகளும், மிதிகளும், தெருவின் அப்பக்கமும் இப்பக்கமும் போய்க் கொண்டிருந்தன. மக்களும் அங்கொருவரும் இங்கொருவருமாக வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தனர். காலைச் சுறுசுறுப்பைக் கதிரவன் உயிர்களுக்கு ஏற்றத் தொடங்கி விட்டான். வண்டி நிறுத்தியிருந்த, ஆலமரத்தில் பழுக்கும் காலமாக இருந்த காரணத்தால் பறவைகளின் ஆரவாரம் நன்றாக இருந்தன. காக்கைகள் சில கரைந்தன. அக் கரைதலைக் கேட்டுக் காக்கைகளே வந்தன. மற்றைப் பறவைகள் வட்டமிட்டும் பறந்தும் வேறிடங்களுக்குச் சென்றனவே ஒழிய, காக்கையின் கரைதலுக்குச் செவி சாய்க்கவில்லை. ஒருவன் தீப்பெட்டி இருக்கிறதா? என்று கேட்டு வந்தான். அவன் வாயால் கேட்கு முன்னமே அவன் வைத்திருந்த பீடியைப் பார்த்துவிட்டு 'இல்லை' என்று கை காட்டி அனுப்பினான் தலைமலை. அயலூரார் ஒருவர் ஒரு தெருவுக்குப் போக வழி கேட்டார். கை வண்டிகள் இரண்டு மூன்று நத்தைகள் போல் ஊர்ந்து கொண்டிருந்தன. சரக்குகள் இல்லையாதலால் சுறுசுறுப்பு இல்லை. யாரும் தம் பக்கத்தில் இல்லாமையால் தலைமலை இருளாண்டியைப் பார்த்துப் பேச ஆரம்பித்தான். தலைமலையின் திகைப்பு இருளாண்டிக்கு என்னவோ போல் இருந்தது.

"கிழவி சொல்லிய காரணம் ஒரு வேளை சொல்லக் கூடாததாக இருந்தால் வேண்டாம்; குற்றமில்லை என்றால் சொல்லு" என்றான்.

"உன்னிடம் சொல்வதால் நன்மை இல்லை என்றால் அவள் கதையை இவ்வளவு சொல்லியிருக்கவே மாட்டேன். நீ வேறு நான் வேறு இல்லை" என்று கதையைச் சொன்னான்.

கிழவி குமரியாக இருந்தாளாம். அப்பொழுது அவளுக்கு ஒருவன் மேல்காதல் ஏற்பட்டிருக்கிறது. ஒருவருக்கொருவர் அடிக்கடி சந்தித்து அந்த அன்பை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டார்களாம். திருமணம் செய்து கொள்வது உறுதி என்று தலையில் அடித்து ஆணையும் சொல்லியிருக்கிறான். ஆணை சொல்லிய அளவுடன் சரியாகி விட்டது போல் இருக்கிறது. ஆளையே பல மாதங்கள் காணவில்லையாம். அந்தக் காலத்திற்குள் இவளுக்கும் திருமண முயற்சிகள் பலமாக நடந்திருக்கின்றன. வந்தவர்களை யெல்லாம் அவனை நினைத்து நினைத்துப் பிடிக்கவில்லை என்று மறுத்து விட்டிருக்கிறாள். பெற்றோர்களும் மகள் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்காது "சரி; வரட்டும்; பொறுத்துச் செய்யலாம்;" என்று அமைதி யடைந்திருக்கிறார்கள். இத்தகைய வேளையில் காதலன் எவளோ ஒருத்தியை - நல்ல பணக்காரியாம் - மணம் செய்து கொண்டு ஊருக்கு வந்து விட்டானாம். இதைப் பார்க்கப்பார்க்க எரிச்சலாக இருந்திருக்கிறது அவளுக்கு. இப்படிப்பட்ட 'கயவன்' என்பதை முன்னமே அறிந்து கொள்ளாதது தன் குற்றம் என்று நொந்து திருமணமே வேண்டாம் என்று வெறுத்திருக்கிறாள். பெற்றோர்கள் விடுவார்களா? எப்படியோ வற்புறுத்தல் செய்து பொன்னுத் தாத்தாவுக்குத் திருமணம் செய்திருக்கிறார்கள். என்ன இருந்தாலும் வாழ்வில் தோல்வி இல்லையா?

"ஆமாம்! இதற்கும் மணிக்காளைக்கும் என்ன தொடர்பு!" முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் போடும் முடிச்சாக அல்லவா உள்ளது" என்றான் இருளாண்டி.

"கேள்; மணிக்காளை தரகர் ஆனான் அல்லவா! அவனுக்கு அந்த வேலையைத் தந்தானே அவன் தான் கிழவியின் பழைய காதலனாம். கிழவிக்கு எத்தனையோ முறைகளில் உதவி செய்யப் பார்த்தானாம். கிழவி வாயிற்படி ஏற விடவில்லையாம். தாத்தா இறந்த போது வீட்டுக்கு

வந்தவனையே மானம் போகக் கேட்டு அனுப்பினாளாம். என்ன இருந்தாலும் தான் செய்தது தவறு என்று அவன் உணர்ந்து கொண்டதாலும், எப்படியும் அவளுக்கு உதவ வேண்டுவது தன் கடமை எனத் தெளிந்ததாலும், அவள் எந்த உதவியையும் ஏற்கமாட்டாள் ஆதலால் அவளைக் காக்கும் மணிக்காளைக்குத் தன் வேலையைக் கொடுத்திருக்கிறான். இல்லையேல் அவன் தரவே மாட்டான் என்று கிழவி காரணம் காட்டுகிறாள்" என்றான் தலைமலை.

"நல்ல காரணம்! கிழவி உள்ளம் வெள்ளையானது என்று என்னிடம் ஒருமுறை சொன்னாய். அவள் உள்ளம் வெள்ளையாவது கறுப்பாவது? வைராக்கிய நெருப்பு என்று சொல்லு. பாவம்! மணிக்காளைக்குத்தான் அல்லல்" என்ற சோர்வுடன் உரைத்தான் இருளாண்டி.

"அதுதான் இல்லை! மணிக்காளை தவிர்த்து வேறு யாருமாக இருந்தால் அப்படித்தான் நிலைமை ஆகும். ஆனால் அவன் என்ன சொன்னான் தெரியுமா? தங்கம் தன் ஒளி உடையது. அதனை மேலும் மேலும் ஒளியுடையதாக்க வேண்டுமானால் தீயிலே வெந்து வெந்து உருக வேண்டும். மனிதனும் உயர்ந்தோனாக, நல்லோனாக, புகழாளனாக விளங்க வேண்டுமானால் துன்ப நெருப்பிலே காய்ந்து காய்ந்துதான் ஆக வேண்டும்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" (267)

என்பதில் எவ்வளவு வாழ்க்கைத் தெளிவு உள்ளது என்பதை இன்னும் உனக்கு விளக்கிக் கூற வேண்டியது இல்லையே" என்பான். அவனே சொல்வான் "மரங்களிலே ஒன்று பூவரசு அதனை வெட்டிவிட வெட்டிவிடத்தான் கொழுமையாகவும், பக்கம் விரிந்தும் நன்றாக வளரும். வெட்டா விட்டால் கொழுமையோ வளமான வளர்ச்சியோ இருக்காது. ஆனால் வேம்பு அப்படிப்பட்டது இல்லை. வெட்டி விட்டால் வளமும் கொழுமையும் தொலைந்து விடும். மனிதர்களிலும் பூவரசாக வாழ்பவர்கள் துன்பம் நேர நேர வளம் பெறுகிறார்கள்; உரம் பெறுகிறார்கள். வேம்பாக வாழ்பவர்கள் வளம் இழக்கிறார்கள்; உரம் இழக்கிறார்கள். என் உள்ளத்தை உர மூட்டுவதற்காகத் தான் இளமையிலே தாய் தந்தையரைப் பறித்த இயற்கை, வறுமையைத் தந்து, வண்டியிழுக்கச் செய்து, பொன்னுத் தாத்தாவை உறவாக்கி, அவரையும்

நடுவில் கொள்ளையிட்டு, அவர் மகனைப் பகையாக்கி, அவர் மனைவியை என்னிடம் ஒப்படைத்து, அவளும் என்னை விட்டு வெளியேறினால் சரி, இல்லையேல் சாவு என்னுமாறு ஆக்கி விட்டிருக்கிறது. திடுதிப்பென்று ஒருவனுக்கு இப்படி ஏற்பட்டிருந்தால் வந்த துயரங்களையெல்லாம் வரவேற்றுக் கொண்டு புன்முறுவல் பூப்பானா? எனக்குப் பழக்கமாகி விட்டது. மருந்து சாப்பிட்டுச் சாப்பிட்டுப் பழக்கமானவன் - மருந்தையே உணவாக ஆக்கிக் கொண்டவன் - புதிதாக மருந்து சாப்பிடுவனைப் போன்று முகத்தைச் சுழித்து, நாவைப் பிதுக்கி, குடலைப் பிடுங்கிக் கொண்டு இருப்பானா? எனக்குத் துன்பம் பழக்கமாகி விட்டது; சிரித்துக் கொண்டு அனுபவிக்கின்றேன்; நீயும் அப்படித் தானே" என்பான். "மணிக்காளை நெருப்பின் இடையே கூட வாழப் பழகி விட்டவன் இல்லையா, இருளாண்டி!" என்றான் தலைமலை.

"ஆம்! நெருப்பிலே பிறந்து, நெருப்பிலே வளர்ந்து, நெருப்பிலே வாழ்பவர்களுக்கு அது ஒரு வேளை பழக்கம் என்று சொல்லி விடலாம். ஆனால் நெருப்பிலே பிறந்து வளர்ந்தாலும் நீரிலே வாழப் பழகி விட்டவர்களுக்குப் பின்னும் நெருப்பிலே வாழ்வது சங்கடமில்லையா!" என்றான் இருளாண்டி.

"செயற்குரிய செய்வதிலே என்ன சிறப்பு! செயற்கு அரிய செய்வதிலே தானே சிறப்பு!" என்று தங்களை நோக்கி ஒருவன் வருவது கண்டு நிறுத்தினான் தலைமலை. வந்தவன் கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு ஏதோ உளறினான்.

"அரைபோல் இருக்கிறது" என்றான் இருளாண்டி. "ஆமாம் ; கிழவி மகனுக்கு என்ன ஏற்பாடு செய்தீர்கள்?" என்று வழியில் நடந்தவனைப் பார்த்துக் கொண்டு கேட்டான் இருளாண்டி.

"கீழ்பாக்கத்திற்குத்தான் அவனை அனுப்பினோம். அவனை மணிக்காளையுடன் அனுப்ப முயன்றேன். மாட்டேன் என்று பிடிவாதம் செய்து விட்டான். பின்பு நானும் உடன் போனேன். தொடரி ஏறியதிலிருந்து அவன் சிரிப்பு உச்சமாயது. மணிக்காளையும் சிரித்தான்! இரண்டிற்கும் இருந்த இடைவெளி எனக்கு எத்தனையோ வாழ்க்கைக் காட்சிகளை முன்னிறுத்திக் காட்டின" என்று பேச்சை நிறுத்தினான் தலைமலை.

இடுக்கண் அழியாமை

1. இடுக்கண் வருங்கால் நகுக ; அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.

2. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

3. இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

4. மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து.

5. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்.

6. அற்றேமென் றல்லல் படுபவோ பெற்றேமென்
றோம்புதல் தேற்றா தவர்.

7. இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல்.

8. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

9. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.

10. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு.

❖❖❖

இ. திருக்குறளில் ஊழ்

ஊழ்வரவு

'ஊழ்' என்னும் சொல், பழந்தமிழ் நூற் சொல்லடைவின் படி, பாட்டு தொகைகளில், 53 இடங்களில் இடம் பெற்றுள்ளது. ஊழுறு, ஊழூழ், ஊழ்க்கும், ஊழ்த்தல், ஊழ்ப்ப, ஊழ்பாடு, ஊழ்மாறு, ஊழ்முகை என்னும் வடிவங்களில் மேலும் 35 இடங்களில் இடம் பெற்றுள. 'ஊழணி தைவரல்' எனத் தொல்காப்பியத்தில் ஓரிடம் பெற்றுள்ளது. திருக்குறளில் 'ஊழ்' ஆறு இடங்களிலும், 'ஊழ்த்தும்' என ஓரிடத்தும் இடம் பெற்றுள. இத்தொண்ணூற்றாறு (96) இடங்களிலும் **ஊழொடு 'வினை' சேர்ந்து வரவில்லை. திருக்குறள் ஒழிந்த நூல்களில், 'ஊழ்' என்பதற்கு உரையாசிரியர்களால் ஊழ்வினைப் பொருளும் தரப்படவில்லை!**

தொகை நூல்களில் ஒன்று பரிபாடல், அதற்கு உரை கண்டவரும் **பரிமேலழகரே.** அப்பாடலில் மட்டும் ஊழ் என்னும் சொல் 11 இடங்களில் ஆளப்பட் டுள்ளது. அவ்வுரையில் அவர் **ஊழ் என்பதற்கு ஊழ்வினைப் பொருள் தரவும் இல்லை.**

ஊழ்வினை

'ஊழ்வினை' என்னும் ஆட்சி, பாட்டு, தொகை, தொல்காப்பிய நூல்களில் இல்லாமல் இருந்தும், திருக்குறளில் ஊழ் இடம் பெறாமல் இருந்தும் உரையாசிரியர்கள் 'ஊழ்' என்பதற்கு 'ஊழ்வினை' எனப் பொருள் காண்பானேன்?

சிலம்பிலும் மேகலையிலும், 'ஊழ்வினை உருத்தலும்' 'ஊழ்வினை வருதலும்', 'ஊழ்வினை துரப்பலும்', 'ஊழ்வினை கடைதலும்' பெருவழக்காகியதாலும், அவற்றுக்குப் பின்னூல்களில் மேலும் பெருகியமையாலும், முன்னூல்களில் காணாத ஊழ் வினையைத் திருக்குறளில் வரும் ஊழுக்குப் பொருத்தி, **வள்ளுவர் உள்ளகத்தையும் அவர் ஒளிநெறியையும் சிதைத்து உருக்குலைத்து விட்டனர்.**

ஊழ் - பொருள்

ஊழ் என்பதற்குப் பழநூல்கள் வழியே அறியப்படும் பொருள்கள் எவை? அவற்றை ஆய்ந்து, அத் தடத்தின் வழியே வள்ளுவ ஊழைக் காணல் முறையாகும்.

ஊழ் என்பதற்கு **முறைமை, மலர்தல், அலர்தல், முதிர்தல், முற்றல், உதிர்தல், செவ்வியழிதல் அல்லது பதனழிதல், பொருந்துதல்** என்னும் பொருள்கள் உள்ளமை அறிய வாய்க்கின்றன. அச்சான்றுகள் முறையே பின் இணைப்பில் இடம் பெற்றுள. ஆங்குக் கண்டு கொள்க.

தொகுப்பு

மேற்குறித்த இப்பொருள்களை நோக்கிய அளவால் ஒருவருடைய விருப்பு வெறுப்புகளுக்கோ, செயற்பாடுகளுக்கோ – எத்தகைய தொடர்பும் இல்லாமல், இயல்பாகத் தானே நிகழும் நிகழ்ச்சியே ஊழ் என்பது புலப்படும். அவை **ஆக்கமாதல், அழிவாதல்** என்னும் இருநிலைப்பாடுறலும் புலப்படும்.

காற்று

வீட்டுக் கொல்லையிலே இரண்டு வாழைகள். ஒருநாள் ஓங்கிக் காற்றடிக்கிறது. அக்காற்றிலே ஒரு வாழை வீழ்கிறது; மற்றொரு வாழை வீழாமல் வாழ்கிறது. இவை செய்த செய்வினை என்ன? முன்னை வினை என்ன? இற்றை வினையோ பிற்றை வினையோ தாம் என்ன?

காற்றின் சுழற்சி வலுவாய இடத்தில், வீழ்ந்த வாழை இருந்திருக்கலாம். அல்லது அக்காற்றை மற்றை வாழை போல் தாங்கும் ஆற்றலாக வேர்ப்பிடி இல்லாமல் இருந்திருக்கலாம். அவ்வளவே! அவற்றின் வீழ்ச்சிக்கும், வாழ்ச்சிக்கும் வேறு காரணம் காட்டல் கற்பிப்பார் கருத்தேயன்றிப் பிறிது இன்று.

மழை

வலுத்த மழை பொழிகின்றது; எதிர்பாராத மழை; ஓருழவன் அரிதின் முயன்று பெரிதும் பாடுபட்டு – ஆழ்நீர்க் குழாய் வழியே தண்ணீர் எடுத்துப் பாடுபட்டு - விளைவான நெற்கதிர், அடிக்கப்பட்டுக் களத்திலே கிடக்கின்றது. அடித்த பெருமழை, அப்படியே வாரிக் கொண்டு ஓடை உடைப்பொடு தள்ளிக் கொண்டு ஓடுகின்றது! விளையவேண்டும் போது மழையில்லை! விளைந்து களத்தில் கிடக்கும்போது, வேண்டாத மழை கொள்ளை கொள்ளையாய்ப் பொழிந்துவிட்டது.

அவ்வுழவன் காடு மற்றொன்று; புன்செய். அதில் பருத்தி பயிரிட்டு இருக்கிறான். சாகின்ற நிலைமையில் இருந்த பருத்தி, பெய்த மழையால் பூவும் பிஞ்சுமாய்க் காய்த்துக் குலுங்கியது.

ஒரே உழவனின் நல்வினை என்ன? அல்வினை என்ன? நெல் அழிவானேன்? பருத்தி விளைவானேன்? நெல்லுக்கும் பருத்திக்கும் வினை என்ன வினை? வெள்ளம்.

வெள்ளம்

வெள்ளம்; பெருவெள்ளம்; பேய் வெள்ளம்; கடல் நீரெல்லாம் அள்ளிக் கொட்டிய வெள்ளம்; கடல் நீரும் உட்புகுந்த வெள்ளம்; கடற்கரையூர். ஏறிய வெள்ளம் கரை மேல் ஏறியது; ஊரைச் சீறியது; ஆடு மாடு கோழி குஞ்சு ஆகிய எல்லாம் இழுத்தது; ஆண் பெண், குழந்தை பெரியர், பொய்யன் மெய்யன், வஞ்சன் திருடன், அறவன், துறவன் ஆகிய அனைவரையும் விடாமல் இழுத்தது. குடிசை, காரை, மாடம் கூடம், கோயில் குளம், பள்ளி அறச்சாலை ஆகிய எல்லாவற்றையும் அழித்து நிலமட்டம் ஆக்கியது. அதற்கென்ன எவர் வேண்டும்? எது வேண்டும்? எல்லாம் ஒன்றே; எல்லாரும் ஒன்றே.

தீ

ஓரிடத்தே அயர்தியால் பற்றுகிறது தீ. அது பரவத் தக்கபடி காற்று விசுறுகிறது! கொழுந்து விட்டு மேலே எழுகிறது. அதன் நாவு தாவித் தாவி எரிக்கிறது. எரியின் எரிவுக்கு எவர் நல்வினையர்? எவர் அல் வினையர்? அனைவருக்கும் ஒருவினையே அது செய்யும். அணைக்கும் அளவுக்கும் – முடிந்த அளவும் – எரித்துத் தீர்க்கும். அதே பொழுதில் காற்று தெற்கே இருந்து வடக்கே தள்ளினால் வடக்குப் பக்கமெல்லாம் பாழ்! வடக்கே இருந்து காற்று தெற்குப் பக்கம் தள்ளினால், தெற்குப் பக்கமெல்லாம் பாழ்! எரிந்த பக்கத்திற்கு எதிர்ப்பக்கம் எல்லாம் நல்வினைப் பக்கமா? எரிந்த பக்கமெல்லாம் அல்வினைப் பக்கமா?

பாலம்

அரியலூர்ப் பாலத்தின் மேல் வண்டி வருகிறது; பாலம் சரிகிறது; வண்டி சரிகிறது; பெட்டிகள் சில கீழே வீழ்கின்றன; சில பெட்டிகள் சரியாமல் நின்றன! நின்ற பெட்டியில் இருந்தவர்கள் அனைவரும் அறவோர்களா, நல்வினையாளர்களா? வீழ்ந்த பெட்டியில் இருந்தவர்கள் அனைவரும் மறவோர்களா, அல்வினையாளர்களா?

விண்

125 பேர்களுடன் வான ஊர்தி கிளம்புகின்றது. மேலே மேலே பறக்கின்றது. மேலேயே பொறி பழுதுபடுகின்றது; அல்லது தீ பற்றுகின்றது.

மலை மேல் மோதி விழுகின்றது ஊர்தி. அதில் இருந்த ஒருவரும் தப்பினார் அல்லர். அவர்கள் அனைவரும் ஒருமித்த தீவினையாளர்களா? தீமைக்கு ஆட்படாமல் இறங்கிச், சேர வேண்டியவர்களைச் சேர வேண்டிய இடத்தில் இனிது சேர்த்த பிற வான ஊர்தியில் சென்றவருள் எவருமே தீவினையாளர் இலரா?

நிலம்

சப்பான் நாட்டிலே நிலநடுக்கம்; எரிமலைக் குழம்பு வீச்சு! அதற்கும் அந்நாட்டு மக்கள் நல்வினைக்கும் அல்வினைக்கும் தொடர்பா?

ஆபிரிக்காவில் வயிரமும் தங்கமும் வெட்டிப் பார் என்னும் அளவுக்குக் கட்டி கட்டியாக எடுக்கப்படுகின்றன. அதற்கும் ஆங்கு வாழ்ந்து அல்லல்பட்டு ஆற்றாது அழும் கருப்பு மக்களுக்கும் நிறவேற்றுமைக் கொடுமைப் பிறப்பாம் வெள்ளை மக்களுக்கும் ஒத்த வினைத் தொடர்பென்ன தொடர்பு?

அரபு நாடுகளில் பணம் குவிகின்றது. கன்னெய் பொழிகின்றது. அதனால்! அரபு நாட்டவர் - அற வினைதான் அக்கொடைக்கு அடிப்படையா?

இப்பகுதியை எழுதிக் கொண்டிருக்கும் இன்று (12.6.91) தினமணியில், “சப்பான் நாகசாகிப் பகுதியில் உள்ள 1359 மீட்டர் உயரம் கொண்ட உன்சென் எரி மலை குமுறுவது இன்னும் நிற்கவில்லை. மலையின் கிழக்குச் சரிவில் எரிமலை கக்கிய சாம்பல் படிந்திருப்பதைப் படத்தில் காணலாம்” என்று படமும் செய்தியும் வெளியாகியுள்ளன (பக். 1). அப்பகுதி மக்களே அன்றி ஆயச் சென்றவர்களும் அழிந்து பட்டமை அதற்கு முன்னே வந்த செய்திகள்.

அத் தினமணி பத்தாம் பக்கத்தில் “பாகித்தானில் அனற்காற்று: 418 பேர் பலி” என்னும் செய்தி உள்ளது. இவையெல்லாம் செய்வினைத் தொடர்பினவா!

1961ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் நாள் சிலி நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் ஏறத்தாழ 7000 சதுரக் கல் பரப்புள்ள நிலப்பகுதி பெருஞ்சேதத்திற்கு ஆட்பட்டது. அப்பரப்பு உயிரிகளுக்கெல்லாம் ஒரு மொத்த வினையா?

கேட்டில் கேடு

இயற்கையால் நன்றாகவும் தீதாகவும் ஆகும் ஊழை, ஊழ் வினை என்றும் வினைப் பயன் என்றும் தலைவிதி என்றும் சொல்லிச் சொல்லி மக்களைச் சாய்க்கடைப் புழுவாகச் செய்து, இன்று வரையிலும் அதற்குத் தீர்வு காணவும் எண்ணாத, எண்ணுவதும் பாவம் என்கிற வகையில் செய்த **மூளைச் சலவைச் செயல் மறக்கக் கூடியது அன்று; மறுக்கக் கூடியதும் அன்று!**

பொருள்

ஊழ் என்பது அறநூலுக்கு இன்றியமையாததா? அன்புடைமை விருந்தோம்பல் இனியவை கூறல் போல இல்வாழ்வுக்கோ, கல்வி கேள்வி அமைச்சு ஒற்று என்றாற் போல் அரசு வாழ்வுக்கோ, 'ஊழ்' வேண்டிற்று ஒன்றா! இல்லையே! அஃது அறநெறிப் பாற்பட்ட ஒன்று அன்றே. மாந்தரின் இயற்கை கடந்த இயற்கை அல்லவோ அது!

அறத்துப்பால் இறை வணக்கத்தை அடுத்து வான் சிறப்பு வைத்த வள்ளுவர், அப் பாலின் இறுதியில் ஊழ் வைத்த வைப்பு முறை எண்ணி எண்ணி ஊற்றம் பெறத் தக்க ஒன்றல்லவோ!

இறைமை

ஊழியற்கையை இறையோடு தொடர்புபடுத்துவதும், அதனை ஊழ்வினையாக்கி, உயிரிலா அதனை இயக்குவது இறையென்று மயக்குவதும், இறைமைக்கே ஏலாப் பழியாம், காக்கும் இறை, கூண்டோடு பூண்டோடு அற்றுப் போக அழிக்குமா? பெற்ற அன்னை தம் மூளைநிலை சரியாக இருப்பாளேயானால், தன் பிள்ளைக்குச் சிறுதுயர் வரவும் பொறாள். உள்ள பிள்ளைகளிலும்கூட வலுவற்ற குறையுற்ற பிள்ளை எதுவோ அதன் மீதே சற்றே கூடுதலான வாஞ்சையும் வைப்பாள். தான் பெற்ற பிள்ளையைத் தாய் தன் நிலைமாறாமல் இருந்தால், ஒருநாளும் கொல்ல மாட்டாள் - துயரூட்ட மாட்டாள் என்பதை மெய்யாகக் காணும் நாம் முழுமுதல் இயற்கையின் இயக்க நிலையால் ஏற்படும் நலம் பொலங்களை - தடுத்தற்கரிய நேர்ச்சிகளை - **இறையின்பால் படுத்தி அதனைச் சிறுமைக்கு ஆளாக்குவது அறக் கொடுமையானதாம்!**

உலகியற்கை

தோன்றலும் அழிதலும் உலகியற்கை; தளிர்த்தலும் உதிர்த்தலும் உலகியற்கை; விழுதலும் எழுதலும் உலகியற்கை; தீ மேலே கிளர்தலும், நீர் கீழே விழுதலும் உலகியற்கை; கோள்கள் திரிதலும், காற்றுச் சுழல்தலும், வெயில் முகில் உருவாக்கலும், முகில் மழை பொழிதலும், மழை பெருகலும், கடலில் சேரலும், கடல்நீர் கரித்தலும், ஆவிநீர் கரிப்பறுதலும் – எல்லாம் எல்லாம் உலகியற்கை! இவ்வியற்கையே ஊழ்! இதன் செயற்பாடு அனைவருக்கும் அனைத்துப் பொழுதுகளிலும் நன்மை தருவதும் அன்று; தீமை தருவதும் அன்று. ஒருவர்க்கே நன்மையும் ஆகலாம்; தீமையும் ஆகலாம்; ஒரு பகுதி நன்மையும் ஒரு பகுதி தீமையும் ஆகலாம்; ஒரு மொத்த அழிவும் ஆகலாம்; ஒரு மொத்த ஆக்கமும் ஆகலாம்; ஓரோர் பகுதிக்கு ஆக்கமும் அழிவும் மாறி மாறியும் ஆகலாம்.

வெற்றி தோல்வி

கடலுக்குள் மீன்பிடிக்கக் கட்டுமர மேறிப் போகின்றான். புயல் உருவாக்கம் காண்கிறான். மீள நினைக்குமுன் புயலுக்குள் சிக்கி மாளக்கொண்டு போகப்படுகிறான்! அவருள் ஒருவன், உடைந்த கட்டை கையில் வாய்க்க எப்படியோ பற்றிக் கொண்டு கரை யேறுகிறான். முன்னவனை ஊழ் வெற்றி கொண்டுவிட் டது. பின்னவன் ஊழை வெற்றி கொண்டு விட்டான்!

மேலே பறக்க மாந்தனுக்கு உடலமைப்பு இல்லை. அவன் பறவை போல் பறக்கிறான். அது ஊழின் வெற்றியே! ஆனால் அவனே முகில் மூட்டத்துள் பட்டுத் திசை மாறி மலை மேல் மோதி வீழ்கிறான். அங்கே ஊழ் வெற்றி பெற்றுவிட்டது.

ஊழ் வெல்லும் நிலையும் உண்டு. ஊழை வெல்லும் நிலையும் உண்டு! உலகியற்கையை உன்னிப்பாகக் காண்பார் உண்மை உணர்வார்!

விரிப்பு விளக்கம்

கறைபடாச் சுவரில் வண்ணவோவியம் தீட்டின் பளிச்செனத் தோன்றும். ஆனால், காலம் காலமாகக் கறையாக்கி எண்ணெய்ப் பிசிறும் ஆக்கி வைக்கப்பட்ட சுவரில், வண்ண ஓவியம் எத்தகு வனப்பாகத் தீட்டினாலும் எடுபடாது! முதற்கண் அச் செறிஅழுக்கை அறவே போக்கும்

முற்கட்டப்பணியை முடித்தே வரை பணியைத் தொடங்க முடியும். அவ்வாறே காலம் காலமாகக் கறையாக்கப்பட்டு வந்துள்ள ஊழ் வினைப் பசையைப் போக்கி வள்ளுவ ஊழை வகுத்துக் காட்ட இத்துணை முதற்கட்டப் பணிகள் வேண்டியுள்ளனவாம். இனி வள்ளுவர் காட்டியுள்ள ஊழைப் பற்றிக் காணலாம்.

ஊழ்த்தல்

வள்ளுவர் 'ஊழ்த்தும்' என்னும் சொல்லைச் சொல்வன்மையில் பயன்படுத்துகிறார். மணமுடைய பூக்கள் முகையாக இருக்கும் போதே அவற்றுக்கு அம்முகையுள்ளும் மணமுண்டு என்பதைக் காமத்துப் பால் குறிப்பறிவுறுத்தலில்,

"முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ள தொன்று உண்டு" (1274)

என உவமைப்படுத்துகிறார். அது மணப்பூ. சொல் வன்மையில் சுட்டும் பூவோ, மணமிலாப்பூ. கற்றிருந்தும் கற்றதைப் பிறர் உணர விரித்துரைக்க மாட்டா தான், முகை விரிந்தும் மணவாத பூப்போல்வான் என்கிறார். அது,

"இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்" (650)

என்பது. இங்கே வந்துள்ள ஊழ்த்தலுக்கு **'மலர்தல்'** பொருள் உண்மை அறியத் தக்கது.

ஊழி

ஊழ் என்பதுடன் தொடர்புடைய **'ஊழி'** என்னும் சொல்லையும் வள்ளுவர் ஓரிடத்துப் பயன் படுத்தியுள்ளார்.

"**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
ஆழி எனப்படு வார்"

என்பது அது. அதற்குப் பரிமேலழகர் சால்புடைமை ஆகிய கடற்குக் கரை என்று சொல்லப்படுவார், ஏனைக் கடலும் கரையுள் நில்லாமல் காலந்திரிந்தாலும் தாம் திரியார் என உரை வரைகின்றார். ஆதலால், ஊழி என்பதற்குக் காலப் பொருள் தருகின்றார்.

இவ்வூழியைப் பரிபாடல் நன்கு கூறுகின்றது.

'கருவளர் வானத் திசையில் தோன்றி
உருவறி வாரா ஒன்றன் ஊழியும்,
உந்துவளி கிளர்ந்த ஊழுழ் ஊழியும்,
செந்தீச் சுடரிய ஊழியும், பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும், அவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கும்
உள்ளீடாகிய இருநிலத் தூழியும்"

என விரிகின்றது (2:5-12). ஒலிவடிவமான வெளி என்னும் ஒன்றாம் ஊழியும், அவ்வெளியில் இருந்த வளி என்னும் ஊழியும், அதன் பின் நீர், தீ, நிலம் எனத் தோன்றிய ஊழிகளும் என ஐவகை ஊழிகளை இப் பகுதி கூறுகின்றது. இவ்வூழி, இயற்கை வழிப்படுதலை அறிய இப்பகுதி உதவும்.

முப்பொருள்

தொல்காப்பியனார் பொருள்களை முப்பாற் படுத்தினார். அவை, முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்பன. இம் முப்பொருள்களுள் **முதற் பொருளே அடிப்படைப் பொருளாம்.** அது நிலமும் பொழுதும் (இடமும் காலமும்) என இருவகைப்படும், கருப்பொருள் என்பது முதற்பொருள் வழியாகப் பெறும் இயற்கைப் பொருள்களும், அவற்றைக் கொண்டு மாந்தர் ஆக்கிக் கொள்ளும் பொருள்களுமாம். இனி, உரிப்பொருளோ எனின் ஒழுக்கப் பொருளாகும். இம் முப்பொருள் விளக்கமும் அறிய வாய்க்கும் நூல் திருக்குறள் ஆகும்.

இவற்றுள் முதற் பொருள் விளக்கமாக வான் சிறப்பும், ஊழும், காலமறிதல், இடமறிதல் என்பனவும் அதிகார அளவால் செறிகின்றன. பிறபிற இடங்களிலும் இம் முதற்பொருள் விளக்கம் பெறுகின்றமை அறியலாம். இம் முதற்பொருள் - **கால இட- வழியாக ஏற்படும் மாற்றங்களே ஊழாகும்.** ஆதலால், அறிவறிந்து ஆளவல்ல அமைச்சனுக்கும் ஓர் ஆணை யிடுகின்றார் வள்ளுவர்:

"செயற்கை அறிந்தக் கடைத்தும், உலகத்து
இயற்கை அறிந்து செயல்"

என்பது அது (637)

ஐம்பூதங்கள்

ஐம்பூதங்களின் கலப்பால் அமைந்ததே உலகம் என்பதை இற்றை அறிவியலாரும் கூறுகின்றனர். ஆசிரியர் தொல்காப்பியனார்,

"நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

என்றார் (மரபு. 90). "அண்டத்திற் குரியவை பிண்டத் திற்கும் உண்டு" என்பது பழமொழி. ஐம்பூதங்களும் கலந்திருத்தல் உடலுள்ளும் உண்டு என்பதை,

'வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்"

என்பதன் வழியாக வள்ளுவர் தெளிவிப்பார் (171). இவ்வைம்பூத இயல்பை அறிந்தோரிடத்தேதான் உலகியக்கம் அடங்கியுள்ளது என்பதை,

"சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு" (27)

என்பதன் வழியாகவும், அத்தகையர் வழிநிற்பாரே நீடுவாழ்வார் என்பதை,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்" (6)

என்பதன் வழியாகவும் கூறினார்.

வெளி வளி தீ நீர் நிலம் என்னும் ஐம்பூதங்களும் முறையே, ஒலி, ஊறு, ஒளி, சுவை மணம் என்பவற்றைப் படிமான வளர்ச்சியில் பெறுவன என்பது அறியத்தகும்.

வெளி - ஒலி
வளி - ஒலி, ஊறு
தீ - ஒலி, ஊறு, ஒளி
நீர் - ஒலி, ஊறு, ஒளி, சுவை
நிலம் - ஒலி, ஊறு, ஒளி, சுவை, மணம்

எனக்காண்க. ஐந்தவித்தல் - ஐந்தையும் அழித்தல் அன்று. அவித்தல் - பக்குவப் படுத்தல் பொருளது. அவித் துண்ணல், பாகம் செய்தல் எனப்படுவது அறிக.

ஐயுணர்வு

இவற்றை அறிவதற்காகவே ஐம்பொறிகள் அமைந்துள. அவை மெய் வாய் கண் மூக்கு செவி என்பன. இவ்வைம்பொறிகளின் வழியாக ஐம்புலப் பாடுகள் உண்டாகும். அவை கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிதல் என்பன. அவையே ஐயறிவுகளாம். அவை, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. இவ் வையறிவளவில் நிற்றல் விலங்கியல். அவற்றுக்கு மேலறிவாம் ஆறாம் அறிவு பெறுதலே மாந்தர் இயலாம். அவ்வறிவே மெய்யறிதல் (அ) மெய்யுணர்தல்

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு"

என்பது வள்ளுவ மெய்யுணர்வு (354).

மெய்யுணர்வு

மெய்யுணர்வு பெற்றார் உலகியற்கை அறிவார். அவர், மருள் நீங்கிய மாசறு காட்சியவர் (352). அவர், செம்பொருள் கண்டவர் (358) சார்பு உணர்ந்து சார்பு கெடஒழுகுபவர் (359) மலர்தலும் கூம்பலும் இல்லா அறிவினர் (425). ஆதலால் அவர்தம் சிறப்பியலை,

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து" (353)

என்று தெளிவித்தார் தெய்வப்புலவர். ஏனெனில்,

"ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்"

என்றவர் அவர் ஆகலான்.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையகத்தினும் வானகம் நணியதாகுமா? நணியதாகக் கண்டு கூற வல்லரா? இதற்குப் புறநானூறு. மறுமொழி தெளிவாகப் புகல்கின்றது.

"செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்

வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்று அளந்து அறிந்தோர் போல என்றும்
இனைத்து என்போரும் உளரே" (புறம். 30)

என்பது. இதனைப் பாடியவர் முதுகண்ணன் சாத்தனார் என்பவர் முதுகண்ணன் என்பது பேரறிஞர் என்பதாம். இதன் பழையவுரை,

"செஞ்ஞாயிற்றினது வீதியும், அஞ்ஞாயிற்றினது இயக்கமும், அவ்வியக்கத்தாற் சூழப்படும் பார்வட்டமும், காற்றியங்கும் திக்கும், ஓர் ஆதாரமும் இன்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் என்று சொல்லப்பட்ட **இவற்றை ஆண்டு ஆண்டுப் போய் அளந்து அறிந்தவர்களைப் போல நாளும் இத்துணையளவை உடையன என்று சொல்லும் கல்வியை உடையோரும் உளர்"** என்பது.

ஐம்பூதத்து இயற்கையும் அவற்றின் பண்பு கெடாமல் அகத்தேயும் இருப்பதை,

"மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு,
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்"

என்பதால் அப் புறநானூறே காட்டும் (2). இதனைப் பாடியவர் முரஞ்சியூர் **முடிநாகரையர்** என்பார். இதன் பழைய உரை:

"அணுச் செறிந்த நிலனும், அந்நிலத்தின் ஓங்கிய ஆகாயமும், அவ்வாகாயத்தைத் தடவி வரும் காற்றும், அக்காற்றின் கண் தலைப்பட்ட தீயும், அத்தீயொடு மாறுபோலப் பகைவர் பிழை செய்தால் அப்பிழையைப் பொறுத்தலும், அப்பிழை பொறுக்கும் அளவல்ல ஆயின் அவரை அழித்தற்கு உசாவும் உசாவினது அகலமும், அவரை அழித்தற்கு ஏற்ற மனவலியும் சதுரங்க வலியும், அவ்வாற்றால் அவரை அழித்தலும், அவர் வழிபட்டால் அவர்க்குச் செய்யும் அருளும் உடையோய் என்பது.

தொகுப்பு

இங்குக் கூறியவற்றால் ஐம்பூதத்தால் அமைந்த உலகும், அவ்வுலகுபோல் ஐம்பூதக் கூட்டால் அமைந்த உடலும், இவ்வைப்பூத இயல்பொடு பொருந்தி அறிய ஐம்பொறிகளும், அவ்வைம் புலங்களின் வழியால் அமையும் மெய்யுணர்வும் ஆகியனவும் அம்மெய்யுணர் வாளர் உலகத்து இயற்கையை உள்ளவாறு அறிவோர் என்பதும், அவ்வுலகியற்கையே ஊழ் என்பதும், அது ஆக்கமும் கேடுமாம் இருமைத் தன்மை உடையது என்பதும், அதனை வெல்லும் நிலையும், அது வெல்லும் நிலையும் காணக் கூடுவனவே என்பதும், உலகியற்கை யாகிய ஊழறிந்தவர் வழியே உலகியல் பாதுகாப்பு உண்டு என்பதும் அறியலாம்.

வானிலை

காலையும் மாலையும் கடும்பகலும் நள்ளிரவும் கூட வெப்பும் வெப்பக்காற்றும் மழையும் மழைக் குறியும் புயலும் மூட்டமும் அலையெழுச்சியும் நில நடுக்கும் இன்னவாம் அறிவிப்புகளை வானொலிகளும் இதழ்களும் தொலைக்காட்சிகளும் ஓயாமல் ஒழியாமல் பரப்புவானேன்? அஃது ஊழியல் உரைத்து உய்யக்கொள்ளும் கொள்கையேயாம்! 'தலைவிதி அதுவே' என்னின் இவர் ஏன் இவ்வெட்டி வேலை செய்கிறார்? பயனில் சொல் ஒருவரிடம் கூறுவதும் பதர்த்தனம் என்றால், கோடி கோடிப் பேர்க்கு வேலை கெடக் கூறுவது எத்தகு பதர்த்தனம்!

திருவள்ளுவர் கண்ட "ஊழ்" அதிகாரம், பழந் தமிழ்ப் பொருள் மரபு மாறாமல் தான் அமைந்துள்ளதா? இயற்கை நிகழ்ச்சி, முறைமை என்னும் வகையில் தான் செல்கின்றதா? ஆம்!

குறளையும் பொருளையும் அறிந்தால் தெளிவாகிவிடுமே;

"ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி" 311

வளஞ்சேரத்தக்க ஆக்க இயற்கை உண்டாயின், உறுதிப் பாடு உண்டாகும்; அதனைப் போக்கும் இயற்கை உண்டாயின், சோம்பல் உண்டாகும்.

"பேதைப் படுக்கும் இழவூழ்; அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை" 372

இழக்கச் செய்யும் இயற்கை உண்டாயின் அறிவில்லாமை உண்டாகும். ஆக்கஞ் செய்யும் இயற்கை உண்டாயின் விரிந்த அறிவு உண்டாகும்.

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்" 373

நுட்பமான நூல்கள் பலவற்றை ஒருவன் கற்றுத் தெளிந்தாலும் அவன் பிறந்த பிறப்பின் முறைப்படி, உண்டாகிய அறிவே ஓரொருகால் மிகுந்து தோன்றும்.

"இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு" 374

உலகத்து இயற்கை ஆக்கமும் கேடும் என இருவேறு வகைப்பட்டதாகும். ஆதலால் திருவைப் பெற்றிருத்தல் என்பது வேறு; தெளிவைப் பெற்றிருத்தல் என்பது வேறு. ஏனெனில் இரண்டன் ஆக்க வழிகளும் வேறு வேறானவை.

"நல்லவை எல்லாஅம் தீயவாம்; தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு" 375

செல்வம் சேர்த்தற்கு நாம் நல்லவை என்று எண்ணுவன தீய இயற்கையால் தீயதாகி விடுவதும் உண்டு. தீயவை என்று நாம் கருதுவன நல்ல இயற்கையால் நன்மையாகி விடுவதும் உண்டு.

"பரியினும் ஆகாவாம் பாலல்ல; உய்த்துச்
சொரியினும் போகா தம" 376

இயற்கை ஆக்கமாக இருக்குமானால் நமக்குரியவற்றை நாம் வேண்டா எனத் தள்ளினாலும் அது நம்மை விட்டுப் போய்விடாது. அது கேடாக இருக்குமானால் நாம் அது வேண்டுமென எப்படி வருந்திக் காத்தாலும் நம்மைவிட்டுப் போகாமல் இராது.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" 377

கோடியளவில் ஒருவர் தேடி வைத்திருந்தாலும் அதனை நுகரத்தக்க – துய்க்கத் தக்க – இயற்கை நிலை உடல்நிலை துய்ப்பு நிலை என்பவை முறையே அமைந் திருந்தால் அல்லாமல் துய்க்க முடியாது.

செல்வத்தைத் 'திரு' என்னும் சோம்பலை 'முகடி' என்றும், காலத்தைக் 'கூற்று' என்றும் கூறுவதுபோல் ஊழ் 'வகுத்தான்' எனப்பட்டதாம்.

"துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்" 378

அடைதற்கு உரியவை எனப்பட்டவையும் கிடைக்க விடாமல் உலகத்து இயற்கை ஒதுக்கி விடுமானால் தான், அதனைத் துய்க்கும் வாய்ப்பு இல்லாதார் பற்றற்ற நிலையைப் பற்றுவர் போலும். (துய்த்தற்கு வாய்ப்புகள் அனைத்தும் இருக்கும்போது துய்க்காமல் பற்றுதல் அல்லவோ பற்றறுதல்! இவர் நிலை என்னே!)

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லல் படுவ தெவன்?" 379

இயற்கை ஆக்கத்தால் நன்மை விளையக்கண்டு நலப்பேறு என மகிழ்பவர், இவ்வியற்கையின் கேட்டால் நன்மையல்லாமை வரும்போது துன்பப் படுவது அறிவாகுமோ? அறியோம்!

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்" 380

இயற்கையின் நேர்ச்சியினும் மிக வலியவை என்று சொல்லத் தக்கவை எவை உள்ளன? அதனை எதிரிட்டுத் தடுக்க ஒன்று நினைக்கு முன்னரே அவ் வியற்கை முன்னே வந்து நின்று விடும்.

நாடும் ஊழும்

இவை ஊழதிகாரக் குறளும் பொருளும், ஊழின் ஆக்கமும் அழிவும் நலமும் பொலமும் அறிந்து கொண்டால் இயன்ற வகையால் நன்மையை மிகக் கொள்ளலாம்; தீமையில் இருந்து தப்பலாம். அதனை முற்கூட்டியே அறிதற்கு வல்ல திறவோர் மெய்யுணர்வாளர். அவர் விருப்பு வெறுப்பு என்பவற்றைத் தமக்கெனக் கொள்ளாராய் உலக நலங்கருதிய உயர்ந்தோர். உண்மை உணர்வால் உரம் பெற்றோர் ஆதலால், அவர் வழிகாட்டுதல், வளரும் குடும்ப அளவில் நிற்கும் இல்லறத்தாரினும், அவர்க்குக் காவற்கடமை பூண்ட அரசுக்கு உலகியற்கையும் அதன் ஆக்கக் கேட்டு நிலையும் அறிதல் இல்லையேல் காவற் கடன் செவ்விதின் செய்ய இயலாது.

"காவல் என்னும் ஊர்தியை இயக்கும் ஆட்சியன் தெளிவும் தேர்ச்சியும் உள்ளவனாயின் ஊறுபாடு இல்லாமல் அவ்வூர்தி உரிய வழியில் செல்லும். அவன் அவை இல்லாதவன் ஆயின் அவ்வூர்தி மாறான சேற்றில் அழுந்தி மிகப்பல துன்பங்களை மேலும் மேலும் உண்டாக்கும்" எனப் புறநானூற்றில் ஆட்சியாளன் ஒருவனே இதனைத் தெளிவிக்கிறான். அவன் **தொண்டைமான் இளந்திரையன்** என்பான்.

வள்ளுவர், ஆட்சியாளனுக்கு இவ்வூழறிவு இன்றியமையாதது எனக்கண்டதால் அறத்துப்பால் இறுதியில் பொருட்பால் தொடக்கத்தின் முன் வைத்தார். ஊழறியவல்லார் மெய்யுணர்வு மிக்கோர் ஆகலின் நிலையாமை, துறவு மெய்யுணர்வு, அவாவறுத்தல், ஊழ் என அடைவு செய்தார். அதனைத் தனிப்படுத்தி ஊழியல் என ஓரியல் ஆக்கல் அவர் முறைக்கு ஒட்டாததாம்.

இனிப் பொருட்பாவிலே ஆட்சிக்கு அச்சாணியாய் அமைச்சன் பற்றிக் கூறும் வள்ளுவர், அவன் செயற்கை விதிகளை எத்தனை எத்தனைதான் அறிந்தவனாக இருப்பினும், இயற்கை நிலைகளையும் மிக நன்றாக அறிந்தவனாக இருத்தல் வேண்டும் என்று சுட்டியது முன்னர்க் கூறப்பட்டது. அது,

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்" (637)

என்பது.

ஊழறிவின் தேவை

மாந்தர் வாழ்வின் நலமும் கேடும், இயற்கையின் நலத்திலும் கேட்டிலும் பொருந்தி இருப்பதால், ஆக்க மாக்கிக் கொள்ளுதல், கேடு தவிர்த்தல் என்பவற்றுடன் தற்காப்புக்கு வேண்டும் விழிப்புணர்ச்சி கொண்டிருக்க இவ்வூழறிதல் வேண்டுமாம்.

"என்னதான் இருந்தாலும் ஊழில் வலியதே இல்லையே: அதனை வெல்ல எதுவும் கூடாதே என்ற அளவில் அமைந்தால், 'அவ்வூழறிவு மாந்தர் ஊக்கத்தைக் குறைத்துவிடுமே' என்று தோன்றும். அவ்வாறு தோன்றுதலும் கூடாது என்றே **'ஆள் வினையுடைமை'** என்பதோர் அதிகாரம் வைத்தார்.

ஆள் - ஆள்வினை

மாந்தர் வயிற்றுப் பிறந்தார் எவரையும் 'ஆள்' என்பதே வழக்கு, சிறுபருவத்திலும் சிற்றாள் என்பதே பெயர். வளர்ந்தால், 'பெரிய ஆள்' பெரும் ஆள் பெருமாள். ஆணும் ஆளே! பெண்ணும் ஆளே! எத்தனை ஆள்வேலை செய்கிறார்கள்? என்பதில் 'ஆள்' இருபாலுரிமைப் பட்டமை புலப்படும். நல்லாண் என்பது நல்ல ஆணையும் நல்லாள் எனப் பெண்ணையும் குறிக்கும். 'அடுத்தூன்றும் நல்லாள்' என்பது வள்ளுவ ஆட்சி (1030).

'ஆள்' என்பதன் அடையாளம் 'ஆள்வினை' கொண்டு இருத்தல். ஆள் – ஆட்சி ஆள் – ஆண் – ஆண்மை பெண்டிர் எனினும் ஆள்வினை மிக்கோர் ஆடவரே; ஆடு – வெற்றி. ஆடவர், வெற்றியாளர், ஆதலால் ஆள் என்பதன் சான்றே 'ஆள்வினை' உடைமையாகும். அஃதிலார் 'மாள்வினை'த் தவிர்த்தல் தீராது.

வாழ நூல் செய்த வள்ளுவர் **'இடுக்கண் அழியாமை'** கண்டார். 'ஆள்வினை யுடைமை'யும் கண்டார்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்றவர் வள்ளுவர். அதனைப் போல அவ்விடுக்கண்மேல் ஏறி, வெற்றிபெற ஊரவைப்பது ஒன்று இல்லை என்றார். (621)

இடும்பைக்கு இடும்பை ஆக்குவர்; இடும்பைக்கு இடும்பை படாதவர் என்றார் (623)

வெள்ளத்தைப்போலப் பெருக்கெடுத்து வந்தாலும் (நீந்தவல்லான் நீந்திக் கடப்பது போல) அறிவுடையவன் ஊக்கத்துடன் எண்ணிய அளவில் அது கெடும் என்று இயற்கைப் பெருக்கைச் சுட்டி உரைத்தார் (621)

காளை, எவ்வளவு பாரத்தை எத்தகைய இடரான வழியிலும் வண்டியோடு கொண்டுசென்று, பேராற்றல் காட்டுகிறதோ, அதுபோல் ஊக்கமுடையான் எதிரீடுகளைத் தகர்த்து வெல்வான் என்றார் (624)

'உடையார் எனப்படுவது ஊக்கம்' (591)

'உள்ளம் உடைமை உடைமை' (592)

'உரம் ஒருவற்கு உள்ளவெறுக்கை' (600)

'உள்ளத் தனையது உயர்வு' (595)

என ஊக்க மேம்பாட்டை ஊக்கி உரைத்தார். இவ்வளவு சொல்லியபின், இவற்றின் உச்சமாக ஆள்வினை உடைமையை வைத்து 'ஊழை' வெற்றி கொள்க என வாழ்த்தினார். ஒரு குறளில் அன்று மூன்று குறள்களில்.

பொறி இன்மை

பிறவி நிலையிலோ பின்னிலையிலோ உறுப்புக் குறை உண்டாதல் உண்டு. அவை வழிவழிக் கேடு, வயிற்றில் உள்ளபோது உண்டாகிய குறை, வந்தபின் உண்டாகிய கேடு என்பவற்றால் நேர்ந்த நேர்ச்சிகள். இந்நேர்ச்சிகளால் அப்பிறவி, வசைக்கோ பழிக்கோ உரியது ஆகாது. அவ்வாறு வசையும் பழியும் சொல்ல நினைவாரும் அதன் இயற்கைக் குறைகண்டு இரங்காக் கல்லுள்ளப் பாறையர்! பழிப்பவரோ அப்பாறையினும் வலிய பட்டடைக் கல்லர்! அவ்வுறுப்புக் குறை அவர்க்குப் பழியாகாது. அவர் தம் உடற்குறை கொண்டு ஊக்கமற்றவராய்ச் சிறந்த முயற்சிகளில் ஈடுபடாது இருத்தலே பழியாகும் என்றார் வள்ளுவர். அது,

"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி"

என்பது (618).

காட்சி

நான் கண்ணாரக் கண்ட காட்சி. ஓரிளம் பெண். தோள் மூட்டோடு இருகையும் இல்லை. அவள் தன் கால்களையே கைகளாக்கிக் கொண்ட வினைத்திறம், அம்மவோ! வியத்தொறும் வியத்தொறும் வியப்பாம்.

தன் காலாம் கையால், மண்ணெண்ணெய் அடுப்பை எடுத்து வைத்து, ஒருகாலில் தீப்பெட்டியும் ஒரு காலில் தீக்குச்சியும் கொண்டு தீப்பற்ற வைத்தாள்! அதன்மேல் பால்வட்டை வைத்து மூடினாள். பால் சுட்டதும் இறக்கி வட்டைக்கும் குவளைக்கும் மாற்றி மாற்றி ஆற்றினாள். தன் வாயில் தன்காற் கையால் ஊற்றிப் பருகினாள்!

தன் கூந்தலைப் பிரித்தாள்; எண்ணெய் தேய்த்தாள்; வகிடு எடுத்தாள்; பின்னினாள்; பூ முடித்தாள்; பொடி பூசினாள்; பொட்டு இட்டாள்; ஒரு காலில் கண்ணாடி; ஒரு காலில் சீப்பு - பூ - பொடி - பொட்டு!

ஊசியை எடுத்தாள்; நூலை எடுத்தாள்; ஊசியில் நூலைக் கோத்தாள்; துணியை எடுத்துத் தைத்தாள்!

கை இல்லாளா அவள்! கை இல்லாத ஊழை வென்றாளா இல்லையா?

அண்மையில் உயர்பள்ளித் தேர்வு எழுதிய ஒரு பிள்ளை . கை இல்லாள்; காலால் எழுதினாள்; காலால் எழுதுவதால் தேர்வுக்குரிய பொழுதில் அரை மணி கூட்டித் தருவதாகத் தேர்வாளர் கூறினர். 'வேண்டா! இரண்டரை மணிப்பொழுதே போதும்!' என்றாள்! அவ்வாறே சிறப்ப எழுதி முடித்தாள்!

இத்தகு சான்றுகள் அடுக்கவேண்டா. இதனைப் படிப்பாரே எண்ணிப் பார்ப்பின் பலப்பல அடுக்கடுக்காக அலையென வரிசையிடுமே.

தெய்வம்

இயற்கைக்குத் தெய்வம் என்பது ஒரு பெயர். ஆதலால் ஊழுக்கும் அப்பெயர் உண்டு. 'திங்களைப் போற்றுதும்' 'ஞாயிறு போற்றுதும்' 'மாமழை போற்றுதும்' 'பூம்புகார் போற்றுதும்' என்றவை ஊழியற்கை வழிபாடே! ஏனெனில், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்ற அவரே, ஊழை வெற்றிகொண்டவர் அல்லரோ!

"ஊழால் அல்லது இயற்கை நேர்ச்சியால் வெற்றி கொள்ள முடியாத ஒன்று இருக்குமாயினும் விடாது முயல்க. அம்முயற்சிக்குப் பயன் இல்லாமல் போகாது. உரிய பயன் இல்லாமல் போகாது. பெரிய பயன் இல்லை எனினும் உரிய பயன் கிடைத்தே தீரும்" என்னும் முறையால்,

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்றார் (619).

ஊழை வெல்லல்

கூலி என்ன கூலி? ஊழையும் வெற்றி கொள்ள முடியும். உலையாதே! அசையாதே? தளராதே! ஊக்க மாகச் செயலாற்று! மேலே மேலே எழுச்சி கொண்டு ஏறு! நடையிட்டுச் செயலாற்று! ஊழின் பிடரைப் பிடித்து ஏறி, அதன் முதுகில் அமர்ந்து வெற்றி காணவும் முடியும் என்றார் (620)

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்" 620

என்பது அது.

உரோசாச் செடியின் (நிலமுளரி) இயற்கை, முள்ளோடு இருத்தல், முள்ளில்லா உரோசாவை உருவாக்கினார் உலூதர்பர் பாங்கு என்பார்.

நாற்றமில்லா வெங்காயம் உண்டா? அவர் ஆக்கினார். இந்நாளில் விதையில்லா முந்திரிப்பழம், கொய்யாப்பழம், மாதுளம்பழம் காண்கிறோமே! இவற்றின் இயற்கை விதையோடு கூடியது தானே! காழில் கனி என்ற வள்ளுவத்தை மெய்ப்பிக்கிறதே அறிவியல். இது ஊழின் வெற்றிதானே!

"மாந்தன் பறக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால் இறைவனே சிறகுகளைப் படைத்திருக்க மாட்டானா? என்று தடுப்பார் இருக்கவும், அரும்பெரும் பாடுபட்டு அயரா முயற்சியால் பறந்த னரே இரைட்டு உடன் பிறந்தார்! அவர் கண்டது ஊழின் வெற்றிதானே!

ஊழை 'ஊழ்வினை' யாக்கிய 'பாழ் வினை', கொடுமையினும் கொடுமை. வாழ்வினை நாடுவார், அத்தாழ்வினை ஒழித்தற்கு முந்துவாராக! உலகியற்கை அறிந்து உய்வாராக! தலைவினை என்பதைத் தட்டிச் சரளைக்கல்லெனப் போட்டுச் சீரிய சாலையமைத்துச் செவ்விதில் நடப்பாராக!

இணைப்பு

ஊழ் என்பதற்குப் பழ நூல்களின் வழியே அறியவரும் பொருள்கள்:

முறைமை

ஊழ்மலர் ஒழிமுகை - முறைப்பட மலர்தலை ஒழிந்தமுகை

- மலைபடு 130

ஊழில் உருமிசை - முறையே இடிமுழக்கம்

- நற் 364

ஊழ்மாறு பெயர் - முறை முறையாக ஒன்றற்கு ஒன்று மாறுபட்ட

- புறம் 125

உருகெழுதாயம் ஊழின் எய்தி - அச்சம் பொருந்தின தன் அரசவுரிமையை முறையாலே பெற்று

- பட்டினப் 227

பல்லூழ் மின்னி - பன்முறைமின்னி -அகம். 175

ஊழ்செய்து இரவும் பகலும் போல் வேறாகி - இரவும் பகலும் போலே முறைமை செய்து வேறாய் .

-கலி. 223

ஊழிறந்து - முறைமையைக் கடந்து

- மலைபடு. 263

கிளிகடி மரபின ஊழ்ஊழ் வாங்கி - கிளியோட்டும் முறைமையினை யுடையவற்றை முறையே முறையே வாங்கி

- குறிஞ்சிப். 44

உந்துவளி கிளர்ந்த ஊழ் ஊழ் ஊழியும் - காற்றுத்தோன்றிய முறை முறையாகிய ஊழிகளும்

-பரி. 2

'ஊழல்' என்பது முறைகேடு என்னும் பொருளில் வழங்கும் நாட்டு வழக்கை அறிக.

மலர்தல்

ஊழுறுமலர் - நன்கு மலர்ந்த மலர் அகம். 398

ஊழ்கழி பன்மலர் - மலர்ந்து காம்பினின்று நீங்கின பலபூ

ஐங்குறு. 368

கொம்புசேர் கொடி இணரூழ்த்த - பூங்கொத்து களை மலரச் செய்தன. குறுந். 66

ஈங்கை செவ்வரும்பு ஊழ்த்த - மலர்ந்த குறுந். 110

அலர்தல்

அரும்பு முகையாய், முகை மொக்காய், மொக்கு - மலராய், மலர் அலராய் வளர்நிலை அறிக.

முதிரிணர் ஊழ்கொண்ட - முதிர்ந்த கொத்துக்கள் அலர்தல் கொண்ட.

கல். 44

ஊழிணர் - அலர்ந்த இணர். பரி.19

நனை ஊழ்த்த செருந்தி - அரும்புகள் அலர்ந்த செருந்தி

கலி.16

முதிர்தல்

ஊழ்ப்படு முதுகாய் - மிக முதிர்ந்த காய். குறுந். 68

ஊழுறு தீங்கனி - முதிர்ச்சியுற்ற இனிய கனி. அகம்.1

ஊழ்கழி பன்மலர் - முதிர்ந்து கழியும் பலமலர். அகம். 202

துணர்க்காய்க் கொன்றை குழற்பழம் ஊழ்த்தன - முதிர்ந்தன.

-ஐங்குறு. 458

முற்றல்

ஊழுறு விளைநெற்று - முறையாக முற்றி விளைந்த நெற்று.

- அகம். 115

மராஅத்து ஊழ்மலர் - கடம்பின் முற்றியமலர் -அகம். 199

பயறுகாய் ஊழ்ப்ப - பயற்றுக் காய்கள் முற்ற. - அகம். 339

ஊழுற்று - முற்றுதலுற்று - மாலை . 133

உதிர்தல்

மென்கொம்பு ஊழ்த்த - மெல்லிய கொம்புகள் உதிர்த்த ,

குறுந். 138

அலர் அரும்பு ஊழ்ப்பவும் - அலராகிய மலர்களைச் சொரியவும்

அகம். 273

மின்னீன்ற விளங்கிணர் ஊழா - மின்போலும் இணர் உதிராத.

- பரி. 8

செவ்வியழிதல்

துணரியது கொளாவாகிப் பழமூழ்த்து - செவ்வியழிந்து

புறம். 381

நீணிழற் றளிர்போல நிறனூழ்த்த - நீண்ட நிழலில் நின்ற தளிர்போலே வெளுத்த கலி. 20

ஊழுறுபூ - மலர்ந்து கழியும்பூ.

பொருந்த, ஏற்ப என்னும் பொருளில் ஊழ் வருதல் பரிபாடல் வழியாக அறியலாம்.

ஊழுற முரசின் ஒலி செய்வோரும் - (தாளத்திற்கு)
ஏற்ப முரசின் ஒலியை எழுப்புவோரும். பரி.19

வாளி புரள்பவை போலும் துடிச்சீர்க்குத்
தோளூழ் பெயர்ப்பவர்கண் - சீர்க்கு இசையத்
தோளைப் பெயர்ப்பவள் கண் அம்பு புடை
பெயர்வன போலும் பரி. 21

❖❖❖

ஈ. திருக்குறளில் வினை

வினைக் கருதுகோள்கள்

ஒருவர் இப்பிறப்பில் அடைகின்ற இன்பத்திற்கும் துன்பத்திற்கும், முற்பிறப்பில் செய்த செயல்களே (வினைகளே) காரணம் என்கின்றனர்.

ஒருவர் வறியவராகவும் வளமையாளராகவும் இருப்பதற்கு, அவர் முற்பிறப்பில் செய்த நல்வினை அல்வினைகளே காரணம் என்றும் கூறுகின்றனர்.

"இப்பிறப்பில் நான் எதுவும் தீவினை செய்தது இல்லையே; அவ்வாறாகவும் எனக்கு ஏன் இவ்வளவு துயரங்கள் தொல்லைகள்? என் முற்பிறப்பில் செய்த தீவினையாக இருக்குமோ?" எனத் தம்மைத்தாமே நொந்து கொண்டு ஒருவகை அமைதியும் காண்கின்றனர்.

"நீ இந்த மாந்தப் பிறப்புப் பிறந்ததே, நீ முற் பிறப்பில் செய்த நல்வினைதான்; அவ்வாறு நல்வினை செய்யாதவரே புழு பூச்சியாய், நண்டு நத்தையாய், நாய் நரியாய், புலி கரடியாய்ப் பிறந்துள்ளனர்" என்றும் நமக்குச் சிலர் அறிவுறுத்துகின்றனர்.

ஒவ்வொரு விளைவுக்கும் முன்வினையே காரணம் என்றால், அவ்வப்பிறப்பில் செய்யும் செயல்களின் நன்மை தீமைகளுக்குரிய பயன் அவ்வப் பிறப்பில் இல்லை என்பதா, அவ்வப்பிறப்பில் அதற்குரிய பயனை அடைந்துவிட்டு அப்பொழுது அடையாத பாக்கியே அடுத்த பிறவிக்கு வருவது என்பதா?

வள்ளுவர் இவ்வினைக் கொள்கையை ஒப்புக் கொண்டு ஏதாவது சொல்கிறாரா? **வள்ளுவர் தம் வினைக்கொள்கைதான் என்ன?** என்பதைத் தெளிவதே இவ்வாய்வு ஆகும்.

வினை யதிகாரங்கள்

வள்ளுவர் ஊழ் என்றோர் அதிகாரம் வைத்துள்ளார். அதில் **'ஊழ்வினை'** என்னும் சொல்லும் இல்லை. அப்பொருளும் இல்லை. உலகியலில் நிகழும் இயற்கை நிகழ்ச்சிகளே ஊழ் எனப்பட்டமை தெளிந்த செய்தி.

ஆள்வினை உடைமை (62), தீவினையச்சம் (21), தெரிந்து வினையாடல் (52), வினை செயல்வகை (68), வினைத்திட்பம் (67), வினைத்தூய்மை (66), என வினைத் தலைப்புடைய ஆறு அதிகாரங்கள் திருக்குற ளில் இடம் பெற்றுள்ளன. **'வினை'** என்னும் சொல் (சொல்லடைவின்படி) அறுபது இடங்களில் இடம் பெற்றுள்ளன.

வினை வகை

தீ வினை அச்சத்தில் 'தீய செயல்' என்னும் பொருளில் மூன்று இடங்களில் இடம் பெற்றதை அன்றி, பழவினை முன்வினை பின்வினை செய்வினை என்பன போலும் வினைகள் இடம் பெற்றில. **நல்வினை** என்பதும், நல்ல செயல் என்னும் பொருளிலேயே வந்துளது (335), **செய்வினை** இடம் பெற்றுள்ள இடங்களில் செய்யும் செயல் என்னும் பொருளிலேயே வந்துளது (465, 463, 653,677) ஆதலால், திருக்குறளுக்கு உரை கண்டவர்கள் கூறும் வினைக் கொள்கைகள் வள்ளுவப் பார்வையோடு கூடியதா என ஆய்ந்து முடிவு கொள்ளல் முறையாகும்.

இலக்கண வினை

வினை என்பது செயல்; தொழில். அதனைக் குறிக்கும் சொல், வினைச் சொல். அதனைப் பற்றி இலக்கண நூல்கள் விரியக் கூறும். சமய நூல்கள் கூறும் 'வினை' 'செய்வினை' என்பவற்றுக்கும், இலக்கண நூல்கள் கூறுவதற்கும் சொல்லளவால் அன்றிப், பொருளளவால் தொடர்பு இல்லை.

சமயம் சாராக் குறள்

அற நூல் எனவும், வாழ்வியல் நூல் எனவும் கொள்ளப்படும் திருக்குறளில், ஆளப்படும் வினைகள் அனைத்துமே **'செயல்'** என்பன பற்றியே உள்ளன. சமயஞ் சாராதது எனச் சைவக் கல்லாடரே கூறும் நூலுக்குச் **சமயக் கருத்தை ஏற்றி உரை காண்பது முறையாகாது.**

பழந்தமிழில் வினை

பழந்தமிழ் நூல்களில் செய்வினை, நல்வினை, தீவினை என்பன இல்லையோ எனின், உண்டு என்பது உண்மையே. அவற்றில் உண்டு என்றால், 'வள்ளுவர்க்கும் அவற்றில் உடன்பாடு' என்பது எப்படிப் பொருந்தும்?

ஒருவர், ஒருகால எல்லையில் வாழ்வார். அவர் காலக் கருத்தெல்லாம், அனைவர்க்கும் உடன்பாடானவையா? உடன்பாடானவையாக இருக்கும் என்பது கட்டாயமா? கால எல்லை கடந்து பார்க்கும் திறம் இல்லையேல், தூக்கணாங்குருவி கூடு கட்டுவது போலவும், கறையான் புற்றெடுப்பது போலவும், சிலந்தி வலை பின்னுவது போலவும் அதே நிலைதானே இன்றுவரை உலகியல் இருந்திருக்கும்? வளர்நிலை ஏற்பட்டிருக்குமா?

பழந்தமிழ் வழக்கொடு புரட்சி

சங்கத்தார் காலத்தில் சான்றோர் என்ற பலராலும் கொள்ளப்பட்ட மதுவும் ஊனும், வள்ளுவரால் கடியப் பட்டனவே. பரத்தைமை வெறுக்கப்பட்டதே, இப்பார்வை காலத்தொடுபட்ட பார்வையா? காலமும் கருத்தும் வென்ற பார்வை அல்லவோ இது.

வள்ளுவர் கண்ட ஒப்புரவு அந்நாள் எல்லையில் உலகங் கண்டதா? அவ்விரி பார்வையரைக் கால எல்லைக்குள்ளும் இடஎல்லைக்குள்ளும் பொருள் எல்லைக்குள்ளும் அடக்குதல் ஆய்வு முறை ஆகாது.

செய்வினைக் குறள்கள்

ஒருவன் படும் இன்பத்துக்கும் துன்பத்துக்கும், வளமைக்கும் வறுமைக்கும் அவன் தலைவிதி எனப்படும் செய்வினையே அடிப்படை என வள்ளுவர் எங்காவது கூறுகிறாரா? உரைகாரர்கள் கூறுகின்றனரா?

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும் (455)

இதில் வரும் செய்வினை என்பது செய்யும் செயல் தானே. மனத் தூய்மையும் செய்யும் செயல் தூய்மையும் ஆகிய இரண்டும் ஒருவன் சேர்ந்த இனத்தின் தூய்மை தருதலால் வருவதாம் என்பதுதானே பொருள். இதில் விதி ஏது?

"ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்" (463)

ஆகின்ற நன்மையை எண்ணி இருக்கும் முதலை யும் இழந்துவிடும் செயலை அறிவுடையவர் செய்யார் என்பதுதானே பொருள்! இதில் விதி உண்டாகுமா?

"ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்" (653)

என்பதில் வரும் **செய்வினைக்குத்** தலைவிதிப் பொருளா? மேனிலை அடைய வேண்டும் என்று விரும்புபவர் புகழைக் கெடுக்கும் செயல்களை விட்டு நீங்குதல் வேண்டும் என்னும் இதில் விதிப் பொருள் இல்லையே.

"செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்" (677)

இதில் வரும் செய்வினை விதிப் பொருளதா?

ஒரு செயலைச் செய்ய விரும்புவானது செயல் முறையாவது அச்செயல் நுணுக்கங்களை அறிந்தான் ஒருவனது கருத்தை அறிந்து கொள்ளுதல் ஆகும் என்னும் இப்பொருளில் தலைவிதி தலை காட்ட வில்லையே.

நல்வினை

இனி நல்வினை, நன்றி பயவாவினை, நன்றாகா வினை, இன்பம் பயக்கும் வினை என்றெல்லாம் திருக்குறளில் வருகின்றனவே. அவற்றுக்கும் வினைக்கும் தொடர்பு இல்லையா? எனின் காண்போம்.

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்" (335)

என்னும் நிலையாமை இயம்பும் குறளில் செய்யப்படும் நல்வினை இரு வினையுள் ஒன்றா? இல்லையே.

நாவு உள்ளிழுக்கும்; விக்கல் மேலே எழும்பும்; அக்காலம் இறுதிக்காலம். அக்காலம் செய்து கொள்ளலாம் என்றால், அவ்விழுத்தலுக்கும் எழுப்புதலுக்கும் பாடாக இருக்கும் அவ்வேளையில், எதுவும் செய்ய இயலாது. திடமும் தெம்பும் தெளிவும் இருக்கும் போதே நல்ல செயல்களைச் செய்து விடு; தள்ளிப் போட்டுக் கொண்டு போனால், காலம் உன்னைத் தள்ளிப் போட்டுவிடும்; நிலையாமையை உணர்ந்து நிலைப்பன செய் என ஏவுகிறார். இதில் வினை அச்சுறுத்தல் எங்கே உள்ளது?

"வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை" (439)

என்கிறார், குற்றங்கடிதலில்,

தற்பெருமை கொள்ளாதே; நன்மை தாராத செயல்களைச் செய்ய விரும்பாதே. இவை குற்ற மானவை. இவற்றை விட்டொழி என்கிறார். இது

அறங்கூறும் செயல் கொள்கையா? சமயம் சொல்லும் வினைக் கொள்கையா?

"மனம்தூயார்க்கு எச்சம்நன் றாகும் இனம்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை" (456)

என்பது சிற்றினம் சேராமை குறிக்கும் குறள்!

"மனத்தூய்மை உடையவர்க்கு அவர் வைத்துச் செல்லும் புகழ் பொருள் மக்கள் முதலியனவும் நல்லன வாக அமையும். அதுபோல் சேர்ந்த இனத் தூய்மை உடையவர்க்கு நன்மை தாராத செயல் என எதுவும் இல்லை. எல்லாமும் நல்லனவாம் இப்பொருளில் விதிக் கொள்கை உண்டா?

"என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை" (652)

என்னும் வினைத் தூய்மைக்குறள், நிறைந்த புகழும் நீடித்த நலமும் தாராத செயலை எவரும் எக்காலத்தும் செய்யாமல் கட்டாயமாக விலக்கி விட வேண்டும் என்கிறது இதிலும் வினைக் கொள்கை இல்லையே.

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை" (669)

என்னும் வினைத்திட்பக்குறளும், இன்பந்தரும் செயல் என்பதையே குறிப்பிடுகிறது.

தீவினை :

இனித் **தீவினை** என்பதும் திருக்குறளில் இடம் பெறாமல் இல்லை . அதிகாரம் ஒன்றன் பெயரே '**தீவினை அச்சம்**' என்பது, அது, தீயசெயல்களைச் செய்ய அஞ்சுதல் என்னும் பொருளதே.

தீய, தீயவை, தீப்பால் என அதில் வருவனபோலத் தீவினை என்பதும் வருகின்றது.

"தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு"

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்"

"அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்"

எனவரும் முக்குறள்களிலும் (201, 209, 210) இடம் பெற்றுள்ள தீவினை 'தீச்செயல்' என்னும் பொருளவே.

இந் நல்வினை தீவினை என்பவை, நல்லினம் தீயினம் (460) என்பன போல வந்தவையே. இவ்வாறே அறவினை, பிறவினை (321) எனவும், ஆள்வினை நீள் வினை (1022) எனவும் வருவன அறச்செயல் அற மல்லாச் செயல் என்பவற்றையும், முயற்சி, தொடர் முயற்சி என்பவற்றையுமே குறிப்பனவாம்.

அருவினை :

"அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்" (483)

என்றும்,

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு" (621)

என்றும் வரும் இடங்களில் உள்ள 'அருவினை' செய்தற்கு அரிய செயல் என்னும் பொருளதேயன்றித் தீர்த்தற்கு இயலாத வினை என்னும் பொருள்தாராவே. "செயற்கு அரிய செயல்" என்னும் வள்ளுவப்பொருளே அருவினை என்பதன் பொருளுமாம்.

அஞ்சும் வினை

'அஞ்சும் வினை' என்கிறாரே வள்ளுவர். அது சமயங் கூறும் அச்சுறுத்தும் வினையா?

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை" (244)

என்பதில் வரும் அஞ்சும் வினையை அருளாள்வார் மேல் சூட்டச் சமயச் சால்புடையார் துணிவரோ? தம்முயிர்க்கு அருளாட்சியை விடார் என்பதல்லவோ பொருள்!

தவாவினை :

இனித் 'தவாவினை' என்பது நீங்காத வினை என்னும் பொருளதா?

"அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்" (367)

என்பதிலுள்ள 'தவாவினை' நீங்கா வினையா? அழியாத செயல் தானே. அதனை,

"அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேல்மேல் வரும்" (368)

என்னும் அடுத்த குறளே தெளிவித்து விடுகின்றதே.

தந்தம் வினை :

"தம்பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள்
தந்தம் வினையான் வரும்" (63)

என்பதில் உள்ள தந்தம் வினை அவரவர் முயற்சிதானே! செயல்திறம் தானே!

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்" (471)

என்பதில் உள்ள வினைவலி என்பது தன்வலிமை, பகை வலிமை, துணை வலிமை என்பன போலச் செயல் அல்லது முயற்சி வலிமையே அல்லவோ! தலைவிதிப் பொருளதா அது?

இனி 'இருவினை' எனவும் வருகின்றதே! அதன் பொருள் என்ன? எனின் கருதுவோம்.

இருவினை :

முதல் அதிகாரமாகிய இறைவணக்கத்தில் வரும் - ஒரே ஓர் இடத்து மட்டுமே வரும் - ஆட்சி 'இருவினை' என்பதாம்.

இருமனம், இருவேறு எனவரும் ஆட்சியினையும் இவண் எண்ணல் வேண்டும் (820,374). இருதலை (196) இரு நோக்கு (1091) எனப் பண்புப் பொருளிலும் ஆக இருவகைப் பொருளிலும் இடம் பெறும் ஆட்சி இது. இருமை என்னும் ஆட்சியும் உண்டு (23).

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (5)

என்பது இருவினை வரும் இடம்.

இறைமை இயல்பறிந்து அவ்வழியில் நிற்பவர்க்கு அறியாமை என்னும் மயக்கத்தால் உண்டாகும் தீய செயற்பாடுகளும், அறமும் ஆக்கமும் செய்தேன் என்னும் தற்செருக்கு தன் முனைப்புகளும் ஆகிய இரண்டும் சேர மாட்டா என்பதே பொருளாம்.

'என்ன செய்துவிட்டேன்' என்று தானே வருந்து மாறான செயலோ, 'என்ன செய்து விட்டாய்' என்று பிறர் வருந்துமாறான செயலோ நிகழாமை ஒன்று. நான் செய்தேன் என்றும், எனது என்றும் பெருமிதம் உண்டாகாமை மற்றொன்று. ஆகலான் இவ் விருமையும் பல்வகைப் பிறப்புகளுக்கும் தொடர்ந்து வரும் எனப்படும் வினைகள் அல்லவாம். மற்றை இடங்களைப் போலவே செயல் என்னும் பொருள் தருவதேயாம்.

இவற்றை நோக்கச் சமயங்கள் சாற்றும் 'வினைகள்' திருக்குறளில் இல்லை என்றும், ஆங்குள்ளதாகக் குறித்தமை உரையாசிரியர்கள் குறிப்பே என்றும் தெளிவாக விளங்கும்.

இனி உரைகாரரால், **வினை, விதிப்பொரு ளாக்கப்படுதலைக் காணலாம்.**

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்" எனத்திட்டம் தெளிவாகக் கூறும் திருவள்ளுவத்திற்கு உரை வரையப் போகும் பரிமேலழகர் தம் உரைப் பாயிரத்தில் அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம் என்று உரைக்கும்போதே, குறளைக் கையிலே வைத்துக் கொண்டு, மனுவை எழுதவரும் போக்கு வெட்டவெளியாகி விடுகின்றது.

வருணப் பாகுபாடு:

"ஒழுக்கம் உடைமை குடிமை" என்பதும்,
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

என்பதும் வள்ளுவ வாய் மொழிகள் இவற்றை மாந்தப் பிறப்பின் ஒத்த நிலையில் காட்ட வேண்டிய உரையாசிரியர் பரிமேலழகர் தம் **உரைப்பாயிரத்தில் "ஒழுக்க மாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்"** என்று விளக்கங்கூறும் வகையாலேயே **வள்ளுவ நூலின் வழியும், தம் உரையின் வழியும் வேறு வேறு** என்பதை வெளிப்படுத்திக் காட்டி விடுகிறாரே! **அவரும் அவரனையரும் சொல்வன வெல்லா வற்றையும் வள்ளுவர் மேல் நாம் வரிந்து காட்டுவதோ வாய்மை?**

வகுத்தான்

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்னும் ஊழ்க் குறளில் வரும் **வகுத்தானை** விளக்கும் பரிமேலழகர், **"ஒருயிர் செய்த வினையின் பயன் பிறிதோர் உயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின் வகுத்தான்** என்றார் மேலும், வேறு முயற்சிகளாற் பொருள்களைப் படைத்தல் அல்லது நுகர்தலாகாது; அதற்கு ஊழ் வேண்டும் என்பதாயிற்று எனவும் கூறினார்.

இயற்றியான்

வகுத்தான் என்பதற்கு **'ஊழ்'** என்னும் பொருள் கொண்டார். இவ்வாறே,

**"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"**

என்னும் குறளுக்கு,

"இவ்வுலகத்தைப் **படைத்தவன்** இதன் கண் வாழ்வார்க்கு முயன்று உயிர் வாழ்தலை அன்றி இரந்தும் உயிர் வாழ்தலை வேண்டி **விதித்தானாயின்,** அக்கொடியோன் தானும் அவரைப் போன்று எங்கும் அலமந்து கெடுவானாக" என்று உரையும்.

"மக்கள் உயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாய உண்டியும் அதற்கேதுவாய செய்தொழிலும் **பழவினைவயத்தாற் கருவொடு கலந்தவன்றே அவன் கற்பிக்கு மன்றோ?** அவற்றுட் சில உயிர்க்கு இரத்தலையும் ஒரு செய்தொழிலாகக் கற்பித்தானாயின் அத்தீவினையால் தானும் அத்துன்பமுறல் வேண்டும் என்பதாம்" என விளக்கமும் வரைந்தார்.

வகுத்தானும் இயற்றியானும்

இயற்றியான் **'இறைவன்'** என்கிறார் அழகர். கடவுள் வாழ்த்தில் (கடவுள் என்னும் பெயரே இல்லை) இறைவனுக்கு இயற்றியான் என்றொரு பெயர் சுட்டப்பட்டதும் இல்லை . ஆனால் வகுத்தற் கடனும் இயற்றற் கடனும் உடையான் ஆள்வோன் என்பதைத் தெள்ளத் தெளிவாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்பது அது (385). **இயற்றல் கடனாளன் இயற்றியான் வகுத்தற் கடனாளன் வகுத்தான்.**

இயற்றுதல் என்பது நூல் இயற்றுதல், சட்டம் இயற்றுதல் என்று வருமேயன்றிப் படைத்தல் உண்டாக்கல் என்னும் பொருள்களில் வாராது. இயற்றுதல் கருத்துப் பொருள் வினை. படைத்தல் காட்சிப் பொருள் வினை.

உலகம் யாவையும் தாமுளவாக்கல், படைத்தல் என்று சொல்லப்படுமேயன்றி **இயற்றுதல் எனல் மரபு இல்லை .**

துணி நெய்தான்; பானை வனைந்தான்; அணி செய்தான் என அதனதன் மரபு போற்றியே வினைகள் ஆளப்படும். அவ்வாறாகவும் **வகுத்தலையும் இயற்றலையும் ஊழுக்கும் இறைமைக்கும் ஆக்கியமை அடிப்படை மரபுக்குப் புறம்பானதாகும்.**

மக்கள் எழுச்சியால் எத்தனை எத்தனை அரசுகள் வீழ்ந்துள்ளன?

எத்தனை எத்தனை அரசுகள் நிலைமாற்றம் கண்டுள்ளன?

வெள்ளம் தடுக்க வல்லாரும் மக்களாம் வெள்ளம் தடுக்க ஆற்றாராய்த் தலை தெறிக்க ஓடியது இல்லையா?

இந்திய நாடு கண்முன் கண்ட சட்டங்கள் எத்தனை?

ஓராணையால் எத்தனை குறுநில மன்னர்கள் ஒரே நாளில் ஒழிக்கப்பட்டனர்!

ஒரே ஆணையால் எத்தனை வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன!

கோடி தேடியவனையும் துய்க்க ஒடுக்கிச் சிறைக்கோட்டத் துய்க்க முடிகின்றதே அரசின் சட்டத்தால்!

'மிசா' என்றும் 'தடா' என்றும் சொல்லப் படுவன **வகுத்தான் வகுத்த வகைதானே! வினை எப்படி எப்படி எல்லாம் திணிக்கப்படுகின்றது.**

செல்வமும் செய்வினையும்

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை" (37)

என்னும் குறள் என்ன பொருளது?

"பல்லக்கைச் சுமந்து செல்பவனுக்கும் அதன் மேல் அமர்ந்து செல்பவனுக்கும் இடையேயுள்ள வேறுபாடு அறத்தின் பயன் என எண்ணவே வேண்டா (அது பொருட் செல்வத்தால் ஏற்பட்டதாகும்") என இயல்பான பொருள் உடையது.

இதற்கு அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா. சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும் என்று உரை கூறினார் பரிமேலழகர்.

இதனைக் கொண்டும் கூட்டியும் குறிப்புரை வரையும் வை. மு. சடகோபராமாநுசர் தருமத்தின் பயன் இப்படிப் பட்டதென்று நூல்களைக் கொண்டு அரிதின் தெரிவிக்க வேண்டியதில்லை. உலகத்தில் ஒருவன் பல்லக்கைத் தூக்க மற்றொருவன் அதன் மேலேறி வீற்றிருப்பதைக் கண்கூடாகக் காணுதலாலேயே அறஞ் செய்தவன் இன்பம் அனுபவிப்பான் என்றும், அது செய்யாதவன் துன்பம் அனுபவிப்பான் என்றும் எளிதில் தெரிந்து கொள்ளலாமே என்பது கருத்து. இனி இத்திருக்குறளுக்கு துறவறத்தின் பயனாகிய ஆத்ம சொரூபஞானம் இப்படிப்பட்டதென்று யாம் இப்பொழுது புதிதாக வகுத்துச் சொல்ல வேண்டியது இல்லை; சவ்வீர மகாராஜனான ரகூகண மகாராஜனுக்கும் அவனுக்குப் பல்லக்கைச் சுமந்த ஜடபரத யோகிக்கும் நடந்த சம்பாஷணையாலே அறியப்படும் என்றும் உரைக்கலாம்; ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் இரண்டாம் அம்சத்தில் இறுதி நான்கு அத்தியாயங்களிற் காண்க" எனப் **பரிமேலழகர் போட்ட ஒட்டுச் சட்டைக்கு, ஒட்டுவால் ஒன்றையும் கட்டித் தூக்குகிறார்.**

வள்ளுவ வாய்மைகள் உரையாளர்களால், வழிப்பறிக் கொள்கையாகக் கவர்ந்து கொள்ளப் பட்டதுடன் குப்பையும் கூளமும் வாரிச் சுமத்தி வைத்த கதையும் ஆயிற்று.

பல்லக்கும் மறுப்பும்

சம்பந்தர் பல்லக்கை நாவுக்கரசர் தாங்கிச் சென்ற செய்தி திருத்தொண்டர் புராணம் கண்டது. அதில் இருந்தோர் அறவோர் என்றும் சுமந்தோர் பிறவோர் என்றும் சொல்லத் துணிவரோ? அதனால், **நால்வர் நான்மணி மாலை,**

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையை - மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்தஞ் சிவிகையினை ஊர்ந்து"

என்று கூறிற்று.

தந்தம் வினை

"தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்" (63)

என்பதற்குத் "தம் பொருள் என்று பெருமையாகச் சொல்லப்படுவது தம்மக்களே. மக்களாகிய அவருடைய பொருள்களோ அவரவர் செயலுக்குத் தக்க வகையில் வரும்" என்பது நேர் பொருள்.

எனினும், தம் புதல்வரைத் தம் பொருள் என்று சொல்லுவர் அறிந்தோர். அப்புதல்வர் செய்த பொருள் **தம்மை நோக்கி** அவர் **செய்யும் நல்வினையாலே தம்பால் வரும் ஆதலால்**" என்றார் பரிமேலழகர்.

"தமக்கு அழியாத உடைமையாவர் புதல்வர். அந்தப் புதல்வர் என்னும் பேறு தாம்தாம் செய்த **விதிவசத்தால்** வரும் என்றவாறு" என்றார் பரிதியார்.

மக்கள் என்னும் பொதுச் சொல் இருக்கவும் 'மக்கள் என்னும் பெயர் **பெண்ணொழித்து நின்றது**' என்று வள்ளுவர்க்குத் தம் அயற்சார்புக் கருத்தால் மாசு சேர்க்கும் பரிமேலழகரும் அவர் வழி உரைகாரர்களும் வேண்டா வகையில் வினைப் பொருள் கண்டனர் என்பது வெளிப்படை

விருந்தும் வினையும்

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"

என்னும் குறளுக்கு வினை (விதி) யொடும் தொடர்பு உண்டோ ?

"தன்னை நோக்கி வந்த விருந்தை நாள்தோறும் புறந்தருவானது இல்வாழ்க்கை நல்குரவான் வருந்திக் கெடுவதில்லை" என்றே பரிமேலழகர் உரைத்தார்.

ஆனால் இதற்கு விளக்கம் கூறும் **பரிதியார்,** "சரீரத்தில் ஒரு பருவந்து விதனமான காலத்துச் சீப்பறிய விதனமாறுவது போல வருவிருந்து உபசரிக்கில் **வினையறும்**" என வினைக்கு ஏற்றுகிறார்,

வினையும் கேடும் பெருக்கமும்

"கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி" (115)

என்பதில் 'தலைவிதி' உண்டா ?

"தீவினையால் கேடும் நல்வினையால் பெருக்கமும்"

எனச் செல்வம் கெடுதற்கும் பெருகுதற்கும் வினைகளைக் காரணமாக்குகிறார் பரிமேலழகர்.

"முன்பு விதிமுறையான் வருகின்ற பொருளினது கேடும் மற்றும் இதன் பின் வரும் ஆக்கமும்" என்கிறார் காளிங்கர்.

தீவினை

தீய செயல்கள் தீயைப் பார்க்கிலும் தீமையானவை என்கிறார் வள்ளுவர். தீய செயல்களைத் 'தீவினைகள்' என்னும் பரிமேலழகர், "பிறிதொரு காலத்தும் பிறிதொரு தேயத்தும் பிறிதோருடம்பினும் சென்று சுடுதல் தீக்கு இன்மையின் தீயினும் அஞ்சப்படும்" என்றார் என விளக்கம் கூறுகிறார்.

சோறாக்குதல் நோய் நீக்குதல் முதலாகத் தீ, நலமும் செய்யும்; ஆனால் தீய செயல்கள் எவையும் எந்நலமும் செய்யா ஆகலின் 'தீயினும் அஞ்சப்படும்' என விரிய விளக்குவார் அரசஞ்சண்முகனார் (தொல்காப்பியப் பாயிரவிருத்தி)

தவமும் நோற்றலும்

வள்ளுவர் கண்ட தவம் "உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு என்பது.

நோற்றல் என்பது தாங்குதல் பொறுத்தல் என்னும் பொருளது. "தவமுடையவர் சிலராகவும் தவமில்லாதவர் பலராகவும் இருத்தற்குக் காரணம் உறுதிப்பாடு உடையவர் சிலராகவும் உறுதிப்பாடு இல்லாதவர் பலராகவும் உலகில் இருத்தலேயாம்" என்பது இயல்பான நேர்பொருள்.

இதற்கு "உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாது எனின் அது, தவம் செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல்" எனப் பரிமேலழகர் உரை கூறுகிறார்.

பரிதியார் "பாக்கியவான்கள் சிறிதாக மிடியாளர் பெருத்ததாகிய காரியம் எஃது என்னில் தவம் பண்ணினவர்கள் அற்பம் தவம் செய்யாதார் பலராகையால் என்றவாறு" என்கிறார். இவற்றால் தவப்பயன் விளைவே 'செல்வராக விளங்குதல்' என்றும், தவப்பயன் இன்மையே 'வறியராக உழலுதல்' என்றும் காரணம் காட்டித் தாம் கொண்ட வினைக் கொள்கையை வள்ளுவர்மேல் திணிக்கின்றனர்.

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அதுவொப்ப தில்" (363)

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்" (362)

என்றும் அவாவறுக்கும் தவத்துப்பயன், 'செல்வப் பெருக்கு' என்னின், அஃது இரங்கத் தக்கதேயாம்! இது குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசுதல் அன்று; சேற்றைப் பூசுவதற்காகக் குளித்தல் ஆகாதோ?

ஊழ்

ஊழதிகாரத் தொடக்கத்தில், "இருவினைப் பயன் செய்தவனையே சென்றடைதற் கேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருட்கிளவி" என்கிறார் பரிமேலழகர். **ஊழ்** என்பது 'உலகத்து இயற்கை' என்னும் பொருளது. (637) ஆகூழ் போகூழ், இழவூழ், அகலூழ், நல்லூழ், அல்லூழ் என்பன 'இருவேறு உலகத்து இயற்கை' யுள் அமைவன. கெடுப்பதூஉம், எடுப்பதூஉமாம் மழை ஊழை வான் சிறப்பிலேயே வள்ளுவர் சுட்டியுள்ளார்.

உலகத்து இற்கை

அமைச்சன் தன் கடமையைத் தெரிந்தும், தெளிந்தும் புரிவதற்கு ஊழறிவு இன்றியமையாதது என்றும், அவ்வறிவு இல்லாக்கால் நாடு எதிர்பாராத இடுக்கண் அலக்கண்கள் ஆகியவற்றுக்கு ஆட்படுதல் தீராது என்றும் கருதிய வள்ளுவர்,

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்"

என்று ஆணையிடுகிறார்.

இவ்வூழ்ப் பொருள் உணரும் வண்ணம், 'இணர் ஊழ்த்தும் நாறா மலர்' என்று ஆள்கிறார் வள்ளுவர். முறையாக இருக்கும் பூ மலர்தல் ஊழ்த்தல் எனப்படுத்தல் அறியத் தக்கது.

இயற்கையில் உண்டாம் புயல், நிலநடுக்கம், இடி, காற்று, மழை, பனி, வெயில் இன்னவை ஊழ் எனல் வள்ளுவப் பார்வை. அதனை அறிந்து செயலாற்றல் ஆட்சியர் கடமை என்பது அது.

இந்நாள் வானொலி, தொலைக்காட்சி என்பவை வெப்பம், மழை முதலாம் வானிலை அறிக்கை தருதல் ஊழ்ச் செய்தியாம்.

ஊழ் முறைமையானது ஆதலால் முறைகேட்டை 'ஊழல்' என்னும் பொருளறி ஆட்சி எண்ணத் தக்கதாம்.

உலகத்து இயற்கையாம் ஊழை ஒருவன் செய்வினையொடும் இயைத்தமை, சமயச் சார்பாளர் சார்பின் வழிப்பட்டதேயாம்.

பால்

இனிப் பால் என்பது, உலகத்து இயற்கையாம் ஊழை. காப்பனவெல்லாம் நில்லா ; காவாதனவெல்லாம் போகா; கிட்டுவ கிட்டும்; கிட்டாதன கிட்டா என்னும் உலகத்து இயற்கை யுரைப்பது (376).

"பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம"

என்பது அது.

முறை

முறை என்பது முறைமை, ஒழுங்கு என்னும் பொருளது. திருக்குறளில் பன்னீரிடங்களில் இடம் பெற்றுள்ள சொல் இது.

முறை செய்து காப்பாற்று மன்னவன் (388)

தேர்ந்து செய்வஃதே முறை (541)

அவனை முறை காக்கும் (547)

முறை செய்யா மன்னவன் (548; 553; 558)

முறை கோடி மன்னவன் செய்யின் (559)

முறைப் படச் சூழ்ந்தும் (649)

செய்வான் செயல் முறை (677)

இளையர் இனமுறையர் (698)

உறல்முறை... இறல்முறை (885)

ஊழ் என்பதற்குரிய முறைமை என்னும் பொருள் அன்றி, சமயம் சுட்டும் வினைப் பொருளில் எவ்விடத்தும் இடம் பெற்றில.

உண்மை

உண்மை என்பதும்,

“நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்” (373)

என்னும் ஊழதிகாரக் குறளில் வந்துள்ளது. இவ் ‘உண்மை அறிவு’ என்பது பிறப்பொடு வந்த அறிவாகும். தந்தையர் தாயர் அவர் முந்தையர் என்பார் வழியாக வந்த மரபு அறிவாகும். அது, தலைவிதிப் பொருளதன்று.

தெய்வம்

தெய்வம் என்பது சங்க இலக்கியத்தில் முனிவர் என்னும் பொருளது.

இச்சொல் திருக்குறளில் ஆறு இடங்களில் (43, 50, 55, 619, 702, 1023) இடம் பெற்றுள்ளது.

“தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்” (619)

என்னும் குறளில் வரும் தெய்வத்திற்கு வினைப்பொருள் காண்கிறார் பரிமேலழகர். அவர் ஊழ் என்பதற்கே வினைப்பொருள் கொண்டமையால் நேர்ந்த நேர்ச்சி இது. உலகியற்கையால் எனப்பொருள் கண்டிருப்பின் சிக்கல் நேர்ந்திராது.

நியதி, நீதி

இனி நியதி என்பதோ நீதி என்பதோ திருக்குறளில் இடம் பெறாச் சொற்கள் பரிமேலழகர் இவ்வரிசையில் சுட்டாமல் விதி என்னும் பொருள் கண்ட ஒரு சொல் ‘**பொறி**’ என்பது.

“பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி” (618)

என்னும் குறளில் வரும் பொறி என்பது அது.

"பயனைத் தருவதாய விதியில்லாமை ஒருவற்கும் பழியாகாது; அறிய வேண்டுமவற்றை அறிந்து வினை செய்யாமையே பழியாவது" என உரை கண்டார்.

"தெய்வம் இயையாவழி ஆள்வினை உடைமையாற் பயனில்லை என்பாரை நோக்கி உலகம் பழவினை பற்றிப் பழியாது, ஈண்டைக் குற்றமுடைமை பற்றியே பழிப்பதென்றார்" என விளக்கமும் வரைந்தார்.

பொறிவாயில் ஐந்தவித்தான் என்பதில் (6) வரும் தொடர்க்கு, "மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தான்" எனப் பொருள் கண்ட பரிமேலழகர், **அப்பொறிக்குக் கண்டவாறு இதற்குப் பொருளைக் கூறாது வேறு கூறியமை வியப்பேயாம்.**

'மெய்வாய் கண் மூக்குச் செவி குறைந்தது பங்கமல்ல' என்னும் பொருளையே பரிதியார் கொண்டார்.

"உறுப்புக் குறை குறையன்று; வினையாற்றும் திறம் இன்மையே குறை" என்னும் **ஆள்வினைக் குறளை, விதி வினைப்பால் படுத்தியமை வலிந்த முயற்சியும் வள்ளுவத்திற்கு முரணுமாகும்.**

முரண்பட்ட விதிக் கொள்கைப் புட்டிக்குள் வள்ளுவ நறுமணப் பொருளை அடக்கி வைத்தமை எத்தகு பெருங்கேட்டைச் செய்துவிட்டது.

ஆளைப்பாடாது அறம்பாடிய வள்ளுவத்தை, ஆள்வோனைப் புகழாது அரசியல் புகன்ற வள்ளுவத்தை, முடி மன்னர் காலத்தில் இருந்து கொண்டும், அம்மன்னர் முறை கேடர் எனின் குடிமக்கள் குமுறி அரசை அழிப்பர் என்ற வள்ளுவத்தை, கோலொடு நின்றான் இரவு, வேலொடு நின்ற கொள்ளை என்ற வள்ளுவத்தைச் செல்லாத் தடத்துச் செலுத்திச் சீர்குலைத்து விட்டது.

செயலாக்க நூலாம் செந்தமிழ்க் குறளைச் செயலறவு வினைப்பாற் கொள்கையால் அள வெடுத்து உறையிட்டுப் போர்த்து முடக்கிவிட்ட முடக்கம் இது.

வள்ளுவத்தில் சமயங்கள் கூறும் வினைக் கொள்கை இல்லை. செயல், செயல், செயல் என்னும் வினைத்திறம், வினைமாட்சி, வினைசெயல், வினைதிட்பம் என்பனவே உண்டு.

உலகியற்கையாம் ஊழையும் உலையா முயற்சி வெற்றி கொள்ளும் என்னும் வீறுகோள் உரைப்பதும் வள்ளுவம்.

ஊழே தடுத்தாலும் கெடுத்தாலும் உலையா முயற்சி அவ்வூழின் பிடர் பிடித்து உலுக்கித் தன் உழைப்புப் பங்கைப் பெற்றே தீரும் என்னும் உறுதியைப் பட்டயமாகத் தீட்டித் தந்ததும் வள்ளுவம்.

அதனை வினைப்பாற் படுத்தித் தலையைப் பிடித்துக் கொண்டு சோர்ந்து மடியராய்க் கிடக்கவும் வைத்தது வினைச் சார்பில் ஒன்றிவிட்ட உரைகாரர் உரைகளேயாம்!

வள்ளுவப் பொருள் வள்ளுவமே!

வள்ளுவத் தெளிவு வள்ளுவமே!

வள்ளுவக் கொள்கையைச் சிதைத்து

உரைக்கும் உரைகள் எத்தகைய உயர்ந்தவை எனினும் தேன் பூச்சுடைய நஞ்சே! நஞ்சில் இனிப்புக் காட்டிக் கொல்லும் நஞ்சே, இயற்கை நஞ்சினும் கேடாம்.

என்னெனில் இயற்கை நஞ்சு ஈதென்னின் நாவில் பட்ட அளவானே 'உயிர்கொல்லி' என உடன் உணர்ந்து துப்பிடவும் தப்பி விடவும் கூடும்.

இனிப்புறு நஞ்சு உணர்வில் பொய்ப்பித்து,

உள்ளே சென்று உறுதியாக உயிர் கொல்லியாய் உய்வில்லா ஒழிவைத் தந்தே விடுமே!

வள்ளுவம் வள்ளுவப் பொருளாகக் காணப் படின் அது வையகப் பொருளாக வாய்த்தல் மிகமிக அணித்தேயாம்! ஏனெனில், **வையகம் தழுவிய வாழ்வியல் நூல் அஃதொன்றேயாம்.**

❖❖❖

உ. திருக்குறளில் பிறப்பு

செய்ந்நன்றி அறிதல் என்பது திருக்குறளில் 11-ஆம் அதிகாரம் **'செய்ந்நன்றி மறந்தார்க்கு உய்வு இல்லை'** என்பது அதன் பத்தாம் பாட்டு.

காலத்தால் செய்த நன்றி, செய்யாமல் செய்த நன்றி, பயன் கருதாமல் செய்த நன்றி, என்பனவெல்லாம் என்றும் மறவாமல் போற்றத் தக்கனவே.

தினையளவான நன்றி எனினும் நன்றிப் பயனை அறிந்தவர், அதனைப் பனையளவாகப் போற்றுவர் என்று அவர்தம் சிறப்புக் கூறுகிறார்.

கொன்றாற் போன்ற கொடுமையை ஒருவர் செய்தாலும், அவர் செய்த நன்று ஒன்று இருக்கு மானால், அதனை எண்ணிய அளவால் அவர் செய்த கொடுமையும் மறைந்து போகும் என்று நன்றிச் சிறப்பை வலியுறுத்துகிறார்.

இவ்வெல்லாமும் கடைப்பிடியாகக் கொள்ளத் தக்கனவே. இவ்வாறு செய்ந்நன்றி அறிதலுடையாரை உலகில் கண்டே, அத்தன்மை உலகநலம் செய்யும் என்பதால் வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

அதில் ஏழாம் குறள்,

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு" (107)

என்பதாக உள்ளது.

இந்தப் பிறப்பிலேயே, புரிவு தெரியாத இளந்தைப் பருவத்திலேயே நமக்கு எவ்வெவர் என்ன என்ன நன்மைகள் செய்தனர் என்பதை நாமாக அறிந்து கொள்ள இயல்வது இல்லை.

புரிவு தெரிந்த பின்னரும் நமக்குப் பிறர் செய்த நன்மைகள் அனைத்தும் ஒன்றுவிடாமல் நினைவில் கொண்டு போற்றுகிறோம் என்பதும் முற்றாகச் சொல்ல இயலவில்லை.

மறதி என்னும் கள்வன் வாரிக் கொண்டு போனவற்றை நாம் முட்டிமுட்டி நினைப்பினும் தட்டுப்படப் போவதில்லை.

இவ்வாறாகவும், **தங்கள் துயரம் துடைத்த நட்பை ஒருவர் எழுமை எழுபிறப்பும் நினைவர் என்பது எப்படி?**

போன பிறப்பில் நான் என்ன பிறப்பாய் இருந்தேன்? நான் மாந்தப் பிறப்புத்தான் பிறந்திருந்தேனா? மாந்தப் பிறப்புப் பிறந்து சிந்திக்கும் மன அறிவு கொண்ட இப்பிறப்புச் செய்தியே அறிய முடியாமல் பலவற்றை இழக்கும் நான், என்ன பிறப்புப் பிறந்தேன் என்பதையும் அறியாத மற்றைப் பிறப்பில் எனக்கு நன்மை செய்தார் எவர் என்பதை எப்படி அறிவேன்? ஆற்று நீரில் எழுதிய எழுத்தும், வான வெளியில் எழுதிய எழுத்தும்கூட அருகில் இருந்து கூர்ந்து காண்பார் பார்வையில் இன்ன எழுத்தெனப்பட்டாலும் படக்கூடும். முந்தைப் பிறப்புச் செய்தியே அறிய மாட்டாத யான் அப்பிறப்பில் எவரெவர் நலம் பொலம் செய்தார் என்பதை எப்படி அறிவேன்? **அறியவும் மாட்டாத ஒன்றை நினைத்து உருகி மறவாது போற்றிக் கொண்டிருப்பேன் என்று என்னறிவோடு நான் சொல்ல முடியாதே!**

இன்னும் எழுபிறப்பு என்று சொல்லப்படுவன, மாந்தப் பிறப்பாகவே ஏழுபிறப்பு என்று சொல்லப்படுவன, மாந்தப் பிறப்பாகவே எழுபிறப்பு என்றாலும் அறியமாட்டாத ஒருவன், கல், மண், மரம், செடி, புல், பூண்டு, புழு, பூச்சி, பறவை, விலங்கு எனப் பகுத்தறிவு இல்லாப் பிறப்பும் அடைந்திருப்பின், அப்பிறப்பில் செய்யப்பட்ட நன்மையும் இப்பிறப்பில் தோன்றுமா?

'என் முன்னைப் பிறப்பு இது' என்று நெஞ்சார வஞ்சமின்றிச் சொல்ல ஒருவர் உளரா?

அவ்வாறு சொல்லும் ஒருவர், தமக்கு இவர் இவ்விடத்துப் பிறந்திருந்து அல்லது இன்னவாகப் பிறந்திருந்து அவர் எனக்கு இன்ன செய்தார் என்று அவரும் உணர்ந்து கொள்ளும் வகையில் உறுதிப்படுத்த முடியுமா?

இவையெல்லாம் 'வானப்பூ மணந்தது' என்பார் உரைபோல் மயக்குதே அன்றித் தெளிவிப்பனவாக - உண்மை தெளிவிப்பனவாக - உள்ளனவா?

பரிமேலழகர் முதலாம் பழைய உரையாசிரியர்கள் இக்குறளுக்கு என்ன உரை விளக்கம் வரைந்துளர்?

பரிமே : தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, எழுமையினையுடைய தம் எழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்.

எழுமை என்றது வினைப் பயன் தொடரும் ஏழு பிறப்பினை. அது வளையாபதியுள் கண்டது. எழுவகைப் பிறப்பு மேலே உரைத்தாம் என்கிறார். அவர் உரைத்தது "எழு பிறப்பும் தீயவை தீண்டா" என்னும் குறளிலாகும்.

மணக் : தங்கண் உற்ற துன்பத்தை நீக்கினவரது நட்பை அப்பிறப்பிலேயன்றி எழுமையிலும் தோற்றும் பிறப்பெல்லாம் நினைப்பர் சான்றோர் என்றவாறு என்கிறார்.

பரிதி : "செனனந் தோறும் நினைக்கப்படும், தம்முடைய மனக் கிலேசத்தைத் துடைத்தவர் நட்பை என்றவாறு" என்கிறார்.

காளிங் : " எழுவகையாகத் தோன்றி வருகின்ற பிறப்பு தோறும் தம்மாட்டு வந்தெய்தும் இடுக்கண் துடைத்தவர் நட்பை, ஈண்டுச் செயலாகும் நன்றியைக் கொண்டே பிறவி தோறும் இடருறுங்காலத்துப் பெரியார் செய்த நன்றிகள் என்று, இங்ஙனம் எழுவகைப் பிறப்பினும் தமக்குச் செய்தார் செய்த நன்றிகளைச் சிந்திப்பர் செய்ந்நன்றி அறிவார் என்றவாறு" என்றார்.

மற்றொரு பழைய உரை : "தன்னிடத்தில் வந்த துன்பத்தை நீக்கினவருடைய எழுமையினையுடைய எழுபிறப்பினும் நினைப்பார் நல்லோர்" என்கிறது.

"எழுமை, எண்பத்து நான்கு நூறாயிரம் பேதமாகிய பிறப்பென முன்சொன்ன உரையிற் கண்டு கொள்க" (62)

என்று மேலும் கூறுகிறது.

பிறப்பு ஏழும் அவற்றின் விகற்பமும் பற்றி அகராதிகள் கூறும் செய்திகள் :

"தேவர், மக்கள், விலங்கு, புள், நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம் இவற்றின் பிறவி விகற்பம் (யோனிபேதம்) எண்பத்து நூறாயிரம். அவையாவன:

தேவர் பதினான்கு நூறாயிரம்
மக்கள் ஒன்பது நூறாயிரம்

விலங்கு பத்து நூறாயிரம்
புள் பத்து நூறாயிரம்
ஊர்வன பதினொரு நூறாயிரம்
நீர்வாழ்வன பத்து நூறாயிரம்
தாவரம் இருபது நூறாயிரம்

அன்றி, தேவர் பதினாறு நூறாயிரம் எனவும், தாவரம் பதினெட்டு நூறாயிரம் எனவும் கூறுப.

என்பது அது.

கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டுவிட்டு, உன் முன்னால் இருக்கும் செடி கொடி மரம் பெயர்களையெல்லாம்சொல் என்பதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

எழுபிறப்புமே என்னவென எண்ண முடியாத ஒரு பிறப்பில், அப்பிறப்புகளில் பிறர் செய்த நன்மைகளையெல்லாம் நினைத்தல் என்பது அறநூல் உரையா? வாழ்வியல் கண்டார் உரையா?

வாழ்வொடு உராய்ந்து பார்த்தன்றோ கடைப் பிடியாகக் கொள்ளப்படுவன அறச்செய்கைகள். அறிவறியாப் பொருளை ஆய்ந்து கொள்வது தான் எப்படி?

எழுபிறப்பும் தீயவை தீண்டா பிழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் (62)

என்னும் குறளின் பழைய உரைகளும் இப்படித்தான்.

"பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறுவன் ஆயின், வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பேழின் கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா" என்று உரை கூறுகிறார் பரிமேலழகர்.

இதனினும் ஒருபடி மேலே செல்கிறார் பரிதியார் :

"தேவர் மனிதர் மிருகம் ஊர்வன நீர்வாழ்வன பட்சி தாவரம் என்னும் எழுபிறப்பிற் சென்றாலும் எழுநரகத்திற் சென்றாலும் துன்பம் வராது; நல்ல புத்திரனைப் பெற்றவர்க்கு என்றவாறு" என்கிறார்.

நல்ல புத்திரனைப் பெற்றவன் இவ்வெழு பிறப்புகளையும் அடைவான் எனின், அவன் நல்ல புத்திரனைப் பெற்ற பயன் என்ன?

எழுநரகத்தில் சென்றாலும் துன்பம் வராது என்றால் 'புத்' என்னும் நரகத்துப் புகாமல் காக்கப் பிறந்தவன் 'புத்திரன்' என்னும் புனை புரட்டு என்ன ஆயிற்று? நரகத்துச் செல்லவும் நல்ல புத்திரன் செய்வானா?

வாழ்வு நூலைப் புராணப் புனைவு நூற் பார்வை கொண்டும், அவ்வவர் சமயச் சிறு சிட்டிக்குள் புகுத்திவிட வேண்டும் என்று கொண்டும் வைத்த ஏற்பாடுகள் இவை.

சமயங்கடந்த பார்வையர் - பகுத்தறிவுப் பார்வையர் - வாழ்வியல் பார்வையர் இப்பிறப்புரையை ஏற்றனர் அல்லர். மறுப்புரை கண்டனர். பல தலைமுறை; ஏழேழு தலை முறை எனக் கண்டனர்.

நடைமுறை வாழ்வியலொடு பொருந்த ஆய்தல் தெளிவு பிறக்கும். அதனை மேற்கொள்ளல் வாழநூல் செய்த வள்ளுவர் வழி.

என் தந்தையார் **படிக்கராமர்.** அவர் ஒரு வீடு கட்டுகிறார். அவரிடம் வண்டி மாடு உண்டு. கட்டடத்திற்கு வேண்டும் கற்கள், மணல், மரம் முதலியவை கொண்டுவர அவை போதா. முந்தைச் சிற்றூர் வழக்கப்படி வண்டி மாடு இருப்பார் ஓரிரு நாள்கள் அவற்றைக் கொண்டு வந்து உதவுவர். மாடிருப்பார் மாடு மட்டும் உதவுவர்; கூலிவேலை செய்வார் கூலி பெறாமல் சில நாள்கள் வேலை செய்து உதவுவர். சிற்றாள்களும் அப்படியே.

சிறு குடிசை போடுவர் எனின், மரம் கம்பு தட்டை தாள் கல் முதலியவற்றை உடையவர் அவற்றை இலவயமாகக் கொடுத்து உதவுதல் ஊர்ப்புற வழக்கம்.

இவ்வழக்கப்படி, கட்டடப் பொருள்கள் கொண்டு வருவதற்காக வண்டி மாட்டொடு வந்தார் அண்டையூர் உறவினர் ஒருவர்; அவர் சக்கணர் என்பார். ஊர் **குன்றக்குடி.**

வண்டி இராசபாளையம் சென்று மரம், இரும்பு முதலியன ஏற்றிக் கொண்டு திரும்பியது. ஊருக்கு ஒரு கல் தொலைவுக்கு மேற்கே ஓர் ஓடை. அவ்வோடையில் இறங்கிய வண்டியின் சக்கரம் ஆழ்ந்து சென்றது. உட்சேற்றில் புகுந்தது. ஆயினும் மாடு முனைந்து இழுத்தது. வண்டியின் தெப்பக் கட்டை மட்டம் நிலமட்டமாய் இருந்தும்,

"மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து" (624)

என்பதற்குச் சான்றாய் விளங்கிய காளை, தலையைக் குனிந்து கொம்பை நிமிர்த்தி காதை வெடைத்து மூக்கை ஊன்றி இழுத்தது ஆற்றுக் கரை மேட்டை நோக்கி. அவ்விழுப்பின் வலுவை ஆற்றாமல் மாட்டின் கழுத்துப் பட்டை அறுந்தது. அறுந்த நிலையில் அப்படியே மாடு நிலத்தில் மோதி மூக்கு அடிபட்டு அவ்விடத்திலேயே மூச்சை முடித்து விட்டது!

உதவிக்கு வந்தவர்க்குக் கிடைத்த பரிசு எத்தகைய பரிசு? **சக்கணரைத்** தேடி சென்றார் எந்தையார்.

ஓரைம்பது உருபா தந்து மாற்று மாடு பிடித்துவர ஏவினார். மறாமல் அத்தொகையைப் பெற்றுக் கொண்டு அத்தொகைக்குள்ளாகவே இழந்த மாட்டை ஒத்த ஒரு மாட்டைப் பிடித்துக் கொண்டு வந்தார் சக்கணர்.

இரண்டு மூன்று திங்கள் கடந்தன. சக்கணர் ஒருநாள் எந்தையாரைத் தேடி வந்தார். மடியில் இருந்து ஐம்பத்து ஐந்து உருபாத் தாள்களை எடுத்து எந்தையார் கையில் வைத்தார்.

என்ன! என்ன! எனத் திகைத்தார் எந்தையார்.

அவர் மடியைப் பற்றி அத்தொகையை வைத்தார்.

அவர் மீளவும் எடுத்துக் கையில் திணித்தார்.

இப்படி இருவரும் விடாப்பிடியாக மாறி மாறி நின்ற நிலை. எந்தையார், "எங்களுக்கு உதவியாக வந்தீர்கள்; இந்த இழப்பு ஆயிற்று; அதனால் நான் தொகைகொடுக்க வேண்டியது முறையே" என்றார்.

சக்கணர், "எங்கள் வேலைக்குச் சென்றிருந்து இப்படி நேர்ந்திருந்து, உங்களிடம்தொகை வாங்கியிருந்தால் நான்தருவேனா இல்லையா? நேர்ந்ததற்கு உங்கள் வேலை, என் வேலை எனப்பிரித்துப் பார்க்க வேண்டா. அன்று பணம் தந்த உடனேயே மறுத்திருப்பேன். ஆனால் என்னிடம் வேறு மாடு பிடிக்கப் பணம் இல்லை. உங்கள் பணத்தை அதனால் வாங்கிக் கொண்டு மாடும் பிடித்தேன்; பருத்திக் காட்டுக்கு நீர்ப்பாய்ச்ச உதவியது; பருத்தியும் நன்றாக வெடித்தது. இன்று பருத்தியை எடைபோட்டேன்; தொகைவந்தது; பெற்றுக் கொள்ளுங்கள்; காலத்தால் உங்கள் உதவி பயன்பட்டது என்பதற்கு இத்தொகையே சான்று; உருபா 50க்கு 5 கூடுதல் வைத்துள்ளேன்; அதனை வேண்டுமானால் எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லிக் கட்டாயமாக ஐம்பது உருபாவை எந்தையாரிடம் கொடுத்துவிட்டே சென்றார் சக்கணர்.

இப்பொழுது, அச் சக்கணர்க்குச் சக்கணர் எனப் பேரர் உள்ளார்; அச் சக்கணர்க்கு மகனார் மகளார் உள்ளனர்; அவர்க்கு மக்கள் உள்ளனர். ஐந்தாம் வழிமுறை இதுகால் நிகழ்கின்றது. இவர்களுள் எவரை நினைப்பினும், எவரைப் பார்ப்பினும் அப் பழஞ் சக்கணர் அல்லவோ முந்து முந்து நிற்கிறார்.

அவர் அவ்வாறு நிற்றல் படிக்கராமர்க்கு மட்டுமோ, அவர் மக்களுக்கும், மக்களின் மக்களுக்கும், அம்மக்களின் மக்களுக்குமென் ஐந்தாம் வழி முறைக்கும் உண்டாகிப் பசுமையாக நிற்கின்றதே. சொல்லிச் சொல்லிப் பாராட்டவும், நினைக்கவும், உதவவும் உந்துகின்றதே! இவ்வாறு ஒருவர் செய்த நன்றிச் செயல் அவர் வழி முறையில் வருவார் எவராலும் நினைந்து போற்றப்படுதல்தானே எழுமை எழுபிறப்பும் உள்ளல் என்னும் வாழ்வியல் வள்ளுவ நெறியாகும்.

தெள்ளத் தெரிந்த இம்முறையைக் கருதாமல், நினைவிலே கூடவும் கூடாப் பிறப்பாக உரைகாணின் வாழ்வியல் வள்ளுவத்திற்கு வாய்த்த பொருளாகி விடுமா?

இந்நாட்டு விடுதலைக்காகத் தம்மை மெழுகாக எரித்து, சந்தனமாகத் தேய்த்து முழுதுற ஈகம் செய்த செம்மல் **வ. உ. சிதம்பரனார்.**

அவர் தம் படத்தையன்றி முகத்தையும் கண்டறியாப் **பேர்த்தியின் பேர்த்திக்குத் திருமணம்.** அத்திருமண வாழ்த்துரையெல்லாம் என்னவாயின? செம்மல் சிதம்பரனார் ஈகமே ஒளி செய்தன. இப் பேர்த்திக்கும் அவ்வீகத்திற்கும் என்ன தொடர்பு? அவ்வீகர் வழிமுறை என்னும் தொடர்பு ஒன்றுதானே. வீட்டுக்கும் நாட்டுக்கும் இவ்வாறு செய்யப்படும் நல்லப்பாடுகள்தாமே நன்றிக்குரிய நினைவுகளாவும், குறிகளாவும், சிலைகளாகவும், வரலாறுகளாகவும் நின்று நிலை பெறுகின்றன. கண்காணக் கிடைக்கும் சான்றை விடுத்துக் கருதவும் இயலாப் பொருளைக் கதைப்பதால் ஆகும் பயன்தான் என்ன?

எழுபிறப்பும் உள்ளுதலுக்கு - பலதலை முறையினரும் நன்றியை நினைத்தலுக்கு - இது ஏற்கும்.

எழுபிறப்பும் தீயவை தீண்டா என்பதற்குப் பொருந்துமாறு உண்டா? என்னும் வினாவுதல் உண்டாகலாம்.

பழியில்லா மக்கள் - பண்புடைய - மக்கள் பிறந்த குடியில் ஏழுதலைமுறைகளுக்கும் பழி உண்டாவது இல்லை என்பது கொள்ளத்தக்க பொருள்தானே

"தாயைப் போலப் பிள்ளை நூலைப் போலச் சீலை"

"தந்தை அறிவு மகன் அறிவு"

"தாய் எட்டடி என்றால் குட்டி பதினாறு அடி"

"வாழையடி வாழை"

என்பனவெல்லாம் என்ன சொல்கின்றன.

தாய் தந்தையர் இயல்பும், அவர் தாய் தந்தையர் அவர்க்கு முந்தையர் இயல்புகளும் கூடியே ஒருவர் இயல்பு அமைகின்றது என்று இற்றை அறிவியல் ஆய்வாளர் கூறுகின்றனரே.

பெற்றோர் இயல்பு பாதியும், அவர் பெற்றோர் இயல்பு காலும், அவர் பெற்றோர் இயல்பு அரைக் காலும் எனப் பல தலைமுறை இயல்பே ஒருவர் இயல்பாய் அமைகிறது என்கின்றனரே.

பழிபிறங்காப் பண்புடைய மக்கள் வழியினர்க்கு அத்தன்மை, பிறப்புக் கொடையாய் அமைதலால் அன்றோ ,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்" (373)

என்றார் திருவள்ளுவர். இதில் வரும் **உண்மை அறிவு** என்பது. ஒரு பிறப்பின் பிறவிக் கொடையாய் அமைந்திருக்கும் அறிவுதானே! உள்ளதாம் தன்மை எதுவோ அதுவே உண்மை என்பதாம்.

ஒரு குடும்பச் சாயலை உருவமைப்பு வெளிப்படக் காட்டுதல் எவரும் அறிந்ததே. பார்வை இல்லாத ஒருவர், தாம் பார்வையோடு இருந்த காலத்தில் கண்டிருந்தவரின் வழி முறையினர் எவரை எனினும், காதைத் தடவிப் பார்த்த அளவில் இன்னார் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கூறுவதை என் இளந்தைப் பருவத்தில் கண்டது உண்டு. என் காதைத் தடவி அவ்வாறு கூறியதும் உண்டு.

குடும்பச் சாயல் உருவமைப்பில் இருப்பதுபோல் அறிவு பண்பு ஆகியவற்றிலும் இருத்தல் ஆய்வார்க்கு வெளிப்படைச் செய்தியேயாம்.

சோழன் நலங்கிள்ளி என்பான் ஒரு வேந்தன்; அவன் தம்பி மாவளத்தான் என்பான்; அவனும் தாமப்பல் கண்ணன் என்பான் ஒரு

புலவனும் வட்டு எனப்படும் சூதாட்டம் ஆடினர். அதில் புலவன் ஒரு வட்டினைக் கையுள் மறைத்துவிட்டான். அது கண்ட மாவளத்தான் ஒருவட்டை எடுத்துப் புலவன் மேல் எறிந்தான். எறியப்பட்ட புலவன் தன் பிழையுணரானாய் 'நீ சோழன் மகன் அல்லை' என்று கூறி மீண்டு மொரு பிழை புரிந்தான்.

புலவன் சொல் தன் தலைமுறையைச் சுட்டியதை உணர்ந்த மாவளத்தான் தானொரு தவறு செய்தான் போலத் தலை நாணினான். அந்நிலையில் தன் பிழை உணர்ந்த புலவன்,

"ஆர்புனை தெரியல்நின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்; மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவாய் என்னினும்
நீபிழைத் தாய்போல் நனிநா ணினையே
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க் கெண்மைக் காண்மெனக்
காண்டகு மொய்ம்ப காட்டினை யாகலின்
யானே பிழைத்தனென் சிறக்கநின் ஆயுள்"

என்று பாடினான் (புறநானூறு 43)

"அங்காடி மேயும் பழங்கன்று ஏறு ஆதலும் உண்டு"

என்பது பழமொழிப் பாட்டு (202)

இதிலுள்ள 'பழங்கன்று' என்பது வள்ளுவர் குடிமையில் கூறும்,

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று" (955)

என்பதில் வரும் பழங்குடி போல்வது. தொல்காப்பியம் சுட்டும் **'முதுகுடி'** புறநானூறு காட்டும் **'மூதில்'** என்பன போல மரபுச் சிறப்புடையது இது.

நல்லினத்துப் பிறந்த கன்று பேணுவாரற்று அங்காடி மேய்ந்து திரிந்தாலும் உரிய பருவம் வரும் காலத்துத் தன்னினத்துப் பிறவிப்பேற்றை வெளிப்படுத்திவிடும் என்பது இக்கால அறிவியல் இனவகை ஆய்வொடு பொருந்தும் செய்தியாம். ஆதலால், மரபு வழி அறிவும் பண்பும் உருவும் சாயலும் அமைதல் என்பது முறையான

உண்மையேயாம். ஏழு என்பது பல என்னும் பொருளது. இப்பொருளில் குறளில் பிற இடங்களிலும் வரும்.

பழிக்கு இடமாகாத மக்களைப் பெற்றால் அவர்குடி வழியினர் தீமைக்கு ஆட்படாமல் வாழ்வர் என்பது இயல்பான பொருள்தானே! பாலைப் பார்க்கவில்லை எனினும் பால் பானையைப் பார்க்க வேண்டும் என்பது குடிச்சிறப்பைக் காட்டுவதேயன்றோ!

"எழுமையும் ஏமாப்புடைத்து"

என வருவன இரண்டு குறள்கள்; அவை!

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து" (126)

என்னும் அடக்ககமுடைமைக் குறள் ஒன்று.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து" (398)

என்னும் கல்விக் குறள் மற்றொன்று.

இவற்றில் வரும் ஒருமை ஒருபிறப்பில் வருவது என்னும் பொருளது அன்று. ஒன்றாம் தன்மை என்னும் பொருளது.

'ஒருமைச் செயல்' என்றும் (835) 'ஒருமை மகளிர்' என்றும் (974) வரும் குறள்களின் நடையின இக்குறள்கள்.

ஒருமைச் செயல் வரும் குறளில் எழுமையும் என்னும் இயைபும் உண்டு. அது பல என்னும் பொருளதே.

ஓர் ஓட்டினுள் தன் ஐந்து உறுப்புகளையும் அடக்கிக் கொள்ளும் **உறுப்படக்கி** எனப் பெயர் பெறும் ஆமைபோல், ஒருவன் ஒருகாலத்தில் ஐம்பொறிகளையும் அடக்கிப் பழகினால் பின்வரும் காலங்களுக்கெல்லாம் அது பாதுகாப்பாக இருக்கும் என்பது முதற்குறளின் பொருளாகும்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது"

"இளமையில் கல்"

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"

"பருவத்தே பயிர் செய்"

என்று வழங்குவனவற்றை அறியின் இப்பொருளை எளிதில் அறிந்து கொள்ள வாய்ப்பாகும்.

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி என்பது உள்ளத்தை அலைய விடாது **ஒருமுகப்பட்டுக் கற்கும் கல்வி** என்பதாகும்.

ஒருமுகப் பட்டுக் கற்கும் கல்வி ஆழ்மனத்தில் அல்லது உள்ளும் நன்கு பதிந்துவிடுமாகலின் மறு முறை படிக்க வேண்டும் என்பது இல்லையாய்ப் பதிந்து விடும்.

இத்தகைய கல்வி கல்லானையே,

"வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானை" (100)

என ஒளவையார் தனிப்பாடல் பழிக்கும்.

"நான்படிக்கும் போது என்னை நானறியேன் நாவொன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க் குயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண்"

என்ற வள்ளலார் கல்வியை **ஓதாக் கல்வி** என உலகம் உயர்த்திப்பேசும்.

ஒருமைக்கண் கற்கும் கல்வியே ஓதாக்கல்வி என்பதாம். ஓதுதல் என்பது பல்கால் பயிலுதல், ஓதாமை என்பது பல்கால் பயில வேண்டியதில்லாமல் ஒருமுறை கற்ற அளவானே உள்ளத்துப் பதித்துக் கொள்ளல்.

இந்நிலை வல்லார் உலகளாவிய அளவில் பலப் பலர். அவர் அன்றும் இருந்தனர்; இன்றும் உளர்.

ஒருமுகப்பட்ட கதிரொளி அறுவைக் கருவியாக மருத்துவ உலகில் பயன்படுவதையும், குவியாடியில் படிந்து அரியதாய் வெளிப்படும் கதிரொளி பஞ்சில் தீயைப் பற்றுவதையும் காணத்தானே செய்கிறோம். பொறிவாயில் ஐந்தவித்தான் என்னும் இறைமைச் சீர் வழிப்பட்டது, ஒருமைக்கண் கற்கும் கல்வி என்க.

பிறப்பு என்று திருவள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்? இறந்தார் ஒருவர், மீண்டும் பிறப்பார் என்றும் அதுவே பிறப்பு என்பது என்றும், அவ்வாறு ஏழு முறையோ ஏழேழு முறையோ பிறப்பார் என்றும் எங்கேனும் கூறுகின்றாரா?

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" (236)

எனவரும் வெளிப்படு தெளிபொருள் விளக்கக் குறளுக்கே ,

"மக்களாய்ப் பிறக்கின் புகழுக் கேதுவாகிய குணத்தோடு பிறக்க; அக்குணம் இல்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று" என்று பொருள் கண்டுளரே; தோன்றல் என்பது பிறத்தல் தானா?

புகழ்க் குணத்தோடு பிறக்கவேண்டும் என நான் நினைத்துப் பிறக்க முடியுமா? என் பிறப்பு என் கையிலேயா உள்ளது. என் எண்ணப்படி நான் பிறக்க முடிந்தால் புகழிலாப் பிறப்பாகப் பிறக்க நான் நினைவேனா?

"ஒரு முயற்சியில் ஒருவர் ஈடுபட்டால் அம்முயற்சிக்கும் தமக்கும் புகழுண்டாக ஈடுபடுவாராக; அத்திறம் இல்லார் அம்முயற்சியில் ஈடுபடாதிருத்தலே நல்லதாம்" என்பதன்றோ வெளிப்படுபொருள்.

"கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்" (403)

என்றும்,

"நன்றென் றவற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு" (715)

என்றும் வருவன போன்றவை இக்குறளமைதிக்குச் சான்றாகுமே!

தோன்றல் என்பதே பிறப்பென்னும் இப்பாடுபடின்,

பிறப்பு என்பது எப்பாடு படாது?

பிறப்பு என்பதன் பொருளைத் தெள்ளிதின் அகரமுதலி கூறுவது போலக் கூறுகிறதே திருக்குறள்.

"பிறப்பு என்னும் பேதைமை"

என்கிறது அது (358)

மெய்யுணர்வு இன்மை, பிறப்பு: அதனை உடைமை சிறப்பு என்கிறாரே!

அம்மட்டோ!

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு" (351)

என்றும்,

"பொருளானாம் எல்லாம்என் றீயா திவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு" (1002)

என்றும் மெய்ப்பொருள் ஈதென அறியாமையும், பொருளே குறியாகக் கருமியாக வாழ்தலையும் மாணாப் பிறப்பு என்கிறாரே! அப்பிறப்பு மருள் எனப்படும் மயக்கத்தால் உண்டாவது என விளக்கமும் தருகிறாரே!

"அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து" (361)

என்றும்,

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" (349)

என்றும் பேதைமை, மருள் என்பவற்றோடு அவாவையும் பிறவிக்கு வித்து என்றும் அவாவறுத்தலே பிறப்பறுதல் என்றும் கூறுகிறாரே!

"பிறப்பறுக்க லுற்றார்க்கு உடம்பு மிகை" (345)

என உடற் பற்றறுதலையும் சொல்கிறாரே!

இவற்றை தொகுத்து நோக்கின் புலப்படுவது என்ன ?

பிறப்பு என்பது அறியாமையும் அறியாமை வழிப்பட்ட தன்மைகளுமாம் எனத் தொகுத்துக் காணலாம்.

அறிதோறும் அறியாமை புலப்படும் என்பது வள்ளுவம். அறிவுச் சிறப்பு அடைய அடைய அறியாமைப் பிறப்பு அகன்று ஒழியும் என்பதே இதன் பொருளாம்.

இவற்றால் ஒருவர்க்குத் தம் ஒரு வாழ்விலேயே பல பிறப்புகள் உண்டு என்பது விளக்கமாகும்.

"பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ் வியல்பு மின்னே
மேல்வரு மூப்பு மாகி
நாளுநாம் சாகின் றோமால்
நமக்கு நாம் அழாத தென்னோ"

எனவரும் பழைய குண்டலகேசிப் பாடல்; ஒருவாழ்வில் உண்டாம் பல சாக்காடுகளைக் குறிக்கு முகத்தான் ஒரு வாழ்விலேயே பல பிறப்புகள்

உண்மையை விளக்கிக் காட்டுகிறது. (திரு. வி. க. இயற்றிய நூல்களுள் ஒன்று **"சித்தம் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்"** என்பது. நூலின் பெயரே எது பிறப்பு என்பதைத் தெளிவாக்கி விடுகிறது.

சித்தம் திருத்தச் சாதலும் பிறத்தலும் தொடர்தலை விளக்கிக் கூறுகிறது நூல்.

"பிறந்தான் வளர்ந்தான் இறந்தான் மீண்டும்
பின் இது பிறந்தான் வளர்ந்தான் இறந்தான் என்னல்
பருமைப் பேச்சு, நுண்ணிய தன்று;
நாளும் நொடியும் நாளும் நொடியும்
பிறத்தலும் வளர்தலும் இறத்தலும் உண்டே"

என்கிறார். கொந்தி என்பான் கொலைஞன்; ஒரு புலவன்; கிறித்துவின் மலைப் பொழிவு பற்றிப் பேசுவது கேட்டான். அதனால்,

"இறந்தனன் கொந்தி: பிறந்தனன் மீண்டும்:
அந்தக் கொந்தியோ இந்தக் கொந்தி?
அவனெங் கேயோ? இவனெஞ் கேயோ?
அவனிவன் அல்லன் இவனவன் அல்லன்"

என்கிறார்.

மன்னவன் ஒருவன்: அவனுக்கொரு பிள்ளை; அடாச் செயலே அவன் வடிவம்; நந்தி என்பான் அவ்வூர் நண்ணினான். அவனிடம்,

"பொல்லான் ஒருவன் நல்லான் ஆகும்
வழியும் உண்டோ மொழிக" என்றான்.
நல்லான் பிறர்குறை சொல்லான் என்றும்
நந்தி அருளினன் மைந்த னிடத்தில்;
சித்திரம் ஆனான் செத்தவன் ஆனான்
தெளிவு பிறந்தது! ஒளியும் பிறந்தது
பழைய பாவமும் பழியும் பிறவும்
கரைந்து கரைந்து கழிய லாயின;
சித்தம் திருந்தினன்; செத்துப் பிறந்தனன்
புதியன் ஆயினன்; மதியன் ஆயினன்

✦✦✦

எத்தனை கொலைஞர் எத்தனை கள்வர்
எத்தனை குடியர் எத்தனை தூர்த்தர்
எத்தனை பொய்யர் எத்தனை கபடர்
சித்தம் திரும்பிச் செத்துப் பிறந்தனர்!
சித்தம் திரும்பல் செத்துப் பிறத்தலே
மறப்பும் நினைப்பும் இறப்பும் பிறப்பாம்;

என்று தொடர்கிறார்.

இப்பிறப்பு இறப்பு விளக்கம் அன்றோ, ஒரு சுவடியாக எழுந்தது. மேலும் விரிவு வேண்டுவோர் 'சித்தந் திருத்தல் அல்லது செத்துப் பிறத்தல்' என்னும் சுவடி காண்க.

இத்தேகத்திற்கு ஏழு பிறவியுண்டு. யாதெனில்:

கர்ப்பத்தில் ஐந்து மாதம் வரையில்
குழவியாய் இருப்பது!
அவயவாதி உற்பத்திக் காலம்!
பிண்டம் வெளிப்பட்ட காலம்!
குழந்தைப் பருவம்!
பாலப் பருவம்!
குமாரப் பருவம்!
விருத்தப் பருவம்!
ஆகப் பிறவி 7

என்கிறார் வள்ளலார் (உபதேசக் குறிப்புகள் - எழுவகைப் பிறப்பு)

"பூர்வஜென்மம் என்பது கர்ப்பகோளவாசம்
உத்தர ஜென்மம் என்பது ஜனனகாலம்"

எனவும் கூறுகிறார் (உபதேசக் குறிப்புகள் - ஜென்மம்).

உயிரணுக்கள் தோன்றிக் கொண்டும் மறைந்து கொண்டும் உள்ளன என்றும், அவ்வுயிரணுக்களின் முழுத் தொகுதியும் மறைந்து, **புதிய அணுக்களாலேயே முழுமையாகிவிடும் நிலை ஒரு பிறப்பாகும்** என்றும் அறிவியல் கூறுவது எண்ணத் தக்கது.

'பிழைத்தது மறுபிறவிதான்' என்றும், முப்பிறவி பெற்றவர் என்றும் செத்துச் செத்துப் பிறக்க வேண்டிய துள்ளது என்றும், 'நெருநலும்

கொன்றது போலும் நிரப்பு, இன்றும் வருவது கொல்லோ' என்றும் கூறப்படுவனவற்றை எண்ணின், ஒரு பிறப்பினுள்ளாக வரும் நிலை மாற்றங்களே பல பிறப்புகளாகப் பரவலாகக் கூறப்படுதல் அறியவரும்.

இனிச் சமயத்தர் கூறும் எழுவகைப் பிறப்புக்கும் இதற்கும் வேறுபாடு உண்டே எனின், வாழ்வியல் கூறவந்த வள்ளுவர், கொண்ட பிறவியில் கொள்ள வேண்டுவன இவை என்றாரேயன்றிப் பிறவற்றைக் குறித்தார் அல்லர் என்றும், சமயம் சாரா நூலைச் சமயக் கணக்கர் வழியில் சார்த்திக் காணல் முறை யாகாது என்றும் அமைதல் கடனாம்.

இனி இம்மை மறுமை என்பவற்றையும் ஆள்கிறாரே வள்ளுவர் எனின் காண்பாம்.

"சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்" (98)

என்பது இம்மை மறுமை ஆகிய இருமையும் சுட்டும் குறள்களுள் ஒன்று.

சிறுமையில்லா இனிய சொல் சொல்லின், வாழும் நாளிலும், வாழ்ந்து மறைந்த பின்னரும் இன்பம் தருதலில் சிக்கல் இல்லையே. வாழும்போது அவர் இன்புறுவார்; பின்னர் அவர் குடி வழியர் அவர் புகழ் கேட்டு இன்புறுவர் என்பதானே இயற்கை.

"இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்" (1043)

என்பது இருமையும் வரும் மற்றொரு குறள்.

வறுமை, வாழ்வாரைக் கெடுப்பதுடன், அவர் வழியில் வருவாரையும், வாட்டுவது கண்கூடுதானே! வறுமைக்கு ஆற்றாமல் எத்தனை பேர்கள் தம் வாழ்வையும் தம் குடிவழியர் வாழ்வையும் உய்விக்க இயலாமல் வருந்தியே தம் வாழ்வை முடித்துக் கொள்ளலும், வழிமுறையினரையும் ஒருங்கேமுடித்து வைத்தலும் நாடு காணாத - ஏடுகாணாத - செய்திகள் இல்லையே!

"மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து" (459)

என்னும் சிற்றினம் சேராமைக் குறள்.

ஒருவன் கொண்டுள்ள மனநலத்தினால் அவன் வாழும் காலத்தன்றி மறைந்த பின்னரும் புகழாம்; அப்புகழும் இனநலத்தொடும்

கூடியிருப்பின் குடும்பத்திற்கு மிகப் பாதுகாப்பாகும் என்னும் நேரிய பொருளுடையதுதானே!

"மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று" (904)

என்னும் பெண்வழிச்சேறல் பற்றிய குறள் மனைவிக்கு அஞ்சி நடத்தலால் மேல்வரும் புகழை இழப்பவன், தான் கொண்ட செயலாற்றலில் சிறப்படைதல் இல்லை என்னும் பொருளதே.

"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்" (1315)

என்னும் புலவி நுணுக்கக் குறள் "காதலராகக் கூடிய இவ்வாழ்வில் பிரியமாட்டோம் என்ற அளவில், அவ்வாறானால் இறப்பில் பிரிவோமா? என்று கண்ணில் நீர்தேக்கி நின்றாள்" என்பதுதானே உணர்வு ததும்பி நின்று உரையாடும் நிலை.

இனி வள்ளுவத்து வரும் "இருமை" உண்டே எனின், நீத்தார் பெருமையில்,

"இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு" (23)

என வரும் குறளில் இருமை இடம் பெறுகின்றது.

அது

"இருவேறு உலகத்து இயற்கை"

எனப்படும் ஊழியல் தெளிவுச் செய்தியாம். அது இம்மை மறுமைப் பொருளது அன்று. நீத்தார் பெருமைக் குணங்கள் ஓரைந்தும் காப்பார், ஐந்தவித்தார், ஐந்தின் வகைதெரிவார், செயற்கரிய செய்வார், நிறைமொழி மாந்தர், குணமென்னும் குன்றேறி நின்றார், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகு வார் என்னும் நீத்தார் பேறுகளும், ஆகலூழ், போகலூழ், நல்லூழ், அல்லூழ். கெடுக்கும் ஊழ், எடுக்கும் ஊழ் என்னும் இருமை அறிதலும் இணைத்துக் கூறியது அஃதாகும்.

ஆதலால் வாழ்வியல் வள்ளுவப் பார்வையில், **பிறந்த பிறப்பைச் சிறப்பாக்குதல் பற்றியவை சொல்லப்படுகின்றனவே யன்றிச் சமயங்கள் கூறும் பல்வேறு பிறப்புப் பற்றிய கருத்துகள் இல்லை**

என்பதும், அக் கருத்துள்ளார் பார்த்த பார்வையே அவர் உரையாக வெளிப்பட்டது என்பதும் தெளிவாம்.

முட்டைக்குள் இருக்கும் குஞ்சு அம்முட்டை உலகை அன்றி, அப்பால் உலகை அறியாது; அவ்வாறே **இவ்வுலகில் வாழும் யான் காணும் உலகை யன்றிக் காணா உலகை அறியேன் என்றார் புத்தர்.**

வள்ளலாரோ, "மனித தேகமே சுவர்க்கம் நரகம் இருக்கிற இடம்" என்றார். மேலும் மனித தேகத்திலேயே மற்ற பதங்களம் (சுவர்க்கங்களும் நரகங்களும்) உண்டு என்று விளக்கினார்.

(உபதேசக் குறிப்புகள் - சுவர்க்க நரகம்)

இனித் தொடக்க அதிகாரத்தின் இறுதியிலேயே பிறவிப் பெருங்கடல் என்கிறாரே வள்ளுவர்; கடல் என்றல்லவோ கூறுகிறார் என்ற வினா எழுதல் இயற்கை.

ஆசையையும் கல்வியையும் சமயங்களையும் துன்பங்களையும் கடலாகச் சொல்லியவை எத்தனை பாடல்கள் அவற்றைப் போல் பிறவியையும் கடலாகக் கூறினார். ஒரு பிறவியிலேயே எத்தனை இன்ப துன்ப வாழ்வு தாழ்வு வரவு இழப்பு மேடு பள்ள நிலைகள்.

"இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது" (1166)

என்றாரே வள்ளுவர். இன்பம் கடல் என்றால் துன்பம் பெருங்கடலாமே! இன்ப துன்பமுடைய பிறவியைப் பெருங்கடல் என்றதும் அத்தகையது தானே!

"கடலன்ன காமம்" என்றும் (1137)
"கடலாற்றாக் காமம்" என்றும் (1175)

வள்ளுவர் தாமே கூறுகிறார்.

பிறவிப் பெருங்கடல் கடக்க இறைவன் அடிப்புணை வேண்டும் எனப் பெற ஒருமருங்கு உருவகமாகக் கூறினார்.

"காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை" (1134)

"காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்" (1164)

புணையொடு கடலைப் பொருத்தி நீந்துதலையும் காட்டுகிறாரே வள்ளுவர்.

திருக்குறள் இன்பம் என்னும் நூலுக்குக் கவிமணி வழங்கிய சிறப்புப் பாயிரத்தில்,

"ஒப்பற்ற இந்நூற்கு உரைவகுத்தவர்
பற்பலர்; அவரெலாம் விற்பன ராயினும்
உலகிருள் விலக்க உதித்தொளி வீசு
முழுமதி யினைத்தும் முன்றிலில் நின்று
நோக்கி ஈதெம்மதி நும்மதி யன்றெனச்
செப்பும் சிறுமகார் செய்கையே போன்றுஅத்
தெய்வப் புலவனைச் செந்நாப் போதனைச்
சைவன் வைணவன் சமணன் பொத்தன்
எனக் கொண் டவரவர்க் கிசைந்தபடிநூற்
செம்பொருள் முற்றும் திரியச் செய்தனர்"

என்று கூறுவது எண்ணினால் சமயஞ்சார்த்தி வள்ளுவத்தைக் காணல், வேண்டா அழிவழக்கெனல் தெளிவாகும்.

இணைப்பு

மீள் பிறப்பு உண்டா?
உண்டனெவே கொள்வோம்.
கொண்டால் என்ன ஆகும்?
இதோ ஒரு சான்று :
ஆக்கிராவில் ஒரு சிறுவன்
அகர்வால் என்பது அவன் பெயர்.
அகவை பதினைந்து.
ஒரு நாள் அவனுக்குக் குழப்பம்.
மண்டைக்குள் பல்வேறு ஒலிகள்!
தொடர் வண்டி ஓடும் ஓட்டம்;
பம்பாய் பம்பாய் என்னும் ஒலி!
தலையைப் பிடித்துக்கொண்டு அமைந்த இருப்பு.
உறக்கமில்லா உழறல்; தனியே பேசல்.

"என்ன பேசுகிறாய்? எவரிடம் பேசுகிறாய்?"

-என அன்னையும் தந்தையும் கேட்டனர்?

"என் மனைவியிடம் பேசுகிறேன்; உங்களுக்கென்ன?"

என்றான் அகர்வால்!

"என் பெயர் வினய்தார்.

எனக்கு மனைவியும் மக்கள் நால்வரும் உள்ளனர்.

தொழிற்சாலை ஒன்றில் பணிசெய்தேன்; என்னைக் கொன்று விட்டனர்" என்று மீண்டும் மீண்டும் கூறினான்.

பம்பாய்க்குப் போக வேண்டும்; பம்பாய்க்குப் போக வேண்டும் என அடம்பிடித்தான்.

போவோம் என அழைத்துப் போயினர் பெற்றோர்.

அகர்வால் மாமனார் பம்பாயில் இருந்தார்.

அவரிடத்தை அடுத்துச் செய்தியை உரைத்தனர்.

ஆர்வத் துடிப்புடன் அகர்வால் மாமனார் ஈடுபட்டார்.

கேள்வி கேள்வியாய் எழுப்பினார் அகர் வாலிடம்.

நீ பணி செய்த தொழிலகம் எங்கேயுள்ளது என்றார்.

ஓ! தாதர் பக்கத்தில் என்றான் அகர்வால்.

தாதர் சென்றனர்; எந்தத் தொழிலகம் எனக் கண்டு பிடிக்க முடியவில்லை!

குழம்பினான் அகர்வால்! தொடர் வண்டியில் ஏறிச் சென்றனர்!

மாதுங்காப் பகுதி வந்ததும் அகர்வால் உடலில் துள்ளல் கிளர்ந்தது.

அவனைக் கட்டுப்படுத்த இயலவில்லை!

வண்டியில் இருந்து இறங்கி ஓடினான்.

பின்னே ஓடினர் பெற்றோரும் மாமனாரும்!

அகர்வால் ஒரு தொழிற்சாலை முன்னர் நின்றான்.

தொடர் வண்டிச் சக்கரம் உருவாக்கும் ஆலை அது.

அனுமதி பெற்று அதனுள் நுழைந்தனர்.

அகர்வால் கண்கள் மின்னின!

புன்முறுவல் பூத்தது!

ஒவ்வொரு பொருளையும் தொட்டுக் கொண்டு ஆவலால் நடந்தான் அகர்வால்!

உறவினரோடு, தொழிலாளர் தாமும் வியப்பால் கூடித் தொடர்ந்து சென்றனர்.

முதிய தொழிலாளர் ஒருவர் பெயரைச் சொல்லி அழைத்தான் அகர்வால்.

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் வினய்தாகுர்" என்றான்.

முதிய தொழிலாளர் அதிர்ந்து போனார்.

வினய்தாகுர் கொல்லப்பட்டு 25 ஆண்டுகள் ஆகிவிட்டன!

அவனே நான் எனின் கேட்டவர்க்கு எப்படி இருக்கும்?

பழகாதவர்க்கு இயக்க இயலாப் பொறியை இயக்கியும் காட்டினான் அகர்வால்!

இன்ன இடமே யான் இருந்து பணி செய்த இடமெனக் காட்டவும் செய்தான்.

அஞ்சிய ஆளும் கேள்வியால் துளைத்தனர்.

மீட்டுக் கொண்டு வரவே போதும் போதும் என்று ஆகிவிட்டது!

பேயைப் பார்ப்பது போலப் பார்த்தனர்; என்னால் தாங்க முடியவில்லை என்றார் அகர்வாலின் தாய்!

இதழார் விடுவாரா?

படை படையாகக் கிளர்ந்தனர்!

அடையடையாக வினாக்கணை தொடுத்தனர்!

"என் மகனின் மன நிறைவுக்காகவே இங்கே அழைத்து வந்தோம்; குழம்பிய நிலையில் அவனுள்ளான்"

அவன் மீளவும் நன்னிலை எய்த வேண்டி நிற்கிறோம்.

இதழ்களின் முகவர்கள் இரக்கமில்லாமல் துளைத்துத் துளைத்துக் கேட்டனர். யார் கொலை செய்தார்கள் எத்தனை பேர்கள் வந்தார்கள் என்றெல்லாம் கேட்டனர். அழுதே விட்டான் அகர்வால்" என்று கம்மிய குரலோடு கடுப்பாய் உரைத்தார் தந்தை.

மனைவி மக்களைக் காணவும் துடித்தான் அகர்வால்.

உறவினரோடு காவலர் துறையும் உதவலாயிற்று.

மாதுங்கா தொடர் வண்டி நிலையம் ஒட்டிய பகுதி.

இடிபாடுடைய ஓரில்லின் முன் நின்றான் அகர்வால்.

இதுதான் இதுதான் என் வீடு என்றான்.

காவலர் துறையர் அவ்வீட்டுக் கதவைத் தட்டினர் கதவு திறந்தது.

வினய்தாகுர் இறந்ததும் மனைவியும் குழந்தைகளும் வீட்டைக் காலி செய்துவிட்டுப் போனதாகவும் போன இடம் தெரியாது எனவும் கூறினார் அவ்வீட்டுக் குடியிருப்பாளர்.

கொலை நடந்த மாதுங்காப் பாலத்தையும் பின்னர்க் காட்டினான் அகர்வால்.

ஆக்ராவுக்குப் புறப்படுமுன்.

"நான் பள்ளியில் படித்து அதன் மேல் தொழிற் பயிற்சி பெற்று இதே மாதுங்கா பணிமனையில் சேருவேன்" என்றான் அகர்வால்!

"அகர்வால் தான் வினய்தாகுர் என்னும் நினைவையெல்லாம் மறக்க வேண்டும். அவன் பழைய வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும். அதுவே எங்கள் வேட்கை. பம்பாய்ப் பக்கம் மீளவும் பார்க்கவே மாட்டோம்" என்றார் அகர்வாலின் தந்தை.

பழம் பிறப்புண்மையும், அதனை அறிந்து கொள்ளும் உள்ளுணர்வுண்மையும், அதனை ஆய்ந்து காணலின் பயனும் என்ன?

உலகியல் வாழ்வில் உதவியாகுமா?

எங்கும் குழப்பம்! எல்லாம் குழப்பம்!

கிறுக்கர் உலகமாகவே ஆக வேண்டுமா - பழம் பிறப்பறிவு வேண்டத்தக்கதே!

ஒரு பிறப்பு வாழ்வே பேயாய் அலைக்கும் பெருமை உலகில்,

பல்பழம் பிறப்பும் ஒரு பிறப்பின் தலையில் சுழன்றால், மண்டைக்குள்ளே எத்தனை எத்தனை வண்டுகள் சுற்றிக் சுழலும்?

தாங்க முடியுமா வாழ்வு? உலகமும் கூட!

பையன் படத்துடன் - செய்தி.

தினமலர் 7-4-94

❖❖❖

ஊ. திருக்குறளில் தவம்

தவநலம்

அவரவர் கடமைகளை

ஒழுங்காகச் செய்வது தவம்.

அவரவர் துயரம் தாங்குவது தவம்.

பிறஉயிர்களுக்குத் துயரம்

செய்யாமை தவம்.

மனவலிமை யுடையவர்க்கு

வாய்ப்பது தவம்.

வள்ளுவர் வழியில் தவம்

உலகியலில் தவம்

'தவம்' என்னும் சொல்லை நாம் மிகுதியாகவே கேட்டுக் கொண்டும் சொல்லிக் கொண்டும் இருக்கிறோம்.

'தவம்' என்னும் சொல்லுக்கு ஒரு தனி மதிப்பு இருப்பதாக உணர்கிறோம்.

'தவம்' என்று சொன்னால், சிலர் தோற்றங்கள், அவர்களின் பூச்சு புனை கோலங்கள், உடைவகை, அவர்கள் சூழல் என்பனவெல்லாம் கூட நமக்குத் தோற்றமளிக்கின்றன. 'தவம்' பொதுவான ஒரு தோற்றம் தராமல், சமயம் சார்ந்த ஒரு சிறப்புத் தோற்றம் உடையதாகவும் நாம் கண்டு வருகிறோம்.

தவத்தோர் ஊண், நடைமுறை, சடங்குநெறி, கட்டு திட்டம் என்பனவும் கூடத், தனித் தனித் தோற்றம் தருகின்றன.

இவ்வளவு இருந்தும், "தவம்" என்றான் என்ன?" என்று ஒருவினா நமக்குள் எழுந்தால், அதற்குத் தக்க விடை எளிதில் தோன்றுவதில்லை! தோன்றுவதும் ஒருபடியாய் இல்லை. உறுதிப்படுத்த இயலா மயக்கப் பொருளாகவே போய்விடுகின்றது தவம்.

ஏன்?

தவம் என்பது சடங்கு நெறியன்று; அடங்கு நெறியும் ஒடுங்கு நெறியும் ஆகும். ஆதலால், ஆயிரம் பக்கம் சடங்குகளை எழுதித் தவத்தைக் காட்டினாலும் மணற் சோற்றில் அரிசி தேடிய வகையாகவே முடிகின்றது!

திருவள்ளுவர் இயல்பு

திருவள்ளுவர், "மெய்ப் பொருள் காட்ட வந்த மெய்யர், மெய்ப் பொருள் காண்பதே அறிவு" என்றவர். "கற்பவர் தம்மிடத்துள்ள கசடு (அழுக்கு, குற்றம்) நீங்குவதற்குக் கற்பதே கல்வி" என்றவர். "பிற உயிர்களின் துயரைத் தன் துயரென எண்ணி அதனை நீக்கா அறிவால் பயனில்லை" என்றவர். "பயனில்லாச் சொல்லைச் சொல்வதும் அதனைக் கேட்டுப் பாராட்டுவதும் பதர்த்தன்மை" என்றவர். ஆதலால், அவர் மொழி, **வாய்மொழி** எனப்பட்டது. அவரோ, **பொய்யா மொழியார்** எனப்பட்டார். பின்

சொல்லாதனவும் சொல்வனவும்

இறைமாட்சி என்றோர் அதிகாரம் வகுத்துள்ளார் திருவள்ளுவர். அதில், ஆள்பவன் தோற்றம் உயரம் கனம் நிறம் உடை இன்னவற்றையா உரைத்தார்?

அவன் அரண்மனை, அதன் சூழல், அட்டிற் சாலை, திருவோலக்கம், பொழுது போக்கு இன்னவற்றையா சொன்னார்?

இன்னவற்றைச் சொன்னால், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ச் சொல்லப்பட்ட செய்தி இன்றும் பொருந்தாதே! நம் பாட்டன் உண்ட உணவு, உடுத்த உடை, பயன்படுத்திய பொருள்கள், கருவிகள், கலங்கள் ஆகியவற்றுக்கும் நாம் கொள்வனவற்றுக்கும் எவ்வளவு வேறுபாடுகள், மாறுபாடுகள்!

ஆதலால், **மாறும் பொருள்களைப் பற்றிப் பேசாமல், மாறாப் பண்புகளையும் உணர்வுகளையும் சொல்வதே வள்ளுவர் வகுத்த முறை** ஆயிற்றாம்.

விருந்து என்றோர் அதிகாரம் திருக்குறளில் உள்ளமை அறிவோம். விருந்துணவு வகை, அதனை ஆக்கும் வகை, படைக்கும் முறை, இட இயல்பு இன்ன வற்றையே எழுதியிருந்தால் இன்று பொருந்தி வருமா?

இவ்வாறு எதனைக் கூறினாலும், அதன் மாறா **இயல்பைக் கூறுவதே** வள்ளுவர் நெறி ஆதலால், தவம் என்பது யாது? என்று தட்டிய உடனே கிட்டிய பொருள் போல அவரிடம் விளக்கம் கிடைக்கின்றது.

தவ வேர் :

'தவம்' என்னும் சொல்லின் வேர் **'தவ்'** என்பது. **'தவ்'** என்னும் வேருடன் 'அம்' என்னும் சொல்லிறுதி சேரத் 'தவம்' ஆயிற்று. (தவ் + அம் = தவம்) -

'தவ்' என்பதைத் திருவள்ளுவர், சுருங்குதல் பொருளில் வழங்கியுள்ளார். அது,

"கவ்வையால் கவ்விது காமம்! அது வின்றேல்
'தவ்' வென்னும் தன்மை இழந்து" (1144)

என்பது. "ஊரவர் பழிச்சொல்லால் எங்கள் காதல் பெரிதாகி விட்டது; இல்லை எனின், அது தன் இயல்பு இழந்து சுருங்கியிருக்கும்" என்பது இதன் பொருள்.

'தவம்' என்பதன் வேராகிய 'தவ்' என்பது, சுருங்குதல் பொருளில் வரத் திருவள்ளுவரே அமைத்துக் காட்டியது இது.

தவ்வை :

உள்ள நலங்களையெல்லாம் - வளங்களையெல்லாம் திறங்களையெல்லாம் - ஒவ்வொன்றாய் - படிப்படியாய்ச் சுருக்கிக் கொண்டு வரும் கொடிய இயல்பு ஒன்று மாந்தர்க்கு உண்டு. அது, உள்ளத்தை மடியச் செய்தலால் 'மடி' என்றே பெயர் பெற்றது. மடித்தல், மடிதல், மட்கல், மண்ணாதல் என்பன வெல்லம் 'மடி' என்பதன் வழிப்பட்ட பொருட் சொற்கள்.

மடி என்னும் தன்மையை உருவக வகையால் பெண்ணாக்கிக் கூறுவது வழக்கம். அது, 'முகடி' என இலக்கிய வழக்கில் உள்ளது. மூடிக்கிடக்கும் ஒன்று, 'முகடி' மூடி என்பது. மண் மூடிப் போகுமாறு கண்முடிக் கிடக்கும் அது, முகடியாம்!

முகடிக்கு மற்றொரு பெயர் 'தவ்வை' என்பது எல்லா நலங்களையும் சுருக்கி, இல்லாமல் ஒழிக்கும் குணத்தை -இயல்பைத் தவ்வை என்றனர். வள்ளுவரும் தவ்வை என்பதை ஆள்வார்.

"அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள், தவ்வையைக் காட்டிவிடும்" என்பது அது.

நலத்தைச் சுருக்குகின்ற தன்மையே 'தவ்வை' யாம். பொது மக்கள் தவ்வையை 'மூத்தவள்' என்றும், 'மூதேவி' என்றும் 'அக்காள்' என்றும் குறிப்பர். அதற்கு மாறான ஆக்கத் தன்மையை 'இளையவள்' என்றும் 'சீர்தேவி' என்றும் (திருமகள்) தங்கை என்றும் குறிப்பர்.

'தவ்' என்பதன் வழியாக வந்த தவ்வையும் அப்பொருளே - சுருக்குதல் பொருளே - தருதல் இதனால் விளங்கும்.

தவல் - தவம்

'தவ்' என்பதன் வழியாகத் 'தவல்' என்னும் சொல்லும் பிறக்கும். அதற்குக் 'குறைதல்' என்பதே பொருள். தவிர்தல் எனினும் நீக்குத்தல் என்னும் பொருளதே. 'தபு' என்பதும் அவ்வழியதே ஆதலால், சுருக்குதல் குறைத்தல், நீக்குதல் என்னும் பொருளிலேயே தவச் சொற்கள் வருவதை உணரலாம். அவ்வாறு உணர்ந்தார், 'திருக்குறளில் இவ்விளக்கம் உண்டா!' எனின், 'உண்டு' என்பது முன்னே தோற்றமாகின்றது. அது,

"யாதனின் யாதனின் நீங்கியான்"

என்பது, இது, துறவின் முதற்பாட்டின் முதலடி.

"எதனில் எதனில் இருந்து வேண்டா என்று விலகுகின்றான்" என்பது இப்பகுதிப் பொருள். இப்படி, நீங்கினால்,

"நோதல், அதனின் அதனின் இலன்"

என்பது பயன். இஃது அடுத்த அடி.

"துன்புறுதல், அதனில் அதனில் இருந்து இல்லாமல் இருப்பான்" என்கிறது இத்தொடர்.

"எதனை வேண்டா என்று நாம் விலக்குகிறோமோ அதனால், நமக்கு வரும் துன்பம் இல்லை" என்பது இப்பாடற்கருத்து.

இதனால், **கேடானதை விலக்குதல், தேவையைச் சுருக்குதல் என்னும் இரு வகையாலும் தவ இன்பம் பெறலாம்** என்று நாம் தெளியலாம்.

தேநீர்க் குடிக்கு அடிமைப் படாதவர் அரியர். அக்குடி மதுக்குடி போலப் பழிப்புக்கு இடமாகவும் இல்லை. ஆயினும், அதற்கு அடிமைப்பட்டவர்,

அதற்காகப் படும் விருப்பமும் தேடலும், அது கிடையா நிலையில் படும் துயரும் சோர்வும் தலைவலியும் சஞ்சலமும் எப்படிப் பெருகுகின்றன. ஆனால், அதனை வேண்டா என விலக்கும் உறுதிப்பாடு அவர் உள்ளத்தில் உண்டாகிவிட்டால், எத்தனை எத்தனை இன்ப ஆக்கங்கள் உண்டாகின்றன! பிறவி நோக்கமே 'துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும்' தாமே! அவற்றுக்குத் தடையாக நிற்பது சிறிதானால் என்ன? பெரி தானால் என்ன? தடை தடைதானே!

எத்தகைய நல்ல சூழலிலும், பெருமக்கள் முன்னிலையிலும் தாம் பழகிப் போன 'புகைக்குடி' யைத் தவிர்க்க முடியாமல், தடுமாற்றம் கொள்பவர், இடைவெளி பார்த்து இடத்தைவிட்டு வெளியேறித் தம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்பவர், இருக்கத் தானே செய்கின்றனர். அப்பழக்கம் இல்லாமல் இருந்தால், அவரை அவ்வெண்ணம் அலைக்கழிக்க இடமில்லையே.

தேநீரும், புகையும், வேண்டா என நினைக்கும் நினைப்பு வலுவானால், 'தூ' என விட்டு ஒதுக்கிவிட முடிந்தவை! இப்படி ஒதுக்கி விட முடியாத கொடிய பழக்கங்கள் எத்தனை உள்ளன! அவற்றால் அடையும் கேடு நன்கு புலப்பட்டாலும், அக்கேட்டில் இருந்து விடுபட நினைத்தாலும், எத்தகைய பெரிய அறிவாளிக்கும் உறுதியாளிக்கும்கூட, முடியாமல் போகக் காண்கிறோமே! விளையாட்டாகப் பழகி, வினையாக்கிக் கொண்ட கொடுமை யல்லவோ இது.

இதனை உணர உணரவே,

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" (341)

என்பது தெளிவுபட விளங்கும்.

தவம் என்னும் சொல்வழியே கண்டவை இவை.

தவம் என்னும் பொருளை வள்ளுவர் எப்படிக் கூறுகிறார் என்பதைக் காணலாம்.

தவப் பொருள்

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு" (261)

என்பது தவ இலக்கணத்தைத் தன்னிடம் கொண்ட குறள்.

'நோன்பு' என்பது 'நோம்பு' எனக் கொச்சை வடிவில் வழங்கக் கேட்கிறோம். அந் நோன்பைக் கொள்வார் இயல்பைப் பார்த்தால் அதன் பொருள் தானே புலப்படும். நோன்பு கொள்வார்க்குப்,

புறந்தூய்மை போற்றுதலில் எவ்வளவு அக்கறை!

உணவுக் கட்டுப்பாட்டில் எவ்வளவு உறுதிப் பாடு!

பட்டுணியாக இருத்தலிலும் எவ்வளவு திண்மை !

வெறும் நாளில் ஏறுமாறாக இருப்பவர்களும் உண்பவர்களும் நோன்புநாளில் ஒருகட்டுக்குள் வந்து விடுகின்றனரே!

அந்த நோன்பு நிலையே வாழ்நாள் நிலையாகி விட்டால் - கடைப்பிடி ஆகிவிட்டால் - அந்தப் பிறப்பே நோன்புப் பிறப்பாய் - தவப்பிறப்பாய் - ஆகிவிடும் அல்லவோ!

சிறிது நீரும், சில துளசி இலைகளும் ஒரு கையில் வாங்கியுண்டு ஒரு நாள் முழுவதும் பட்டுணி இருக்கும் நோன்பியர் உளரே!

ஒரே ஒரு குவளை பாலொடும், ஒரு நாள் முழுவதும் பட்டுணியாவார் உளரே!

இப்படி ஆறு நாள்கள் ஆயிரக்கணக்கானோர் திருமுருகன் திருவிழா நாளில் திருக்கோயில்கள் தோறும் பட்டுணியாவாரைக் காண்கிறோமே!

இன்ன நாளா புலவைத் தொடோம் எனக் கட்டாக உள்ளனரே!

மூவேளை யுணவு, சிற்றுண்டி, நொறுக்குத்தீன், குடிகள் என வாழ்வோர்க்கும், இப்பட்டுணி உறுதி எப்படி உண்டாகியது?

உள்ளம் உறுதிப்பட்டது! உணர்வு ஏற்றுப் போற்றியது! அதற்கு இறையுணர்வு மூலமாயிற்று. அது, தெளிவும் தெம்பும் தேட்டுமாகத் திகழும் நிலையில், மனமும் பொறிகளும் கட்டுக்குள் நின்றன! நிற்கின்றன. நிறைவேறுகின்றன! அதே உறுதி நிலை பேறானதாக ஆகிவிட முடியும் தானே! ஒரு நாள் போன்றதுதானே, வருநாளும்! மேல் வருநாளும்!

ஒரு முள் குத்துகிறது; முகம் சுளிக்காமல் இருக்க எத்தனை பேரால் முடிகின்றது!

முள் குத்தியதற்கு, உறவையும் ஊரையும் கூச்சலிட்டுக் கூட்டிவிடும் குழந்தைகள் இல்லையா? அக் குழந்தை நிலையில், சிறு சிறு துயரையும்

தாங்காதவராய் - ஒற்றடம் போடவும், ஊசி குத்தவும், ஒரு மாத்திரை விழுங்கவும் மாட்டாராய் - உறவையும் ஊரையும் கூட்டுவாரும் - உதைத்தும் உருட்டியும் தள்ளுவாரும் - இலரா! அதனைச் சிறிதும் கருதாமல் இயல்பாக எடுத்துக் கொள்வாரும் இலரா? உளரே!

தலைமணி :

திருவள்ளுவர் தவத்தின் இலக்கணமாகச் சொல்வதன் **தலைமணி** "தன் துயர் தாங்குதல்" என்பதாம்!

"உற்ற நோய் நோன்றல்"

என்பது அது.

"தனக்கு வந்த துயரம் தாங்குதல் தவம்" என்கிறார் திருவள்ளுவர் இங்கே 'கோலம்' சொல்லவில்லை. கோலமாவது தோற்றமும் புனைவும்! **கொள்கை சொல்கிறார். கொள்கையாவது, கொள்ள வேண்டிய ஒழுக்க நிலை. கை என்பது ஒழுக்கப் பொருள் தருவது.**

"தன் துயர் தாங்கும் கொள்கை வலியர் எவரோ அவரே பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யார்; இவ் விரண்டையும் சிக்கெனப் பற்றிக் கொண்டவரே செவ்விய தவ வடிவர் என்கிறார் இப்பாடலில்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்(கு) உரு. (261)

என்பது அது.

தன்துயர் பொறுத்தலுக்கும் பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமைக்கும் தொடர்பு உண்டா?

உண்டு! உயர்நிலைக் கல்வி முடித்தவர், மேல் நிலை - கல்லூரி நிலை - பல்கலைக்கழக ஆய்வு நிலை எனக் கல்வியால் உயர்வது போன்றது, தன் துயர் பொறுத்தலும் பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமையும் ஆம்.

தன் பசித் துயரைப் பெரிதாக எண்ணுபவன், தனக்கென இருக்கும் உணவைப், பிறவுயிர் பசியால் துடிக்கக் கண்டாலும் அப் பசி தீர்க்க முந்துவனோ? தன் பசியை, அவ்வுயிர் அறியாமல் தீர்த்துக் கொள்ளத் துணிவனேயன்றி, உதவ முன் வரானே! அத்தகையவனை நோக்கித் தானே "விருந்து புறத்ததாத் தானுண்டல்" என்றது வள்ளுவம்.

சித்தர்

தமிழ் நாட்டுச் சித்தர்கள் மாளிகையிலா வாழ்ந்தனர்?

பட்டுடையிலா பளிச்சிட்டனர்?

ஊர்திகளிலேயா உலாச் சென்றனர்?

பத்துவகைக் கறியோடா உண்டனர்?

அவர்கள், வெயில் என்று பார்த்தார்களா? மழை யென்று கருதினார்களா? பனி என்று எண்ணினார்களா? பசி என்றோ நோய் என்றோ துடித்தார்களா? எடுபிடி, ஏவல் என ஏங்கினார்களா? உற்றார், உறவு என உழன்றார்களா? "இன்பமே அல்லால் துன்பம் இல்லை" என்ற துணிவுடையர் அல்லரோ அவர்கள்! மண்ணிலே வாழ்ந்து கொண்டு, விண்ணிலே உலாவிய பெருவாழ்வினர் அல்லரோ அவர்!

துடிக்கத் துடிக்கத் துயரூட்டும் இயற்கை செயற்கைத் தொல்லைகளைத் துடிப்பின்றி இயல்பாகத் தாங்கி பிற எவ்வுயிரும் அப்படித் துடித்தல் ஆகாது என்னும் கொள்கையில் மருத்துவத் தோன்றல்களாய், அருளாளப் பெருமக்களாய், எதிரது உணர்ந்த பேரறிவாளர்களாய்த் திகழ்ந்தவர்கள் அவர்கள் அல்லரோ! ஆதலால், **"தம் துயர் தாங்க வல்லாரே பிற உயிர்க்குத் துயரூட்டாதவர் மட்டுமல்லர்; அவ்வுயிர்க்கு வரும் துயரும் தணிப்பவர் ஆவார்"** என்க. அதனால், ஒன்றில் இருந்து மேலும் ஒன்றாக வளர்ந்து ஓங்கியதே இத்தவ இலக்கணம் என்பது விளக்கமாம்.

தமக்கு வந்த துயரைத் துயராக எண்ணவில்லை! அம்மட்டோ ? தமக்குத் துயரிலா வாழ்வு இருந்தும், தாமே துயரை வலிய ஏற்றுக் கொண்டார் உளரே! மாரிக்கென ஒரு மாளிகையும், கோடைக்கென ஒரு மாளிகையும், இளவேனிற்கென ஒரு மாளிகையும் கொண்டு வாழ்ந்த அவர், அவற்றை விடுத்துக் காடே மலையே கடலே வயலே வெயிலே பனியே மழையே என எதனையும் கருதாமல் எங்கும் அலைந்தாரே! இரவென்றும் பகலென்றும் பசியென்றும் நோயென்றும் உண்ணாமல் திரிந்தாரே! அவரே புத்தர்! "உலகத்து உயிர்கள் எல்லாமும் இன்புற்றிருக்க வேண்டும்; துன்பத் துடிப்பு இல்லதாய் வாழ வேண்டும்" என்னும் பெருநோக்கைமுன் வைத்துத், தம்மையே ஆய்வகமாகக் கொண்டு ஆய்ந்த பெருமகனார் அவர் அல்லரே! "அல்லல் அருளாள்வார்க்கு இல்லை" என்பது வள்ளுவம். அதனைத்

தெருவளவில் - ஊரளவில் - பெருக்கமாகக் காணமுடியாது எனினும், உலக அளவில் காணமுடியும் என்பதாலேயே "வளி வழங்கும் மல்லல்மா ஞாலம் கரி" என்றார். உலகளாவிய பார்வை பார்க்கும் போது இவ்வுண்மைக்குச் சான்று புலப்படும் எனத் தெரிவித்தார். தம் துயரைத் தாங்குவார்க்குத் தான் பிற உயிர்களின் துயரைத் துடைக்கும் துணிவும் பற்றுமையும் உண்டாம் என்க.

தவ விரிவு

தவ இலக்கணம் இவை எனக்கண்ட தவ வள்ளுவர் தம் எண்ணத்தை மேலும் விரித்தார். தவம், **செயல் இல்லை ; தவம் என்பது தன்மை.** ஆனால் தவம் செய்தல் என்கின்றனரே! தவம் செய்தல் என்பது என்ன?

மூச்சை அடக்கி இருத்தலா?

பேச்சை அடக்கி இருத்தலா?

வீட்டைத் துறந்து வாழ்தலா?

மனைவி மக்களை மறந்து வாழ்தலா?

மணந்து துறவு புரிதலா?

மணவாத் துறவு கொள்தலா?

கட்டடம் வேலையின்றி ஓய்ந்து உறங்கிக் கிடத்தலா?

ஓயாமல் மந்திரம் - இறைவன் திருப்பெயர் - கூறிக் கொண்டிருத்தலா?

செய்தல் என்றால் செயற்பாடு இன்னதென வேண்டுமே! எனின்,

"தவம்செய்வார் தம் கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுள் பட்டு" (266)

என்கிறார்.

"தவம் செய்பவர் என்பவர், தம் கடமையைத் தவறாமல் செய்பவர்" என்கிறார்.

அவரவர் கடமை என்பது என்ன?

தந்தை கடமை, தாய் கடமை, மக்கள் கடமை, ஆள்வோர் கடமை, படைஞர் கடமை, உழவர் கடமை, வணிகர் கடமை, மருத்துவர் கடமை, ஆசிரியர் கடமை, கலைவல்லார் கடமை, சான்றோர் கடமை, தொண்டர்

கடமை, நண்பர் கடமை, தலைவர் கடமை என எத்தனை எத்தனை எத்தனையோ பேர்களின் கடமைகளால் தானே உலகம் இயங்குகின்றது. கடிகாரத்தின் சக்கரங்களில் சுழற்சி போல அனைவர் கடமையும் ஒழுங்காக நிகழ்ந்தால், உலக நலம் ஓங்கி நிற்குமே!

கதிரோன் திங்கள் செவ்வாய் முதலாம் நாள்களும் கோள்களும் தம் இயக்கம் மாறாமல் இயங்கலால்தானே உலகச் சுழற்சி ஊறுபாடு இல்லாமல் நிகழ்கின்றது. அவ்வண்ணமே அவரவர் கடமையைத் தவறாமல் செய்வதே தவம். அன்றிப் பிற செயல் என்பது இல்லை என்கிறார்.

தம் கடமையை உதறி ஆசைக்கு அடிமைப்பட்டுப் பிறபிற தீமைகளில் ஈடுபடுவார் – பொது நலக் கேட்டில் புகுவார் – தவம் செய்வார் ஆகார்; அவர் அவம் செய்வார் என்றார்.

தவ உடையென எதுவும் உண்டா? தோற்றமென எதுவும் உண்டா ?

தவத்திற்கெனத் தாடி, சடை, மழிப்பு, வளர்ப்புப் போலும் உடல் தோற்ற அமைப்பும் புறத்தே தத்தம் விருப்பம் போல் உடைபூச்சு மணை, கோல், நூல், குறி இன்னவும் தவத்தவர் என்று சொல்லப்படுவாரிடம் நாம் காண்கிறோமே! இவை தவக்கோலம் என்கிறாரா வள்ளுவர்?

'தவத்தார்' என்பதற்கு அடையாளம். உயர்ந்த பெருமக்கள் பழித்த – ஆகாவென விலக்கிக் கூறிய – இயல் செயல்களைக் கொள்ளாது இருத்தலேயாம். அப்பழிக்கு உறைவிடமாக இருப்பார், அதனை மறைக்கும் மறைவாகப் புறக் கோலமும் தோற்றமும் குறிகளும் சடங்குகளும் காட்டியிருத்தல் தக்கதில்லை; அவர் **தக்கவராக இருந்து அதற்குத்தக்க கோலத்தைக் கொண்டார் என்றால் தகும். உள்ளே உள்ள கள்ளத்தை மறைக்கும் காவல் பொருளாகப் புனைவும் பூச்சும் ஏற்றமும் தோற்றமும் இருப்பின், அது கூடா ஒழுக்கம் என்பதாம் என்கிறார்.**

இது,

"தவமும் தவமுடையார்க் காகும் அவம் அதனை
அஃதிலார் மேற்கொள் வது". (263)

என்பது.

தவமும் என்பது தவத்தோற்றம் காட்டுவதும் என்னும் பொருளது. தவமுடையார்க்கு என்பது தவத்தன்மை உடையார்க்கு என்னும்

பொருளது. **தவ ஒழுக்கமில்லார் தவத் தோற்றம் காட்டுவது இழிவு; அஃது ஏமாற்றுச் செயல்! அது, கூடா ஒழுக்கம்! என்கிறார்.**

“தோட்டக்காரனுக்கு ஐயம் ஏற்படாமல் பயிரை மேய்வதற்குப் பசு, புலித்தோல் போர்த்துக் கொண்டது போல்வது அது” என்றார். ஏனெனில், ‘புலி புல்லைத் தின்னாது’, என்பது உலகறி செய்தி அல்லவா! துறவு - தவக்கோலம் காட்டிக், கொள்ளை கொலை முதலாம் கொடுமை செய்வாரை உலகம் உணர்ந்து உய்ய உரைத்த வள்ளுவம் ஈதாம். இல் செறிந்த புதருள் மறைந்து கொண்டு வேட்டுவன் பறவைக்குக் கண்ணி போடுகின்றான் அல்லவோ! அப்படி ஊரை ஏமாற்றிக் கெடுக்கத் துறவுக் கோலம் கொண்டுள்ளான் போலித் தவத்தன் என்பது வள்ளுவம்.

“குன்றிமணி சிவப்பாகத் தோற்றம் தந்தாலும். அதன் மூக்குப் பகுதியில் கறுப்பு இருக்கிறது அல்லவா!

“அதுபோல் சிலர் துறவுக் கோலத்தால் சிறப்பாகத் தோன்றி வஞ்சத்தை உள்ளே மறைத்துக் கொண்டுள்ளார்கள்” என்று எச்சரிப்பதும் வள்ளுவம்.

“அம்பு நேர்தானே! அது நன்மையா செய்கிறது? யாழ் வளைவு தானே! அது தீமையா செய்கிறது?

புறத் தோற்றத்தைக்கண்டு ஒரு முடிவுக்கு வந்து விடாதே. அகத்தோற்றத்தைக் கண்டே முடிவெடு என்பது உலகை விழிப்புறுத்தும் வள்ளுவம்.

பாழாய்ப் போன இப்**போலித் தவமும் கூட நாட்டுப்பயனாகும் நல்லதோர் சூழலும் உண்டு.** “நீங்கள் வேடந்தாங்கியாக இருக்க விரும்பினால், அதனைச் செய்யுங்கள்” என அவ்வேடத்தார்க்கு அரசியலில் ஒரு வழி காட்டினார் திருவள்ளுவர். ஒற்றாடலில் வருவது அது.

“துறவுக் கோலமும் உங்களுக்குப் பயனும் நாட்டுக்கு நலனும் சேர்க்கும். தவப் பெருந்தன்மையை இழிவுக்கு ஆட்படுத்தாமல், அதனால் நலம் சேர்க்கும் பணியில் ஈடுபடுங்கள். எவரும் ஐயப்படாமல் செயலாற்ற வேண்டிய ஒற்றர் பணிக்கு, உங்கள் தவக்கோலம் உதவும். எவ்வளவு நெருக்கடியில் இருந்தாலும் அஃது உங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். எவ்வளவு மறைவாக ஆராய்வதற்கும் அக்கோலம் இடம் தரும். அதனை மேற் கொள்ளுங்கள்” என்கிறார்.

“துறவுக் கோலத்தில் உள்ள உங்களுக்கு அக் கோலமே பாதுகாப்புத்தரும். ஒரு வேளை உங்கள் உண்மையை அறிந்து கொண்டு விட்டால் நீங்கள் உங்களை எப்பாடு படுத்தினும் பொறுத்துக் கொள்ளுங்கள்” நீங்கள் ஈடுபட்டு வந்து, கண்டு கொண்ட செய்தியைச் சிறிதும் வெளியிடாதீர்கள். இச்செயலைச் சீராகச் செய்தால் சிறந்த ஒற்றராகத் திகழ்வீர்.

“அத்துறவுக் கோலம் - தவக்கோலம் - தவ நெறிக்கு மாறு பட்டதாயினும், மெய்த்தவத்திற்கு இழிவு செய்வது ஆயினும், நாட்டுக்கு நலம் பயப்பதால், அரசால் மதிக்கும் பேறு பெறுவீர்கள். அரசால் பாராட்டிச் சிறப்புச் செய்யப் பெறும் பேறும் பெறுவீர்கள்” என்கிறார், இதனை,

“துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று” (586)

என்னும் குறளால் அறியவைத்தார்.

துறவியர் எளிதாகப் பிறர் ஐயத்திற்கு உரியவர் ஆகார். அவர் கொண்ட துறவுக் கோலம் அத்தகைய பெருமைக் குரியது என்பது கொண்டு இதனைக் கூறினார்.

துறவுக் கோலத்தின் மதிப்பு அறிவும் தெளிவும் ஆராய்வும் உடையவர்களைப் பார்க்கிலும் அறிவிலாரிடையே - கண்மூடித் தனமாக நம்புவாரிடையே மிகுந்திருத்தல் வள்ளுவர் உள்ளத்தில் பளிச்சிட்டது! நேரில் காணப்பட்டவர் வாழ்வில் அதற்குச் சான்றுகள் மிக இருந்தன. இன்றும், போலித் துறவியர் பொய்த் துறவியர் மந்திரம் தந்திரம் மாயம் செய்வினை என்று முழக்கமிடுவாரிடத்தே, கல்வியறி வில்லாரேயன்றிக் கற்றாரும் கூட நம்பிப் பற்று வைத்தலும் ஏமாற்றமடைந்து பல்வேறு தொல்லை துயரங்களுக்கும் பழிபாவங்களுக்கும் ஆட்படுதலும் பழகிப் போன நிகழ்ச்சிகளாகவே உள்ளன. பலர் பலர் ஏமாறக் கண்டாலும், புதுப்புது வழிகளில் ஏமாற்றும் போலித் துறவியர் பெருகிக் கொண்டும், அவர்களால் ஏமாற்றப் பட்டுக் கொண்டும், இருத்தல் தொடர்கதைகளாகவே உள்ளன.

திருவள்ளுவர் இச் செயலை நயமாக நகைச்சுவை யாகக் குறிப்பிடுகிறார்!

புல்லிய அறிவாளன், நல்வழி எதற்காகவும், பொதுப் பயன் எதற்காகவும் எச்சிறு உதவியும் செய்ய முன் வருவதில்லை . அப்படி அவன்

ஒருவகையால் ஒரு வேளை உதவ முன்வந்தான் என்றால், அவன் அறிவு நலத்தாலோ கொடை வளத்தாலோ உதவுவான் அல்லன்; அது, **பெறக்கூடியவன் தவக்கோலத்தாலோ தவத்தோன் என்னும் மதிப்பாலோ கொடுத்திருப்பான் என்பதாம். இதனை,**

"அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும் என்
இல்லை பெறுவான் தவம்" (842)

என்றார்.

தவப் பெருமை

'தவ' என்பதோர் உரிச்சொல். அதுமிகுதிப் பொருள் தருவது.

"சால உறு தவ நனி கூர் கழி மிகல்"

என்பது நன்னூல்.

தவ என்பதற்கு எதனால் மிகுதிப் பொருள் வந்தது. மிகச் சிறிய பிஞ்சு, "தவப்பிஞ்சு" என்றும், மிகச் சிறியது, "தவச் சிறியது" என்றும் இன்றும் பொது மக்கள் வழக்கில் உள்ளதே! மிகப் பெரியர் "தவப் பெரியர்" என்பதும் வழக்குத்தானே!

மிகக் கட்டொழுங்கும் மிக மேம்பட்ட நிறை நலனும் உடைய தவத்தவர் சிறப்பு நோக்கியே 'தவ' என்பதற்கு மிகுதிப் பொருளை இலக்கணர் வழங்கினர்.

இத்தகு சீறிய தவத்தில் தோய்ந்து நிற்பார் பலரைக் காண முடியவில்லையே! தவத்தவராகத் தெரிவாருள்ளும் பலர் தவத்தகுதி இல்லாத வஞ்சரும் கீழ்மையரும் நம்பத் தகாருமாக உள்ளனரே எனின், அதற்கும் வள்ளுவம் தெளிவு காட்டுகின்றது. அது,

"இலர்பலர் ஆகிய காரணம், நோற்பார் ,
சிலர் பலர் நோலா தவர்" (270)

என்பது.

வெளிப்படப் பொருள் விளக்கமாம் இக் குறளுக்கும், உரிய பொருள் காண மிகச் சிறந்த உரையாசிரியர்களும் இடறிவிட்டனர். ஏன்? தம் நோக்கில் இருக்கும் கருத்தை முன்வைத்து, வள்ளுவப் பார்வையில் இருந்து வழுக்கி விட்டமையால் அவ்வாறாயினர்.

இக்குறள் தவப் பகுதியின் நிறைவுக்குறள். அதிகாரப் பெயர் தவமாக இருந்தும். இலர் என்பதற்குப் பொருள் இலர் எனப் பொருள் கண்டு விட்டனர்.

"தவம் இலர்" எனக் கண்டிருப்பின் இடறி இரார்.

"தவத் தன்மை இல்லார் பலர் ஆகியதற்குக் காரணம் மன அடக்கம் - மனவலிமை - இல்லார் பலராக உள்ளனர் என்பதே; அவருள் சிலர், மன அடக்கம் - மனவலிமை உடையவராக இருத்தலால் அவர்கள் மெய்த்தவத்தராக விளங்குகின்றனர்". என்பது இதன் பொருளாம்.

நோற்பார் – நோன்பார் – வலிமை அமைந்தார். நோல் – வலிமை.

சிலர் மனத் திண்மையராகவும் பலர் மனத் திண்மை இல்லாராகவும் இருப்பதாலேயே சிலர் தவத் தன்மையராகவும் பலர் அவத் தன்மையராகவும் காண்கின்றனர் என்கிறார்.

திண்மை மன உறுதிப்பாடு. அது பெண்மைக்குக் 'கற்பு' எனவும், ஆண்மைக்கு 'நிறை' எனவும் வழங்குவது போல் தவத்தர்க்கு நோன்பு எனவழங்கும்.

"கற்பென்னும் திண்மை"

என்பது வள்ளுவம்.

"நிறை" ஆட்டம் அசைவு இல்லாமல் நிற்கும் நிலை. "நிறை காக்கும் காப்பே தலை" எனக், கற்பும் நிறைவும், ஒத்த பொருளாகவே விளங்கும். ஒருமுகப் பாடே இம் மூன்றுமாம்.

நோன்புத் திறம்

தவத்தவர் நோன்புத் திறம் ஈதெனவும் வள்ளுவம் விளக்குகிறது.

தீச்சுடரைக் காண்கிறோம். சுடரோன் கதிரோன் என்கிறோம். சுடர்விளக்கு என்று வழங்குகிறோம்.

எச்சுடர் ஆனால் என்ன? அதற்கொரு பொதுத் தன்மை உண்டு. அது "சுடுதல்" என்பது.

சுடுதல் இல்லாத ஒன்று சுடர்தல் இல்லை. இது நாம் காணும் கண்கூடான காட்சி.

நீரில் இருந்தோ, நிலக்கரியில் இருந்தோ, வேறு எரிபொருளில் இருந்தோ எடுத்ததாயினும் என்ன, மின்விளக்கு ஆவிவிளக்கு

நெய்விளக்கு என்பனவாயினும் என்ன சுடத்தானே செய்கின்றன. அதனால், சுடச் சுடரும் என்பார் திருவள்ளுவர்.

திங்கள் ஒளி விடுகிறதே! அது சுடுவது இல்லையே என வினாவின், திங்கள் 'தன் ஒளி' யுடைய தன்று. அது கதிரொளியை வாங்கிக் கொண்டு ஒளி செய்யும் கண்ணாடி போன்றது. அதனால், அதற்குக் 'கோள்' என்பது பெயர்.

ஒளியை வாங்கிக் கொண்டு ஒளி செய்தலால் கோள். செவ்வாய் முதலியனவும் அத்தகையவே.

பொன்னிலே ஒரு பொன் கரும்பொன். இரும் பொன் என்பதும் அது. 'இரும்பு' என்பது வழக்கு. அவ்விரும்பு உலைக்களத்தில் காய்ச்சப்படும் போது எப்படி ஒளி செய்கிறது. அது மட்டுமா? வெண்பொன் செம்பொன் முதலானவும் தான் என்ன? இனிப் பைம்பொன் எனப்படும் தங்கம் சுடச்சுட மாசிலாப் பொன்னாக - உருக்குப் பொன்னாக - ஆணிப் பொன்னாக விளங்குகின்றதே!

சூட்டில் தங்கம் கருத்ததா? பின்னரும் நிறம் மாறிற்றா? மற்றைப் பொன்களினும் பைம் பொன் தனித் தன்மையோடு விளங்குகிறது அல்லவா?

தவத்தர் பொன்னனைய பொலிவாளர்.

அவர் துன்பம் துயர் நோய் நொடி எல்லாம் வென்றவர் துன்பத்திற்குத் துன்பம் செய்யவல்ல துணிவர். இடும்பைக்கு இடும்பை ஆக்கும் இயல்பர். துன்பத்தை இன்பமாக்கிக் கொண்டவர்க்குத் துன்ப வரவு தானே, இன்பவரவு, வேம்பைக் கரும்பாகக் கருதுவாரை வேம்பின் கசப்பு வெற்றி கொள்ள முடியுமா? இன்பத்தை விரும்பாமல் துன்பத்தை இயல்பு என்று கொண்ட உள்ளத்தரை வாட்டும் துன்பம் ஒன்றும் உண்டோ ? அதனால்,

"சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" (267)

என்றது குறள்.

சுடச்சுடத் தாங்கும் வன்மையர் தவத்தவர் என்றால், சுடுசொல் ஒன்றை ஒருவர் சொன்னால், அதனைத் தாங்க மாட்டாதவர் தவமேன்மையர் ஆவரோ?

சுடு சொல்லைப் பொறுத்துக் கொள்ள வல்ல வரினும் அதனைப் பொறுத்துக் கொள்ள மாட்டாத தவத்தர்க்குத் தனிமதிப்பு ஏற்படாதே. அதனால்,

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்" **(160)**

என்றும்,

"துறந்தாரில் தூய்மை யுடையார் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோக்கிற் பவர்." **(159)**

என்றும் கூறினர் திருவள்ளுவர்.

ஆக்கமும் கேடும் உணர்ந்தவர் தவத்தர். அவர் ஆக்கவும் அழிக்கவும் வல்ல சொல்லாற்றலர். அத்தகையர் சுடு சொல்லை - பிறர் சினந்து சொல்லும் சொல்லைத் தாங்கும் பொறுமையற்றவராக இருந்தால், அவர் குணம் என்னும் குன்றம் ஏறிநின்றவர்தாமா? என வினா எழுப்பி, அவர்க்குச் சினம் சீற்றம் உண்டாயினும் ஒரு நொடியளவுக்குள் அதனை வெளிப்படா வகையில் அடக்கி விடுவர் என்பதைக்,

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது" **(29)**

எனக் கூறுகிறார். கணமேயும் காத்தல் - நொடியளவு கூட வைத்திருத்தல்.

இல்லறப் புகழ்:

தவத்தவர் இல்லறக் கொடையாய்ப் பிறந்தவர். அக்கொடையாய் வளர்ந்தவர்; அக் கொடையாலே வளர்பவர்; அக்கொடையாளராய்த் தாமும் தம் குடும்பமும் அமைந்து மேனிலைத் துறவு கண்டவர். அவர் இல்லறத்தைப் பழித்தலும் ஒதுக்குதலும் வெறுத்துத் தள்ளுதலும் ஆகாது. ஏனெனில், அவரினும் மேம்பட்ட தவத்தரும் இல்லறத்தில் இருத்தல் கண் கூடாம் என்பதற்கு வேறு சான்று தேட வேண்டியதில்லை. அவரே சான்றாளர். ஆதலால் "இல்லறத்தை மதித்துப் போற்றாத துறவு துறவு ஆகாது எனப் பண்டைத் தமிழர் நெறியைப் பாதுகாப்பு வகையால் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர்.

அது,

"அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல" (39)

என்பதும்,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்" (46)

என்பதும்,

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து" (48)

என்பதும்,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (42)

என்பதும் ஆம்.

இல்லறத்தைப் பழிப்பது தம் பெற்றோரையும், தம் பிறவியையும், வாழையடி வாழையாய்த் தொடரும் வாழ்வு மூலத்தையும், இயற்கை இறைமையையும் பழிப்பதாம். அப்படிப் பழிப்பதிலும் பாழுங்குறை யுடையது ஆடவர் பெண்டிர் என்னும் இருவருங் கலந்த இல்வாழ்வில், ஆடவரை விலக்கிப் பெண்டிரைப் பழிப்பதாம்! அவ்வாறு பாடியவருள் பேரறிவரும் பெருந்துறவரும் உளரே எனின், அவர் பெயரால் இயற்றிப் பின்னவர் அவர் பாடலோடு இணைத்தது உண்டு என்பது ஆய்வாளர் கண்டதாம். நிற்க.

தமிழ் மண்ணின் தனிப்பெருந் துறவைத் தமிழ் மண் மறந்து போனது தவப்பெருங் குறையாம். அதனைத் தொல்காப்பியர்,

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (தொல். கற்பு: 51)

என்பார். இதனால்

செய்யும் இல்லறக் கடன்களை யெல்லாம் சீர்பெறச் செய்து முடித்து, முதுவராம் நிலையில் கணவன் மனைவியர் ஆகிய இருவரும், குடும்பத்துடன் இருந்தோ தனித்திருந்தோ பற்றற்ற துறவில் நிற்றல்

நெறியாகக் கொண்டனர் என்பது விளக்கமாம். இந்நெறியே வள்ளுவ நெறியாகலின் 'இல்லறவியல்' துறவறவியல் எனத் தொடர் அறமாக வகுத்து இந் நெறியைப் போற்றி உரைத்தார்.

நெறியான இல்லறத்தில் இருந்து முறையான துறவு கொள்ளும் இயற்கை அறநிலை இருந்தமையால் தான் பெருநிலைப் பெற்றோரின் பெறுதற்கரிய மக்கள்,

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்"

என்னும் நோன்புத் தவத்தையே மக்கட்பேற்றில் சுட்டினார் வள்ளுவர். மகன் என்றது மகளுக்கும் உரியதே. தந்தை என்றது தாய்க்கும் உரியதே. ஒரு பாலுக்குச் சொல்வது மற்றைப் பாலுக்கும் பொருந்துவதே என்பது இலக்கணர் நெறி.

உள்ளும் புறமும்:

தவத்தவர் உள்ளொன்றும் புறத்தொன்றுமாக இருத்தல் ஆகாது என்பதை, கூடா ஒழுக்கத்தில் தனி முதன்மை தந்து கண்டித்தவர் வள்ளுவர். துறவுப்பகுதி யில் "வாய்மை" என்பதோர் அதிகாரத்தை வைத்தவரும் அவர். "பொய்மையும் வாய்மை இடத்த" என்னும் விதி விலக்கு நெறியைக் கூடத் தவத்தர் மேற் கொள்ளல் ஆகாது என்னும் கண்டிப்பாளராய்த் திகழ்ந்தார். அப்படி எவரேனும் வாய்மைக் குறைவான தவத்தர் இருப்பின் அவர், மனத்தொடு வாய்மை மொழிவார்க்குப் பிற்பட்டவரே எனத் தெளிவித்தார். அது,

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை" (295)

என்பதாம்.

தவப்பயன்

இனி, தவத்தால் ஆகும் பயன்கள் இவை யெனக் காட்டுகிறார் திருவள்ளுவர். அவை:

1. பகைவரை அழித்தல்
2. விரும்புவாரைக் காத்தல்
3. விரும்பியவற்றை விரும்பியவாறு அடைதல்

4. உலகத்து உயிர்கள் எல்லாம் பாராட்டுதல்

5. காலனும் நெருங்கா திருத்தல்

என்பனவாம்.

சீரிய தவத்தர்க்கு அருளாளர்க்குப் - பகைவரா வார் எவர்? எவரோ ஒருவர், பகையாக நினைத்தாலும், தவத்தவர் அவரைப் பகைவராகக் கருதமாட்டாரே, எவ்வளவு கொடுமையானவரையும் 'அவர் இப்படிக் கேட்டில் ஈடுபட்டுள்ளாரே' என்னும் இரக்கப் பார்வை பார்ப்பவர் அல்லரோ தவத்தர். ஆதலால், அறியாச் சிறுமைக்கும் கயமைக்கும் நன்றியின்மைக்கும் ஆட்பட்டவர், தவத்தர்க்குக் கேடு செய்தாலும், அவர் அறியாமையை நினைத்துப் பரிவு காட்டும் தூய துறவிக்குப் பகைவர் இரார் ஆதலால், பகையானவரும் பகைமாறித்திருந்துதல் காணக் கூடிய உண்மை. அதனால், ஒன்னார்த் தெறலும் என்றார்.

தவத்தரைப் பற்றி அவர் வழியில் நிற்பார்க்கு நலமே உண்டாதல் தெளிவு ஆதலால், உவந்தாரை ஆக்கல் என்றார். இவ்விரண்டையும் ஒரு குறளில்,

"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்" **(264)**

என்றார்.

தவத்தவர்க்கு விருப்பு என்ன? வெறுப்பு என்ன?

வேண்டுதல் வேண்டாமை இலான் வழியில் நிற்கும் வேண்டுதல் வேண்டாமை இலார் அவர். அவர் வேண்டுவ எல்லாம், எல்லா உயிர்க்கும் நலமானவையே; அவர் வேண்டாதனவெல்லாம் எல்லா உயிர்க்கும் நலமாகாதன எவையோ அவையே, அவர்க்கெனத் தேடிப் பெருக்க வேண்டிய தேவைதான் என்ன? எல்லாத் தேவையும் தேவையில்லை என்னும் வேண்டாமையே விரும்பிய பெருஞ் செல்வமெனக் கொண்டவர்க்குத் தனியே வேண்டியனவாக என்ன இருக்க முடியும். பிறர்க்கும் பிற உயிர்களுக்கும் எவ்வெவற்றைச் செய்ய அவர் விரும்புகிறாரோ அது அவர் தவப்பெருமையாலும் தக்கோர் உதவியாலும் சிறப்பாக நிறைவேறும். அந்நிறைவேறுதல் மேலும் மேலும் தவ வழியில் அவரை ஊக்கி நிற்கும். இதனை,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்" **(265)**

என்றார்.

தவத்தர்க்குத் தம் உடலும் பாரமாகத் தோன்றும். உயிர் உதவிக்காக உயிரைத் தாங்குபவர் அவர். அவரோ "தன்னுயிர் தானறப் பெற்றவர்". தன்னுயிரை வளர்க்கப் பிறவுயிரை வாட்டாதவர்; வதைக்காதவர். அம்மட்டோ? வாட்டுவாரையும் வதைப்பாரையும் தடுத்துக் காக்கும் அருளாளர் அவர். ஆதலால்,

"கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா
உயிரும்கை கூப்பித் தொழும்" **(260)**

என்பது போல,

தவநெறி நிற்பானை உயிர்கள் எல்லாம் தொழும். இதனைத், இதனைத்,

"தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்" **(268)**

தவத்தோன் மெய்யுணர்வில் ஓங்கியவன். உயிர் நிலை உணர்ந்தவன். உறங்குவது போலும் சாக்காடு எனத் தெளிந்தவன். பறவை, கூட்டை விட்டு பறப்பது போல் உயிர்ப் பறவையும் உரிய பொழுதில் பறந்து விடும் என்பதைக் கண்டவன்! நேற்றிருந்தவன் இன்றில்லை என்னும் நிலையாமை உணர்ந்தவன் ஆதலால், அவனுக்குத் தன்னுயிர், என்றும் தன்னதே என்றும் அறியாமை இல்லை ! ஆதலால், அவன் தன்னுயிர் தானறப் பெற்றானாம். தன் உயிர் வாழ்வுக்காக மற்றை உயிர்களை வாட்டி வதையா நோன்புடையன். ஆதலால், அருளாளனாகிய அவனை அவ்வுயிர்கள் போற்றும் என்பதாம்.

தன்னுயிர் தானறப் பெற்றவனுக்கு இறப்பு அச்சம் உண்டா? சாவுக்காகச் சஞ்சலமுறுதல் உண்டா? கூற்றுவனை விருந்தாளியாக வரவேற்கக் காத்திருப்ப வனிடம் கூற்றுவன் வெற்றிபெற முடியுமா?

அச்சமே இயல்பாகக் கொண்டவரிடம் அல்லவோ கூற்றுவனின் ஆட்டம் வெற்றிபெறும். இத் தவத்தனிடமோ கூற்றுவன் தோற்றுப்போய் ஓட்டம் எடுக்கிறான். அதனை,

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு" (269)

என்றார்.

கூற்றம் தோற்றோடும் என்றால், "அவர் சாவமாட் டாரா?" எனின், சாவுக்கு அஞ்சினால் தானே சாவு! இல்லையேல் அது உறக்கத்தில் பெரிய பேருறக்கம் தானே" உறக்கம் வருகிறதே என எவராவது அழுவாரா? தெளிவுடையவர்க்கு இறப்பு, பேருறக்கம்' தானே.

தவத்தவர் உயிர் ஒடுக்கமாதல் நாடறி செய்தியே. அப்படி அவர்கள் ஒடுங்கிய இடங்களே இன்றும் **'ஒடுக்கம்'** என்று பேசப்படுகின்றதாம். ஒடுக்க இடங்களே வழிபாட்டுத் திருக்கோயில்களாக இருத்தல் வரலாற்று வழியாலும் செவி வழியாலும் அறியப்படும் செய்தியாம். - இவையெல்லாம் தவத்தின் பயன்கள் என எண்ணியுரைக்கும் திருவள்ளுவர், இத்தகைய பெருமை மிக்க தவத்தை ஏன் பலரும் மேற் கொள்வ தில்லை? எனத் தமக்குத் தாமே வினா எழுப்புகிறார்.

பற்றற்ற துறவியராம் தவத்தினர்க்கு, ஊணே உடையே உறைவிடமே உதவியே என்பவற்றைச் செய்வதற்காகவே மற்றவர்கள் தவநெறியைப் பற்றிக் கொள்ளாது விட்டு விட்டார்கள் போலும் என நினைத்துக் கொண்டு உள்நகைக்கிறார்! அது,

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்" (263)

என்பது.

நிறைவு

தவம் என்பது மாந்தராகப் பிறந்த எவர்க்கும் உரிய பொதுப்பொருள். அதனைத்தக்கவர்கள் எவரும் கடைப்பிடித்து உலக நலம் செய்யலாம் என்பது வள்ளுவர் கண்ட தவப்பொருள் ஆகும்.

❖❖❖

எ. தமிழியக் காவலர் - திருவள்ளுவர்

1. வேள்வி

விரும்பிச் செய்யும் நல்ல பண்பாட்டுச் செயல்களை 'வேள்வி' என்பது தமிழ் மரபு. **வேள்** என்பது, மண். அம்மண்ணைப் பண்படுத்திப் பயிரிட்டு உலகுக்கு உதவும் கடமை மேற்கொண்டவர் தமிழர். அதனால் அவர்கள் தமிழ்ச் சொல்லால் **வேளாளர்** எனப் பட்டனர். அவர் தொழில் **வேளாண்மை** என்றும் வழங்கப்பட்டது. அவர்கள் தலைவர்களாக விளங்கியவர்களும் **வேள்** என்றும் **வேளிர்** என்றும் பெயர் பெற்றனர்.

மண்ணைக் கொண்டு கலங்கள் வனைந்தவர் '**வேளார்**' எனப்பட்டனர். விரும்பிச் செய்யும் மங்கல விழா '**வேள்**' என்று வழங்கப்பட்டது. விருந்தோம்புதல் '**வேள்வி**' எனப்பட்டது. திருமணம் புரிதல் **வேட்டல்** எனப்பட்டது.)

இந்த அரிய தமிழ்ச் சொல்லை (வேள்வி) எடுத்துக் கொண்டு தீக்குண்டங்கள் உண்டாக்கி, எரி மூட்டி, பயன்படும் பொருள்களை எரிக்கு இரையாக்கித் தமிழ்நெறிக்கு அயலாம் நெறிக்கு வட மொழியாளர் ஆட்படுத்தினர். மன்னர்கள் இந்நெறியை ஏற்றுப் போற்றினர். **பல்யாகசாலை முதுகுடுமிப்** பெருவழுதி என்பானும், **இராசசூய யாகம்**, **வேட்ட** பெருநற்கிள்ளி என்பானும் தம் பெயர்களிலேயே 'யாகம்' என்னும் சொல்லை இணைத்துக் கொண்டனர்.

முன்னவன் பாண்டிய வேந்தன்; பின்னவன் சோழ வேந்தன். சேர வேந்தன் செங்குட்டுவன் வடநாடு சென்று, இமயக்கல் கொண்டு வடவரை வென்று கண்ணகிக்குக் கோட்டம் எடுத்தவன். எனினும், மாடல மறையோன் சொல்வழி நின்று, எரியோம்பும் வேள்வியில் ஈடுபட்டான். "வேள்விச் சாலையில் வேந்தன்" புகுந்தபின் யானும் சென்றேன் - என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். **குமட்டூர்க் கண்ணனார்** என்பார் விரும்பியபடி யாகங்கள் பல செய்த சேர மன்னனைப் பதிற்றுப்பத்து உரைக்கின்றது. இவ்வாறு தமிழகம் தழுவிய நிலையில், மேல் மட்டத்தில் வேத வேள்வி - யாகம் - நிகழ்ந்தமையால் தமிழர் செய்யத்தக்க வேள்வி

எது? என்பதை வெளிப்படுத்தி இனப்பண்பாட்டைக் காக்க வேண்டும் என்று உளங்கொண்டார் திருவள்ளுவர். ஆதலால், **தமிழின - தமிழ்நெறிக் காவலராகத் திருவள்ளுவர் திகழ்கிறார்.**

திருக்குறளில் விருந்தோம்பல் என்பது ஓர் அதிகாரம். அதில், இல்லறம் நடத்துவது விருந்தோம்பலுக்கே என முழக்கம் இடுகின்றார். "உழவுத் தொழில் செய்வார், பிறரிடம் ஒன்றை வேண்டுமென்று கேட்க மாட்டார்; தம்மிடம் பிறர்வந்து ஒன்றைக் கேட்டால் இல்லை என்னாமல் ஈவார்" என்று உழவில் அவர் கூறினார்.

இல் வாழ்வார் செய்யும் அறச் செயல் **வேள்வி** என்றும், அது **விருந்தோம்பல்** என்றும் திருவள்ளுவர் கூறினார். பின்

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (81)

என விருந்தோம்பலைத்தொடங்கினார். **வேளாண்மை** என்பது, உழவு, இல்லறம், விருந்தோம்பல் என்னும் முப்பொருள் ஒரு சொல் என்பதை அறிக.

விருந்தோம்பலை வேள்வி என்றமையை,

"இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை **வேள்விப் பயன்"** (87)

என்றும்,

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் **விருந்தோம்பி**
வேள்வி தலைப்படா தார்" (88)

என்றும் 7, 8 ஆம் பாடல்களில் குறிப்பிட்டார். இவற்றால் **விருந்தோம்புதலே வேள்வி** என வள்ளுவர் கூறியதை அறிந்து கொள்ளலாம்.

இவ்வளவு என்று சொல்லுதற்கு இல்லாத பெரும்பயன் உடையது விருந்தென்னும் வேள்வியின் பயன் என்கிறார் (7).

ஆசிரியர் தொல்காப்பியர் விருந்தின் பயனை அருமையான ஒரு தொடரால் விளக்கினார். அது "விருந்து கண்டு ஒழித்த ஊடல்" என்பது.

கணவன் மனைவியருள் சில வேளைகளில் சிறு சிறு பிணக்குகள் இருக்கலாம். அவை யெல்லாம் விருந்தினரைக் கண்ட அளவில்

மறைந்துபோய், அவர்களைப் பேணும் கடமையால் பிணக்குகள் ஒழிந்து போகும் என்பதாம். மேலும், அருமையும் பெருமையும் சால்பும் வழிகாட்டலும் அமைந்த பெரியாரைத் - துணைக்கொள்ளும் பேறும் விருந்தோம்பலால் வாய்த்தல் தனிப்பெரு நலமாம். "அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்" என்பது, தானே வந்து சேரும் தனிச் சிறப்பினது விருந்தோம்பல் என்பதை அறியின் பண்பின் வழிபாடும், பண்புப் பெருமக்கள் வழிபாடும் விருந்தோம்பல் என்பதும், பண்புடையவரைப் பேணலே பண்பாட்டுப் பேணலும் உலக நலங்காத்தலும் ஆகும் என்பதும் அறியலாம். ஏனெனில்

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம்"

என்பாராகலின் (996). "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்" என்பது கலித்தொகை.

இவ்வாறு வேள்வியை உடன்பாட்டில் கூறிய வள்ளுவர், அயலவர் மூட்டிய 'புலை கொலை' வேள்வியைக் கண்டித்தும் கூறினார். அது,

"அவிசொரிந்து ஆயிரம் **வேட்டலின்** ஒன்றன்
உயிர்செகுத்து **உண்ணாமை நன்று**" (259)

என்ப து.

கொல்லாமை புலால் உண்ணாமை (புலால் மறுத்தல்) என்னும் இரண்டு அருட் கருத்துகளுக்கும் மாறானது அவிசொரியும் வேள்வி.

ஒவ்வொருவர் உடலிலும் **'எரி'** உண்டு. எரியளவு அறிந்து (பசியறிந்து) - தீயளவு அறிந்து - உணவு கொள்ள வேண்டும் என்பது வள்ளுவ **உயிர் மருந்து**. அதற்கு உதவும் நெய்யையும் பாலையும் தேனையும் உணவு வகைகளையும் **எரிவாயில் கொட்டுதல் இரட்டைக் கேடாகும். ஒன்று பசி எரிக்கு உணவு வழங்காமை; மற்றொன்று தேவைப் படாத எரிக்குக் கொட்டிப் பாழாக்குதல்.** இவ்விரண்டும் அறக்கேடுகள். இவற்றினும் மற்றும் இரட்டைக் கேடுகள் **உயிர்ப் பலியிடலும் அவ்வூனை எரியிடலும்** உண்ணலும் ஆகியவை. **இறைவன் பெயரால் செய்தாலும் கொலை கொலையே! ஊன் உண்ணல், ஊன் உண்ணலே. தம் நாத் தினவைத் தீர்த்துக் கொள்ள இறைமையைப் பழிக்கு ஆட்படுத்தும் பெருங்கேடாம் இது.**

ஓம குண்டங்கள் ஒன்றாக இரண்டாகச் செய்யாமல் நூறு ஆயிரம் எனப் பெருஞ் சிறப்பாகச் செய்யப்படுதலும், குடம் குடமாக அவிப்பொருள் கொட்டப்படுதலும் வேந்தர்கள் முன்னின்று நடத்துதலும் மந்திர முழக்கங்கள் பக்கமெல்லாம் ஓங்கிப் புகைமூட்டத்தோடும் நெடியோடும் வளைத்தலும் பொதுமக்கள் அச்சமும் வியப்பும் கொண்டு கூடிக் கூடிப் பார்த்தலும் கலந்து கொள்ளலும் ஆயின வளர்ந்தன. இதனால், **ஆயிரம் வேட்டல் (வேள்வி) செய்வதிலும், ஒன்றன் உயிரைக் கொன்று அதன் ஊனை உண்ணாமை நன்று என்று வேத வேள்வியைக் கண்டித்தார். வேந்தர்களே முன்னின்று நடத்தினாலும் கண்டிக்கத் தக்கதைக் கண்டித்தல் சான்றோர் கடன்** என்பதை உணர்ந்தமையால் திருவள்ளுவர் கண்டித்துக் கூறினார்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்" (448)

என்பதை அறிந்துரைத்தவர் அல்லரோ அவர்.

உணவைத் தேடித் தேடி உண்ணும் ஊண்பிறப்பர் பலர், தவித்தும் பசித்தும் இருக்கக் கண்டமையால் அவரை

"அவி உணவின் ஆன்றோர்" (413) என்றார்.

அவர்க்கு உதவாமல், அவமாக எரிப்பது பழியொடு பாவம்; இதனை ஏற்றுப் போற்றும் செயல், காவல் கடமை அன்றாம் என்று இடித்துரைத்தாராம் வள்ளுவர் என்க.

'தவம்' என்றும் 'யோகம்' என்றும் வேள்வி என்றும் 'யாகம்' என்றும் சொல்லிக் கொண்டு தவ நெறிக்கும், வேள்விக்கும் மாறானவற்றைச் செய்தல் **கூடா ஒழுக்கம்** என்றும், தவத்தர் எனின் தமக்கு வந்த துயரைத் தாங்குவதும் பிற உயிர்க்குத் துயர் செய்யாது போற்றுவதும் கடனாகக் கொள்வர்; இவரோ, அவம் செய்யும் கூடா **ஒழுக்கத்தர்** என்பதால்,

"தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று" (274)

என்று வேட்டைத் தொழிலராகவே சுட்டினார்.

ஆதலால், வேத வேள்வி மறுப்பும், தமிழ் நெறிக் காப்பும் வள்ளுவக் கொள்கைகளாம்.

✦✦✦

உ. அமிழ்து

தமிழரின் தலைப்பட்ட பண்பாட்டு அறமாகத் திருவள்ளுவர் விருந்தோம்புதலைக் குறிப்பிட்டார். அதில் மலரினும் மெல்லியவர் விருந்தினர் என்பதை விளக்கினார். விருந்தோம்பாத செல்வர் வறியர் என்றும் குறித்தார். (90, 89)

விருந்தினரைப் புறத்தே வைத்து - தம்மோடு அமர்ந்து உண்ணாமல் வேறிடத்தே வைத்து - உணவு தருவது ஆகாது; கிடைத்தற்கு அரியது என்றும், தேவர்க்கு உரியது என்றும், சாவாமை அருள்வது என்றும், கூறும் அமிர்தமாக இருப்பினும் விருந்தினரைப் புறத்தே வைத்து உண்பது வேண்டத் தகாது என்றார் திருவள்ளுவர். அது

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" (82)

என்பது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதற்கு மாறானது அன்றோ புறத்தே வைத்து உண்பது?

சாவு வந்துவிடும் என்னும் நிலையில் கிடப்பாரையும் எழுந்து நடக்க வைக்கவல்ல மருந்து சாவா மருந்து ஆகும். அதனை 'அமிர்தம்' என உரையாசிரியர்கள் உரைத்தனர். அவர்கள் பார்வையில், தேவர்களும் அசுரர்களும், அமிர்தம், கடைந்த புனைகதைச் செய்தி முன்னின்றமையே காரணமாம். அதியமான் தந்த நெல்லிக் கனியை உண்ட ஔவையார் "நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே" என்று வாழ்த்தும் வாழ்த்தினால், சிவன் நஞ்சுண்டான் என்னும் புனைவு புலப்படும். ஆதலால், அவ்வமிர்தப் புனைவு மெய்யொடும் கூடாதது என்றும், மெய்யான அமிழ்து எது என்று காட்ட வேண்டியது தேவையானது என்றும் கருதினார் திருவள்ளுவர்.

தமிழில் "**தொன்மை**" என்பதோர் நூல்வகையுண்டு, அது உரையும் பாட்டும் விரவியதாய், பழைய வரலாற்றுச் செய்தியைக் கூறுவதாய் இருந்தது. அதற்கு, எடுத்துக்காட்டாகச் சொல்லப்பட்ட நூல், **தகடூர் யாத்திரை** என்று பழைய உரையாளர்கள் கூறுவர்.

தகடூர் யாத்திரையில் வரும் யாத்திரை தமிழில்லையே என்பார் எனின், எண்ணல் வேண்டும். எத்தனையோ அரியதும் பொருள் பொதிந்ததுமாம் தமிழ்ச் சொற்கள் வட சொற்களாக ஆக்கப்பட்டன. தமிழரும் தமிழ்ச் சொல் அன்று என்னும் வகையில் மயக்கப்

பட்டனர்.யாத்திரை என்பது தமிழ்ச் சொல்லே. 'செலவு' என்பது அதன் பொருள். **செங்கோன் தரைச் செலவு** என்னும் நூல் பழமையானது. பழைய உரைகளால் அறியப்படுவது.

'**யா**' என்பது கட்டு. யா என்னும் மரத்தின் பட்டை கட்டுதற்குப் பயன்பட்டதாகும். கட்டப்பட்டவை, **யாக்கை, யாப்பு** என்பன. யாக்கை, ஆக்கையும் ஆகும். அது கட்டும் நாரையும், எலும்பு நார் தசைகளால் கட்டுற்று நிற்கும் உடலையும் குறிக்கும். யாப்பு என்பது, எழுத்து அசை முதலியவற்றால் கட்டப்பட்ட பாடலையும், கால் வாய்க்கால் இவற்றொடு கட்டி இணைக்கப்பட்ட பாத்தியையும் குறிக்கும் (எ-டு) யாப்பினுள் அட்டிய நீர் என்பது வள்ளுவம்..

'**யா**' என்னும் கட்டு, சோற்றைக் கட்டிய - துணியில் கட்டிய - சோற்று முடிச்சையும் குறிக்கும்; அதனைத் தோளில் போட்டுக் கொண்டு மக்கள் கூட்டம் கூட்டமாக மலை என்றும், கடல் என்றும், காடு என்றும் - சுற்றிப் பார்ப்பதற்காகவும், இறை வழிபாட்டுக்காகவும் செல்கின்ற வழக்கம் உண்டு. தோளில் கொண்ட கட்டுணவைத் '**தோட்கோப்பு**' என்பதும் வழக்கம். அத்தோட் கோப்பே '**யா**' என்பது.

- யா என்னும் கட்டுணவு கொண்டு, அலைகள் போல வரிசை வரிசையாகச் சென்ற கூட்டம் - திரை (அலை) போன்றதாகலின் '**யாத்திரை**' எனப்பட்டது. இதனைப் **பரிபாடல்** வழங்கும்.

தமிழர் தொன்மை நூல், வரலாற்றைக் கூறுவதாய் இருக்கப், பின்னே வந்தேறிய '**புராணம்**' என்பது பொய்யாய் - புனைவாய் அமைந்தது. ஆதலால், புனைவுப் பொய்மையை விலக்குதலும் பொய்யா மொழியார்க்குக் கடமை ஆயிற்றாம்!

அவ்வகையில் 'அமிர்தம்' என்பதன் புனைவை விலக்கி, மெய்ம்மம் காட்ட விரும்பிய வள்ளுவர், அதனைப் பல இடங்களில், பல நிலைகளில் சுட்டிக் காட்டினார்.

மண்ணொடு கலந்த நீர் மண்ணின் மாசையும் மண்ணின் நிறத்தையும் மண்ணின் சுவையையும் கொண்டுவிடும். அந்நீர் எத்தகு நன்னீராயினும் ஓரளவால் கேடு உடையதே. மாசிலா நீர் என்பது வானில் இருந்துவிழும் மழைநீரே. அந்நீரே '**அமிழ்தம்**' ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

"வானின் றுலகம் வழங்கி வருதலால்
தான்**அமிழ்தம்** என்றுணரற் பாற்று"

என்று வான்சிறப்பின் தலைக் குறளாக வைத்தார்.(11)

அதுவே தூய து(ய்)ப்புப் பொருள் என்பதை,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை" (12)

என்றார். வான்மழை இல்லையேல் புல்லும் முளையாது என்பதால் எந்தத் துய்ப்புப் பொருளும் கிட்டாது என்றார். நீர் இல்லையேல் நீர்மையும் (பண்பாடும்) இல்லை என இறுதிக் குறளில் (20) கூறினார்.

பாற்கடல் என ஒரு கடல் மண்ணில் இல்லை என்றும், அதனைக் கடைந்து அமுதம் எடுத்தமை புனைவே என்றும் உணர்த்த அமிழ்தமாவது இதுவே என மெய்யுரைத்தார் பொய்யா மொழியார்.

இனி, அமிழ்து ஆகிய நீரும் சோறும் உயிர் தளிர்க்க வைக்கும் என்பதை அறியும் நாம், குழந்தைக்கு நீரும் சோறுமாகி உயிர் தளிர்க்கச் செய்யும் **பாலை** நம் முன்னோர் **அமிர்து** என்றனர் (அமிர்தப்பால்). சோற்றை **அமுது** என்றனர். (கட்டமுது, பாலமுது, சாற்றமுது). உடற்பிணி போக்கி உயிர் நலம் செய்யும் **மருந்தை அவிழ்து** என்றனர் (அவிழ்தம்). இவற்றுக்கு அமிழ்தின் அடியாகத் தனித் தனிச் சொல் வடிவும் அமைத்துக் கொண்டனர்.

இன்பச் சுரப்பாகி உயிர் தளிர்க்கச் செய்யும் பெண்மையை எலும்பு தோல் நரம்பு தசை ஆகியவற்றால் அமைந்தது என்று சொல்லாமல், '**அமிழ்தின் இயன்றது**' என்றார் திருவள்ளுவர் (1106). அமிழ்து தந்த அமிழ்தாகிய மக்களின் மழலை மொழியைக் குழலுக்கும் யாழுக்கும் விஞ்சிய இனிமையாகக் கூறும் வள்ளுவர், அம்மக்கள் சிறுகை பட்ட உணவை **அமிழ்தினும் உயர்ந்ததாகக்** கூறினார். அது,

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

என்பது (64)

ஆதலால், **அமிர்தப் புனைவைக் கண்காணும் அமிழ்தாகக் கண்டு காட்டியவர் வள்ளுவர்.** இதனால் வழக்கூன்றிய இந்திரர் (அமரர்) "அமிழ்தம்" என்பதை (புறநானூறு) மாற்றி மெய்ந்நெறி காட்டியவர் வள்ளுவராம்.

✦✦✦

3. கற்பகம்

அமிழ்தம் என்பது இவ்வாறாக இன்னொரு புனைவும் தமிழ்மண்ணில் உலவியதாம். அது '**கற்பகம்**' என்பதாம்.

கற்பகமாவது ஒரு மரம்; விண்ணகத்தே உள்ளது; மண்ணவர்க்கு வாய்க்காதது; எதனை நினைத்தாலும் அதனை மாறாது வழங்குவது எனக் கட்டுக்கதை புனைந்து நாடெல்லாம் பரப்பினர். மண்ணின்பத்தினும் விண்ணின்பமே உயர்ந்தது என்பதைக் காட்டக் கூறிய கட்டுக் கதை இதுவாம். கற்பகம் இருக்கும் உலகம் கற்பக உலகம் என்றும் அதனை ஆள்பவன் இந்திரன் என்றும் புனைந்தனர்.

திருவள்ளுவர், **கற்பை அகத்தே உடையார்** எவரோ அவர் **கற்பகம்** என்றார்.

அவனுக்கும் கற்பு வேண்டும்; அவளுக்கும் கற்பு வேண்டும்; அத் தன்மையுடைய இருவரும் இணைந்த இல்வாழ்வு 'கற்பக வாழ்வு' என்பது வள்ளுவமாயிற்று.

அவளுக்குத் தற்காப்பாம் **கற்பு** உள்ளமை போல, அவனுக்கும் தற்காப்பாம் **நிறை** உண்டு என்றவர் அவர். அவளைப் போல ஒருமுகப்பட்ட ஒருமையாளன் அவன் என்றும் கூறினார். அவர்கள் வாழ்வே கற்பக வாழ்வு என்றார்.

"இல்லதென் இல்லவள் மாண் பானால்" (53)

"பெற்றாற் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு" (58)

"வீழ்வார்க்கு வீழ்வார்" (1191-1194)

என விரிய விரியக் கூறினார்.

இத்தகையவர்களின் பெருமித மிக்க வாழ்வே (1193) விதையில்லா விழுமிய கனி 'காழில் கனி' போல்வது (1191) என்றும், உழவர்க்கு உரிய பொழுதில் பெய்யும் மழை போல்வது என்றும் (1192) கூறினார். ஆதலால், விண்ணகப் புனைவுக் கற்பகத்தை மறந்து **மண்ணக மெய்ம்மைக் கற்பகத்தைக் காட்டி நெறிப்படுத்தியவர் திருவள்ளுவர் என்க.**

✦✦✦

4. இந்திரன்

புனைவாளர்களால், செய்யாதன வெல்லாம் செய்து சீரழிந்தவனாகவும், அசுரர்க்கு அஞ்சி அஞ்சி வாழ்பவனாகவும், திருக்கோயில் தோறும் சென்று சென்று கழுவாய் தேடிக் கொள்பவனாகவும் இந்திரன் என்பான் புனைவு செய்யப்பட்டான். உயர்ந்த பதவி பெற்று இழிசெயல் செய்வானுக்கு எடுத்துக்காட்டாகப் புனையப்பட்டவன் அவன். எப்புராணத்தை எடுத்தாலும் இந்திரன் பழிமை புலப்படாமல் போகாது.

இவ்வாறாகத் திருவள்ளுவர் புலனடக்கத்தில் மிக்கானாக இந்திரனைக் குறிப்பிடுகிறார். அவனுக்கு, இவ்விழிந்த இந்திரனை எண்ணி உரைகண்டார் உரைத்தனர். மெய்ப் பொருள் காண்பது அறிவு அல்லவா! எவர் சொன்னால் என்ன? (423)

ஐம் பொறிகளையும் பக்குவப்படுத்தி ஐம்புலன்களையும் சென்ற இடத்தால் செலவிடாமல் ஆளும் பெருமையன் இந்திரன் என்பதை,

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி" (25)

என்று கூறினார். இவ்வடக்க இந்திரனுக்குக் '**கழி சடை**' இந்திரனைக் காட்டுவது முறையாகுமா? ஆற்றலுக்குச் **சாலும்** கரிக்கு, **சாலாக்** கரியைச் சான்றாக்கலாமா?

ஐம்புலனை அடக்கியவன் பெயர் **ஐந்திரன்** என்பது. அவன் செய்த நூல் '**ஐந்திரம்**' என்பது. ஐந்திரம் என்பது தமிழில் ஆகிய நூல். தமிழ் இலக்கணத்தை வழக்கொடும் செய்யுளொடும் ஆய்ந்து, தமிழியல் மாறாமல் இலக்கண நூல் இயற்ற விரும்பிய ஆசிரியர் **தொல்காப்பியர்** ஐந்திர நூலைக் கற்றார். அதனால், "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என அவர் உடன் பயின்ற ஆசிரியர் **பனம்பாரனாரால்** தொல்காப்பியப் பாயிரத்தில் குறிப்பிடப்பட்டார்.

ஐந்திரம் என்பது உயர்ந்த நூல் என்பதும் அதனை இயற்றியர் பெயர் இந்திரன் என்பதும் சிலப்பதிகாரத்தில் "**விண்ணவர் கோமான் விழுநூல்**" என்று சொல்லப்பட்டது. இவ்வாறு ஐந்திரம் செய்த ஐந்திரன், இந்திரன் எனவும் வழங்கப்பட்டமையால், 'இந்திரன்' என்றதும், இழிமை இந்திரனே உரையாசிரியர்கள் எண்ணத்தில் ஏற்பட்டதாம்.

ஐந்திரன் என்பவனை இந்திரன் எனவும் வழங்கினர் என்பதும் அவன் **புலனடக்கம் மிக்கான்** என்பதும், அவனையே வள்ளுவர் குறிப்பிட்டார் அடக்கச் சிறப்புக்கு என்பதும் அறியின் **வள்ளுவ மெய்ம்மை புலப்படும்.**

✦✦✦

5. அடியளந்தான்

இனித் திருமாலைப் பற்றிய புனைவுகள் சிலவும் இம் மண்ணில் நடமாட விடப்பட்டன. அவற்றுள் ஒன்று அவன் **'வாமனப் பிறவி'** கொண்டதாகும்.

மாவலி என்பான் பெருவலிமை வாய்ந்த மன்னன்; புறங்கொடாப் போர்வீறு உடையான்; கொடையில் இணையில்லாக் கொற்றவன். அவனை, அவன் கொடையைக் கொண்டே, அவன் படைத் திறனை அழிப்பதற்கு வந்த பிறப்பு வாமனப் பிறப்பு ஆகும்.

குறள் வடிவில் வாமனன் வந்து, மாவலியிடம் என் வேள்விச் சாலைக்கு மூன்றடி மண் தரவேண்டும் என்றான். வள்ளல் மாவலி இக்குறுவடிவன் தன் அடியால் மூன்றடி கொள்வது எவ்வளவு சிறிதிடம் என உள்நகைத்துத் தந்ததன் சான்றாக, நீர் வார்த்துக் கொடுத்தான்.

நீர் விட்டு – தாரை வார்த்து – வழங்கிய அளவில் நிமிர்ந்து நெடுமால் ஆனான். இதனை, "நீர்செல நிமிர்ந்தமால்" என்னும் முல்லைப்பாட்டு, சங்கத்தார் நாளிலேயே பரப்பப்பட்ட கதை இது. உலகத்தை இரண்டு அடியால் அளந்து மூன்றாம் அடிக்கு இடமில்லையே என்று மாவலி தலைமேல் மிதித்து வீழ்த்தியதாகப் பின்னப்பட்ட இக்கதையின், பெரும் பொய்மையைக் களைய வள்ளுவர் நினைந்தார். முள்ளை முள்ளால் தானே எடுக்க வேண்டும்?

இக்கதையால் என்ன வந்தது?

முயற்சியை அழிக்கும் அழிப்பும், சூழ்ச்சியால் வெல்லும் கேடும், போர்முறைக்கு ஒவ்வாப் புன்மையும் அல்லவோ பரப்பப்படுகின்றன! அன்றியும், இறைமைக்குத் தாழ்வும் ஆகின்றதே. இவற்றை நாம் உணர்த்தியாக வேண்டும் என்று எண்ணியவராய் வள்ளுவர் கிளர்ந்தார்.

ஊக்கத்திற்கு மாறானது 'மடி' என்பது; மடி என்பது சோம்பல்; மடிதலுக்கும் மட்குதலுக்கும் முன் நிலை மடி ஆகும். குடி கெடுவதற்கு மடி ஒன்றே போதும்; வேறு வேண்டா என்பது வள்ளுவம், மடியால் குடி அழிவதை விரித்துக் கூறிய அவர், மடியில்லாமைச் சிறப்பை இறுதிப்பாடலில் உரைத்தார்.

"மடி இலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு" (610)

என்பது அது. மடியில்லா அரசு ஒன்று உண்டானால், அது உலகப் பெருமை பெறும் என்றார். அதனை விளக்குவதற்கு வாமனன் கதையை எடுத்துரைத்து ஆளும் மன்னனாலேயே ஆகக் கூடிய ஒன்றுதான் அது என்றார்.

அடியால் (உலகை) அளந்தவன் கொண்ட நிலப்பரப்பை எல்லாம் மடி (சோம்பல்) இல்லாத அரசால் கொள்ள முடியும் என்றார். இதற்குப் புனைவு என்ன வேண்டும்? முயற்சியாளன் முழுதுலகும் கொள்ள முடியுமே என்று மடியில்லாமையொடு ஊக்க முடைமையின் உயர்வையும் விளக்கிக் காட்டினார்.

"கண்கூடான வாழ்வைக் காட்டி மக்களுக்குச் செயலூக்கியாவது வள்ளுவம். அவர் செயலூக்கம் கெடச் செய்யும் எதனையும் கருதியும் பாராக் கட்டமை ஒழுக்கமுடையது திருக்குறள்" என்க.

வள்ளுவரின் இக்குறிப்பை அறிந்தபின்னரும், "ஈரடியால் மூவுலகும் அளந்தானை" இளங்கோ வடிகள் காட்டியதும், ஒரு படலமாக மாவலி வரலாற்றைக் கம்பர் விரித்ததும் புனைவு போற்றும் மேல் புனைவுகளாம்.

✦✦✦

6. தாமரைக் கண்ணான்

இனித் "**தாமரைக் கண்ணான்** உலகு பேரின்பம் உடையது" எனப் பேசிப் பெரிது பரப்பினர். அப் பரப்புதல் திருவள்ளுவர் செவிகளிலும் விழுந்தது. இது புனைவெனப் புலப்படுத்தி மெய்ப்பொருள் உணர்த்துதல் தம் மேலான கடமை என உணர்ந்தார்.

பாற்கடலில் துயில்பவர், திருமால்; அரவணையில் துயில்பவர் அறிதுயிலாளர் அவர் என்றனர். **பால், துயில், அரவணை**

என்பவற்றை எண்ணுக. வைகுண்டத்தின் இன்பம் எனக் காணாமல், கண்டவர் போல் உரைத்த இன்பக் கதையையும் "கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்" என்னும் மறுப்பையும் வள்ளுவர் உன்னியிருக்க வேண்டும்! அதனால்,

"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு" (1103)

என்றார்.

"தாமரைக் கண்ணான் உலகத்துக் கிடைக்கும் இன்பம், தம்மை விரும்பும் தலைவியின் தோளைத் தழுவித் துயிலும் துயிலினும் இனியதாகுமோ? ஆகாது" என்பது இதன் பொருளாகும்.

கண்படை, தூங்கல், உறங்கல் என்பவற்றினும் இன்பச் செறிவு மிக்கது **துயில்**. துய்க்கும் இடமாக அமைந்தது அது. அத்துயிலும் தாம் விரும்புவாரும் தம்மைவிரும்புவாரும் ஒருங்கு துயிலும் துயில். அதனால், அதற்கு இணை ஆகாது தாமரைக் கண்ணான் உலகில் பெறும் இன்பம் என்றார்.

துயில், 'பால்' உணர்வு, அரவணைப்பு என்பவற்றொடு **அறிதுயில், பாற்கடல், அரவணை** என்பவற்றை ஒப்பிட்டுக் காணின் புனைவின் ஊடகம் புலப்படும். **காணும் ஒன்றுதானே கருதப்படும்**.

இனி, **இன்பம் என்பது எல்லா உயிர்க்கும், எல்லாச் சுவைக்கும் பொதுவானது** என்பது,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்"

என்னும் தொல்காப்பியமும், (1169), காமம் என்பது முழுமதியென வளர்ந்து வளர்ந்து முழுமை பெற்றது என்பதும் அது மாந்தர் பிறவிக்கே உரியது என்பதும் ஆகிய தொல்காப்பியமும் எண்ணத் தக்கவையாம்.

திருக்குறள் மூன்றாம் பால் காமத்துப்பால் எனப்பட்டதும் 250 குறள்களில் 39 இடங்களில் காமம் என்னும் சொல்லும் இரண்டே இடங்களில் மட்டும் இன்பம் என்னும் சொல்லும் அவ்விரண்டு இடங்களிலும் காமம் என்னும் சொல்லும் இடம் பெற்றமையும் எண்ணினால் காமம் என்பதன் முன்னைச் சிறப்புப் பொருள் புலப்படும்.

✦✦✦

7. தெய்வம்

சில செயல்கள் தடைப்பட்டு நிற்றல் சிலரை அசைத்தது. தம் முயற்சிக் குறை, திறமைக்குறை, செய்வகை அறியாக்குறை, செயல் தேர்ச்சியுடையாரைத் துணைக் கொள்ளாக் குறை எனப் பல குறைகளால் தடைப்பட்டு நிற்பதுண்டு. அந் நிலையில் பலர் செயலற்றுச் சோர்ந்தனர். அவர்களை ஊக்கப்படுத்தி வழிகாட்டுதல் இல்லாமல், இத்தடை **முன்வினை - பின்வினை - தெய்வத்தடை** - இன்னவற்றால் நேர்ந்தது எனத் தந்நலத்தால் இட்டுக்கட்டிக் கூறினர். இத்தகு உழைப்புக் குறையரைக் கண்ட திருவள்ளுவர் அவர்க்கு வேண்டும் நம்பிக்கை ஊக்கம் ஆகியவற்றை ஊட்டக் கருதினார். அதனை உலகறியவும் உரைத்தார். கொள்வார் கொண்டனர்; தள்ளிவிட்டுத் தாழ்வார் வழக்கம் போல் தள்ளினர். அதனால் இன்று வரை அக்குறை உள்ளமை மட்டுமில்லை ஓங்கி வளர்ந்தும் வருகின்றது. அது

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" (619)

என்பது. தெய்வத்தடை- வினைத்தடை-எனச்சோராதே. துணிந்து செயலாற்று. உன் முயற்சிக்குக் கட்டாயம் உரிய பயன் உண்டு. **வேலைக்குப் போனவன் கூலியுடன் வீட்டுக்கு வருவது போல, நீயும் உரிய உழைப்புப் பயனைப் பெறத்தவறமாட்டாய்** என்றார்.

இதற்கும் மேலேயும் கையைப் பிடித்து மேலே தூக்கி ஊக்கம் தர விரும்பினாராய்,

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்" (1023)

என்றார்.

"உன் குடும்பத்தை உயர்த்தும் முயற்சியில் துணிந்து ஈடுபடு; அதற்குத் தெய்வம் தடையாக இருக்கவே இராது. தெய்வம் சோம்புதல் விடுத்துத் **தன் உடையை வரிந்து கட்டிக் கொண்டு உனக்கு உதவு தற்காக முன்னே ஓடிவந்து சேரும்**" என்றார். செயலாற்றாது மழுங்கிச் சோர்ந்து கிடப்பதையே தெய்வம் விரும்பாது; விரைந்து செயலாற்றுதலே தெய்வம் விரும்பித் துணை செய்வது என்று வள்ளுவர் தெளிவாக்கியும் **தெய்வக் குறை** என்பார் ஓயவில்லை; அதனை நம்பிச் சாய்வாரும் ஒழியவில்லை. வள்ளுவர் தாம் என்ன செய்வார்? **காது கொடுத்துக்**

கேட்டுத் துணிந்து கடமை புரிவார்க்குத் தானே பயன்படும்? ஏட்டில் இருப்பதை உயிர்க் கூட்டில் கொண்டு வாழ வேண்டுமே!

இக்குறள்களுக்கு மேலேயும் சென்று ஒன்று உரைத்தார். வானவர் உலகம் - தேவர் உலகம் - புத்தேள் உலகம் - என்றெல்லாம் சொல்வார் சொல்கின்றனர். இவ் வுலகில் வாழும் வகையில் வாழ்ந்தால் அவர்களே தெய்வநிலை அடையலாம்! அம்மட்டோ , நிலத்தின் எல்லையளவில் புகழாளனாக ஒருவன் இருப்பானே யானால், அவனை வானவர் உலகம் பாராட்டுமே அல்லாமல் வானவரைப் பாராட்டாது என்றும் கூறினார். இவற்றை இல்வாழ்வினரும் இயல்பாக எய்தலாம் என்பதை விளக்கவே, இல்வாழ்வின் நிறைவில்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (50)

என்றும் புகழ் அதிகாரத்தில்,

"நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு" (234)

என்றும் கூறினார்.

✦✦✦

8. புத்தேள் உலகம்

புத்தேள் உலகம், புத்தேளிர் பற்றித் திருவள்ளுவர் ஆறு குறள்களில் குறிப்பிடுகிறார் (58, 213, 234, 290, 966, 1323).

புத்தேளிர் உலகம் என்பது விண்ணவர் உலகம் என்றும் புத்தேளிர் என்பார் தேவர் என்றும் உரை கூறினர். இச்சொல்லாட்சிகள் பிற இலக்கியங்களிலும் உள (மதுரை : 698; புறம்: 22; குறுந்: 101; கலி: 82). புறநானூற்றுப் பழைய உரையாசிரியர் புத்தேளுலகம் என்பதற்குத் **'தேவருலகம்'** என்று உரை எழுதினார். மதுரைக் காஞ்சியில் அச் சொல்லுக்கு அவ்வுரையே கூறினார் நச்சினார்க்கினியர். அவர் கலித்தொகையில் வரும் புத்தேளில் என்பதற்குப் **'புதியவள் இல்லில்'** என்று உரை வரைந்தார். இதனால், புத்தேள் என்பதற்குப் **புதிதாக வந்தவர்** என்னும் பொருள் வாய்த்தல் தெளிவு பெறுகின்றது.

தமிழ்ச் சொல்லொடு முதற்கண் கலந்த சொல் வடசொல் ஆகும். தமிழ்ச் சொல்லொடு வடசொல் வரும் போது வட எழுத்தை நீக்கிவிட்டுத் தமிழியல்புக்குத் தக்க முறையில் தமிழ் எழுத்தால் அமைக்க வேண்டும்

என்று விதிவகுத்தார் தொல்காப்பியர். ஆதலால் ஆரியர் என்னும் வடநாட்டவர் தமிழகம் வருதலும் அவர் சொல் தமிழில் புகுதலும் புலப்படும்.

வடநாடு வந்த ஆரியர், தாம் முன்பு வாழ்ந்த நாடு எல்லாப் பேறுகளும் உடையநாடு என்றும், இன்ப உலகம் என்றும், மண்ணுலகில் அதற்கு இணை யில்லை என்றும் கூறினர். அதனை, நன்கு பரப்பினர். **புதிதாக வந்த அவர் தம்மைத் தெய்வப் பிறப்பினர்** (பூசுரர்) எனவும், **தம்மொழி 'தெய்வ மொழி'** எனவும் தொடர்ந்து பரப்பினர். புதியவர்களாகிய அவர்கள் சொல்லை நம்பியவர்கள், அவர்களைப் **'புத்தேளிர்'** என்றும், அவர்கள் கூறிய நாட்டைப் **'புத்தேளிர் உலகு'** என்றும் ஏற்றனர். இந்நிலையில், **தம்மவர்க்குத் தக்கதை உரைத்து நெறிகாட்ட விரும்பியமையால் திருள்ளுவர்** (ஆறு இடங்களில்), தாம் வாழும் மண்ணிலேயே அவ்வுலக இன்பத்தினும் உயர்ந்த இன்பத்தைப் பெறமுடியும் என்று வலியுறுத்தி னார்; **தமிழர் நெறித் தகவு** உரைத்தார்.

புத்தேளிர் உலக இன்பத்தைப் பெற முடியாது என்பது இல்லை. இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவர் பெறக் கூடியதே.

தகுதிவாய்ந்த இல்லாள் ஒருத்தி, தன்னைப் போன்ற தகுதி வாய்ந்த கணவனைப் பெற்று இல்லறம் நடாத்துவாளே எனின் புத்தேளிர் உலகச் சிறப்பினும் பெருஞ்சிறப்பைப் பெறமுடியும் (58).

புத்தேள் உலகம் என்பதிலும் சரி, வேறு இம்மண் ணுலகில் எப்பகுதி ஆயினும் சரி, ஆங்குக் கிட்டாத இன்பம் ஒன்றைத், தாம் வாழும் இடத்திலேயே பெறலாம். அது 'ஒப்புரவு' எனப்படும் வாழ்வியலால் அமைவதாம் என்கிறார் வள்ளுவர் (213).

ஊருணி நீர்போலவும் பழமரம் போலவும் மருந்து மரம் போலவும் பருவமழை போலவும் பொதுவாக எவர் எவர்க்கும் உதவியாக வாழும் வாழ்வே ஒப்புரவு வாழ்வாகும். ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எல்லாரும் ஒருநிலையராக நலமுற வாழ்தல் வேண்டு மென வள்ளலார் குறிப்பிடுவது இவ்வொப்புரவு வாழ்வேயாம்.

புத்தேள் உலகத்தவரும் தம்மைவிட உலகெலாம் பரவிய புகழாளர்களையே விரும்புவர் என்று வள்ளுவர் குறிப்பிடுவதை முன்னர்க் கண்டோம்.

உயிர் வாழ்தலை விரும்பி உயிரினும் மேலாம் மானம் கருதாமல் தம்மை இகழ்ந்து பழிப்பவர் பின் சென்று வாழ்வது புகழும் ஆகாது; புத்தேள் நாட்டை அடைதற்கும் இயலாது என்றார். (966)

நீரும் நிலமும் கூடிப் பிரிவரியவாறு ஒன்றாகியது போன்ற தலைவன் தலைவியர் ஊடல் இன்பம் போன்ற இன்பத்தைத் தருமோ புத்தேள் நாடு என வினா எழுப்பித் 'தராது' என்பதை உறுதிப்படுத்துவார்.

"பெற்றதாயும் பிறந்த பொன் நாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே"

என்னும் பிறந்தமண் **பற்றுமையை அமைவாக வெளிப்படுத்திய ஆர்வ அண்ணல் வள்ளுவர்**

என்பது,

"புலத்தலின் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து" (1323)

என்பதால் புலப்படும்.

களவினை மேற்கொள்பவர்க்கு அவர்கள் உயிரும் உடலொடு ஒட்டி இராது ஒழிந்துபோகும்; கள வினைக் கருதாதவர்க்கோ புத்தேள் நாடு கிடைத்தாலும் ஒழியாது என்றார்.(290)

✦✦✦

9. மேல் உலகம்

புத்தேள் நாடு போலவே மேலுலகக் கருத்தும் பரவியது. இரந்து வாழ்தலும் இனிதே என்றும் பரப்பப்பட்டது. இதனைக் கண்டித்து அறவுரை வழங்கத் தவறினார் அல்லர் வள்ளுவர்.

"நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று" (222)

என்றார்.

எக் காரணம் சொன்னாலும், இரந்து வாழ்தல் ஆகாது; அது நன்னெறி என்பாராயினும் அதனை மேற்கொள்ளல் ஆகாது; அவ்வாறே இரப்பார்க்கு மேலுலக இன்பம் வாய்க்கும் என ஈதலும் ஆகாது. அவ்வுலகப்பேறு இல்லை என்றாலும் இல்லாது தவிப்பார்க்கு ஈதலே நல்லதாம் என்று விளக்கி யுரைத்தார்.

மேலுலகம் கருதிய கொடை மேன்மையுடைய தன்று என்பது வள்ளுவமாம்.

10. இரத்தல்

இரந்து வாழ்தலும் பேரறம் எனச் சமயவழியில் கூறுதலைக் கேட்டமையாலும், ஈதலால் மேலுலகம் கிட்டும் என்று புகழ்ந்து கூறியதைக் கேட்டமையாலும் மறுத்துக் கூறினார் வள்ளுவர்.

அன்றியும் இல்லாமை என்னும் காரணமன்றி வேறு காரணம் கூறி எவர் இரந்தாலும் அதனை ஏற்காதவராய்,

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை"

என்றார். அவரை அன்றிப் பிறர்க்கு வழங்குவதைத் தவிர்க்கும் வகையால், "மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீர துடைத்து" என்றார். குறி எதிர்ப்பாவது கொடுத்த அளவைக் குறையாமல் பெற்றுக் கொள்ளும் கைம் மாற்று; அதாவது மொய் எழுதுவது போன்றது என்றார்.

"ஒரு நாட்டில் வாழுகின்ற மக்கள் இரந்துதான் வாழ்ந்தாக வேண்டும் என்னும் நிலைமை இருத்தல் ஆகாது. அதிலும் குறிப்பாக கை செய்து (உழைத்து) வாழும் வாழ்வினர் இரந்து வாழ்பவராக இருத்தல் கூடவே கூடாது" என்னும் உறுதிகொண்டவள்ளுவர்,

"அந்நிலை ஒரு நாட்டில் இருந்தால் அந்நாட்டு
அரசு அழிந்து ஒழிவதாக"

என்று சாவித்தார். அது,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து, கெடுக உலகியற்றி யான்" என்பது (1062). உலகியற்றியான் என்பது அரசு விதிகளை உருவாக்கி ஆட்சி புரிபவன். இயற்றல் அரசின் நாற்கடன்களில் ஒன்று என்னும் வள்ளுவம் காண்க (385).

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்ப வேண்டும் என்னும் வள்ளுவர் இரத்தல் உயர்வென ஏற்றார் இல்லை. அந்நிலையில் இருப்பவர் உயிர்வாழ்தல் அளவுக்கு ஏற்றாரே அன்றி அது உயர்வு வாழ்வு என ஏற்றார் இல்லை. பசித்துயரை ஆற்றுவதற்கு மாறாக, அத்துயர் இல்லாமல் அவரவரே பசித்துயரை மாற்றிக் கொள்ளும் வழிகளை உண்டாக்க வேண்டும் என்றே விரும்பினார். அதனை,

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்" (225)

என்றார்.

பசியை ஆற்றுவாரினும் பசியை மாற்றுவாரையே ஆற்றல் மிக்கோராகக் குறித்தமை காண்க. பொருள் தேடிவாழும் வழியைக் காட்டிவிட்டால் அவர் இரந்து திரியார்; அவர்க்கு ஈவார் வேண்டும் தேவையும் இல்லை. நலமிக்க நாடு என்பதற்கு இலக்கணம் கூறும் போது, "நாடென்ப நாடா வளத்தன" என்றதும், நல மல்லா நாடு என்பது, "நாடல்ல நாட வளந்தரு நாடு" என்றதும் எண்ணின் அவ்விலக்கணம் வீட்டுக்கும் - தனித்தனி ஆளுக்கும் - தேவையானதே என்பது உறுதியாகும். ஆதலால் தனித் தனித் தன்னிறைவுக் குடிமையும், நாடும் வேண்டும் என்பதே வள்ளுவர் உள்ளமாதல் அறியலாம்.

"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்ளெனக் கொடுத்தல் சிறந்தன்று; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் சிறந்தன்று"

என்னும் புறநானூறும் (204)

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்" (363)

என்னும் வள்ளுவமும் எண்ணத் தக்கனவாம்.

உயிர்களை ஓம்புதலின் அடையாளமாக ஆனை ஓம்புதலைக் குறித்தனர். ஆனாகிய விலங்கு ஆன்மா! (பசு என்பது உயிர் என்பதையும் அறிக) ஆன்மா என்பது உயிர் என்னும் பொருளதும் ஆம். பசு ஓம்பு தலை எல்லா ஓம்புதல்களிலும் தலைப்பட்டதாகப் போர்நெறி வகுத்திருந்தனர். பசுக்களைக் கவர்ந்து பாதுகாப்பாக வைத்த பின்னரே போர் தொடுத்தனர். இதனை "ஆதந்து ஓம்பல்" என்றார் தொல்காப்பியர்.

போர்க்களத்தில், ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும் பெண்களும் பிணியுடையவர்களும் புதல்வரைப் பெறாதவர்களும் இருப்பின் அவர்களை வெளியேற்றிவிட்டுப் போரிட்டனர் என்பது புறநானூற்றுச் செய்தி. ஆதலால், ஆக்களைப் பேணற் கடனின் பழமை புலப்படும். வள்ளுவர்க்கும் அஃது உடன்பாடு என்பது ஆவைப் பேணுதல் குறித்த அவர் சொல்லால் புலப்படும். அஃது,

"ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்(கு)
இரவின் இளிவந்த தில்" (1066)

என்பதால் விளங்கும்.

ஆவினைப் பேணுதல் கடமை எனக் கொள்ளினும், அதனை அவரே செய்ய வேண்டுமேயன்றிப் பிறர் உதவியை நாடிச் செய்தல் ஆகாது என்பாராய், "ஆவிற்கு நீர் என்று இரந்து கேட்பதும் நாவிற்கு இழிவு" என்று கூறினார். இதனாலும், இரத்தலை வள்ளுவர் உடன்படாமை விளங்கும். இதனினும், மேலாக "இரப்பவர்களை எல்லாம் நான் இரந்து கேட்கின்றேன்; நீங்கள் இரவாதீர்" என்று உரைப்பது அவர் உள்ளத்தை வெளிப்பட விளக்கும் (1067).

இந்நாட்டவர்க்கு இல்லாததாய்ப் பிறநாட்டவர் வழியே இரத்தல் வந்தமையை இரப்பார்க்கு வழங்கும் வழக்குச் சொல் ஒன்று காட்டி நிற்கின்றது. அது பரதேசி என்பது. '**பரதேசி**' எனின் அயல் நாட்டான் என்பது அல்லவோ! அதற்கு எதிர்ச்சொல் '**சுதேசி**' என்பதையும் அறிக.

✦✦✦

11. பழிச்செயல்

காக்கத் தக்கார் எனப்படுபவரை எப்பழிச் செயல் செய்தாயினும் காத்தல் கடமை என அயல்நெறியாளர் அடித்துக் கூறினர். அந்நிலையில் அதனைப் பற்றிய கருத்தை உரைக்க வள்ளுவர்க்குக் **கட்டாயம் ஏற்பட்டது**.

பேணத் தக்கவர்கள் என இயல்புடைய மூவரைக் குறித்தவர் வள்ளுவர், பேண என்றால் ஒருவேளை, ஒருநாள் - இல்லை. 'வாழ்நாளெல்லாம்' என்பதற்கு 'நின்ற துணை' என்றவர் அவர் (41) அம்மூவர் தாய், தந்தை, இல்லாள் என்பார். இம் மூவருள்ளும் முற்பட்ட தாய்பசித்துக் கிடக்கின்ற நிலை கூறலால் மற்றையோர் பசித்துக் கிடத்தல் வெளிப்படை. தாய் பசித்துக் கிடக்கக் கண்ணேரில் காணினும் அவர் பசியை ஆற்றுவதற்காகச் சான்றோர் பழிக்கும் செயலைச் செய்தலும் ஆகாது; ஏனெனில் சான்றோர் புகழ்ச் சொல் கேட்கவே ஈன்றெடுத்த அத்தாய், அச்சான்றோர் பழிக்கும் செயலைத் தனக்காகத் தன் மக்கள் செய்வதைக் கட்டாயம் விரும்பமாட்டாள்; அச் செயலை மக்கள் செய்தல் ஆகாது என்று தடுத்தாட்கொண்டார் தெய்வப்புலவர்.

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" (656)

என்பது அது.

தம்மைப் பெற்ற தாயும் தம் துணையும் தம் மக்களும் தீராப் பசிக்கு ஆட்பட்டுக் கிடந்த நிலையிலும், இளவெளிமான் தகுதியின்றித் தந்த கொடையை ஏற்றுக் கொள்ளாமல், வள்ளல் குமணன் தந்த பரிசுடன் வந்து, அவன் தந்த யானையை வெளிமான் காவல் மரத்தில் கட்டி,'என் பரிசு கொள்' என்று வீறு உரைத்ததும், பெற்ற பரிசினை இல்லாளிடம் தந்து, "நீவிரும்புவார்க்கும், நின்னை விரும்புவார்க்கும் சுற்றத்தார்க்கும். நம் பசிக்கு முன்னர் உதவியவர்க்கும் இவர்க்கு என்றில்லாமல் என்னிடம் கேட்க வேண்டும் என்பதும் இல்லாமல் எல்லோர்க்கும் கொடு; இது குமணன் கொடுத்த கொடை" என்ற **பெருஞ்சித்திரனார்** வாய்மொழியை நோக்கின் வள்ளுவ வாய்மொழிச் சான்றாதல் புலப்படும் (புறம். 158-163).

✦✦✦

12. பொறி இன்மை

மாந்தர்க்கு உண்டாகிய உடற்குறை முன்னை வினையால் அமைந்தது என்றனர். வறுமையையும் வினைப்பயன் என்றே கூறினர்.

இதன் உண்மை கூறப் பொய்யா மொழியார் தலைப்பட்டார்.

உறையூரில் வாழ்ந்த முதுகண்ணன் சாத்தனார் என்பவர்

"சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்.
மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு
எண்பேர் எச்சம் என்றிவை எல்லாம்
பேதைமை அல்லது ஊதியம் இல்லென
முன்னும் அறிந்தோர் கூறினர்"

என்றார் (புறம். 28) பிறவிக் குறைகள் எட்டெனக் கூறி இப் பிறவியால் எப்பயனும் இல்லை என்று கூறினார். இக் கருத்து முன்னரே அறிவோரால் கூறப்பட்டது என்றும் கூறினார்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (45)

என அறிவிலக்கணம் உரைத்த ஆசிரியர் வள்ளுவர்க்கு இக் கருத்து உடன் பாடாய் இல்லை. முன்னவர் உரை என்ன? பின்னவர் உரை என்ன? வந்தவர் உரை என்ன? இருந்தவர் உரை என்ன? தக்கதை ஏற்றுக் கொள்ளல், தகாததைப் புறத்தே தள்ளல் என்னும் முறையே முறை எனக் கொண்டார் வள்ளுவர். அதனால்,

"பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி" **(618)**

என்றார்.

உறுப்புக் குறை ஒரு குறை அன்று; ஆனால், அறிவுடைய பிறவி தான் செய்யவேண்டும் செயலைச் செய்யாது செயலற்றுக் கிடத்தலே பழி என்றார்.

முன்னைப் பிறவியில் செய்த வினைப்பயன் என்று உறுப்புக் குறையைப் பழிப்பாரை நோக்கி, எல்லா உறுப்பும் அமைந்தும் அறிவறிந்தும் ஆக்கச் செயலில், ஈடுபடாமல் சோம்பிக் கிடக்கும் இப் பிறவிக் குறையை எண்ணிப் பாராமல் பழம் பிறவியைப் பழிப்பதால் என்ன பயன்? என வினாவினார்.

"உறுப்புக் குறையர் என்பாருள், உறுப்பு நலமெல்லாம் அமைந்தாரினும் செயல்வீறு உடையவரும் இருத்தலைக் கண்ணில் கண்டும் எப்படித்தான் அவரைப் பழிப்பிறவி எனக்கூற வாய் வந்ததோ?" என **வள்ளுவர் உள்ளம் பரிந்து பரிந்து அழுது எழுதிய எழுத்தே "பொறியின்மை யார்க்கும் பழியன்று"** என்பதாம்.

✦✦✦

13. வறுமை

உறுப்புக் குறைக்கு மட்டுமா முற்பிறவிப் பயன் எனப் பழித்தனர்? இல்லை ! செல்வம், வறுமை ஆகியவையும் முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைப் பயன்களே என்றும் கண்ணை மூடிக் கொண்டு உரைத்தனர். அவர்க்கு **அறிவுறுத்தி அறம் உரைக்க எண்ணிய வள்ளுவர்,**

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை" **(37)**

என்றார்.

சிவிகையைத் தாங்குவானொடு மேலிருப்பான் நிலை அறநெறி என்று கூறவேண்டா; அது பொருளியலால் ஏற்பட்டது என்றார்.

செல்வம் இருப்பின் மேலே இருக்கவும், செல்வத் தேவையால் சுமக்கவும் ஆகும். இது முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைகளின் பயன் எனக் கூற வேண்டா என்றார்.

பிறவிக் குறை, நோய், வறுமை, நேர்ச்சி, சாவு இன்னவற்றுக் கெல்லாம் பழவினை என்பார் இருக்கக் கண்டதால் அவற்றை விலக்கி விளக்கும் வகையால் சிவிகை சுமப்பாரையும் அமர்ந்து இருப்பாரையும் எடுத்துக் காட்டாக்கி உரைத்தார்.

"நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்"

என்னும் புறப்பாடல் பகுதியும் (192), "நீரின் வழியே போம் மிதவை போல அரிய உயிர் ஊழின் வழியேபடும் என்பது நன்மைக் கூறுபாடு அறிவோர் கூறிய நூலாலே தெளிந்தனம்" என்னும் பழைய உரைப்பகுதியும் காண்க. இவ்வாறு உலாவிய கொள்கை மக்கள் **ஆள்வினையைக் குறைப்பதாகலின் மெய்ம்மையை விளங்கச் செய்தார்** வள்ளுவர் என்க.

✦✦✦

14. பெண்மை

சமயவாணர்கள் ஆணை மதித்தது போலப் பெண்ணை மதியாமை மட்டுமன்றித் தாழ்த்தியும் கூறினர்; திருக்குறள் உரைகண்ட உரையாசிரியர் பரிமேலழகர் "பெண்ணியல்பால் தானாக அறியாமை யின் கேட்டதாய்" என்றார் என்பது, சமயவாணர் கருத்தை உட்கொண்டதாம்.

அருகம், பௌத்தம்,வைதிகம் என்பவை வள்ளுவர் காலத்திற்கு முன்னரே தோன்றித் தமிழ்மண்ணில் உலாவந்தவை என்பதை எண்ணல் வேண்டும். தமிழ்ப் பெண்டிர் சங்க காலத்தில் புலமை மிக்காராகவும் பாவலராகவும் இலக்கணம் படைத்தாராகவும், தூது செல்வாராகவும் இருந்தமையை நோக்கினால் தமிழகம் கொண்டிருந்த பெண்ணின் மதிப்பீடு புலப்படும்.

தாய் மொழி என்றும் தாய்நாடு என்றும் வழங்கியதுடன் சொத்துரிமையைத் 'தாயம்' என்று வழங்கியமையையும் எண்ணல் மேலும் விளக்கமாம்.

இதனாலேயே வள்ளுவர், "பெண்ணிற் பெருந் தக்க யாவுள?" என அறத்துப் பாலிலும், "பெண்ணிற் பெருந்தக்கது இல்" எனப்

பொருட்பாலிலும், "பெண்ணே பெருமையுடைத்து" என இன்பத்துப் பாலிலும் கூறினார். பெண்ணின் நடை அறிந்து ஒருப்பட்டு ஆணும் நடப்பின் பெருமையுண்டு என்றும், பெண்ணின் சிறப்பால்தான், ஆண் பகைவர் முன்னரும் நிமிர்ந்து நடக்க முடியும் என்றும் கூறினார். இவற்றால் வள்ளுவரின் பெண்மை மதிப்பீடு தெளிவாக விளங்கும்.

ஒருத்தியைப் பலர் மணந்தமை பாரதக் கதை. ஒருவன் பலரை மணந்தமை இராமாயணக் கதை. சிந்தாமணித் தலைவன் சீவகன் பலரை மணந்தவன். தமிழகத்திலும் ஒருவன் பலரை மணக்கும் மணமுறையும் இருந்தது. அவற்றைத் திருவள்ளுவர் ஏற்றார் அல்லர். ஆடவர் பலர் போரில் இறந்து பட்டு மகளிர் பெருகி நின்ற நிலை இருந்தும் பலமண முறையை வள்ளுவர் குறித்தார் அல்லர். ஒருவனுக்கு ஒருத்தி என்னும் முறையே முறை எனக் கொண்டார்.

அன்றியும் தமிழகத்தில் காதற் பரத்தை, காமக் கிழத்தி, இற் பரத்தை, சேரிப்பரத்தை எனப் பலர் இருந்தமையும், பரத்தையில் பிரிதல் என ஒரு பிரிவு வகையை ஏற்றிருந்தும் திருவள்ளுவர் உடன்பட்டார் இல்லை. இத்தகைய பெயரீடுகளையும் ஏற்றார் அல்லர். பரத்தையில் பிரிவு என்பதையே அவர் ஏற்கவில்லை. கட்டொழுங்கு இல்லாத ஆணைப் 'பரத்த' என்றதை அன்றி மகளிரைக் குறிக்க அவர் பயன்படுத்த வில்லை .

மேலும், பெண்வழிச் சேறல், வரைவின் மகளிர் என்று விலக்கியதும் கண்டித்ததும் நன்மகளிர் (ஒருமை மகளிர்) பற்றியவை அல்ல. ஆடவருள் பிறனில் விழைவாரைக் கண்டித்தது போல வரைவின் மகளிரைக் கண்டித்தது சமுதாய நலம் நாடுவார் கொள்ள வேண்டிய கடமையே ஆம். பெண்வழிச் சேறலின் தீமை, அவர் மனையார் அல்லர் என்பதும் மனைவி இருக்கவும் குடிமைக்குக் கேடாக அமைத்துக்கொள்ளப்பட்டவர் ஆவர் என்பதும் அறிக.

கள், சூது என்பவற்றுடன் இருமனப் பெண்டிர் எனப்பட்டவரையும் இணைத்துக் கண்டித்து விலக்கியமையை அறிக. கயமை ஆடவர்க்கே உரியதா? மகளிருள் சிலரும் கயமைக்கு உரிமைப்பட்டதை என்றும் எங்கும் காணலாமே! ஆடவரைக் கண்டிக்க வேண்டும் வகையில் கண்டித்தது போலவே மகளிரையும் கண்டிக்க வேண்டும் இடத்துக் கண்டித்தல் முறையாகுமே அன்றி முறைகேடு ஆகாது. ஒருசார்பும் ஆகாது.

ஆதலால், வள்ளுவம் மகளிர்க்குக் கற்புப் போலவே, ஆடவர்க்கு நிறை வேண்டும் என்றமை அறிந்து பாராட்டத் தக்கதாம். அறத்தின் முன்னர் ஆடவர் மகளிர் என்னும் வேறுபாடு இல்லாமை போல அறநூல் முறைக்கும் வேறுபாடு இல்லையாம்.

“நெறிப்படி செல்லின் நெருஞ்சிமுள் குத்தாது”

என்பதற்குப் பால் வேறுபாடு உண்டா?

✦✦✦

15. ஊண்

பொருந்திய உணவைப் பொருந்திய அளவில் உண்ணலும் அற்றது அறிந்து போற்றி உண்ணலும் மேற்கொண்டால் மருந்தென வேண்டுவதில்லை என்பதும், மாறுபாடு இல்லாத உணவை அளவறிந்து உண்ணின் ஊறுபாடு இல்லை என்பதும் வள்ளுவம். உடல் நலம் கொண்டே உளநலம் உயிர்நலம் விளைதலால் அற நூல் ஆசிரியர் உடலோம்பல் பற்றியும் கூறவேண்டிய கடப்பாடு தேவைப் பட்டதாம்.

புல்லுதல் – பொருந்துதல்; புலால் – பொருந்தாதது ஆதல்; ஆதலால் புல்லுணவு உண்ணலும், புலால் ஒதுக்கலும் சொல்வழியாகவே காட்டப்பட்ட அறிவியல் நலவழியாம். இன்ன இன்ன நாள்களில் புலால் உண்ணக் கூடாது என்று சமயங்கள் கூறுவதும், இன்ன காரணத்தால் புலால் உண்ணக் கூடாது என மருத்துவர்கள் கூறுவதும் எண்ணின், வழிவழியாகப் புலால் உண்டு வந்தவரும் புலால் மறுத்தல் வேண்டும் என்பது தெளிவாகும்.

சங்கத்தார் காலத்தில், புகழ்வாய்ந்த புலமைச் செல்வர்களும் புலால் உண்டமை பெருக்கமாக இருந்தது. புலால் தின்று தின்று உழுத கலப்பை தேய்ந்தது போலப் பல் தேய்ந்தது என்று கூறிய புலவரும், ஊன் சோறு உண்டு வியர்த்தல் அல்லது வேறு வியர்த்தல் இல்லை என்று கூறிய புலவரும் பெருக மதிக்கப் பட்ட புலவர்களே ஆவர்.

மதிக்கத் தக்கார் ஏற்றுக் கொண்டமையால் ஆகாத ஒன்று ஆகியதாகிவிடாதே. அதனால் வாய் மொழி வள்ளுவர் புலால் மறுத்தலை வற்புறுத்தினார். கொலைக் கருவிகளை எடுத்தவர் மனம் நல்லதை நினையாது; அதேபோல் உடல் சுவை உண்டார் மனமும் நல்லதை நினையாது (253) என்று நல்வழிக்குத் திருப்பினார். உயிர்க் கொலை செய்யானை உயிர்கள் எல்லாம் தொழும் என்றும் (260) புலால்

உண்ணாமை கொண்ட உடலே உயிர் நிற்கும் உடல் என்றும் (255) கூறினார். சங்க காலத் தமிழர் மேற்கொண்டிருந்த நெறியைக் கண்டித்து நெறிப்படுத்தியது இஃதாம்.

கள்

கள் என்பது மயக்கும் குடிவகைகளுக்கும் பொடி வகைகளுக்கும் ஊசி ஏற்றலுக்கும் பொதுவானதாம்.

மயக்கும் பொருளை, மதிக்கும் மாந்தன் விரும்ப மாட்டான் என்பது வள்ளுவம் (922) காசு கொடுத்தா கயமையை வாங்குவது என்று இடித்துரைக்கும் (925) அது. பெற்றவளும் இத்தகையனை மதியாள் என்றும் ஊர் நகைக்க இடமாக்கும் என்றும் குறிப்பார் (923,927) வள்ளுவர்.

மயங்கும் பொருளில் மயங்கிக் கிடப்பவனை அந் நேரத்தில் அறிவுரை கூறல் பயன்படாது. அவன் மயங்காது இருக்கும் போது, மயங்கிக் கிடப்பவனை அவனுக்குக் காட்டி, "நீயும் மயங்கிய போதில் இப்படித் தானே கிடப்பாய்" என்று உணர்த்தின் ஒரு வேளை உணரக்கூடும் என நுட்பமாய் உரைப்பார் வள்ளுவர் (930).

அருவிநீர் கல்லை மலையில் இருந்து உருட்டிக் கொண்டு வருவதுபோல் மதுநீரும் கல்லை உருட்டிக் கொண்டு போகும் என்றும், மது உலையில் மறிக் கடாயை வெட்டி ஆக்கப்பட்ட ஊன்சோறு என்றும் புறப்பாடல்கள் சொல்லும் செய்தியை எண்ணின், உலக நலம் எண்ணுவோர் கண்டிக்க வேண்டுவதைக் கண்டித்தே தீருவர் என்றும், தம் நாட்டு வழக்கம் என்பதற்காகவும், பிறநாட்டார் வழக்கம் என்பதற்காக வும் தகாதவற்றை ஏற்றுக் கொள்ளார் என்றும் அறிந்து கொள்ளலாம்.

✦✦✦

16. சூது

மதுவைப் போலவே விலக்கப்பட்ட ஒன்று 'சூது' ஆகும். இந் நாளையில் 'சூது' பெருக்கமாகிவிட்டது. குதிரைப்பந்தயமும் சூதே. பரிசுச் சீட்டும் சூதே. பந்தய ஆட்டங்களும் சூதே. ஆதலால், வள்ளுவர் வாழ்ந்த நாளிலும் இந்நாளில் மிகமிகக் கண்டிக்க வேண்டியது சூதாகும்.

சூது உலகளாவிய பார்வையது. அறவோன் எனப்பட்ட தருமனும் நளனும் சூதால் நாடு முதல் இழந்தவர்கள். முன்னவன் உடன்

பிறந்தாரையும் மனைவியையும் சூதில் பணயமாக்கியவன். பின்னவன் சூதால் நாடு இழந்து மனைவி மக்களைப் பிரிந்தவன். வட்டு ஆடலும் சூது ஆடலும் சங்க நாளில் நிகழவே செய்தன. புலவர்களும் விலக்கின்றி ஆடிய சான்றுண்டு. சாதுவன் என்பான், "வட்டினும் சூதினும் வான் பொருள் வழங்கிக் கெட்டான்" என மணிமேகலை கூறும். ஆதலால் அத் தீமையை ஒழிக்க வள்ளுவர் முழக்கமிட்டார்.

வெற்றியே கிட்டும் எனினும் சூது வேண்டா. என்றும், தூண்டிலில் கட்டிய புழுவைக் கருதி மீன் அழிந்து போவது போல அழிப்பது சூது என்றும், சூதன் என்னும் ஒன்றைத் தந்து இருக்கும் நூறு பொருளை அழிப்பது என்றும் கூறிச் சூதினை வள்ளுவர் விலக்கினார். ஆதலால், வள்ளுவத்தின்படி புலால் உண்ணல், கள் உண்ணல், சூது ஆடல், பரத்தைமை தேடல் என்பவை விலக்கப்பட்டன என்றும் தமிழியம் அதுவே என்றும் உணரலாம்.

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு" (920)

என்பது குறள். இவ்வொரு குறள் மூன்று அதிகாரத் தலைப்புகளாயின என்க.

✦✦✦

17. அறம்

வாழ்வியலையே அறமாகக் கொண்டது தமிழியம். தொழிலையும் அறமாகக் கொண்டது அது. முன்னது இல்லறம் என்னும் பெயரீட்டாலும், பின்னது வேளாண்மை (உதவி) என்பதாலும் விளங்கும். 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்பது அரசியலும் அறமே என்பதை உறுதி செய்யும் (புறம். 55).

"அறமெனப் படுவது யாது எனின், மறவாது இதுகேள்;
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதும் இல்லை"

என்பது மணிமேகலை உரையாயிற்று.

ஆனால் தமிழிய அறத் தகவை அடிமூலம் கொண்டு உரைக்கிறது, பொய்யாமொழி.

அறம் 32 என எண்ணியுரைத்தனர் **அயல்நெறியர்**. வள்ளுவரோ, "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" என்றார்.

மனத்தில் மாசொடு- தன்னலத்தொடு - எதனைச் செய்யினும்அறமாகாது என்பது அது.

கொள்ளையடித்துக் கோயில் கட்டுவதினும், வழிப்பறி செய்து வந்தோர்க்கு விருந்திடலினும் கள்ள வாணிகம் கலப்படம் கடத்தல் இவற்றால் ஈட்டிப் பள்ளி நடத்துவதினும் இவற்றைச் செய்யாமல் இருப் பதே அறம் என்பது வள்ளுவ விளக்கம்.

மனத்தில் உண்டாம் மாசுகள் இவை என்பதை,

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல்" (34)

என எண்ணினார் அவர்.

முகமலர்தல், இன்சொல் கூறல், இனிது பார்த்தல் இவ்வளவு கூட அறமே என்பார் அவர்.

காற்றில் மாசு, நீரில் மாசு, உணவில் மாசு, செயலில் மாசு, நட்பில் மாசு, குடும்ப வாழ்வில் மாசு என மாசுகள் ஏற்பட என்ன காரணம் எனின், மனத்தின் மாசே காரணம் என்பது புரிய அறம் கூறியது வள்ளுவம்.

வாய்மையை வாய்மையாகக் கடைப்பிடித்தால் அவ்வாய்மையே அறமாம் என்பதும் வள்ளுவம். ஏனெனில் அகத் தூய்மையே வாய்மை என்பதும் மனமாசில்லாமையே அறம் என்பதும் நோக்க அறமே வாய்மையும் வாய்மையே அறமும் ஆதல் தெள்ளிதில் புலப்படும்.

✦✦✦

18. வாய்மை

உள்ளது உள்ளபடி,கண்டது கண்டபடி, கேட்டது கேட்டபடி, நிகழ்ந்தது நிகழ்ந்தபடி - சொல்லுவது வாய்மை எனப் பிறர் இலக்கணம் கூறினர். ஆனால் வள்ளுவர் நெஞ்சம் அதற்கு உடன் பட்டிலது.

உள்ளதை உள்ளபடி கூறுதல் முதலானவை, பிறர்க்குத் தீமையாம் நிலையும் உண்டு. வாய்மையின் பெயரால் பிறர்க்கோ பிற உயிர்க்கோ தீமை உண்டாதல் ஆகாது. ஆகிவிடின், வாய்மை பழிப்புக்கும் உரியது ஆகிவிடும். ஆதலால், வாய்மை என்று சொல்லப்படுவது எது என்றால் எவ்வொன்றாலும் தீமை தராததைச் சொல்வதே ஆகும் என்றார். அது,

"வாய்மை எனப்படுவது யாது எனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" (291)

என்பது.

பொய்யும் கூட சில இடங்களில் நன்மை செய்வது உண்டு. அது பொய்தான். எனினும் அதன் விளைவாம் நன்மையை நோக்க அது வாய்மை எனச் சொல்லும் பேற்றைப் பெற்றுவிடுகின்றது. ஆனால், அது தரும் நன்மை எவ்வகையால் நோக்கினும் எக்குற்றமும் அற்றதும், எத் தீமையும் செய்யாததுமாய் இருக்க வேண்டும் என்றார்.

இவ்விதியும் விதிவிலக்கும் வாழ்வியல் ஆய்வாளராய் அழுந்த நிற்பார்க்கே அறிவரு செய்தியாம். ஏனெனில், அறிவா, இன்சொல்லா, வாய்மையா, நலம் செய்தலா ஆகிய எல்லாமும் பிறர்க்குத் தீமை செய்யாதவையாக இருக்கவேண்டும் என்பது மட்டுமின்றி, நன்மை செய்வதாகவும் - அதுவும் குற்றமற்ற நன்மை செய்வதாகவும் இருக்க வேண்டும் என்பதில் இருந்து கனிந்ததே வள்ளுவ உள்ளமாம் தமிழியமாகும்.

உள்ளம் உரை செயல் ஆகிய மூன்றனிடத்தும் மாறின்றி வாய்மை போற்றுபவன் எந்நிலையில் இருப்பவன் எனினும் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் உறையும் பெரியோன் ஆவன் என்றும்,

மனத்தொடு வாய்மை மொழிபவன், தவம் தானம் செய்வாரினும் உயர்ந்தவன் என்றும் வள்ளுவம் கூறும். வாய்மையின் நிறைவாக,

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்,
வாய்மையின் நல்ல பிற" **(300)**

என்பது வாய்மை மதிப்பீட்டை நன்கு விளக்கும்.

✦✦✦

19. இன்சொல்

பிறர் செவிக்கு இனிமையாக இருக்கும் சொல்லைச் சொல்லுவதை, இன்சொல் எனத் தமிழியம் கொள்வது இல்லை .

நகைச்சுவை வேண்டியது இன்றியமையாதது; நகைச்சுவை அறியார் வாழ்வு பகலினும் இரவு ஆவது என்று பழித்துக் கூறும் (999).

ஆனால், வெற்று நகையையும் வெறுக்கும் நகையையும் வேண்டாதது தமிழியம். பெரியவர்முன், செவிக்கு மட்டும் கேட்கக் கூறும் சொல்லும், சொல்பவரும் கேட்பவரும், சேர்ந்து நகைக்கும் நகையும் ஆகாது என்பதும் தமிழியம் (694).

நகைப்பதற்காக மட்டும் கொள்ளும் நட்பை, 'நகைவகையராகிய நட்பு' என்பார் வள்ளுவர். அவரால் உண்டாகும் கேட்டைக் கோடி கோடிப் பகைவரும் செய்யார் என்பார் வள்ளுவர் (817). -

பயனற்ற சொல்லைச் சொல்பவனே அன்றிக் கேட்பவனும் அதனைப் பாராட்டிக் கூறுபவனும் ஆகியவரைப் பதர் என்பதும் வள்ளுவம் (196).

சொல்லும் சொல்லை இன்சொல்லாச் சொல்ல வேண்டும் என்னும் வள்ளுவர் அதன் இலக்கணத்தை அருமையாகக் கூறுகிறார்.

இரக்கம் உள்ளதாகவும் களங்கம் இல்லாததாகவும் மெய்ப்பொருள் கண்டவர்களால் சொல்லப்படுவதாகவும் அமைந்த சொல்லே இன்சொல் என்பார்.

பிறர் இன் சொல் கூறுங்கால் கேட்கும் நாம் மகிழ்வது, நாம் அறிந்தது தானே. அவ்வாறு அறிந்திருந்தும், நாம் பிறரிடம் வன்சொல் கூறுவது எதற்காகவோ என வள்ளுவர் உள்ளம் பரிந்து இரங்கும்.

இனிய சொற்கள் எத்தனை எத்தனையோ இருக்கவும் அவற்றைச் சொல்லாமல் இனிமை இல்லாத சொற்களைச் சொல்வது கனிவகை நம்மிடம் இருப்பதை விடுத்துக் காயைத் திருடுவது போன்றதாகும் என இடித்துக் கூறுவார்.

வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டிய இடமும் உண்டு என்பதைக் கல்லாமையிலும் (402, 403) குறிப்பறிதலிலும் (1100) கூறுவார்.

பல சொல்லலினும் சில சொல்லல் நல்லது என்றும் (640) கேட்டவர்களைக் கவரவும், கேளாதவர்களை விரும்பச் செய்யவும் சொல்வதே சொல் என்றும் (643) ஆக்கமும் கேடும் சொல்லால் ஏற்படும் என்றும் (642) ஒப்பாக எண்ணி உவப்பாக உரைக்கும் சொல் கேட்பவரை ஏவிய வண்ணம் செய்து முடிக்கச் செய்யும் என்றும் (648) நா நலம் போன்றதொரு நலம் காணல் அரிது என்றும் (641) நா காத்தல் போல நலம் எதுவும் இல்லை என்றும் (127) ஒரே ஒரு தீச்சொல், நற்சொல் பலவற்றையும் கெடுத்து விடும் என்றும் (128) சொல் இலக்கணம் கூறுதல் தமிழியமாகும். கடுஞ்சொல் இல்லாமையைப் பொறுப்புடைய எவரும் போற்ற வேண்டும் என்பதும் எண்ணிச் செயல்படத்தக்கதாம் (386).

✦✦✦

20. அறிவு

அறிவன வெல்லாம் அறிவாகா; கேட்பன எல்லாமும் அறிவாகா; பயில்வன எல்லாமும் அறிவாகா; பட்டறிவு முற்றும் அறிவாகா; சிந்திப்பன எல்லாமும் அறிவாகா; பின்னே, எது அறிவு எனின் பொய்யா மொழி மெய்யுற விளக்கும். தமிழியச் சிறப்பு அறத்தால் மட்டுமன்றி அறிவாலும் புலப்படும்.

"கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என்பது குப்பை கூளங்களையெல்லாம் கூட்டிக் காட்சிக்கு வைத்தமை போன்றதாம். கண்ணைக் கவர்வனவே காட்சியாம்; கவராதவை கண்ணராவி எனப்படுமாம். ஓவியம் வல்லாரை முந்தையர் 'கண்ணுள் வினைஞர்' என வழங்கிய அருமை இதனைப் புலப்படுத்தும்.

போன போக்கில் போக விடாது மனத்தைத் தீயவழியினின்று விலக்கி நல்வழியில் செலுத்துவது எதுவோ அதுவே அறிவு.

பிற உயிர்களின் துயரைத் தன் துயராகக் கருதி அதற்கு உதவச் செய்வது எதுவோ அதுவே அறிவு.

நெருக்கடி - சிக்கல் - கேடு - அழிவு - இழப்பு இவற்றில் இருந்து காக்கவல்ல கருவி எதுவோ அதுவே அறிவு.

எப்பொருளை எவர் வாயினின்று கேட்டாலும் அப்பொருளின் மெய்மையை உணர்த்துவது எதுவோ அதுவே அறிவு.

எப்பொருள் எத்தன்மையை உடையதாகத் தோற்றம் தரினும் அப்பொருளின் மெய்த் தன்மையை அறியச் செய்வது எதுவோ அதுவே அறிவு.

எதிர்காலத்தில என்னென்ன ஏற்படும் என்பதனை நிகழ்கால நிகழ்ச்சிகளால் அறியச் செய்வது எதுவோ அதுவே அறிவு. உலகியல் எப்படி நிகழ்கிறது. உயர்ந்தோர் கடமையானவை எவை என்பவற்றை அறிந்து நடக்க வைப்பது எதுவோ அதுவே அறிவு.

அஞ்சத் தக்கவற்றுக்கு அஞ்சுதல், அஞ்சத்தகாதவற்றுக்கு அஞ்சாமை என்பவற்றை ஆக்குவது எதுவோ அதுவே அறிவு. எல்லா உடைமையும் உடையார் என ஆக்குவது எதுவோ அதுவே அறிவு (அறிவுடைமை).

அறிய அறிய அறியாமை தோன்றச் செய்வது எதுவோ அதுவே அறிவு (110).

இத்தகு விரிவு மிக்கது தமிழிய அறிவாகும்.

அறிவினுள் எல்லாம் தலைப்பட்ட அறிவாவது

தமக்குத் தீமை செய்பவர்க்கும் மறுத்துத் தீமை செய்யாது இருப்பது என்பது (203).

இவற்றைத் திரட்டிக் காணின் புலப்படுவது என்ன? உலக நலம் கருதியதை அன்றித் தீமையாய வற்றை அறிவு எனக் கொள்ளாதது தமிழியம் என்பது தெளிவுற விளங்கும். “கற்க – கசடற கற்க – கற்பவை கற்க – நிற்கக் கற்க” என்ற ஆணை மொழியை (391) எண்ணின் தெளிவாம்.

✦✦✦

21. தற்காப்பு

காவலில் சிறந்த காவல் தற்காவல் என்பது தமிழியம். ஆடவர் தற்காப்பு ‘நிறை’ என்றும், மகளிர் தற்காப்பு ‘கற்பு’ என்றும் துறவியர் தற்காப்பு ‘நோன்மை’ என்றும் வழங்கப்பட்டன. அரசுக்கும் தற்காப்பு வேண்டும் என்றும் அக்காப்பே பகைவரை அழியச் செய்யும் என்பதும் தமிழியமாம் (878) தற்காப்புக்குத் தக்கவனாகத் தன்னை ஆள்வோன் ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதைத் தற்செய்து என்று கூறும் வள்ளுவம் (878).

இனிச் சிறையிட்டுக் காத்தலும் உண்டு என்பது புறநானூற்றால் புலப்படும் (74).

பறவைகளின் சிறகு ‘சிறை’ என்று வழங்கப்படும். குஞ்சுகளைச் சிறகுகளின் இடையே ஒடுக்கிக் காத்தலால் சிறை எனப்பட்டது. நீரைத் தேக்கி வைக்கும் அணையும் சிறை எனப்பட்டது. “நீர்மிகின் சிறையு மில்லை” என்பது புறப்பாடல் (51) அரண் என்பதும் சிறையே (499, 569).

தங்களைத் தாங்களே நெறியிட்டுக் காக்கும் காவலே சிறப்புடைய காவல்; மற்றுச் சிறையிட்டுக் காக்கும் காவலால் என்ன பயனாம் என வள்ளுவர் வினா எழுப்பினார். (57).

“குழந்தையைக் காக்கும் பெற்றோரைப் போல, நாட்டை ஆள்வோர் காக்க வேண்டும்” என அறிவுறுத்திய பாட்டும் புறநானூற்றில் உண்டு (5) ‘காவல் குழவி கொள்பவரின் ஓம்பு மதி’ என்பது அது.

சிறையிட்டு விடுதலால் ஒருவரைக் கட்டுப்படுத்தி விடமுடியாது என்பதும், மனந்திருந்துதற்காம் வாய்ப்புகளையே உருவாக்கித் தருதல் வேண்டும் என்பதும் வள்ளுவ நெஞ்சமாகும்.

திருந்தா மனத்தரால் நாட்டு மக்கள் வருந்த நேரும் என்னும் நிலையில் சிலரைச் சிறைப்படுத்தினாலும், அவர் திருந்தி வாழ்வதற்குத் தக்க வாய்ப்புகளைச் செய்து நற்குடிமக்களாக ஆக்குதல் அதனினும் செய்யத் தக்க கடமையாம்.

மனைவியை அடித்துக் கொண்டே இருந்த கணவனை உளவியற்படி ஆய்ந்து அவனுக்குப் பறை முழக்கும் வேலைதர, அதுமுதல் அவன் மனைவியை அடிப்பதை விட்டுவிட்டான் என்பது பெர்னாட்சா நாடகக் காட்சிகளுள் ஒன்று.

உள்ளொத்த நண்பரின் இடிப்புரை நலம் பயக்கும் என்பதும் மதிநலம் வாய்ந்த அறிவரின் நல்லுரை ஆள்வோரையும் திருத்தும் என்பதும் வரலாற்று மெய்ம்மங்கள். இடிப்புரை இன்றி உருகி நிற்கும் உரைகளாலும் திருத்தமுடியும் என்பதும் தமிழியமாகும்.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்" (648)

என்பது வள்ளுவம். உயர்ந்த நட்பு என்பது தம் நண்பர் குறை கேட்கவும் பொறாது என்பதால், திருத்தும் கடமையர் அவர் என்பதை வலியுறுத்தும் வள்ளுவம் (808).

✦✦✦

22. தற்பற்று

பற்றற்ற நிலையை அடையவேண்டியது வாழ்க்கைக் குறிக்கோள் என்பது தமிழியம். ஆனால் உலகியல் சிறக்கச் சில பற்றுகள் வேண்டும் என்பதைத் தமிழியம் மறப்பதும் இல்லை ; மறுப்பதும் இல்லை .

தம் மக்கள் மேல் பற்றுவைத்து அவர்களைப் பேணி வளர்ப்பதற்கும் பெருநிலையில் ஆக்குதற்கும் சில பற்றுகள் வேண்டும் என்பதை நம் முன்னோர் உணர்ந்திருந்தனர்.

எத்தனை எத்தனை பொருள்களைத் தேடினாலும் வைப்பில் இருந்தாலும் அவற்றில் எல்லாம் உயர்ந்த பொருள் தம்மக்கள் என்பதை உணர்ந்து போற்றுதல் வேண்டும். "தம்பொருள் என்ப தம் மக்கள்" என்பது அது. (63)

தம் மக்கள் சொல்லும் மழலையைக் கேட்டு மகிழ்தல் என்பது அவர்கள் சொல்லின் மகிழ்வுக்கு மட்டுமன்று. அவர்களை நெருங்கியிருந்து சொல்லும் முறையோடு செல்லும் நெறிக்கும் தக்க வழிகாட்ட வேண்டும் என்பதற்கேயாம். (66)

தாம் தம் மக்களுக்கு ஊட்டியது போல, அம் மக்கள் பெற்றோர்க்கு எடுத்து ஊட்டுதலும் உண்டு. அது பெரிதின்பம் பயப்பது ஆதலால், அமிழ்தினும் இனிது எனப்படும். இதனைத் தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ் என்னும் வள்ளுவம் (24) மழலை இன்பம் அவர்கள் மொழியால் வருவதுபோல், உணவும் அவர்கள் கையால் ஊட்டப்பெறுவது என்பதே சிறந்த பொருத்தம் உடையதாகும். (64)

இம் மூன்று இடங்களிலும் 'தம்' என்னும் உயிருரிமைச் சொல் வழங்கியது அறிந்து மகிழத் தக்கதாம்.

இனித், தம் துணையோடு கொள்ளும் இன்பம் தாம் தமக்கென அமைத்த இல்லத்திலேயிருந்து, தம் உழைப்பால் தேடிய பொருள் கொண்டு, தம் மனையொடு கொள்ளும் இன்பம் என மும்மை உரிமையைக் குறிப்பிடுதல் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாற் சிறப்பை ஒருங்கு கூறியதாம். இவ்விடத்தில் "தம்மில் இருந்து தமது பாத்துண்டற்றால்" என்பது அறிக (1107).

இனித், தம் மக்கள், அறிவு நலம் சான்றவர்களாக அமைதல் குடிநலத்தோடு உலக நலமும் கொண்டதாக அமைய வேண்டும் என்றும் தமிழியம் சால்பு மிக்கதாம். அது,

"தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது" **(68)**

என்பது, தம்மினும் தம்மக்கள் அறிவு நலம் சிறத்திருத்தலை வேண்டிய சிறப்பு, அறிந்து போற்றத்தக்கதாம்.

தம் நடைச்சீர்மைக்குத் தம் நெஞ்சே சீரிய சான் றாகும். மற்றைச் சான்றுகள் மறைதற்கும் மாறுதற்கும் இடம் தருமேனும் நெஞ்சச் சான்று நிலைமாறாதது. அதனால்,

"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்" **(293)**

என மும்மை அழுத்தமாய்த் தன்மைக் கொண்டது தமிழியம்.

✦✦✦

23. தொழில்

பிறப்பு ஒப்புமை கூறிய திருவள்ளுவர் அடுத்த அடியிலேயே தொழில் ஒப்புப் பற்றி உரைத்தார்.

தொழிலில் இது உயர்வு, இது தாழ்வு என்பது இல்லை. தீச்செயல் என்பவை தொழிலாக மாட்டாகொள்ளை, கொலை, களவு இன்னவை கொடுமைகள் தொழில்களைக் "கை செய்து ஊண் மாலை" என்பார். கை என்பது உறுப்புப் பெயராவதொடு ஒழுக்கப் பொருளும் தருவதாம். ஒழுங்காகக் கடமைபுரிந்து உண்ணும் பரம்பரை என்பதே 'கை செய்தூண் மாலை' என்பது. செயல் என்பதே செம்மை அடிப்படையில் பிறந்த சொல். தொழில் என்பதோ தொழுதலுக்கு இடமாக அமைவது என்னும் பொருளது. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெரல்லாம், தொழுதுண்டு பின் செல்பவர்" எனவரும் குறளில் இப்பொருளமைதி காணலாம்.

வள்ளுவர் நாளில் அறு தொழில்கள் சிறப்பாக எண்ணப்பட்டன. அதனைச் செய்வோரை 'அறு தொழிலோர்' எனக் குறிப்பார். எத்தொழிலும் உயர்ந்த தொழிலே. அத்தொழிலைச் சிறப்பாகச் செய்தலும் செய்யாமையும் ஆகியவற்றாலேயே சிறப்பும் சிறப்பில்லாமையும் ஆகின்றன.

"சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்னும் குறட்பகுதி, தொழில் செய் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வா என இயைத்துப் பொருள் காணத்தக்க தாம். இவ்வாறே "தவம் செய்வார் தம் கருமம் செய்வார்" என்பதையும் "தம் கருமம் செய்வார் தவம் செய்வார்" என இணைத்துப் பொருள் காணக் கூடியதாம். இதனைத் திருவள்ளுவர்,

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் -
கருமமே கட்டளைக் கல்"

என்பதனால் புலப்படுத்துகிறார்.

கூட்டும் தொழில் ஆனால் என்ன, வண்டி ஓட்டும் தொழில் ஆனால் என்ன, அரசு ஓச்சும் தொழில் ஆனால் என்ன, சிறப்பாகச் செய்யப்படின் சிறப்பாம்; இல்லையானால் சிறப்பு இல்லையாம்.

ஆதலால், அயல் நெறியாளர் தொழிலில் உயர்வும் தாழ்வும் கூறல் வள்ளுவ நெறியன்று என்பதுடன், தமிழ் நெறியும் ஆகாது என்க.

"பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்" (புறம். 183)

என்பது போல தொழில் ஒத்ததே எனினும் செய்யும் நேர்த்தியால் சிறப்புறும் என்பதாம்.

உழைத்தல் உயர்வு; உழையாமை இழிவு என்பது தமிழியம் **உழையாமையை உயர்வாகக் காட்டிய சமயங்கள், உழவைத் தாழ்த்திப் பாடின.**

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

என்றார் பாரதியார்.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

என்பது புறநானூறு.

"உழவே தலை"

என்றது வள்ளுவம்.

உழவின் சிறப்பு, உழைப்பின் சிறப்பு; தொழிலின் சிறப்பு.

கம்பர் பாடிய ஏர் எழுபதும், திருக்கை வழக்கமும் உழவுச் சிறப்பின் உயர் முகடுகள்.

உழவர் தலைவராம் சடையப்பர் முன்னோர் முடிசூட்டு சிறப்பைக் காட்டியவர் கம்பர் எனின் அது, வள்ளுவ வாய்மை வழியது என்பதாம்.

✦✦✦

24. சமயம்

உயர்ந்தோர்களால் உருவாக்கப்பட்டவை சமயங்கள். ஒருவருக்கொருவர் உதவியாக வாழவேண்டும் என்பது அதன் அடிப்படை நோக்கம். ஆனால், காலம் செல்லச் செல்லக் கருத்து வேற்றுமைகள் புகுந்தன; முட்டலும் மோதலும் ஆயின. எந்நோக்கத்தில் உருவாக்கப்பட்டனவோ அந் நோக்கத்திற்கு மாறாக இயங்கின. உலக ஆக்கத்தை விடுத்து ஒவ்வொருவர் சமய ஆக்கம் என எண்ணி, அவரவர் சமயத்திற்குக் கேடு அவர்களே செய்யலாயினர்.

வள்ளுவரும் ஏதோ ஒரு சமய வழிபாட்டுச் சார்பினராகவே இருந்திருப்பார். அவர் பிறப்பு, இம் மண்ணில் தோன்றிய சிவனியம், மாலியம், முருகியம், கொற்றவை இயம் இன்னவற்றுள் ஒன்றாய், வழிபாட்டு நிலையில் இருந்திருக்க வேண்டும். அக்காலத்தில் இவை

வழிபடு நிலையாக இருந்ததன்றி சமயப் பெயர் கொண்டிருக்கவில்லை என்பதை அறியின் உண்மை விளங்கும். ஆனால், பௌத்தம் சைனம் வைதிகம் என்பன சமயமாகக் கிளர்ந்தன; ஒன்றற் கொன்று முட்டின மோதின; நாவல் நட்டு வழக்காடின; பழித்துக் கொண்டன. இவற்றால் நலம் பெற இயலாது என எண்ணிய வள்ளுவர் சமயங்கடந்து நிற்கும் சால்பினைக் குறள் வழியாக வழங்கினார். அவர் கண்ட இறைமைப் பெயர்களைப் போலவே மெய்யுணர்வுக் கொள்கைகளும் மேதக விளங்கின.

வள்ளுவர்க்குப் பின் வந்த இளங்கோ சமணச் சார்பினர் எனினும் சமயச் சால்பில் சிறந்து விளங்கினார். ஆன்மநேய ஒருமைப்பாட்டில் திகழ்ந்தார்.

திருமூலர் சைவர் எனினும் மக்களுக்கும் மற்றை உயிர்களுக்கும் செய்யும் தொண்டே இறைவழிபாடாக வலியுறுத்தினார்.

வள்ளலார் பெருநெறிபற்றி ஒழுகி ஒளிவழிபாட்டைப் பொதுமை அறமாகப் புதுக்கிப் புவிக்கு வழங்கினார். இவை தமிழியச் சமயமெனப் பாராட்டுக்குரியன ஆயின.

சமயக் கோலங்களால் தம்மைச் சமயவாணர் பிரித்துக் காட்டுதலையும் வள்ளுவர் ஏற்கவில்லை தனித் தனிக் குழுவாகவும் கூட்டமாகவும் பிரிக்க வகை செய்து பிளக்க வழியாக்கும் எனக் கண்டு தெளிந்தார். அதனால், அந் நெறியைக் கண்டித்தார்.

தாம் கண்ட முச்சமயத்தருள் சிலர் மொட்டையடித்துக் கொண்டனர்; சிலர் சடையும் தாடியும் வைத்துக் கொண்டனர். இவற்றினும் மேலான ஒழுக்கத்திற்கு முதன்மை கொடாமல் பழிப்புக்கு இடமாகத் திரிந்தனர். மறைந்து வாழ்ந்தனர். தவநெறி மேற்கொள்வாருடன் அவநெறி மேற்கொள்வார் வேடமிட்டுப் பெருமையோடு திரிவது கண்டு,

"மழித்தலும் நீட்டலும் வேண்டா ; உலகம்
பழித்த தொழித்து விடின்" (280)

என்றார்.

"தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று" (274)

என்று கண்டித்தார்.

"வேடநெறி நில்லார் வேடம் பூண் டென்பயன்?"

என்றார் திருமூலர்.

"தவமும் தவமுடையார்க்கு ஆகும்"

எனத் தெளிவும் செய்தார் திருவள்ளுவர். தவத்தன்மை யுடையவர் தவக்கோலம் கொள்ளல் தக்கதே. பிறர் கொள்ளல் கூடா ஒழுக்கமே என்பது இதன் விளக்கமாம், ,

ஆதலால் இறைமையைக் காரணம் காட்டிச் சமயப் பெயரால் மக்கள் தங்களுக்குள் எதிரிட்டு வாழ்தலை விரும்பாமை தமிழியமாகும் என்க.

✦✦✦

25. மெய்யுணர்வு

மெய்யுணர்தல் பற்றித் தமிழர் கொண்டிருந்த திறம் பெரிது. தம் எழுத்துகளுக்கு உயிர், மெய், உயிர்மெய் எனப் பெயர் வைத்த நிலையிலேயும் தம் மெய்யுணர்வை வெளிப்படுத்தினர். தம் மெய் நிலையாதது என்றும், அம்மெய் கொண்டே நிலைபேறானவற்றைச் செய்துவிடுதல் வேண்டும் என்றும் தெளிவு கொண்டிருந்தனர்.

உயிரி ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாக வளர்மானம் உடையவை என்றும் வாழ்வை உய்விக்க வாய்த்ததே உயிர் என்றும், உயிர்ப்பதற்காக (மூச்சுவிடுதற்காக) உயிர் உள்ளது என்றோ போமளவும் நோயராக வாழ் வதற்கு என்றோ உடம்பு இடும்பைக்கே இருப்பாவது என்று கலங்குவதற்கு என்றோ மாந்தப் பிறவியை நினையாமல், உய்வு பெறும் வழிகாண்பதற்கே உயிர் வாய்த்தது என்று எண்ணி வாழ்வதே உயிர் பெற்ற நோக்காகும் எனத் தெளிந்து இருந்தனர்.

மெய்யுணர்வுடைய பெருமக்கள், தம் பிறப்பால் உலகம் நலம் பெறுவதற்கெனவே வாழ்வியலை அமைத்துக் கொண்டனர்.

அவ்வாழ்வு அறவாழ்வு ஆதல் வேண்டும் எனத் தீர்மானித்தனர். அறத்தைப் போற்றிய பொருளியலும் இன்பியலும் வேண்டும் என்றும் திட்டமிட்டனர்.

அதனால், அறம்பொருள் இன்பம் என நெறிகளை வகுத்துக் கொண்டனர். அவற்றை "அறம் முதலாகிய மும்முதற் பொருள்" எனப் பெயர் சூட்டி வழங்கினர்.

அறம் முதலாக என்பதில் முதல் ஆவதுடன் முதன்மை ஆவதையும் அடித்தளம் ஆவதையும் குறிக் கொண்டனர்.

அதனால் மூன்றும் இணைந்த நெறிக்கும் அறம் என்றே சிறப்புத் தந்து வழங்கினர்.

'அறம்' என்பது இல்வாழ்வே என்றனர். அறநெறியில் இல்வாழ்க்கை நடத்துதல் பின்னே கொள்ளவிருக்கும் துறவு வாழ்வினும் கூட உயர்ந்தது என்றனர். ஏனெனின் உலகியல் நலத்திற்கும் துறவு நெறிக்கும் பயில்களமாகவும் விரிவாக்க வழியாகவும் இருப்பது அதுவே ஆகலின் அவ்வாறு கருதினர்.

அறவாழ்வின் அடிப்படை 'அன்பு' என்னும் பண்பாகும். அப்பண்பே எதிர்வர இருக்கும் துறவு வாழ்வின் பண்பாகிய அருளின் தாய் எனக் கண்டனர். அதனால் இல்லறத்திற்கு அன்பும், துறவுக்கு அருளும் அடிமூலப் பண்புகள் எனக் கண்டனர்.

இல்லறத்திற்குப் புகழ் நிலைபேறு நிறைவாகவும், துறவுக்கு அப் புகழையும் பொருட்டாக எண்ணாத அவா அறுத்தலை நிறைவாகவும் கொண்டனர்.

அன்பின் விரிவாக்கமாக விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்க முடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃ காமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம் என்பவற்றைக் கொண்டு ஒப்புரவறிதலில் ஓங்கி ஈகை மல்கிப் புகழுறல் இல்லறம் எனக் கண்டனர்.

அருள்நெறி பேணும் துறவு, புலால் மறுத்தலும் தவநெறி நிற்றலும் கூடா ஒழுக்கம் நீக்கலும், கள்ளாமை கொள்ளலும், வாய்மை காத்தலும், வெகுளாமை ஏற்றலும், இன்னா செய்யாமை போற்றலும், கொல்லாமை நோற்றலும், நிலையாமை உணர்தலும், துறவு நேர்தலும், மெய்யுணர்தல் மேவுதலும், அவா வறுத்தல் வாழ்வால் பேரா இயற்கை பெறுதலும் வேண்டும் எனத் தேர்ந்தனர். இவற்றை எண்ணின் இல்லற விரிவாக்கமே துறவு என்பது புலப்படும். இது பண்டைத் தமிழர் கொண்ட வாழ்வியல் முறையாம். இதனைத் தொகுத்துக் கூறியவர் தொல்காப்பியர். விரித்துக் கூறியவர் பெருநாவலர்.

"காமம் சான்ற கடைகோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்பது தொல்காப்பியத் தொகை உரை.(1138)

மனையறம், மக்களொடு விளங்கல், மனைவாழ்வு போதுமென்று நிறைவாதல், உற்றார் உறவு சுற்றம் என்பவர்க்குத் தாம் கொண்டு சிறந்த வாழ்வியல் பயிற்றல், தாம் (கணவன் மனைவி) துறவு மேற்கொள்ளல் என்பனவாம் இவை.

இவற்றால் தமிழர் கொண்டது மணவாத் துறவும் அன்று; மணந்து கைவிட்ட துறவும் அன்று; இருவரும் இணைந்து கொள்ளும் மனத்துறவே அது எனப் புலப்படும்.

இந்நிலையில் இருவருள் ஒருவர் இயற்கை எய்தினால் எப்படி இருவர் துறவு எனல் ஏற்கும் எனின்,

மனைவியை இழந்தோன் கொள்ளும் துறவு '**தபு தாரம்**' என்றும், கணவனை இழந்தோள் கொள்ளும் துறவு '**தாபதம்**' என்றும் ஆசிரியர் தொல்காப்பியர் கூறுதல் கொண்டு தெளியலாம். (1025)

இந்நெறியைத் தமிழ் நெறியாக ஏற்றமையால் திருவள்ளுவர் இல்லறம், துறவு ஆய இரண்டையும் அறத்துப்பால் என்னும் ஒரு பாலில் வைத்து உரைத்தார் என்க. **ஆசிரியர் தொல்காப்பியரின் ஒரு நூற்பா வின் விரிவாக்கமே, குறளில் அறத்துப்பால் ஆக விரிந்தது எனின் தகும்**.

இனி வாழ்வியலில் இந்நாள் வரையும் அந்நெறி போற்றப்படுதல் '**மணிவிழா**' என்னும் விழாவெனக் கண்டுகொள்க. மணிவிழாவுக்கு முந்தைய வாழ்வு குடி நலம் காத்த இல்லற வாழ்வு என்றும் பிந்தைய வாழ்வு உலக நலம் பேணும் துறவு வாழ்வு என்றும் கருத்தில் கொள்க. மணிவிழாக் காண்பாரும், நிகழ்த்துவாரும் இக் கருத்தை வலியுறுத்தின் வாழ்வியல் பயன் எய்த வாய்க்கும்.

ஆனால் தாலி மாற்றும் கேலிச் சடங்காகி விட்ட நிலையில், அடங்கு நெறியையும் அறநெறியையும் எண்ண வருமா? எண்ணுதல் ஆகாது என்பதுதானே சடங்கு நெறியின் அடிப்படை. .

✦✦✦

26. நிலையாமை

இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை என்பவற்றை விரித்துக் கூறுதல் சமயவாணர் நிலை. ஆதலால் இவற்றை விரிய விரியக் கூறினர்.

நாலடியாரில் எடுத்த எடுப்பில் நிலையாமையே கூறப்படுதலும் திருக்குறளில் துறவுப் பகுதியில் கொல்லாமையை அடுத்து நிலையாமை, துறவு மெய்யுணர்தல், அவாவறுத்தல் என முறைவைப்புச் செய்தலும் காண்க.

நிலையாமை குறித்து அழவேண்டியது இல்லை; அதனை உணர்ந்து நாளை என்று தள்ளாமல் கடமைகளை உடனுக்குடன் செய்தல் வேண்டும். நாட்காட்டி என ஒரு காலம் காட்டி வைத்துள்ளோம். ஒரு நாள் முடிந்ததும் ஒரு தாளைக் கிழிக்கிறோம். ஆனால் அத் தாளைக் கிழித்தலை நாளைக் கிழித்தல் என உணர வேண்டும் என்பது வள்ளுவக் காட்சியுரை. (334)

நாளைக் கிழிக்கிறோம் என்று உணர்ந்தவர் நாளை வீணே கழிக்கலாமா?

போனால் வராதது பொழுதுதானே!
உயிரும் கூட போய் மீண்டு வருதல் உண்டே !
அதனால் நாவின் சுவையும் செயலும் ஒழிந்து
விக்கல் எடுக்கு முன்னரே நற்செயல்களைச்
செய்து விட ஏவுகிறார் திருவள்ளுவர். (335)

கூட்டில் இருந்து பறவை பறப்பது போல உயிர்க் கூட்டில் இருந்தும் உயிர்ப்பறவை பறக்கிறது என்றும், பக்கத்தில் நிகழ்பவை தெரியாமல் பேருறக்கம் உறங்குவது போன்றது இறப்பு என்றும், உறங்கியவர் விழித் தெழுவது போன்றது பிறப்பு என்றும் (338, 339) கூறினார்.

இவற்றை அறிவுறுத்தலில், அவலம் இல்லை ; அழுகை இல்லை; மெய்யுணர்வின் மேன்மையே திகழ்கின்றது.

✦✦✦

27. துறவு

தமிழர் கொண்ட துறவுநெறி இயல்பானது; இயல்பினால் நிகழும் இல்வாழ்க்கையே துறவின் பயிற்சிக்களம் ஆவது என்பதை அறிந்துளோம்.

மனையையோ மனைவியையோ மக்களையோ விட்டுவிட்டுக் காடு, கரை எனச் செல்வதன்று துறவு.

துறவு என்பது வேண்டாதவை எவை எவையோ அவற்றைவிட்டு, வேண்டியவை எவை எவையோ அவற்றைக் கொள்வது ஆகும்.

தேவையைப் பெருக்கப் பெருக்கத் துன்பம் மிகும்.

தேவையைச் சுருக்கச் சுருக்க இன்பம் மிகும். இவற்றால், எளிமையும் இயற்கையுமாகிய வாழ்வே துறவு வாழ்வு என்பது புலப்படும்.

எல்லா வாய்ப்புகளும் இருக்க வேண்டும்; அந்நிலையில் இவை வேண்டாம் என விடுவதே சிறந்த துறவு ஆகும்.

நான் என்பதும் எனது என்பதும் துறவர்க்கு ஆகாதவை. உடற் பற்றும் உயிர்ப் பற்றும் பிற உயிர்களுக்காக வேண்டும் என்பதை அன்றித் தமக்காகப் பற்றுமை கொள்ளாதது துறவு. பழுத்த துறவர்க்கு உடம்பும் கூட ஒரு நிலையில் தேவையற்றது என்பது புலப்படும்.

துறவர் உறுதியாக இருப்பினும் கூட ஓரொருகால் அவ்வுறுதி தளர்தலும் கூடும். ஆகவே, தம்மினும் உயர்ந்த துறவரைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பது தமிழியத் துறவு நிலையாம்.

✦✦✦

28. கழுவாய்

வழுவாய் எனப்படும் குற்றம் ஒருவர் செய்தால் அதற்குக் கழுவாய் தேடித் தீர்த்துக் கொள்ளலாம் என்று ஓர் **அயல் நெறி** இங்குப் பரப்பப்பட்டது.

இத்தனை முறை கோயிலுக்குச் செல்வதாலும் இன்ன இன்ன வழங்கலாலும் அக் கழுவாய்க்குச் சாந்தி செய்வார்க்குக் கொடை கொடுத்தலாலும் தீர்த்துக் கொள்ளலாம் என்று விளக்கம் கூறினர்.

"வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென"ப் புறநானூறும் புகன்றது.

இந் நெறி மீளவும் மீளவும் வழுவாயைப் பெருக்குமே அன்றி அதனை ஒழிக்கப் பயன்படாது என்பதைத் தெளிவாக உணர்ந்தார் திருவள்ளுவர்.

குற்றம் செய்தவர் எவரோ அவர், தாம் செய்த குற்றத்தை உணர வேண்டும். உணர்ந்து வருந்த வேண்டும்; இனி அக் குற்றத்தைச்

செய்வதில்லை என உறுதி கொள்ள வேண்டும்; அதனைச் சொல்லோடும் நினைவோடும் நில்லாமல் கடைப்பிடியாகக் கொள்ளவும் வேண்டும் என்று ஆழ நினைத்தார். அதனால் அதற்கு

ஒரு தீர்வு அருளினார். அது,

"எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று" (685)

என்பது.

"நான், என்ன கொடிய தவறு செய்துவிட்டேன்" என்று தானே வருந்துமாறான குற்றம் செய்தல் ஆகாது. அப்படித் தவறு செய்ததை உணர்ந்து வருந்துவான் எனின் மீண்டும் அத்தவற்றைச் செய்தல் ஆகாது" என்றார்.

பணம் கொடுத்துக் கழுவாய் தேடுவதாயின் செல்வர்களுக்கு அது மிக எளிமையாம். தொடர்ந்து அத்தவற்றைச் செய்து பழிபெருக்கவும் வாய்ப்பாம். ஏழை எளியோரோ அதனைச் செய்ய இயலவில்லையே என வருந்தவே ஆகும். தந்திர வழியால் வாழும் திட்டம் உடையவரும் சமயப் பற்றில் பொருள் பறிக்க விரும்புவாரும் செய்யும் இச் செயலைக் கண்டித்து நெறிகாட்டியவர் வள்ளுவர். மனம் திருந்துதலும் திரும்புதலுமே கழுவாய் என்னும் நெறி காட்டியவர் அவர்.

✦✦✦

29. மக்கட்பேறு

மக்கட்பேறு வாயாமை பிறவிக்குறை எனவோ பழி எனவோ கூறுதல் தமிழர் நெறி அன்று. அறிவறியா மக்களையும் பழியுடைய மக்களையும் பெறுதல் குறை என்பது தமிழறம். முன்னவர்க்குப் 'பிண்டோதகக்கிரியை' செய்தற்காக மக்கட்பேறு வேண்டும் என்னும் நெறி **அயல்நெறியாகும்**. அந் நெறி சங்க நாளிலேயே தமிழுலகில் நடமாடியதால்,

"தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர் பெறாதீரும்"

என இடம் பெற்றது.

போர்க்களம் நில்லாது பாதுகாப்பான இடம் போமின் என்னும் இப் புறப்பாடல் நெறி அயல் நெறி யாம் (9) உலகுக்கு நலம் சேர்ப்பதற்கே மக்கட்பேறு வேண்டும் என்பது தமிழியமாகும்.

"மகப் பேற்றினால் பிதிரர் கடன் கழியும் என்னும் வடவர் கொள்கை தமிழ் நாட்டார்க்கு இல்லை; திருவள்ளுவர் மகப்பேறு பிதிர்க்கடன் இறுக்கும் வாயில் எனக் கூறாமையே இதற்குச் சான்ற கரியாம்" என "இளந்துணைப் புதல்வரின் முதியர்ப்பேணி", என்னும் பதிற்றுப்பத்து (70) உரை விளக்கத்தில் **உரைவேந்தர் ஔவை** கூறுதல் அறிக.

"தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது" (68)

என்னும் பெற்றோர் விரிநெஞ்சம் அறிக. "இவரைப் பெற்றார் பேறு பெற்றார்", "பெரும் புகழ் பெற்றார்" என வாழ்வதே மக்கள் பெற்றோர்க்குச் செய்தக்க கடமை என்ற கட்டளை உணர்க. (69, 70)

குன்றக் குறவன் வேலனை வேண்டி, ஒரு பெண் மகவு எமக்கு அருள்க என்ற தொன்னெறி அறிக (குறுந்.)

✦✦✦

30. பொருள்

பொருளின் சிறப்பைத் தமிழர் மிக உணர்ந்தவர். அவர்தம் பொருள் ஆய்வுச் சிறப்பே முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்றும், அகப் பொருள் புறப்பொருள் என்றும் கண்டதாம்.

கல்வியையும் கேள்வியையும் பொருள் எனக் கொண்டமை,

கேடில்விழுச் செல்வம் கல்வி என்பதாலும்

செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் என்பதாலும் புலப்படும்.

"தம் பொருள் என்பதம் மக்கள்"

என்பதால் மக்களின் பெருமையைப் புலப்படுத்தினார் வள்ளுவர். பொதுமக்கள், தம் மக்களுக்கு முத்து, மணி, வயிரம் முதலாகப் பொருட் பெயர்களை இட்டு வழங்கினர்.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" (751)

"பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லை" (247)

என்பன பொருட் சிறப்பை நன்கு புலப்படுத்தும்.

பொருளின் சிறப்பை உரைத்தமை வாழ்வியற்கு இன்றியமையாமை கருதியே என்க. அவ் வாழ்வியல் தத்தம் வாழ்வு

கருதியது ஆகாமல் ஒப்புரவு ஈகை ஆயவற்றுக்குப் பயன்படும் பான்மை அறிந்தேயாம்.

"பொருளான் ஆம் எல்லாம்" என்று கருமியாக வாழ்வான் பொருளாக இருக்கும் பொருள், பொருளில்லை .

பிறர்க்கு உதவாதவன் செல்வம் நடுவூருள் நச்சு மரம் பழுத்தது போன்றது என்றும், (1008) பிறர்க்கு உதவாதவன் செல்வம் எல்லா நலங்களும் பெற்ற ஒருத்தி மணங்கொண்டு மக்கட்பேறு பெற்று உலக நலம் செய்யாமல் தனியே முதுமையடைந்தது போன் றது என்றும் (1007) வள்ளுவம் கூறுதலால் புலப்படும்.

பிறர்க்கு உதவும் நல்லவர் அடையும் சிறிய வறுமையும் வானம் பெய்யாமல் வறண்டது போன்ற தன்மையது (1010) என்பதால் உலக நலங்கருதிய பொருளே பொருள் என்னும் தமிழியம் புலப்படும்.

ஆடற் களத்திற்கு ஆள் வருவது போல ஒன்றிரண்டாக வந்து ஆடல் முடிந்ததும் அனைவரும் ஒருங்கே போவது போலப் பொருளும் போய்விடும் என்று கூறுவது அப்பொருள் உளதாய் வாய்த்த போதே ஆக்கமாம் செயலில் பயன்படுத்துக எனத் தூண்டுதற்கே ஆகும். (332) நில்லாத பொருளைக் கொண்டு நிலைத்த பொருளை அடைய வேண்டும் என்பதே தமிழிய மாகும்.

✦✦✦

31. ஆள்வோர்

மக்களுள் சிலர் தங்களைத் தெய்வப் பிறவியர் என்றது போலவே, ஆட்சி செய்பவர்க்கும் அப் பெருமையைத் தருதல் தங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று எண்ணிச் செயல்பட்டனர். அதனால் ஆள்வோரைத் தெய்வப் பிறப்பாக்கிப் பரப்பினர். ஆனால்,

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம் -
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே,
நீரும் நிலனும் புணரி யோரீண்
டுடம்பும் உயிரும் படைத்திசி னோரே" (புறம். 18)

என்று மெய்ம்மம் உரைத்தாராக, இவற்றொடு ஆட்சி செய்வோர் தம் நாட்டு மக்களுக்குத் தாம் உயிரென உணர்ந்து செய்வன செவ்வையாய்ச் செய்தல் வேண்டும் என்பதை,

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே

என்றும் கூறினர். (புறம்.186)

இவ்வாறாகவும், மன்னனைக் காண்பது மாலைக் காண்பதாகவும் சிலர் கிளர்ந்தனர். அதனால், அரசு பற்றி அஞ்சாது எடுத்துரைத்தல் வள்ளுவத் தேவை ஆயிற்று. மக்களுள் நன்னெறியாளரும் தீநெறியாளரும் இருப்பது போல ஆள்வோருள்ளும் உளர் என்றும் முன்னவர் ஆட்சி செங்கோன்மை என்றும், பின்னவர் ஆட்சி கொடுங்கோன்மை என்றும் கூறினார். நல்லாட்சி எது என்பதை இறை மாட்சியில் எடுத்தோதினார்.

தெய்வப்பிறப்பு என்றும் தெய்வமே என்றும் கூறுவார் முன், இல்லை; இல்லை; மற்றை மக்களைப் போல, அறிவு ஆற்றல் பண்புடையவரே அவர்; அவரை இடித்துத் திருத்துதல் வேண்டுவதே; தவறும் அரசுக்கு இடித்துக் கூறுவாரே அரண்போன்ற ஆக்கமானவர் என்றார். இடிப்பாரை இல்லாத வேந்தன் இருந்தால் அவனுக்குக் கெடுப்பார் இல்லாமலும் கெட்டுப் போவான் என்றார்.

"வேலை எடுத்து வழிப்பறி செய்வான் போன்றவன்
கோலை எடுத்துக் கொடிய ஆட்சி நடத்துபவன்"

என்றும் கூறினார். (552)

இறையாண்மை தவறாமல் ஒருவன் ஆட்சி நடத்தினால் அவன் கொண்ட செங்கோல் முறையே அவனைக் காக்கும் என்றும் (547), நாள்தோறும் ஆராய்ந்து முறை செய்யா மன்னவன் நாடு நாள் தோறும் கெடும் என்றும் (553) முறையின் சிறப்பையும் அஃதில்லாமையின் கேட்டையும் எடுத்துரைத்தார்.

ஒரு பக்கமும் சாராமல் ஆராய்ந்து எவரிடத்தும் நடுவுநிலையுடன் செய்யப்படுவதே செங்கோல் முறை என்று கூறும் வள்ளுவர் (341) அவ்வகையில் ஆட்சி நடத்துவானை, 'இறையென்று வைக்கலாம்'என்று கூறுகிறார்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" **(388)**

என்பது அது.

இதனால் ஒருவன் குடிப்பிறப்போ , பதவிச் சிறப்போ அவன் சிறப்பாகி விடாது; அவன் செயற் சிறப்பே சிறப்பு என்னும் பொதுமை நிலையையே குறிப்பிடுதல் விளக்கமுறும்.

✦✦✦

32. அந்தணர், பார்ப்பார்

தமிழகத்துச் சான்றோர்க்கும் ஆன்றோர்க்கும் **அந்தணர் என்றும் பார்ப்பான் என்றும் பெயர்கள் பண்டே அமைந்திருந்தன. அப் பெயர்களின் சிறப்பறிந்த அயலார் தம்மை அந்தணர் என்றும் பார்ப்பார் என்றும் அழைத்துக் கொண்டனர்.** இதற்குச் சான்று உண்டெனினும் வேறு வேண்டா; இவை தமிழ்ப் பெயர்கள் ஆதலே சான்றாம், ஆதலால் இவை சாதிப் பிறப்புக் காட்டும் சொற்கள் அல்ல என்றும் சால்பும் அறிவும் கொண்டவர் பெயர்கள் என்றும் இம் மண்ணின் மக்களுக்கு எடுத்துக்காட்டி மயக்கம் போக்க வேண்டிய நிலை வள்ளுவர்க்கு எழுந்தது. **எவரும் அந்தணர் ஆகலாம்; பார்ப்பனர் ஆகலாம்; அவை பிறப்பு வழி வருவன அல்ல; சிறப்பு வழி வருவன** என்பதை உணர்த்தினார்.

"அந்தணர் என்போர் அறவோர்; மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்று **அந்தணர்** என்பார் தகுதியையும், (30)

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்" (134)

என்று பார்ப்பான் ஒழுக்கத் தகுதியையும் உரைத்தார். முன்னது நீத்தார் பெருமைக் குறள். பின்னது ஒழுக்கமுடைமைக் குறள்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றவர் உரையைச் சாதிமைப்படுத்திப் பார்த்துச் சாதித்தல் அறக்கேடாம்.

'ஓத்து' என்பது மறைநூல் எனல் வழுவாம்.

“ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்” (834)

என்பது வள்ளுவம்.

“ஓதலில் சிறந்தன்று ஒழுக்க முடைமை”

என்பது முதுமொழிக் காஞ்சி. ‘ஓதுவார்’ தமிழ்க் குடிமையர் ஆதல் வெளிப்படை.

தொல்காப்பியர் காட்டும் ஓதற் பிரிவு தமிழர் பிரிவே. ஓதுவார் என்பார் இன்றும் தமிழரே. பார்ப்பார் என்பார் கணியர் அறிவர். அவர் பெயரைக் கொண்ட புதுவரவுப் பார்ப்பார் **“பேர் கொண்ட பார்ப்பார்”** எனத் திருமூலரால் குறிக்கப்பட்டார். அவர் கோயில் வழிபாடு கொண்டால் ஆள்வோர்க்கு அழிவும், நாட்டுக்குப் பஞ்சமும் ஆம் என்று இறைவன் அருளினான் என்று அத் திருமூலர் தெளிந்து உரைத்தார். திரு மந்திரத்தில் காண்க. பாட்டு: **பேர் கொண்ட பார்ப்பான்.** (519)

✦✦✦

33. கல்வி

கல்வி என்பது மாந்தரின் பொதுப் பொருள். **ஒரு குலத்தார்க்கு ஒரு நீதி சொல்லும் நூல்கள் பொதுமையில் இருந்த கல்வியைத் தனிமைப்படுத்திக் கெடுத்தன.**

கல்வியின் பொதுமையைச் சங்க நாளில் கண்ணாரக் கண்ட ஏந்தல் திருவள்ளுவர். உழவர், கொல்லர், குயவர், எயினர், தட்டார், கணியர், ஆசிரியர், காவல் கடமையர் என்பார் அனைவரும் கற்றிருக்கவும் புலமை பெற்றிருக்கவும் கண்டவர் வள்ளுவர். ஆடவர் போலவே மகளிரும் கற்றிருக்கவும் கண்டவர். அக்கல்வியின் பொதுமையைக் “கண்ணுடையவர் என்பவர் கற்றோர்” என்பதால் விளக்கினார். “எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு” என மேலும் வலியுறுத்தினார். (392, 393)

அரசின் தலைக்கடன் மக்கள் அனைவருக்கும் கல்வி தருதல் என்பதைக் கூறும் வகையால் இறை மாட்சியை அடுத்துக் கல்வியை வைத்தமையால் வெளிப்படுத்தினார். (39, 40அதி.)

கற்றவர் மக்கள் என்றும் கல்லார் விலங்கு என்றும் இடித்துரைத்தார்.(410)

கல்லாதவர் உயிரோடு இருப்பவர் என்பதை அன்றி அவர் வாழ்பவர் ஆகார்; அவர் பயன் செய்யாக் களர்மண் போன்றவர். உயர்ந்த குடியில் பிறந்தவர் எனினும் கல்லாதவர் தாழ்ந்த குடியில் பிறந்தவரே ஆவர். தாழ்ந்த குடியில் பிறந்தவரும் கல்வி மேம்பாட் டால் உயர்குடிப் பிறப்பினரே ஆவர் என்று விரித்துரைத்தார். (406, 409)

பொருள் இல்லார் பொருள் உடையவரிடம் எப்படிப் பணிந்து நின்று வேண்டிப் பெறுவரோ அப்படிப் பெறுவது கல்வி என்றும், (395)

ஒருமுகப் பட்டுப் படிப்பதால் பரம்பரைக்கே அறிவுச் சிறப்பு ஏற்படும் என்றும், (398)

அறிய அறியத்தான் அறியாமை புலப்படும் என்றும் வலியுறுத்தினார். (110)

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எல்லாக் குடியினர்க்கும் பொதுவாக இருந்த கல்வி - ஆடவர்க்கும் மகளிர்க்கும் பொதுவாக இருந்த கல்வி - ஆள்வோர்க்கும் ஆளப்படுவோர்க்கும் ஒப்ப இருந்த கல்வி - தன் பொதுமைச் சிறப்பை இழக்கச் செய்தனர். அயலார் அறிவறிந்த தமிழரும் ஒப்பியகேடு தமிழினக் கேடாக அமைந்துவிட்டது. இதனால் இன்னாரே கற்றல் வேண்டும் என்றும் இன்னின்னார் கற்பிக்கத் தகாதவர் என்றும் ஒதுக்கிவைக்கப்பட்டனர். மகளிர் கல்வியோ அடியோடு ஒழிந்தது.

தமிழர் வாயிலும், வாயிலிலும் இருந்து திட்டமிட்டுத் தமிழ்க் கல்வி ஒழிக்கப்பட்டது. வேந்தர்களோ அறிஞர்களோ கண்டு கொள்ளவில்லை. அதே பொழுதில் வடமொழிக் கல்வி வானளாவப் பரப்பப்பட்டது. அகர அகரங்களும் (அகிராகரம்), மங்கலங்களும், உத்தமதான புரங்களும், மகாதான புரங்களும், தோற்றுவிக்கப்பட்டன. சதுர்வேதி மங்கலங்கள் நால்வேதம் கற்றோர்க்கெனத் தரப்பட்டன. பொற்பசுக்களை உருவாக்கி அதனுள் புகுந்து வெளி வருதலால் **இரணிய கருப்பம்** என்னும் சீர் பெற்று மறையாளர்க்கு அதனை உதவினர். இந்நிலையில் தமிழ்க் கல்வி என்ன ஆகும்?

கிழிந்த உடையும் பழங்கஞ்சியும் ஒழுகல் கூரையும் வாழ்வாகிப் போன புலவர் பரம்பரையின் ஓரிருவர் பொருளாகிச் சாவாமல் செத்துக் கொண்டிருந்தது. சேதுபதிகளும் எட்டையபுரக் குறுநில மன்னரும்

வள்ளன்மையர் சிலரும் புலமைத் தோன்றல்கள் சிலரும் உயிர்ப்பித்துக் கொண்டிருந்தனர்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்னும் வேந்தர் வழியினர் அற்றனர். குறுநில மன்னர் ஆகிய வேளிர் வழியினரும் முடிந்தனர். அயன்மொழியாளர் படையெடுப்பும் தலையெடுப்பும் தமிழகத்தில் வலசையுற்றன.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கல்வி – தமிழ்க் கல்வி

"தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள் நனி கொடுப்போன் வழிபடுவோனே
உரைகோ ளாளர்க் குரைப்பது நூலே"

என நூல் கொள உரியார் என்பவர் எண்ணப் பட்டனர். (37)

"களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே"

எனக் கல்விக்குத் தள்ளுபடியாயினர். (39)

கிருட்டிணதேவராயர் ஆட்சியும் நாயக்க மன்னர் ஆட்சியும் தமிழகத்தில் ஊன்றிய பின்னர்த் தமிழ் இருந்த இடமும் தெரியாமல் ஒழிந்தது. ஆனால் வடமொழிக் கல்லூரிகளும் தெலுங்குப் பாடசாலைகளும் அரசர் அரவணைப்பால் கொடிகட்டிப் பறந்தன. எப்படியோ தமிழ் சாவாமல் அதன் தகுதியால் மட்டுமே உயிர் வாழ்ந்தது. தகுதிக்கு மதிப்புத் தந்த கிறித்தவ சமயப் பரப்பாளர்களால் புழுதி தட்டப் பட்டுப் புதையலெனப் போற்றப்பட்டது.

வடமொழிக் காவலராகச் சேதுபதிகள் இருந்தும், தமிழையும் தமக்கு இயல்பான பற்றால் வளர்த்தனர். பின்னாளில் வீறுமிக்க பாண்டித்துரையார் மதுரைச் சங்கம் கண்டார். உமாமகேசுவரர் கரந்தைச் சங்கம் கண்டார். 1812இல் இவற்றுக்கு முன்னோடியாக எல்லிசால் கல்விச் சங்கம் உருவாக்கப்பட்டது. தமிழ் ஓரளவால் காக்கப்பட்டது.

அவர்களால் படியேறிய தமிழ் முடிசாய்ந்து அடியொடு விழுந்துபட இந்நாள் தமிழாங்கிலர் ஆங்கில மழலையர் பள்ளி முதலான மேல்மட்டம் வரை செய்த கேடும் செய்துவரும் கேடும் நாடு, மொழி, இனம் என்னும் மும்மையுடன் பண்பாடு நாகரிகம் என்பவற்றையும் ஒட்டுமொத்தமாகக் கெடுக்கும் கேடாகி வருகின்றதாம். இந்நிலையை ஒழித்துக் காக்கவும் வள்ளுவம் ஓங்கிய எழுச்சிக்குரலை முழுதுற எழுப்புகின்றதாம். **தமிழியக் காவல் மூலம் இதுவே எனக் காட்டுகின்றதாம்.**

✦✦✦

34. தமிழ்

திருவள்ளுவர் தமிழ் நாட்டவர்; எப்பகுதியில் பிறந்து எப்பகுதியில் வாழ்ந்து எப்பகுதியில் மறைந்தவர் ஆயினும் ஆக. அவர் தமிழர் என்பது உண்மையும் உறுதியும் ஆம். அதற்கு அவர் தம் முழுமதியன்ன நூலை வேற்றுச் சொல் விரவாமல் விழுப்பமிகு தமிழில் இயற்றியமையே சான்றாம்.

அவர் எவ்வழிபாடு செய்தார்? எக்குடிசார்ந்தார்? அறியோம்! அறியாமலும், அவர் நூற் பொருளை உணரத் தடையில்லையே!

அவர் பெற்றோர் எவர்? உடன் பிறப்பு, மனைவி மக்கள் எவரென அறியக் கூடாமை நூற்பொருளுக்குத் தடையாகுமா?

அவர் காலம் முடிமன்னர் காலம்; அவருள் எவரையோ சார்ந்திருந்திருக்கவும் கூடும். எனினும் அவரை அறியோம். அதனாலும் குறைவு ஏற்பட்டு விடவில்லை.

திருவள்ளுவரைப் பற்றிய குறிப்பு 'திருக்குறளே' எனல் சால்பு. வள்ளுவர் உலகவர்; உயிரவர். ஒரு நூல் செய்து உலகப் புகழ் பெற்றிருப்பவர். உலக அறவோர்கள் அருளோர்கள் மெய்யுணர்வு மேதையர் கூட்டுண்ணச் செய்த கொள்கை வீறுடையார். தாம் பிறந்த மண்ணுக்கும் பேசும் மொழிக்கும் பேணி வளர்த்த மக்களுக்கும் ஒரு சேரப் புகழ் ஈட்டித் தந்து கொண்டிருக்கும் தேட்டாளர்.

தமிழ் என்றும் பெயரைச் சுட்டாமலும் தமிழ் நாட்டைக்குறியாமலும் தமிழ் இனத்தை உரையாமலும் சென்றாலும், தமிழ்மக்கள் தமிழ் மொழிவாயிலாகக் கற்பதே கடமை என்றும், அதனை மறத்தலும் துறத்தலும் மொழி இன நாடு பண்பாடு வரலாறு என எல்லா வற்றுக்கும் அழிபாடே என்று முரைத்த **எண்ணத்தால் உயர்ந்த ஏந்தல்** அவர்.

இறைமை முதலைப் பொது வகையால் - உலகப் பார்வையால் - ஓத விரும்பிய அவர் அகர முதலை உவமை காட்டினார். அந்த அகரம் தமிழ்முதல் என்பதை எவரே அறியார். .

வேரின்றி - விதையின்றி - கிழங்கின்றி - முதலின்றி, மூலமின்றி - எதுவும் இல்லை. அதுபோல் மொழி இன்றி நாடு, இனம், பண்பாடு என்பவை இல்லை. இதனை உணர்த்தியவர் ஆசிரியர் தொல்காப்பியர். அவர் " எழுத்தெனப்படுவ, அகரமுதல னகர இறுவாய்" என்றார். "அம்மூல முழக்கத்தையே இறைமையோடு ஒப்பக் கூறுதலை மேற்கொண்டேன். மொழியை மறந்த நாடு முற்றாக அழிந்த நாடு! மண்ணை விட்டு அகன்றாலும், கடலையும் வானையும் கடந்தாலும் உறவாக அமைவது தாய்மொழி ஒன்றே அதனை மறவாதீர் என யானும் முழங்குகின்றேன்" என்று நூலைத் தொடங்கியவர் நுண்மாண் நுழைபுலத் தோன்றல் வள்ளுவனார்.

அவர்தம் தாய்வேறு; நம்தம் தாய் வேறு;

அவர்தம் தாய்வாய் வேறு; நம்தம் தாய்வாய் வேறு;

ஆனால், அவர் தாய் வாயும் நம் தாய் வாயும் மொழிந்த மொழி நமக்கு உயிராய் உரிமையாய் இருக்கும் **தமிழ்மொழி!** இவ்வுறவைக் காக்கக் காக்க உலகம் மதிக்கும்; இல்லையேல் நம்மை உலகம் மிதிக்கும்.

"நம்மைப் பிரிக்காமல் பிளக்காமல் ஒன்றாக என்றும் இருக்க வாய்த்த ஒன்றே ஒன்று நம் தாய் மொழியாம் தமிழ்மொழியே. நம் மொழி முதல் எழுத்தில் நூலைத் தொடங்கி நம் மொழியின் இறுதி எழுத்தால் யாம் நூலை முடித்தலைக் கண்டு உணர்வீராக. மொழியை முன்வைத்து உம் வாழ்வை நடத்துவீர்களாக" என்பது வள்ளுவ வான்மறையாம்.

இன்னும் இதில் ஓர் அருமை உள்ளதை உணரவேண்டும்; உணர்த்தவும் வேண்டும்.

நீங்கள் பறவைகள் போலப் பாரெங்கும் பரவிச் செல்லலாம். அண்டங்கடந்து அண்டம் செல்லவும் செல்லலாம். அந்நிலையில் அயன்மொழி ஆட்சி - கல்வி - வழிபாடு - கலை என்பவை ஆங்கு நிலவவும் கூடும். ஆயினும் நம் தாய்மொழியை மறவாதீர்; வழி வழியாக நம் மக்களுக்குக் கற்பிக்கத் தவறாதீர். அயல் நாட்டில் அயல் மொழி ஆட்சிக்கு ஆட்பட்டு நீங்கள் இருந்தாலும் உங்கள் அக வாழ்வில் - குடும்ப வாழ்வில் - தமிழ் மொழியை மறவாமல் போற்றுவீராக. இல்லையேல்

பிறந்த மண்ணையும் பெற்ற தாயையும் மறந்தவர்களே ஆவீர். அதனைக் குறிக்கவே, நூல் முதலில் அகரத்தில் தொடங்கிய யாம் குடும்ப வாழ்வாம் **அகவாழ்விலும் அகரத்தை முன் வைத்து** னகரத்தில் (பெறின்) நூலை முடித்தேம். ஆதலால் குடும்ப விளக்காக - குலவிளக்காக - இருக்கும் மகளிர் இதனை உணர்ந்து தாய் மொழிக் காவலை மேற்கொள்ளல் கடமையாகக் கொள்ளவேண்டும் என்பது குறிப்பாகும்.

"**புறவாழ்வுக்கு ஒரு குறிப்பு அறிதலும், அக வாழ்வுக்கு ஒரு குறிப்பு அறிதலும் கூறிய அளவில் நில்லாமல்** அக வாழ்வில் **குறிப்பு அறிவுறுத்தல்** என ஒன்று வைத்ததையும் எண்ணிப்பார்த்துத் திண்ணிதாய் நிறைவேற்றுவீர்களாக" என்பது வள்ளுவர் உள்உள் (ஆழ்மனம்) ஆகலாம்.

தமிழ்வழிக் கல்வியை வள்ளுவ ஆணையாகக் கொண்டு தடைகடந்து வெற்றிகொண்டு நிலைநாட்டலே தமிழியக் காவலாம் என நிறைவு செய்வோம்.

❖❖❖

ஏ. திருக்குறளில் அறிவியல்

1. அறம்

அறம் என்பது பற்றிப் பலப் பலர் பார்வையும் வெவ்வேறு பட்டவை. எனினும் பிறர்க்கு உதவுதல் என்னும் பொது ஊடகம் கொண்டவை.

புத்தர் மொழிந்த தர்மம் அறம் எனப்பட்டது. வழிபடு பொருளாகக் கொள்ளப்பட்டமையால், " புத்தம் சரணம் கச்சாமி" , "தன்மம் சரணம் கச்சாமி" , "சங்கம் சரணம் கச்சாமி" எனப் போற்றி வணங்கப்பட்டது. அவர் அறவுரை 'அறவாழி' என்றும் 'தருமசக்கரம்' என்றும் அசோகரால் பரப்பப்பட்டது.

புத்தரும் அருகரும் அறவர் எனவே பாராட்டப்பட்டனர். மணிமேகலையார் அறவண அடிகளைச் சார்ந்தே அருளுரை பெற்றார். வைதிகர்களால் அறம் கொள்கை நிலையை விட்டுக் கொடை நிலைக்கு வந்தது. இன்ன இன்ன கொடுத்தல் அறம் என எண்ணி முப்பத்திரண்டு என்றும் வழக்கில் ஊன்றியது. இறைவி அறம் வளர்த்த நாயகி (தருமாம்பாள்) எனவும் வழக்கில் ஊன்றியது. **கொடை வகையால் எண்ணும் அறம் வரம்பற்றது; கட்டற்றது; முழுமை தழுவாதது.**

அறம் செய விரும்பு என்னும் ஔவையார் மொழி நல்லது செய்ய விரும்பு என்பதாயிற்று. ஒன்றை நல்லதாய்ச் செய்ய வேண்டுமானால், **செயலுக்கு மூலம் எது என எண்ண வேண்டும். செயலுக்கு மூலம் எண்ணம்** என்பது வெளிப்படை. அதனால், வள்ளுவர் கண்ட அறம் அதன் மூலநிலையில் இருந்தே கிளர்ந்தது.

செய்யுமுன், சொல்லுமுன் அறம் எங்கே உறைந்திருந்து கிளர வேண்டும் எனின், மனத்தில் இருந்தே கிளர வேண்டும். அவன் எண்ணமே அவன் சொல்லுக்கும் செயலுக்கும் மூலம்; ஆதலால், மன் + அம் = மனம் எனப்பட்டது. ஒருவன் தன் சொல்லும் செயலும் அழியாப் புகழுக்கு இடமாக இருக்க வேண்டியது **மனமே** என்பதாம்.

'**மனம் போல வாழ்வு**' என்பது மக்கள் வழக்கு மொழி! "**மனம் உண்டானால் வழியுண்டு**" "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" "எண்ணித் துணிக கருமம்" என்பனவெல்லாம் பெருவழக்காகப் பேசக் கேட்கின்றோம்.

வள்ளுவர் முப்பாலாகப் பாடினார். அதில் முதற்பால் 'அறம்'; ஆனால் அங்கேயே அறம் அடங்கியதாக வள்ளுவர் கொண்டாரல்லர்! **முப்பாலும் கூடிய முழுமையுமே அறமே** எனக் கொண்டே நூல் யாத்தமையால், நூலுக்கே அறம் எனப் பெயர் பண்டே ஏற்பட்டது. புறநானூறு, '**அறம் பாடிற்று**' என்றது திருக்குறளையே யாம்.

அறத்தில் அறமும், பொருளில் அறமும், காமத்தில் அறமும் இல்லாமல் போதல் ஆகாது. **எதிலும் எவற்றிலும் அற ஊடகம் கட்டாயம் இருந்தாக வேண்டும்** என்பதால் தான் நூலுக்கே அறம் எனப் பெயர் அமைக்கப்பட்டது.

வள்ளுவர் கண்ட இறைமைக் குருவநிலை முதற்சான்று என நிற்கின்றது. அது **அறவாழி அந்தணன்** என்பதாம்! அறவாழியாவது அறக்கடல்! அறச்சக்கரம்! ஆதலால் ஆட்சியும் அறமாக வேண்டும், முறை மன்றம் அறமன்றமாக அமைய வேண்டும், வாழ்வே அறமாகிவிட வேண்டும் என்னும் ஆழிய நோக்கு வள்ளுவர்க்கு இருந்தமையால் தான் பாயிர நிறைவாம் நான்காம் அதிகாரத்தை அறன் வலியுறுத்தல் என்றார்.

வள்ளுவர் கூறுவன எல்லாமும், வலியுறுத்தும் வாய்மை **யறங்களேதாம்**. எனினும், **வலியுறுத்தல்** பெயர் கொண்ட அதிகாரம் அறம் என்னும் ஒன்றேயாம் என்பதை எண்ணுதல் வேண்டும்! அறம் ஒன்றை வலியுறுத்தினாலேயே மற்றவற்றையெல்லாம் வலியுறுத்திய தாகிவிடும் என்றே வள்ளுவர் கருதினார் என்பது புலப்படும்.

அறம் எண்ணத்தில் இருந்தே தொடக்கமாக வேண்டும் என்பதால்,

"**மனத்துக்கண் மாசிலன் ஆதல்** அனைத்தறன்."

என அறத்தின் இலக்கணத்தை உரைத்தார். மனமாசின்மையாம் அறமே எல்லா அறங்களுமாம் என்பதை 'அனைத்து அறன்' என்றார். அனைத்து என்பதற்கு, 'எல்லாம்' என்னும் பொருளொடு, 'அவ்வளவு' என்னும் பொருளும் உண்டு. எவ்வளவு மனத்தூய்மை உண்டோ அவ்வளவு அறம் உண்டு என்றும் எண்ண வைக்கிறார்.

நூற்றுக்கு நூறும் அறவராக முடியவில்லை எனினும் இருபதாய் முப்பதாய் அற விழுக்காடு உடையவரும் அறுபதாய் எழுபதாய் விரிய முழுமதி போல் முழுமையுற முடியும் என ஊக்குகிறார்.

இனி எண்ணலாம் : உலகியலை நோக்கினால் எத்தனை எத்தனை அறக்கேடுகள்! எத்தனை எத்தனை பொய்மை, களவு, புரட்டு, பொறாமை, கொலை. எல்லாவற்றின் மூலமும் எது? மனம், மனமே!

மனம் மாசு அற்றதாய் இருந்தால் மற்றை மாசு எதுவும் தோன்ற மாட்டாது. மனமாசே எல்லாக் குற்றங்களையும் உண்டாக்குகின்றது.

அளவிலே, நிறையிலே, குறையும் கலப்படமும் ஏற்படுவது ஏன்?

கல்வி கடைச்சரக்கிலும் கடைச் சரக்காய் - கயமைக்கு இடமாய்ப் போகியது ஏன்?

கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் வேறுபாடு இல்லாமல் குற்றம் குறைகள் பெருகியது ஏன்?

துறவர் மடங்களும் திருக்கோயில்களும் தூய்மைக் கேட்டின் இருப்பிடமாய்ப் போயது ஏன்?

பண்பட்ட சான்றோர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமயங்கள் சாய்க்கடையில் சாய்க்கடையாய் ஆவது ஏன்?

சிந்தனை, பகுத்தறிவு, மாந்த நேயம் என்பவற்றுக்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள் நாளொரு கோலமும் நலப்பாடில்லா உடைவுகளும் கொண்டுவருவது ஏன்?

வீட்டுக்குள்ளும் தொழிலுக்குள்ளும் அமைப்புக்குள்ளும் கட்சிக்குள்ளும் ஆட்சிக்குள்ளும் நாட்டுக்குள்ளும் நாடுகாவற்படைக் குள்ளும் கற்று வல்ல சான்றோர் அவைக்குள்ளும் உட்பகையும் காட்டிக் கொடுக்கும் கீழ்மையும் அமைந்து தற்கொல்லிகளாய்த் தழைப்பது ஏன்?

மனம் தூய்மையுற வில்லை!

இனம் தூய்மையுற வில்லை!

கல்வி தூய்மையுற வில்லை!

செயல் தூய்மையுற வில்லை!

தொண்டும் துறவும் தூய்மையுறவில்லை!

இத்தூய்மை இன்மைகளே எல்லா அழிசெயல்களுக்கும் அடிப்படை என்பதாலேயே மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் என்றார் அறவாழியாம் வள்ளுவப் பெருமகனார்.

மனம் தூய்மை பற்றிக் கூறிய திருவள்ளுவர் எத்தூய்மைகளை எல்லாம் சுட்டுகிறார்.

"மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம் தூய்மை தூவா வரும்". (455)

என்றார்.

"கற்க கசடறக் கற்பவை" என்பதால் மனத்துண்டாம் கசடுகளை நீக்குவதே கல்வி என்கிறார்.

தவத்தவர் தூயராதலைத் "தவமும் தவமுடையார்க்கு ஆகும்". என்றார்.

"மனத்தது மாசற வாழ்வாரே துறவர்" என்பதைக் கூடா ஒழுக்கத்தில் விரியக் கூறுகிறார். வஞ்ச மனமும் படிற்று ஒழுக்கமும் துறவுக்கு உறவாகக் கூடாதவை என்கிறார்.

துறவே அறமென்று பவுத்தமும் சமணமும் கூறிவரும் நிலையில், "**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை**" என்கிறார். இன்பம் என்பது அறவழி வருவதே என்பதை,

"அறத்தான் வருவதே இன்பம்"

என்கிறார். துறந்தாரைக் காக்கக் கடமைப்பட்டவன் இல்வாழ்வானே என்பதைத்,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (42)

என்கிறார். இல்வாழ்வான் இல்லையேல் துறவி எப்படித் தோன்றுவான்! ஆதலால், துறவரைத் தந்தவன் தூய இல்வாழ்வன் தானே! அவன் தந்த வாழ்வு அன்றிப் பிறவாழ்வு எனலாமா?

தொண்டே வாழ்வாகக் கொண்டாலும் அத்துறவரை உணவால், உடையால், உறையுளால், பேணலால் காப்பான் எவன்? அவன் இல்லையேல் துறவு வாழ்வு என்னாம்?

'மாசிலா மனமே அற நிலையம்' எனக் கண்ட வள்ளுவர், அவ்வற நிலையத்தின் அழிபாடாய் இருப்பவையும் அம்மனத்திலேயே இருப்பதை உய்த்தறிகிறார். அறம் உய்யவேண்டுமானால் அறக் கேடாய் அமைந்தவற்றை அகற்றாமல் - அழிக்காமல் - இயலாது என்னும் தெளிவினராய்,

"அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்". (35)

என்கிறார்.

மாசிலா அறம் முளைத்துத் தளிர்க்கும் இடத்தேயே தோன்றும் களைகள் பொறாமை, ஆசை, கோவம் கொடுஞ்சொல் என்னும் நான்கும் என்பதைத் தெளிகிறார். களை வெட்டுதல் உழவன் கடமை; 'இளைதாக, முள்மரம் கொல்லுதல்' ஆட்சியர் கடமை என்பது போல் மனமாசுகளை அகற்றுதல் அறத்தவர் கடமை என்கிறார்.

இந்நான்கும் முட் செடிகள்!

பொறாமை, பிறர் நலமாக இருப்பதை ஒப்பாத மனம், நன்மனம் ஆகுமா?அறமனமாகுமா? அவன் நன்றாக இருப்பதால் இவனுக்கு வந்த கேடென்ன? நீயும் நன்றாக இருக்க அவனைக் குருவனாக - வழிகாட்டியாகக் கொள்ளல் அன்றோ கடமை. அல்லது உன் பொறாமை உன்னை வெதுப்புதல் அல்லாமல் அவனை ஏதாவது செய்துவிடுமா?

ஆசை இருக்கிறதே! "ஆசைக் கோர் அளவில்லை"

"ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்".

ஆசு என்பது என்ன? குற்றம்! ஆசை என்பதன் பொருளே குற்றம் என்பது தான்! அது குணம் ஆகிவிடுமா? அவர்கள் நலமாக - வளமாக வாழட்டும் என ஆசை கொள்ளலாமே! கொண்டால் அவர்கள் பாராட்டும் பரிவும் பெறலாமே! ஆக்க ஆவலைக் கெடுத்து அழிவு ஆசையைப் போற்றுவது அறிவுடைமை தானா?

இனி, 'சினம்' என்பது என்ன? சின்னது, சின்னத்தனமானது என்பது தானே பொருள். 'சினம்' பெரியதாய் - பெருமையதாய் - எவராலும் போற்றப்படுமோ? போக்கற்ற வகையில் அமைதிக்காக வேண்டுமெனில் "கோவம் இருக்கும் இடத்தில் தான் குணம் இருக்கும்" என்று சொல்லிக் கொள்ளலாம்! சின்னத் தனம் சின்னத் தனமே தான். என்ன பெரிய தன முத்திரை வைத்தாலும் அதன் முகம் அதுவேதான்!

சினம் கொண்டவர் முகத்தைப் பாருங்கள்! துடிப்பைப் பாருங்கள்! கொதிப்பைப் பாருங்கள்! சொல்லைக் கேளுங்கள்! செயலைக் காணுங்கள்! விடாமல் படமெடுத்து விடுங்கள்! சினமாறி - அமைந்து விட்ட போதில் அப்படங்களை அவரிடமே காட்டுங்கள்! அவர் தோற்றமும் செயலும் அவர்க்கே அருவறுப் பாகாமல் இராவே!

சினம் என்பது என்ன?

சேர்ந்தாரைக் கொல்லி!

சேர்ந்தாரைக் கொல்வன இரண்டு; ஒன்று தீ; இரண்டு நஞ்சு; இவ்விரண்டும் ஒருருக் கொண்ட சேர்ந்தாரைக் கொல்லி சினம்;

சின வெளிப்பாடு கொடுஞ்சொல்லாம் இன்னாச் சொல்! சொல் என்பது தீ! வடுப்படுத்தி வைக்கும் கொடு நெருப்பு!

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. (129)

வடுவாக்கும் கொடுவாளை - கொட்டும் தேளை, நட்டுவாய்க் காலியை, தீண்டும் பாம்பை மனப் பொருளாகக் கொண்டவன் மேல், மற்றையார் எண்ணம் எப்படி இருக்கும்? வேம்பினும் எட்டியினும் கசப்பாக இருக்கும் அல்லவோ!

வள்ளுவர் தம் வாய் மொழியில்,

“இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்” (316)

“இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது?” (99)

என்பவற்றைப் பொருளுணர்ந்து ஓதினால் இன்னாச் சொல் கூறுவனோ?

கூறிய வெல்லாம் என்ன?

மன மாசின்மை - மனமாசு ஆக்குவன - மனமாசு அகற்றுவழி என்பவைதாமே!

குடும்ப வாழ்வு அன்பு என்னும் பண்பின் விளக்கம்! அக்

குடும்ப வாழ்வு அறம் என்னும் விளைவு தருவது!

அக்குடும்ப வாழ்வு அறம் எத்தகைய எளியது; அதனைப்போற்ற அரிதில்லையே!

“முகத்தான் அமர்ந்தினிதின் நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.” (93)

முகத்திற்கு முகம் அமரப்பார்த்தல் அறம்! இனிதாகப் பார்த்தல் அறம்! மனத்தொடு கூடி மகிழ்வுக்கு ஆட்படுத்தும் நல்ல இனிய சொல் சொல்லல்

அறம்! இவற்றைக் கொண்டாலே அறமாகி விடுமே! அள்ளியா தரவேண்டும்?

கோடியா கொட்ட வேண்டும்?

ஒருவரை ஒருவர், வாட்டாமல் வருத்தாமல் நோகடிக்காமல் நோயராக்காமல் வாழ்ந்தால் போதுமே,

கோயில் கட்டி, கொடிமரம் நட்டி, கோட்டை கோபுரம் எழுப்பியா அறப்பேறு பெற வேண்டும்? இவ்வெளிய அறம் போற்றலாமே! மனிதரை எண்ணுவதே அறம் தானே!

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை"

என்பதைத் தெளிந்தால் உண்மை முந்து நிற்கும் அல்லவோ!

மனமாசுகள் இவை என நான்கனை எண்ணியுரைத்த வள்ளுவர், இவற்றை விளக்கும் வகையில்,

1. அழுக்காறாமை
2. அவாவறுத்தல்
3. வெகுளாமை
4. இனியவை கூறல்
5. இன்னா செய்யாமை

என்னும் அதிகாரங்களைப் படைக்கிறார். சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் இரண்டு உத்திகளால் விளக்கிய அருமை அது. அவற்றை விரித்துக் கூறின் பொழிவு பெரிதாம்.

அழுக்காறு, ஒழுக்கம் ஆகாது; அழுக்காறு என்பது பாவி; ஆக்கமெல்லாம் அழிப்பது, அழுக்காறு உடையவனைத் தானே கேடாக இருந்து அழிப்பது என்கிறார்.

அவாவே துன்ப மூலம்; அவா இன்மை தூய்மைச் சான்று; அவாவில்லாமையே இன்பத்திற்கெல்லாம் அடிப்படை; அவாவற்றுப் போதலே பிறவிப்பேறு என்கிறார்.

வெகுளாமையே தலையாய அடக்கம்; நாவைக் காப்பதே பெருங்காவல்; சினத்தைப் பொருளென்று கொண்டவர் இனத்தோடும் அழிவர்; சினத்தின் எல்லை கடந்தவர் செத்தவரே ஆவர் என்கிறார்.

இனியவை கூறலால் உறவு உண்டாம்; வறுமை இல்லாம்; சிறுமை அகலும்; பெருமை சேரும்; அறம் பெருகும்; அல்லவை தேயும் என்கிறார்.

இன்னா செய்யாமையால் தன்னுயிர் தளிர்ப்பான்; மன்னுயிர் காப்பான்; தீமை செய்தார்க்கும் நன்மை செய்பவனும், கொடியவனுக்கும் நன்மை செய்பவனும் மாசிலாப்பிறவி மாண்பன் என்பார்.

இனிய அறத்தின் இடத்தில் எதற்கு முதலிடம், எதற்கு இரண்டாம் இடம் என எண்ணுகிறார் வள்ளுவர். தாம் எண்ணி வரிசைப்படுத்திய முதலிரண்டு இடங்களையும் தம் மேதகை அறிவால் மாற்றி அமைக்கவும் செய்கிறார்.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம் பிற
செய்யாமை செய்யாமை நன்று." (297)

என்றும்,

"பொய்யாமை அன்ன புகழில்லை" (296)

என்றும் கூறிய அவரே,

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று." (323)

என்று இரண்டாம் இடத்திற்குத் தள்ளுகிறார்.

இதனால் வள்ளுவர் குழம்புகிறார் என்றோ , குழப்புகிறார் என்றோ கருதுதல் கூடா. குழப்பத்தை நீக்குகிறார். உலகம் வாய்மையையே தலையாய அறம் என்கிறது! உண்மைதான்! ஆனால் பொய்யனும் தன் தவற்றை உணர்ந்து உயரிய மெய்யனாக வாழ முடியும். ஆனால் கொன்றவன் பின்னே அருளாளனாக மாறினாலும், கொல்லப்பட்டதை அவன் கொண்ட அருள் எழுப்பி விட முடியுமா? கொலை கொலை தானே! ஆதலால், பொய்யாமையை முதலாகக் கொள்ளும் உலகம், கொல்லாமையையே முதலறமாகக் கொள்ளல் வேண்டும் என்கிறார். அறவினை யாதெனில் கொல்லாமை என்றும், கொல்லாமை சூழ்வான் தலை என்றும், பிறிதின் உயிர் நீக்குதலைத் தன்னுயிர் நீப்பினும் செய்யற்க என்றும், கொன்றாகும் ஆக்கம் கடை என்றும் அடுக்கடுக்காகக் கூறிக் கொல்லாமை அறத்தை நிலைப்படுத்துகிறார்.

ஆளுவோன் அரசன்; அரசன் என்பதன் பொருள் செம்மையன்; செங்கோலன் என்பதே. அவன் ஆட்சி அறமுறைப்பட்டது எனின்,

அவனை அவ்வறமே காக்கும்; அறமுறை தவறின் அவனை அதுவே அழிக்கும். ஆதலால் அரசன் - ஆள்பவன். அறவனாதலே தலைக்கடனாம் என்கிறார்.

இல்வாழ்வானும் தான் அறவன் என்பதனுடன்,

பிறன் மனை நோக்காத பேராண்மையனாக இருந்தால் மேலும் மேம்பட்ட அறவன் ஆவன் என்கிறார். அறன் கடை நின்றார் எவர் எனின் பிறன் கடை நின்றார் என்றும் கூறுகிறார்.

பெரியவர் எவர் என்பதை, 'அறனறிந்து மூத்த அறிவுடையார்' அவர் உறவைத் திறனறிந்து தேர்ந்து கொள்ளல் வேண்டும் என்று பெரியாரைத் துணைக் கோடலில் கூறுகிறார்.

அறவர் உறவே அறவராய் நிலைக்க உறுதுணை என்கிறார்.
அறத்தோடு பொருந்தாச் செயல்வகையில் ஒருவன்
வறுமையுற்றால், அவ்வறுமையுற்றவனைத் தாய்தானும்
ஒப்பமாட்டாள்; ஒதுக்கித் தள்ளுவாள் என்பதை,

"அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்." (1047)

என்கிறார். இவற்றாலும் இன்ன பிறவற்றாலும் எப்பாலும் அறமே திகழ வேண்டும் என்பது முப்பாலார் முடிவு என்பது புலப்படும்.

இயற்கை தானும் அறக்காவலதாய் உள்ளமையை,

"அறம்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறம்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை." (189)

என்பதாலும்,

"என்பி லதனை வெயில் போலக் காயுமே
அன்பி லதனை அறம்" (77)

என்பதாலும் கூறும் வள்ளுவர் உள்ளம், உலக இயற்கையாம் **இயங்கியலும் அறவழிப்பட்டது** என்பதை உணர்த்தும் என்க.

✦✦✦

உ. அறிவு

அறிவின் இலக்கணம் என்ன? அறிவியல் ஊழியாக விளங்கும் இக்கால அறிவு விளக்கத்திற்கும் தொல் பழங்கால அறிவு விளக்கத்திற்கும், **அறிவின் இலக்கணம் ஒத்து வருமா ?**

தமிழ் கூறும் உலகம் விரிந்து, மண்ணகப்பரப்பெல்லாம் காணும் வகையில் கடல்உலாக் கொண்ட விரிவும் விரிந்து, அண்டம் விட்டு அண்டம் செல்லும் நிலையில் வளர்ந்த அறிவுக்கும், பண்டை அறிவுக்கும் அமைந்த இலக்கணம் ஒன்றாக இருக்குமா?

இருக்கும்; இருந்தே தீரும்; என்பதைக் காட்டுகிறது வள்ளுவம்.

அறிவு என்பது, "**அறிதோறும் அறியாமை காணல்**" என்பதாகும் (110). ஒன்றை அறியும் போது, அதற்கு முன் அதை அறிந்திலோமே என்ற எண்ணம் ஏற்படுமானால் அதற்குப் பெயர் அறிவு என்பதாம்.

இற்றை அறிவியல் இலக்கணம் இதுதானே!

கல்லையும் கல்லையும் தட்டித் தீ உண்டாக்கிய நிலை இன்று இல்லை! விளக்கு, திரி, எண்ணெய், தீ எனத்தேடும் நிலை இன்று இல்லை! கிழியஞ்சட்டி – குத்து விளக்கு – சுவரொட்டி, தூக்கு விளக்கு, ஆவி விளக்கு என்பவை காட்சிப் பொருளாயின. **என்ன மாற்றம் வந்தாலும் அறிதோறும் அறியாமை என்னும் அறிவின் இலக்கணம் மாறிற்றில்லை.** என்னை அறிந்திலேன் இத்தனை காலமும் என்று அறியும் போதுதானே அறிவு விளக்கம் ஆகின்றது; எல்லாம் அறிந்தேன்; அறிய வேண்டுவதில்லை எனின், அறிவுக்கு மூடுவிழா ஆகிவிட்டது அல்லவா!

"எனக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும்; அந்த ஒன்றும், ஒன்றும் எனக்குத் தெரியாது என்பது தான் என்ற சாக்கிரடீசர் அறிதோறும் அறியாமை கண்டவர் அல்லரோ!

பத்தாண்டுகளுக்கு மேலாகச் சிறைவாழ்வு கொண்ட நேரு, சிறைச் சாலையில் இருந்த போது படித்த நூல்களைப் பற்றி. என்ன அளவீடு செய்கிறார்? "**நான் எவ்வளவு அறியாமையுடையவனாக இருந்தேன் என்பதை அறிந்து கொள்ள வாய்த்தது சிறைச்சாலை வாழ்வு**" என்றதன் பொருள் என்ன? அறிதோ றறியாமை கண்டமை தானே!

அறிவின் முக்கூறுகள் பற்றி வள்ளுவர் 'நுண்மாண் நுழைபுலம்' என்கிறார் (407). அவை, நுண்மை , மாண்மை , நுழைமை! அறிவு நுட்பமானது! அறிவு விரிவானது! அறிவு ஆழமானது! குண்டூசியும் ஆய்வுப் பொருளே! குன்றமும் ஆய்வுப் பொருளே! பூவும் ஆய்வுப் பொருளே! பூதமும் ஆய்வுப் பொருளே! ஆழ்கடலும் ஆய்வுப் பொருளே! விரி வானும் ஆய்வுப் பொருளே! எவை எனினும் ஆய்வு அடிமனை, அறிதோறும் அறியாமை என்பதே!

அறிவின் எல்லை காண இயலுமா? **எல்லையிலா ஒன்றற்கு எல்லை காண்பது எப்படி? வரம்பில் அறிவு** என்பது இறைமைப் பண்பாகக் கூறப்படுவது. ஆதலால், 'அறிவே கடவுள்' என்றனர். அதன் இலக்கணத்தை இறையிலக்கணமாக்கி **'ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே'** என்றார் மாணிக்க வாசகர்.

நுணுக்கத்தில் நுணுக்கமாவது அறிவு; அவ்வாறே, அகற்சியில் அகற்சி யாவதும் அறிவு! என்பதை, 'அஃகி அகன்ற அறிவு' என்பார் வள்ளுவர். 'புகை நுழையா இடத்தும் புலமை நுழையும்' என்பதால் அதன் நுண்மை புலப்படும்!

"உண்டைப் பிறக்கம் அண்டம்; நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" என்னும் போது, அறிவின் அகற்சி புலப்படும்.

இயற்கையான் மாந்தர்க்கு ஆறறிவு வாய்க்கின்றது.

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று - அறிதல்.

பொறிகள் வழியாகப் புலன்களைப் பெறுகிறோம்.

மெய்வாய் கண்மூக்கு செவி என்னும் பொறிகள் வழியே

பெறும் அறிவை அன்றி, மனத்தால் பெறும் அறிவே மாணறிவு.

அவ்வறிவு மற்றை உயிரிகளுக்கு இல்லாமையால் அறிவுகளில்

சிறந்த மன அறிவுடையர் வாழும் உயிர்; மன்னுயிர் எனப்பட்டனர். மக்கட் பேற்றில் திருவள்ளுவர் அறிவறிந்த மக்கட் பேறே பேறு என்கிறார். பெறும் பேறுகளில் எல்லாம் பெரும் பேறு மக்கட் பேறே என்பவர், பெற்றோர் தம் அறிவினும் தம் மக்கள் அறிவு மேம்படச் செய்வது கடமை என்று வலியுறுத்துகிறார். ஏனெனில் குடும்பச் சிற்றளவை உலகப் பேரளவாக விரித்து நிறுத்துபவர் அம் மக்கள் என்பதாலேயே யாம்.

"தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்பது அது 66).

அறிவு என்பது பகுத்தும் பிரித்தும் பிளந்தும் கூறு கொண்டும் காண்பது என்பதாலேயே 'அறு' என்னும் முதனிலை பெற்றது. பகுக்காமல் பிரிக்காமல் பிளக்காமல் கூறுபடுத்தாமல் நுணுகியும் விரிந்தும் நோக்காமல் ஐயம் திரிபு அற ஒன்றை உறுதிப்படுத்த இயலாது. ஆதலால் அறிவு என்பதே பகுத்தறிவு தான். ஆனால், அறிவின் பேரால் அறிவுக்கு ஒவ்வாப் புனைவு, போலிமை, கண்மூடித்தனம் என்பவை அறிவுடையவர்களால் இட்டுக் கட்டிப் பரப்பப்பட்டமையால், அவற்றை மறுப்பதற்காக அமைந்த அறிவு, **பகுத்தறிவு** எனப்பட்டது.

தமிழ்நெறிப்படி அறிவு என்பதே பகுத்தறிவு தான்!

தமிழாகக் கூறப்பட்ட நம் மொழி பன்மொழிக் கலப்புக்கு
ஆட்பட்டமையாலும் சிதைவு கொச்சைகளுக்கு இடமாயதாலும்
தனித்தமிழ் என்றும், **செந்தமிழ்** என்றும் வழங்கப்பட்டதைக்
கொண்டு அறியலாம்! தமிழ் என்பதே தனித்தமிழ் தான்!
செந்தமிழ்தான்! பால் என்பதே நல்லபால் தான்! கலப்படப்பால்
வந்ததால் நல்ல பால் என வழக்காகியமை போன்ற தென்க.

அறிவின் விளக்கத்தை 'அறிவுடைமை' என்றோர் அதிகாரமாகவே வகுத்த திருவள்ளுவர் மற்றை அதிகாரங்கள் சிலவற்றிலும் ஊடுபயிர் போல விதைத்துள்ளார்! உவமைப்படுத்தியுமுள்ளார்!

மனம் போன போக்கிலெல்லாம் போக விடாமல் தடுத்து நிறுத்தவல்ல ஆணை ஆசான் அறிவேயாம் என்கிறார்.

"சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு" (422)

என்னும் குறளின் நயத்தை எண்ணிப்பார்க்க

தொண்டைமான் இளந்திரையன் என்பான் ஆட்சியாம் வண்டி இயக்குதலைப் பற்றி எழுதிய பாடல் ஒன்று புறநானூற்றில் உள்ளது. அது,

"கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்

ஊறின் றாகி யாறினது படுமே
உய்த்தல் தேற்றா னாயின் வைகலும்
பகைக்கூழ் அள்ளல் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே"

என்பது (185). உருளையும் பாரும் இணைத்து இயக்கும் காவல் சகடத்தை வண்டியை) இயக்கும் ஒருவன், இயக்கும் தேர்ச்சியனாக இருந்தால் அச் சகடம் இடர்ப்படாமல் செல்லும். ஆனால், அதனைச் செலுத்துவோன் தக்கோன் அல்லனாக இருந்தால் நாள்தோறும் பகையாம் சேற்றுள் சிக்கிப் பலப்பல துயர்க்கும் அச் சகடம் ஆட்படும் என்பது அது.

கால்பார் கோத்த வண்டி என்ன ? கட்டை வண்டி, வில் வண்டி, தேர், மிதி வண்டி, மிதியுந்து, மகிழ்வுந்து, சரக்குந்து, தொடரி, கப்பல், வானூர்தி - எதுவாக இருந்தால் என்ன? இயக்குவோன் திறவோனாக இருக்க வேண்டும் அல்லவோ! இல்லாக்கால் ஏற்படும் துயர்க்கு எல்லைதான் என்ன? ஊர்தியை அல்வழி நீக்கி நல்வழியில் செலுத்துவதே அறிவாம்! திருட்டும் கொள்ளையும் வஞ்சமும் சூதும் கொலையும் பிறவும் செய்வார்க்கும் தேர்ந்த அறிவு உண்டு காண்! அஃது அறிவா எனின், அழிவாக்கும் அதனை அறிவு என்பது அடாத் தன்மையது!

இதனைத் திருவள்ளுவர் பிறிதோரிடத்தே, பிற உயிர்களின் துயரத்தைத் தன் துயர்போல் கருதாதவன் கொண்டிருக்கும் அறிவு அறிவாகாது! அவ்வறிவு பாழாம் அறிவு என்பார். அது,

"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய் போல் போற்றாக் கடை" (315)

என்ப து

அறிவு அழிவு செய்யாது! அழிவு வாராமல் காப்பதே அறிவு என்பதை,

"அறிவு அற்றம் காக்கும் கருவி"

என்றார். அற்றமாவது தீராச் சிக்கல் உள்ள பொழுது! தீராச் சிக்கலையும் தீர்க்கும் கருவி அறிவாகும். அன்றியும், மாறானவர்களும் தீமை செய்தற்கு இயலா வகையில் காக்கும் காப்பரணம் போன்றதும் அறிவு என்கிறார்.

"அறிவற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்" (421)

என்பது அது.

வரவிருப்பது ஆக்கமா கேடா, நலமா பொலமா என்பவற்றை அறிவுடையவர் தம் கூர்த்த அறிவால் அறிவர். மற்றவர்கள் பட்ட பின்னரே அறிவார்; - அப்பட்டறிவைப் பயனாக்கி யாவது தெளிவடைவாரா? மீள மீளப் பட்டழிவார்!

"அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்." (427).

வருவதையுணர்ந்து வாழ்வார்க்கு, அதிரவரும் துயர் இல்லை. அதனால் மாரடைப்புப் போலும் துயர்தானும் அவர்க்கில்லை.

ஏனெனில்,

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்."

என்றார் திருவள்ளுவர் (429)

இதனை உடையவர், அதனை உடையவர் என்று எண்ணிக் கணக்கிடல் வேண்டா. அறிவை மட்டும் தேடிக் கொண்டு விட்டால் போதும். அவர் அனைத்து உடைமைக்கும் உரியவர். அறிவிலார் மற்றைப் பல உடைமைகளை உடையவர் ஆயினும் அவர் எதுவும் உடையவர் ஆகார்!

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்" (430)

இனி, அறிவு அறிவு என்பது தான் என்ன?

எவர் எவ்வளவு பெரியவர் எனினும், தெளிவுடையவர் எனினும் நெருங்கிய நேயர் எனினும் அவர் சொல்பவற்றை அப்படியே சரியானதென்று நம்பி விடாதே! உன் அறிவுக்குத் தக எண்ணிப்பார்; நான் சொல்வதே எனினும் அதனையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் உன் அறிவொடு உராய்ந்து பார்த்துத் தக்கது என்றால் ஏற்றுக் கொள் இல்லையானால் தள்ளிவிடு என்கிறார் திருவள்ளுவர்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு!" (423)

வள்ளுவர் இப்படிச் சொல்கிறார் ஏன் ? தம் நூலைக் கற்பவர் கற்று. அறிந்து தெளிவுடையவராய் இடரிலா வாழ்வினராய் இலங்க வேண்டும் என்னும் விரிந்த மனத்தால்தான், இப்படிக் கூறினார். தமக்கெனக் கூட்டம் சேர்க்கவோ அதனால் பயன்பெறவோ எண்ணியிருந்தால், என் சொல்லே சொல்! அதற்கு மேல் எண்ணாதே! "என் சொல்லைக் கேட்டு நம்பினால் எல்லாப் பேறும் உன்னைத் தேடி வரும் என்று கூறியிருப்பார்! எந்தச் சமயத்தரும் - சமயக்குருவரும் - ஆய்ந்து பார்த்து அறிவுக்குத் தகுமானால் ஒப்புக் கொள் என்றாரா? புத்தர் சொன்னார்;" நான் சொல்கிறேன் என்பதற்காக நம்பாதே. உன் அறிவுக்கு ஏற்குமானால் நம்பு என்றார். அவர், நெறி அல்லது அறம் என்றே தொடங்கினார்! பின் வந்தவர்களோ புத்த சாதகக் கதை முதலாகக் கட்டுக் கதைக் கண்மூடித் தனத்தை வளர்த்து முற்றாகக் கட்டுக் குலைப்புச் செய்து விட்டனர்.

சாக்கிரடீசர் சிந்திக்க ஏவினார்; பெரியார் சிந்திக்க ஏவினார். சமய வாணர் தம்மை நம்புவாறு ஏவினர்; ஆனால் சுட்டப்பட்டவர்களோ ஒவ்வொருவரும் தம்மை - தம்மறிவை. தம் ஆழிய சிந்தனையை நம்ப ஏவினர்.

திருவள்ளுவர் மேலும் கூறினார்: -

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." (355).

ஒரு பொருள் தோற்றத்தால் கவர்வதாக இருக்கும். அதன் உள்ளீடு நேர்மாறாக இருக்கும். ஆதலால், வெளிப்படு நிறம் வடிவம் சொல் சுவை கொண்டு மட்டும் அதனை ஏற்றதெனக் கொள்ளல் ஆகாது. பெருங்கேடு உள்ளிருக்கவும் செய்யும். அதனால், அதனை நன்கு ஆய்ந்தே நலம் பயப்பதாயின் எடுத்துக் கொள்க என்கிறார்.

'இனிமை, இனிமை எனச் சுவைதான்! பின்னே வரும்

இனிப்பு நோய் எதனால்? அதனால்!

பனிநீர், பனிப்பழம், குளிர்குடி என்பன வெல்லாம் சுவைதான்.

ஆனால், பின்னே வரும் ஈளை, மூச்சிரைப்பு, திணறல் எவற்றால்? அவற்றால்!

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்

உறவு கலவாமை வேண்டும்" என்னும் வள்ளலாரியமும்,

"எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு" என்றும் (820).
"கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு" (819).

என்றும் வரும் வள்ளுவங்களும் எண்ண த் தக்கனவாம்

விரும்புவது வந்தால் ஓஓ என மகிழ்தலும், வெறுப்பது வந்தால் ஆஆ என அலறுதலும் ஆகா! **அது தொட்டாற் சுருங்கி வாழ்வு!** உயர்ந்தோர் பகலையும் இரவையும் மாறிமாறி வரும் இயற்கைய என்பது போல விருப்பு வெறுப்பு மாறி வருவதே உலகியல் எனக் கொள்வர். அவ்வாறு வாழ்வதே அறிவாகும் என்பதை,

"உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு" (425)

என்றும்,

"எவ்வ துறைவ துலகம் உலகத்தோடு
அவ்வ துறைவ தறிவு" (426)

என்றும் கூறினார்.

அறிவாளன் என்பதற்கோர் அடையாளம் காட்டுகிறார் வள்ளுவர்.

நான் சொல்வதை எவரும் புரியார்; பிறர் சொல்வதை நானும் புரியேன்; புரியாமல் சொல்லிப்புரியாமல் ஆக்குவதே யாம் புரிந்து கொண்ட அறிவு என இருப்பார் உலகில் இல்லாமல் இல்லையே! வள்ளுவர் கூறுகிறார். எளிதாக எவரும் புரியுமாறு சொல்லுதல், புரியா வகையில் பிறர் நுட்பமாகச் சொன்னாலும் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் ஆகியவை அறிவுடைமைக் கடையாளம் என்கிறார்.

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தாம்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு." (424)

என்பது அது

அறிவிலே காரறிவு, புல்லறிவு எனப் பல வகையுண்டு.

களவுக்குப் பயன்படும் அறிவு, நல்லறிவு தானா? இருளை - மறைவை - பிறர் அறியா திருக்கும் நிலையை - சோர்வைப் பயன்படுத்திக் கொண்டு, களவே, திருட்டே, கவர்வே, கொள்ளையே என வாழ்வார்

என்ன அறிவைப் பெற்றிருந்தாலும் அவ்வறிவு காரறிவேயாம். அவ்வறிவு ஒளியுடையார் அறிவு ஆகாது!

"களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்" (287)

ஏனெனில், அறிவுடையார் அறனறிந்தோர். ஆதலால், பிறர் பொருளை விரும்பார். உலகியலில் நிலைபேறானது இது; நிலையற்றது இது என இரு கூறுகள் உண்டு. நிலைபேறானதை நிலையற்றதாகவும், நிலை பெற்றதை நிலையற்றதாகவும் எண்ணல் நல்லறிவாகாது. அது **புல்லறிவாம்!**

"நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை" (331)

இன்னொரு புல்லறிவையும் சுட்டுகிறார் வள்ளுவர்.

தாம் செய்யும் குற்றம் குறைகளைத் தாமே உணர்ந்து திருத்திக் கொள்ளல் அறிவாகும். அவ்வாறு திருத்திக் கொள்ளாமல் தம் குற்றம் குறைகளைத் தம் அறிவால் மறைத்துக் கொள்வார் அறிவு. அறிவன்று. அது புல்லறிவாம்! ஆடையால் மான உறுப்பை அவர் மறைத்து வாழ்வதால் அவர் அறிவுடையவர் ஆகார்.

"அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி" (846)

அறிவுடைமையை விரித்துரைத்த வள்ளுவர் புல்லறிவாண்மை என்றோர் அதிகாரமே வகுத்துத் தெளிவு செய்தார்.

பொருளின்மை இன்மையன்று; அறிவின்மையே இன்மை என்பதை,

"அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு" (841)

என்கிறார்.

அறிவிலான் தன்னைத் தானே கெடுத்துக் கொள்வான். அவனைக் கெடுக்க யாரும் வேண்டுவது இல்லை. தனக்குத் தானே துன்பம் செய்து கொள்வதில் தலைப்பட்டவன் அறிவிலியே ஆவன் (843, 847)

அறிவிலிக்கு அறிவுறுத்த நினைக்கும் அறிவுடையவனும் அறிவிலியால் அறிவிலான் ஆக்கப்பட்டு விடுவான் (843).

பண்புடையாளர்களால் தான் உலகியல் செப்பமாக நடைபெறுகிறது என்றால், அதனை ஒப்பமாட்டான் அறிவிலி(850)

அறிவிலி தன் செல்வத்தைப் போலியர்க்கும் பொய்யர்க்கும் புனைகோலத்தவர்க்கும் வழங்குவானே அல்லாமல் நல்லோர்க்கு வழங்கான் (842).

இவ்வாறு அறிவிலான் இயல்பை விரித்துரைக்கிறார் வள்ளுவர்.

அறிவுடையவனைத் தாக்கும் வகையில் எத்தனை துயரங்கள் வந்தாலும் அவன் தன் அறிவால் அவற்றை அகற்றி வெற்றி வீரனாக விளங்குவான் என்பதை,

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்" (622)

என்பார்.

இனி, அறிவு பெறும் வகைமைகளையும் வள்ளுவர் தெளிவுறக் கூறுகிறார். மாந்தப் பிறவி **கல்வி கேள்வி தற்சிந்தனை பட்டறிவு** என்பவற்றால் அறிவைப் பெறு முன்னரே பிறக்கும் போதே பெற்ற அறிவு ஒன்று உண்டு. அது மரபு வழி அறிவு! கருவிலேயே அமைந்த அவ்வறிவு, தன் பிறப்பொடும் உள்ள அறிவு. ஆதலால், அவ்வறிவு **உண்மை அறிவு** எனப்படும்.

எத்தனை எத்தனை அறிவைப் பெற்றாலும் அவ்வுண்மை அறிவு மற்றை அறிவுகளினும் மேலோங்கி நிற்றல் உண்டு என்பதை,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்." (373)

என்கிறார்.

இவ்வுண்மை அறிவே முதலாவதாக அமைந்த அறிவாம்.

அடுத்துவரும் அறிவு கல்வியாலும், கேள்வியாலும் பெறும் அறிவு. கல்வியால் பெறும் அறிவு வெள்ளப்பெருக்கு என்றால், கேள்வியால் பெறும் அறிவு ஊற்றுச் சுரப்பு அன்னதாம்! கற்க வாயா இழப்பைக் கேள்வியால் ஓரளவு நிறைவு செய்யலாம் என்பதால் கல்வி, கேள்வி அதிகாரங்களை வகுத்தார். எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் என்றார்.

மேலும், தன் சூழலால் பெறும் அறிவு தற்சிந்தனை அறிவு, பட்டறிவு என்பனவும் ஒருவர்க்கு வாய்க்கும். சூழல் அறிவை,

“மனத்துளது போலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு” (454)

என்பார் மேலும் அதனை அருமையான உவமையால் விளக்குகிறார்.

“நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு” (452)

என்பது அது

“மனத்து மாசு அகலும் வகையில் கற்றலும் கற்றபடி நிற்றலும் வேண்டும்.

எண்ணும் எழுத்துமே கண்கள்

கற்றவரே கண்ணுடையவர்

செல்வர் செல்வம் பெற வறியவர் எதிர்பார்த்து நின்று பெறுவது போல் கல்வி வல்லோரிடம் கற்றல் வேண்டும்.

ஊற்றைத் தோண்டிய அளவு நீர் ஊறுவது போல் ஆழ்ந்து கற்கக் கற்க அறிவு ஊறும். எவ்வூரும் தம் ஊராகக் கற்றவர்க்கு ஆவதால் வாழுநாளெல்லாம் கற்றல் வேண்டும். ஒருமுகப்பட்டுக் கற்றால் அக்கல்வி என்றும் பாதுகாப்பாக அமையும்.

தாம் பெற்ற கல்வி இன்பத்தைப் பிறரும் பெறவேண்டும் என்னும் எண்ணத்தால் கற்பவரும் கற்பிப்பவருமே கற்றோர்.

அழியாததும் கேடுதராததுமாம் கல்வியை ஒத்த செல்வம் வேறு இல்லை. **இவை கல்வி அதிகாரச் சுருக்கம்**

கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் கேள்வி பயன் செய்வதைக் கூறுகிறார்.

செவிச் செல்வம் செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வம். வயிற்றுச் சுவையுணவினும் செவிச் சுவையுணவாம் கேள்வியே சிறந்தது. நாவுணவு வாய்க்குமிடம் தேடிச் செல்வது போல், செவியுணவு வாய்க்குமிடம் தேடிச் செல்லுதல் வேண்டும்.

கல்வியைப் பெறாதவரும் கேள்விச் செல்வம் பெற்றால் வறந்த காலத்து ஊற்று நீர் போல் பயன்படும்.

வழுக்கல் நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்று கோல் உதவுவது போல் கேள்வி உதவும்.

நல்லவற்றைக் கேட்ட அளவு நலமாம்.

நல்ல கேள்வியறிவாளர் அறியாமை அகல்வர்.

கேளாச் செவியினும் குறையுடையது கேட்கும் செவியிருந்தும் கேளாச் செவியை உடையராதல்.

கேள்வி அறிவிலார் பணிவுடையராக விளங்குதல் அரிது.

செவிச் சுவை உணராமல் வாய்ச் சுவையே வாழ்வாவார், வாழ்ந்தாலும் அழிந்தாலும் என்ன பயன்?

இவை கேள்வி அதிகாரச் சுருக்கம்.

கல்லாமை அதிகாரத்திலே, கற்றவர் மக்கள்; கல்லார் விலங்கு என்கிறார்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோ டேனை யவர்"

என்பது அது. மக்கள் அடையாளமாம் அறிவைப் பெறாமல் விலங்காகக் கீழ்மையடையாதே என்று அவ்வதிகார நிறைவில் கூறுகிறார்.

✦✦✦

3. அறிவியல்

தமிழைக் 'கலைமலி தமிழ்' என்பர். 'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்றும் எண்ணினர். எண்ணுவார் எண்ணத்தின் அளவே இது. எண்ணி முடிக்க முடியாததாய் என்றும் வளர்வதாய் உள்ளதை எண்ணிமுடியமா? எண்ணின், இறந்தாரை எண்ணிக் கொண்டற்று என்பதாகவே முடியம்.

தமிழியல் ஆயாதவர் எழுப்பும் வினா, தமிழில் அறிவியல் உண்டா? அறிவியல் கற்பிக்கத் தமிழாகுமா? என்பவை. அவர்கள் செய்துகெண்ட முடிபு 'இல்லை' ; 'ஆகாது' என்பவையே! ஏனெனில் அவர்களிடம் தமிழ்ப்பற்றோ தமிழறிவோ இல்லை என்பதைத் தாமே வினாவித் தாமே விடை கூறிக் கொண்டதாம்!

'உன்னால் முடிந்தால் தமிழால் முடியும்! தமிழைப் போல் உயர்ந்த மொழியும் இல்லை; அதே பொழுதில், தமிழரைப் போல் தாழ்ந்தவரும் இல்லை என்பதை மெய்ப்பிக்காமல் ஒதுங்கி நிற்கும் ஒன்றே உருப்படியான செயலாம். உனக்கும் அது புகழாம்; மொழிக்கும்

ஆக்கமாம் என்பதே நன்முடிபாம். இனித் திருக்குறளில் அறிவியல் என்றால் என்ன ஐயா, திருக்குறள் அறநூல் என்றீர்கள்! அறநூலில் அறிவியல் உள்ளது என்று கூறத் தொடங்கிவிட்டீர்கள்! திருவள்ளுவர். ஆய்வுக்கூடம் வைத்துக் கருவிகளைக் கொண்டு ஆய்ந்தவரா? என வினா எழுப்புவர்.

திருவள்ளுவர் 'அகர முதல' என்றார். இத் தொடக்கமே அறிவியல் தொடக்கமாம். ஒட்டி இருக்கும் இதழ்களை அகலத் திறந்து ஓசை எழுப்பினால் அதன் ஒலி அகரமாம்! அகலத்தின் வழியே பிறப்பது அகரம் என்பது பொருள் பொதிந்த அறிவியல் பெயரீடு அல்லவா!

முதல் என்பது என்ன? முதல் மூவர் என்றால் முதல் என்பது ஒன்று என்னும் எண் தானே! முதன்மை, முதல்வர் என்பவை முதன்மையோடு சிறப்பும் இல்லையா? கிழங்கு, தண்டு, வேர், வித்து, விந்து என்பவை முதல் இல்லையா? முதல் என்பது தானே மூலம்!

எந்த ஒன்றும் முதல் இல்லாமல் முளைத்தல் வளர்தல் கிளைத்தல் பூத்தல் காய்த்தல் இல்லையே!

'வள்ளி முதல் அரிந்தற்று', 'வளி முதலா எண்ணிய மூன்று' 'முதல் இலார்க்கு ஊதியமில்லை'; 'முதற்றே உலகு' என்பவற்றை எண்ணினால் முதலின் விரிவு புலப்படுமே. வித்து முதல், வேர் முதல், தண்டு முதல், கிழங்கு முதல், விந்து முதல் என்பவை இல்லாமல் எந்த உயிராவது தோற்ற முறுமா? ஒரு தோற்றமும் வளர்ச்சியும் விரிவாக்கமும் அமைந்தவை தாமே வழி வழி மரபு! நாம் காணும் புல்லோ பூண்டோ மரமோ செடியோ கொடியோ புழுவோ பூச்சியோ பாம்போ பல்லியோ மானோ புலியோ மாந்தரோ ஒருமுதலில் இருந்து பிறந்து பரவி விரிந்த விரிவாக்கம் தாமே! இவை அறிவியல் இல்லையா?

'அகர முதல' என்பதனொடு இகர ஈறு ஒட்டினால் என்ன ஆகும். அகர முதலி ஆகும். அகரத்தொடு ஆதி சேர்த்தால் அகராதி ஆகும். அகராதி நிகண்டு என்று ஒரு நிகண்டு நூல் உண்டாயிற்றே! அகர முதல என்பதன் வழியாகப் பிறந்த அறநூல்கள் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என்பவையாம். ஔவையார் ஆத்திசூடியின் பின்னர் ஆத்திசூடிகள் எத்தனை? அகர முதல என்பது ஒரு பாரிய வரலாற்றையுடைய தாயிற்று இல்லையா?

பகவன் என்பதொரு சொல் முதற்குறளில் இடம் பெற்றுளதே! அது, அறிவியல் ஆக்கமா? கடவுளாக்கம் கண்மூடித்தனம் என்னும் பகுத்தறிவு. உலகில் பகவன் அறிவியல் சொல் என்பது ஏற்கப்படுமா?

'அறிவியல் ஆக்கம் ஆகாது' என்பது பகுத்தறிவு நோக்கு. அந்நோக்கு ஏன் வந்தது? கடவுள் ஓர் உருவமும், ஒரு பேரும், உடையதன்று. அதற்கு மாந்தரினும் இழிமைப்பட்ட செயற்பாட்டுக் கதைகளும் தோற்றம் பற்றிய அருவறுக்கும் புனைவுகளும் வள்ளுவர் வழியில் அறவே இடமில்லையாம்.

பகல், பகவு, பகு, பகுப்பு, பாத்தி, பாத்தூண், பக்கு, பகை என்பனவெல்லாம் வள்ளுவம் வழங்கும் சொற்களாம். இவையெல்லாம் அறிவார்ந்த சொற்களாம். இப்படி அறிவார்ந்த சொல்லே பகவன் என்பதாம். பகவு + அன் = பகவன். அறிவு + அன் = அறிவன் எனப்பட்டது போன்ற சொல்லியல் முறை அதுவாம்!

"இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்". (1068)

என்பது வள்ளுவம். பக்கு என்பது பிளவு. இன்னும் மக்கள் வழக்கில் புண் காய்ந்து பக்குவிட்டு விட்டது எனப்படுகின்றது. புண் காய்ந்து மேல்தோல் பிரிந்து விடுதல் பக்கு என்பதாம். நாளைப் பகல் இரவு என்றும் நட்பு உடைவது பகை என்றும் வழங்கப்படுவது இல்லையா? பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறம் உயிரறம் என வள்ளுவம் வழங்கவில்லையா?

உலகத்தை வெளி, வளி, தீ, நீர், நிலம் எனப்பகுத்து, ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாகப் பகுத்து, அவ்வவற்றுக்குத் தகப்பிறப்பும் உணவும் வாழ்விடமும் பகுத்துப் படியளக்கும் இயற்கையைப் பகவு என்பதை எண்ணினால், பகவின் உண்மை விளங்கும். மக்கள் வழக்கில் படியளப்பவன் என்பதை நினைக.

இனி, உலகு என்பதை எண்ணுவோம், உல், உலம், உலை, உலவுதல், உலா என்பவற்றை எண்ணினால் உலகம் என்னும் பெயரில் அறிவியல் விளக்கம் காணலாம்.

பழநாளில் மல்லர் பயிற்சிக்காக உருண்டைக்கற்கள் ஊர்மன்றங்களில் போடப்பட்டிருக்கும். பயில்வார் சிறிய உருண்டையில் இருந்து சற்றே பெரிது பெரிதாகத் தூக்கித் தோளுக்கு மேல் உயர்த்திப் பின்னே போடுதல் வழக்கம். வாலியர்கள் பயிலும் பயிற்சிக் கல் ஆதலால்

இளவட்டக் கல் என்றனர். உலம் எனப்பட்ட அவ்வுருண்டைக் கல்லைச் சீவகன் தூக்கி எறிந்து விளையாடியதை, உலம் கலந்த தோளினான் என்கிறது சிந்தாமணி! உருண்டைக்கல் மேல் வெந்த இரும்பை வைத்து அடித்த இடம் உலைக்களம் எனப்பட்டது. அக்கல் உலைக்கல் எனப்பட்டது. சமையல் செய்யும் அடுப்பாக மூன்று உருண்டைக் கல்லை வைத்தலை உலை கூட்டல் என்பர். பட்டுப்புழுவின் கூடு உருண்டை வடிவினது. ஆதலால் 'உலண்டு' எனப்பட்டது. உலகம் என்பது உருண்டையானது என்னும் அறிவியல் உண்மையை வெளிப்படுத்தும் சொல் என அறியலாம்.

உலாவச் செல்லுதல் உடல்நலம் என வலியுறுத்தும் காலம் இது. பழநாளில் அரசர்கள் வீதி உலாக் கொண்டனர்; தெய்வ உருக்களை வீதியுலாக் காட்சியாக்கல் கண்கூடு. உலா என்றோர் சிற்றிலக்கியமும் உண்டாயிற்று. உலாப்புறம் என்னும் கொடை நிலமும் உண்டு. இவற்றால் உலாவுவது உலகம் எனப்பொருள் தருதல் வெளிப்படை. கதிரும் மதியும், கோள்களும் மீன்களும் என்பவை எல்லாம் உலாவுதலையுடையவை என்னும் அறிவியல் உலகம் என்பதில் உண்டு அல்லவோ! சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் என்று வள்ளுவர் சுழற்சியைக் கூறவில்லையா?

உலாச் செல்வார் எப்படிச் செல்வார்?. வலமாகச் செல்வார். அதனால் திருக்கோயில் வலம், ஊர்வலம், நகர்வலம் என்பவை வழக்காயின! உலகம் உருண்டை ; அது உலாவருவது; அவ்வுலா வலமாக அமைந்தது என்னும் மூன்று இலக்கணங்களும் உலகு உலகம் என்பவற்றில் உள்ளமை அறியலாம்.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு"

என்னும் திருமுருகாற்றுப்படையை ஒப்பு நோக்கி மகிழலாம். ஆக முதற்குறளிலேயே அகரம், முதல், பகவன், உலகு என்னும் நான்கு சொற்களிலும் அறிவியல் தேங்கிக் கிடப்பதை உணர்வார் மேலும் மேலும் கண்டு மகிழ்வர். திருக்குறளாம் அறநூல் அறிவியல் செறிவும் கொண்டது எனத் தெளியலாம்.

ஒரு புதிய சிந்தனை உண்டாகிறது. அச்சிந்தனை அதற்கு முன்னைச் சிந்தனையைக் காட்டிலும் உயர்ந்ததாக இருக்கிறது. அந்நிலையில் பழைய சிந்தனையை அதுவென்று விடுகின்றது.

ஒரு புதிய கண்டுபிடிப்பு உண்டாகின்றது. பழைய கண்டு பிடிப்பினும் பெருமையும் பரவுதலும் கொண்டு விடுகின்றது.

நாம் ஒரு காட்சியைக் காண்கிறோம். நம்மை வயப்படுத்துகிறது. இதனை நாம் அறியாமல் போய் விட்டோமே என நினைக்கிறோம்.

நம் பக்கத்திலேயுள்ள ஒருவர் பெரியவர்களால் பாராட்டப்படுகிறார்; பக்கத்து வீட்டில் இருந்த நாம் அவரைப் பற்றி அறியவில்லை . இதனை அறிந்ததும் இவ்வளவு பெருமைக்குரியவரா, நமக்குத் தெரியாமல் போய் விட்டதே என்கிறோம்!

இப்படி எத்தனை எத்தனையோ புதுமைகளைக் காணும் போது நாம் அறிந்தவை எல்லாம் அறியாதவை போலாகி விடுகின்றன. இதனை 'அறிதோறு அறியாமை' காணப்படும் என ஒரு நெறியாகக் கூறிவிட்டால் உலகமெல்லாம் அப்பெயரால் பரவிவிடும். ஐன்சுதீன் கொள்கை, நியூட்டன் கொள்கை, இராமன் கொள்கை என்பவை போல வள்ளுவர் கொள்கை எனப்பட்டிருக்கும். அறிவியலின் இலக்கணமே 'அறிதோ றறியாமை' என்பது தான்! ஆக, அறிவியல் கொள்கையைத் தந்த வள்ளுவரை நாம் அறிவியலாளராகக் காணவில்லை! கொள்ளவில்லை! பரப்பவில்லை! அதனால், அவர் கண்ட அறிவியல் கொள்கை, மூங்கையன் கையில் கிடைத்த புல்லாங்குழல் போல ஒலியின்றிக் கிடக்கிறது!

எங்கள் இல்லறத்தால் யாங்கள் அடையும் - நாள்தோறும் அடையும் - புதிய புதிய இன்பங்களைக் காணும் போது இதனை இது வரை அறிந்திலோமே! அறிந்திலோமே என ஒவ்வொரு முறையும் வியப்பு ஏற்படுகின்றது என்பதாகத் தலைவன் கூறும் காமத்துப் பால் செய்தி அறிவியல் இலக்கணம் என்பதை நாம் அறிந்தோமில்லையாம்!

"அறிதோ றறியாமை கண்டற்றால் இன்பம்
செறிதோறும் சேயிழை மாட்டு" (1110)

என்பது அது. வள்ளுவர் காட்டியது அறிவியல் இலக்கணம் எனினும், அதனை நாம் அந்நோக்கில் காணாமையால் கண்டு கொள்ள வில்லையாம்! அறிவியல் நோக்கில் திருக்குறளை நோக்கினால் அவர் கூறும் அறத்தில் அறிவியல் ஊடுபயிராக விளங்குவதைக் கண்டு கொள்ளலாம்.

மழை இல்லாமல் புல்லும் முளையாது என்கிறார். உயிரிகளில் முற்பட்டது 'புல்'. அதுவே மழையில்லா விடில் முளையாது என்றால் பிற விளைவுகளைச் சொல்லவேண்டியது இல்லை என நாம் அறியமுடியும்.

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது" (16)

என்பது அக்குறள். அதே வான் சிறப்பில்,

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்". (17)

என்கிறாரே!

மழை பொழியவில்லை என்றால் கடலும் தன் தன்மையை இழக்கும்; தான் தரும் வளங்களைத் தராததாகிவிடும். கடலுக்கும் மழை நீர் வேண்டுமா? மழை பெய்யா விடில் கடல் தன்மை, கடல் வளம் குன்றிப்போகுமா?

நாம் ஐயுறும் இதனை மீனவரிடம் கேட்டால் பொழிந்து தள்ளி விடுவார்கள். மீன் வளம் கலிக்காது! உப்புக் கடுப்புமிகுதலால் கடல்வாழிகள் நலிந்து போகும்; முத்துத் திரளாது; பவழக் கொடி படராது; நன்னீரைத் தேடிக் கழிமுகத்திற்கு வலசையாக வரும் மீன் வரத்து இல்லாமல் போய் விடும்! இப்படி அடுக்குவர்!

அறிவியல் பார்வை இல்லாக்கால் எழிலி நல்காவிடின், நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் என்று கூறியிரார்! தடிந்து எழிலி என மின்வெட்டி இடித்துப் பெருமழை பொழிதலைச் சுட்டியிரார்! கடலுக்கு ஒரு கால்வாய் நீர்வந்து என்ன பயன்?

மாசுக்கட்டுப்பாடு என்பது ஒரு புத்தம் புதுத்துறை; அறிவியல் வளர்ச்சி வழியால் உண்டாகியுள்ள துறை; மாசு என்பது ஒன்றா இரண்டா? சாய்க்கடை, பாசிபடிந்து நாறிய குட்டை, அழுகுபொருள் குவியல், ஆலைக்கழிவு, குமட்டும் வளி, வேதிம ஆவி, வண்டிப்புகை, கடுமொலி, கலப்படம், எரிகரி, புகைப்பெருக்கு என இவை தாமா மாசு? இன்னும் எண்ணுவார் எண்ணப்படி விரியும்! மாசில்லா நீர், காற்று உணவு, காய்கறி, குடிப்பு முதலியவை காணமுடிகின்றதா? மாசுக் கட்டுப்பாடு தன் கடமையைச் சரியாகச் செய்தால், புதுப்புது மாசுகள் உண்டாகுமா? மாசுக் கட்டுப்பாட்டிலேயே மாசு புகுந்துள்ளமை

அவ்வப்போது அறியவராமல் இல்லையே! மதுவிலக்கே, கள்ளமதுக் காய்ச்சை ஊக்கவில்லையா?

மாசுக் கட்டுப்பாடு எங்கே தோன்ற வேண்டும்? எவர்க்குத் தோன்ற வேண்டும்? எப்பொழுது தோன்ற வேண்டும்?

மாசுக்கட்டுப்பாடு விதிவிலக்கு இல்லாமல் எங்கும் தோன்ற வேண்டும். மாசுக்கட்டுப்பாடு இவர் அவர் என்னாது எவர்க்கும் தோன்ற வேண்டும். மாசுக்கட்டுப்பாடு எப்பொழுதும் இருந்தாக வேண்டும்! **அந்தக் கட்டுப்பாடு மாந்தராகப் பிறந்த அனைவர் மனத்தும் இருத்தல் வேண்டும்!** அறங்களில் எல்லாம் தலைப்பட்ட அவ்வறமே மாசுக்கட்டுப்பாட்டின் மூலநிலை! முழுநிலை! அங்கே தோன்றவில்லையா மாசுக் கட்டுப்பாடு? எங்கும் ஒழியாது! என்றும் ஒழியாது! மன மாசே எல்லா மாசுகளுக்கும் பிறப்பிடம்! எத்தகைய பெரிய அறிவியல் செய்தி இது! **உலகத் தூய்மை உளத்தூய்மையிலேயே இருக்கிறது என்பதை உலக அறிவியல் அறமாகப் போற்ற வேண்டும் அல்லவா!**

பூ என்பது மலர்; மலர்தல் விரிதல் பொருளது.

பூ, விரிதல் பொருளது ஆதலால், பூதம் என்பதும் விரிதல் பொருள் கொண்டது. நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் என்றார் தொல்காப்பியர்.

ஒலி ஊறு ஒளி சுவை மணம் என்பவை, விண்வெளி வளி (காற்று) கதிர் (மீன் கோள்) நீர், நிலம் என்னும் பூதங்களின் வெளிப்பாடுகளாம். பாரிடை ஐந்தும், நீரிடை நான்கும், தீயிடை மூன்றும், வளியிடை இரண்டும் வெளியிடை ஒன்றும் அமைந்தமையை அறிவர் கூறுவர்.

இவற்றைச் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றும்

'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிதல் என்றும் கூறுகிறார்.

"சுவையொளி ஊறோசை நாற்றமென்று ஐந்தின்
வகையறிவான் கட்டே உலகு" (27)

என்றும்,

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள" (1101)

என்றும்,

'ஐந்தவித்தல்'

என்றும்,

'ஐந்தடக்கல்'

என்றும் விரித்துரைப்பார். பூதங்கள் ஐந்தும் கூடியது உலகம் என்பது போல் உடலும் ஐம்பூதத்தால் அமைந்ததே என்பர்.

கால் (நிலம்) குடல் (நீர்) நுரையீரல் (தீ) கழுத்து (காற்று) தலை (வெளி அல்லது விண்) என ஐம்பூத அமைவு கூறுவர். திருவள்ளுவர் உடலில் ஐம்பூதம் இடமாகி இருப்பதை,

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்." (28)

என்பார். மாந்தர் குடியிருக்கும் மனையும் அடி முதல் முடி வரை ஐம்பூத அமைவு கொண்டுள்ளமையை அறியலாம். கீழே மண்; அதன் மேல் நீர்; அதன் மேல் தீ; மேல்வளி, வெளி! இனி, ஊழ் என்பது உலகத் தியற்கை என்று வள்ளுவர் தெளிவுபடுத்துவார்.

அவ்வூழ் ஆக்கம், அழிவு (ஆகூழ், போகூழ்) என இருவகைப்படும் என்பார். உலகம் அவ்வாறு இருவகையும் கொண்டிருத்தலை இருவேறு உலகத்து இயற்கை என்பார்.

எப்பூதத்தை எடுத்தாலும் ஆக்கமும் கேடும் அமைந்திருக்கக் காணலாம். எந்த மண் நிலையானதாகக் காட்டி நம்மை நிலைக்கச் செய்கிறதோ அது, நில நடுக்கத்தால் அழிவு செய்கிறது. உள்வாங்குமண் கொண்டுள்ளது. எந்த நீர் இல்லாமல் உலகம் இல்லையோ அந்த நீரே ஆழிப் பேரலையாய் உலகை அழிக்கிறது. எந்தத் தீ இருள் போக்குவதாய் உணவு முதலாம் நலமாக்குவதாய் உள்ளதோ அது, ஊரும் காடும் எரியச் செய்கிறது! எரிமலையாய்க் கக்குகிறது. எந்தக் காற்று இல்லாமல் வாழ முடியாதோ அந்தக் காற்றே மலையையும் புரட்டுகிறது! தலை எப்படித் தப்பும்!

எந்த விண் பறவை போல் பறக்கவும் அண்டவெளிகள் தந்து அண்டங்கள் சுழலவும் இடமாகிறதோ அதே விண் வானூர்தியை வீழ்த்துகிறது; அண்டப் பிதிர்வு, எரி கொள்ளி வீழச் செய்கிறது.

ஊழ் என்பது இருவேறு உலகத்து இயற்கை என ஒருமுறைக்கு இருமுறை கூறியிருந்தும் ஊழ்வினையாகக் கொண்டு விட்ட நாம் அதனை அறிவியல் என அறிந்து கொள்வோமா? நம் பார்வையே மாறாகிப் போய் விட்டதே! நல் முடிபு எப்படிக் கிட்டும்?

இன்னும் சொல்கிறாரே,

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து." (353)

என்று. மண்ணில் இருந்தே விண்ணை அளந்து கூறவல்ல அறிவர்களைக் கண்ணேரில் கண்டால் அல்லாமல் இதனை இப்படி வள்ளுவர் கூறமுடியுமா?

அப்படிக் கூறியவர் இருந்தனர்; கணியர், முதுகண்ண ர், அறிவர் என்னும் பெயர்களால் சிறப்பிக்கப்பட்டனர்.

"செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரி தரு திசையும்
வறிது நிலைஇய காயமும்
என்றிவை சென்று அளந்து அறிந்தோர் போல
இனைத்தென்மரும் உளரே"

என்ற அறிவூழியில் வாழ்ந்த வள்ளுவர், அவர்களைக் கண்ட தெளிவாலேயே வையத்தின் வானம் நணிய துடைத்து என்றார் என்பதில் ஐயம் உண்டா ?

மேலும், நிலத்தின் இருவேறு நிலையை, மட்பகை, அளறு, களர் என்று சொல்கிறாரே! உள்வாங்கு மண், மணல் உண்டு அல்லவா! தாங்கும் என்று கால் வைத்ததும் தப்ப இயலாமல் உட்கொள்ளும் - உள்வாங்கும் - மண் அல்லவா அது! உட் பகையை விளக்க உள்வாங்கு நிலத்தை எடுத்துக் காட்டிய அருமை எத்தகையது!

காலாழ் களர் நிலத்துக் களிறும் புதையுண்ணலையும்,

அண்ணாத்தல் செய்யாது அளறு என்பதையும் வெளிப்படக் கூறுகிறாரே! இவையெல்லாம் பூதவியல் திறம் இல்லையா? வேளாண் அறிவியல் பெருகியுள்ள காலம் இது. வள்ளுவர் அவ் வறிவியலில் எத்தகு தேர்ச்சியராக இருந்தார் என்பதை உழவால் அறியலாம்.

நம் பழமொழிகளுள் ஒன்று **'சித்திரை மாதப்புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்'** என்பது. சித்திரை, வைகாசி, ஆனி முத்திங்களும் புரட்டிப் புரட்டி உழவேண்டும். களை அறவே இராது; நீர்ப்பதம் அற்று கட்டி

முட்டி அகன்று புழுதியாகும். அந்நிலையில் விதையிடுதலை, **'ஆடிப்பட்டம் தேடி விதை'** என்னும் பழமொழி விளக்கும்.

நெற்றியில் சிவக்குறியாக இடப் பெறும் திருநீற்றின் ஒரு பெயர் பூதி என்பது. அது புழுதி என்பதன் வழி வந்த சொல்! அதன் நொய்மையைப் போல் நிலத்தை உழுத புழுதி இருக்க வேண்டும்! **எள்ளுக்கு ஏழுழவு** என்பது பழமொழி! ஆதலால் புழுதியாகி மேலும் காயக் காய ஈரப்பதம் அறவே இல்லையாய் நொய்ப்புழுதி ஆகிவிடும். அந்நிலையே சாலும்! அதற்குக் கையளவு கூட எருப்போட வேண்டும் என்பதும் இல்லாமல் விளையும் என்பதைத்,

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்." (1037)

என்கிறார். முன்னே பலம், தூக்கு, துலாம், பொதி வண்டி என நிறுத்தல் அளவை இருந்தது. அதன் முன்னே பலம் என்பது தொடி என்று வழங்கப்பட்டது. தொடியை 100 கிராம் என இன்று மதிப்பிட்டால் அவ்வளவு புழுதியை 25 கிராம் உடையதாகுமாறு உழ வேண்டும்! கஃசு என்பது அந்நாளில் கால்பலம்! சுண்டக் காய்ச்சிய பால்போலச் சுண்ட உழுத உழவுப் புழுதி, பயிருக்கு அவ்வளவு ஊட்டமும் உரமும் ஆகும் என்பதாம்.

உழவு உழுதலே உரம் போடுதல் போலாம் என்கிறார். உரம் போட வேண்டா என்று கூறவில்லை . ஏரினும் நன்றாம் எருவிடுதல் என்றார்; அதன்பின் காலத்தே களையெடுத்தலையும் நீர் விடுதலையும் கண்ணும் கருத்துமாகக் காத்தலையும்,

"ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" (1038)

என்கிறார். ஏருழவுச் சிறப்பொடு எருவிடுதல் நலம் சேர்க்கும்; அதன்பின் களை வெட்டுதலும், நீர் விடுதலும், காவல் புரிதலும் ஒன்றின் ஒன்று நலம் சேர்க்கும் என்கிறார். களை வெட்டல் நீர் விடல் முறைமை! நீர்விட்டுக் களை வெட்டல் தக்கதன்றாம். காவல் எப்பொழுது வேண்டும் என்றால் எப்பொழுதும் வேண்டும் என்பதை அழுத்தமாகக் கூறுகிறார்.

கணவன் என்பான் கிழவன்; மனைவி என்பார் கிழத்தி. கிழவன் எங்கே சென்றாலும் எப்பணியில் இருந்தாலும் கிழத்தியை - கிழத்தி உறையும் வீட்டை - எண்ணி வருதலும் கடமைகளைத் தவறாது செய்தலும் கட்டாயம் வேண்டும்! ஒருபொழுது தானும் வீட்டுச் சிந்தனை,

வீட்டுச் செயல் இல்லாமல் இருத்தல் ஆகாது. அப்படி இருந்தால் மனைவியின் எண்ணம் என்னாம்? செயல் என்னாம்? வீட்டு நலம் என்னாம்? இவ்வாறே கிழவனாம் (நிலக்கிழார்) அவன் நிலமாம் கிழத்தியைக் கருதிக் கருதிக் கடமைகளைச் செய்தலும், காத்தலும் இல்லையானால் இல்லக் கிழத்தி போலவே நிலக்கிழத்தியும் ஊடிவிடுவாள் என்கிறார்.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்" (1039)

என்பது அது.

இவ்வளவுடன் நில்லாமல் எமக்கு எதுவும் இல்லையே என உழவன் சோர்ந்து கிடந்தால் நிலக்கிழத்தி உழையா அச் சோம்பனைக் கைகொட்டி நகைப்பாள்.

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்றும் நல்லாள் நகும்". (1040)

என்கிறார்!

வீட்டுக் கிழத்தியைப் பேணும் முறையில் காட்டுக் கிழத்தியையும் (வயற்காடு, புன்செய்க்காடு, தோட்டக்காடு, பண்ணைக்காடு, ஏர்க்காடு, கூப்புக்காடு) பேண வேண்டும் என்பதைக் கூறும் வள்ளுவர் இம்முறையே முறையாய் நாட்டுக் கிழத்தியை ஆள்வோன் தவறாது பேணல் வேண்டும் என்பதை,

"நாள்தொறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு" (520)

"நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்" (553)

என்பார்! வீட்டு நலம் இல்லாமல் நாட்டு நலம் எப்படியாம்?

"வீடென்ப வீடா வளத்தன" என்று ஆகாமல்,

"நாடென்ப நாடா வளத்தன" ஆவது எப்படி?

"வறிஞன் ஓம்புமோர் செய்யெனக் காத்தான்" என்பது கம்பன் வாக்கு.

வேளாண் அறிவியல் கல்லூரிகள் மல்கிய காலம் இது! பூதவியல் ஆய்வு பெருகிய காலம் இது! விண்ணியல் ஆய்வு கொடி கட்டிப் பறக்கும் காலம் இது!

வேளாண் அறிவியலார் விதையிலாக் கனி வகையை (Seed less) உண்டாக்கி உள்ளனர். குழந்தைகள் விரும்புவதிலும் பல்லிலா முதியரும் விரும்பும் பழப்பேறு பெற்று மற்றைக் கனிகளிலும் விலையும் ஏற்றி விற்கப்படுகின்றது. பழநாள் வள்ளுவர் இதனை அறிவாரா?

நல்ல மனைவி, அவள் இயல் செயல் எனவே வடிவெடுத்தமைந்த நல்ல கணவன், இவர்கள் இல்லற இன்பம் எப்படி இருக்கும்? இவ்வினாவுக்குத் திருவள்ளுவர், விதை இல்லாக் கனியைச் சுவைப்பது போலிருக்கும் என்கிறார்.

"தாம் வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி" (119)

என்பது அது. காழ் என்பது விதை, கொட்டை, கெட்டித்தன்மை. இல் - இல்லாத. காழில் - விதையில்லாத. நாடி பிடித்துப் பார்த்தல், குறிகளை அறிதல், நோயர் உரை, நீர் மலக்கட்டு அறிதல் என இவ்வளவு தானா மருத்துவ ஆய்வு! எத்தனை கருவிகள்; ஆய்வு முறைகள் ஓரிலக்கம் என்ன பல இலக்கம் இருந்தால் உள்ளே வா என்னும் நோய்கள்! இப்படி முற்றாக மாறிப் போய்விட்ட மருத்துவத் துறை! புதுப்புது நோய்வரவு! ஒன்றுக்கு நூறாக மருந்து வரவு! அறுவை! உறுப்பு மாற்றம் என்பன வெல்லாம் உள்ளமை! இக்காலத்திற்குத் தகவருமா வள்ளுவர் மருத்துவம் பற்றிக் கூறியது? என்பாரானால், உழவிலேதான் எத்தனை மாற்றம்? அந்நாள் ஏரும், வண்டியும், ஏற்றமும், அறுவடையும், களமடிப்பும் தேடித்தானே காட்சிப் பொருளாகக் காணமுடிகிறது! ஆயினும் இந்நாளுக்கும் தகுவதாக உள்ளமை கண்டோமே! அவ்வாறுதான் மருத்துவம் முதலிய பிறவுமாம்!

காமத்துப்பால் நிறைவு அதிகாரம் ஊடல் உவகை. அதிலே எண்ணியும் பாராத ஓர் உவகையை - ஊடல் அல்லாத ஓர் உவகையைக் கூறி, ஊடலுக்கு உவமையாக்குகிறார் (326)

உண்பது இன்பமா உண்டது எரிப்பது செரிப்பதும் இன்பமா, எனின், நாச்சுவை நம்பியர் என்ன சொல்வர்? உண்பது தான் இன்பம் என்பர்! உண்டது செரிக்காமல் படாப்பாடு படுபவரைக் கேளுங்கள்; 'உண்டது செரிப்பது தான் இன்பம்' என்பார்.

வள்ளுவர், "உணலினும் உண்டது அறல் இனிது"

என்கிறார்! மருத்துவ அறிவியலின் ஒப்பிலா **ஒரு தனி முத்திரைச் செய்தி** இதுவாம்!

மருந்து என்னும் அதிகாரத்தில், **"மருந்தென வேண்டா"** என்றே முதல் முழக்கம் செய்கிறார். நீங்கள் உடலைக் கெடுக்காமல் இருந்தால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை! ஆம்! வேண்டியதில்லை! என்கிறார். அதற்குரிய அடிப்படையைச் சொல்லவே அவ்வதிகாரம் பாடினார் போலப் பாடுகிறார்.

அற்றது போற்றி உண்க
அற்றால் அளவறிந்து உண்க
மாறல்லது உண்க
இழிவறிந்து உண்க
தீயளவறிந்து உண்க
துவரப்பசித்து உண்க

என்கிறார். இவற்றைக் கடைப்பிடித்தால் நோய் இல்லை! மருந்து வேண்டியிராது!

ஊதை பித்தம் கோழை என்பவை மிகினும் குறையினும் நோயாம் என்றவர் மருத்துவர் கடமையைச் சொல்கிறார்.

நோயை ஆய்க; அது வந்தவகையை ஆய்க; அதனைத் தீர்க்கும் வகையை ஆய்க; செய்யுமுறையால் செம்மையாகச் செய்க என்கிறார்.

மேலும், நோயன் நிலை, நோய் நிலை, நோயின் கால அளவு என்பனவும் ஆய்ந்து செய்க என்கிறார்.

மருத்துவம் என்பது நான்கு கூறுபட்டது. அவை நோயன், மருத்துவன், மருந்து, உதவியாள் என்பவை என்கிறார். மருத்துவத் துறை எத்தகைய விரிவடைந்தாலும் இந்நாற்கூறும் மாற்றமுறா அல்லவோ?

மருத்துவ வகையுள் ஒன்று ஒல்லியல் மருத்துவம் (ஓமியோபதி). அதன் அடிப்படை இலக்கணம், **எதனால் நோய் உண்டாகிறதோ அதனாலேயே அது தீரும் என்பது.**

"இரு நோக்கு இவள் உண்கண் உள்ள தொரு நோக்கு
நோய்நோக் கொன் றந்நோய் மருந்து" (1091)

நோயாக்கும் கண்ணே மருந்தும் ஆகிறது என்பதைக் கூறும் அவர்

"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து". (1102)

என்றும் கூறுகிறார்.

இக்குறளைக் கற்ற ஒல்லியல் மருத்துவ வல்லுநர் ஒருவர் எம் மருத்துவத்தின் அடிப்படையே இதுவாம் என்று பாராட்டுகிறார்.

நல்ல தூயநீர்; அது வெப்பமான இடத்தில் உள்ளது. அதே நல்ல தூய நீர் தட்பமான இடத்தில் (நிழலிடத்தில்) உள்ளது. எதை விரும்பிக் குடிப்பர் எனின், நிழலில் இருந்த நீரையே விரும்புவர் என்பது வெளிப்படை. ஆனால் நிழலில் இருந்ததால் மட்டும் நீர் விரும்பத்தக்க தாகிவிடுமா? நீர் நச்சு நீராக, நோய் பரப்பு நீராக நிழற்கண் இருந்தால், நிழலில் இருந்ததால் மட்டும் நல்லது ஆகிவிடாதே என ஒரே பொருளை எடுத்துக்கொண்டு விளக்கும் விளக்கம் அறிவியல் வளம் மிக்கதாம்! பாலும் தூயதாய் அதை வைக்கப்பட்ட இடமும் தூயதாய் இருக்கவேண்டும் அல்லவோ!

"நீரும் நிழலது இனிதே" (1309)

"நிழல் நீரும் இன்னாத இன்னா" (881)

என்பவற்றைக் காண்க.

இறப்பு இயற்கையாக ஏற்படுமானால் நாவெடுத்துப் பேசமுடியாத வண்ணம் உள்ளிழுத்தலும், அதன்மேல் விக்கல் எழுதலும் ஆகிய இயற்கையை உள்ளவாறு கூறியவை அறிவியல் நோக்குடையவையாம்.

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன்" (335)

என்பது அது.

ஒருவன் கொண்டுள்ள அறிவு அவன் மனம் சார்ந்ததாகத் தோற்றம் தரும். மெய்யாக ஆராய்ந்தால் அது அவன் மனம் சார்ந்ததாக இல்லாமல் அவன் சார்ந்த இனம் சார்ந்ததாக இருக்கக்கூடும்! ஆதலால் அவன் மன அறிவா அன்றி அவன் இன அறிவா எனத்தெளிக என்பது அரிய உளவியல் அறிவாம்.

நாம் இன்பமும் மகிழ்வும் கொண்டுள போதில் பொழுது போனதே தெரிய வில்லை! நெடிய பொழுதும் எளிதில் கடந்து விடுகின்றது!

வாட்டும் நோய் - வருத்தும் துயர் - எதிர்பார்க்கும் ஏக்கம் முதலாம் பொழுதுகளில் முட ஆமை நகர்வது போல் பொழுது போவதில்லை!

ஆனால் பொழுது அளவில் நீட்சியோ குறைவோ இல்லை! நம் மனத்தளவிலேயே நீட்சியும் குறைவும் ஆகின்றன.

"ஒருநாள் எழுநாள் போல் செல்லும்" (1269)

எவர்க்கு? "சேண் சென்றார்.

வருநாள்வைத் தேங்கு பவர்க்கு"

என்கிறார்.

"ஊடுக மன்னோ ஒளியிழை யாம் இரப்ப

நீடுக மன்னோ இரா" (1329)

என்கிறான் ஒரு தலைவன்! இரவு சுருங்குவதாக அவன் எண்ணலால் நீடுக இரா என்கிறான்!

வள்ளுவர் உளவியல் அறிவுச் சிறப்பை உள்ளவாறு அறிய மூன்றாம் பால் ஒப்பற்ற சான்றாம்.

கடலோடும் நாவாயை இடனறிதலில் சுட்டுகிறார் வள்ளுவர்.

நானில மெங்கும் தமிழர் நாவாய் ஓடிய காலம் வள்ளுவர் காலம்! நாவாய் அக்காலத்தில் காற்றை நோக்கியே செலுத்தப்பட்டமை

"வளி தொழிலாண்ட உரவோன் மருக"

"களியியல் யானைக் கரிகால் வளவ"

என்னும் புறப்பாடலால் புலப்படும்.

கலங்கவிழ்ந்த நிலையில் கண் இல் ஊமன் கடற்பட்ட செய்தியும் உண்டு! உய்ந்தவரும் உண்டு! இக்காலத்தில் மிதவைகள் சேம அச்சுப் போல உதவுகின்றன.

வள்ளுவர் காலத்தில் கலங்களில் பாதுகாப்பு மிதவைகளையும் கொண்டு சென்றனர். அதற்கு 'ஏமப்புணை' என்பது பெயர். ஏமம் - பாதுகாப்பு (1164) நாவாய் - கப்பல்; ஏமப்புணை - பாதுகாப்பாம் கட்டுமரம் போன்றவை. புணையாவது சிலமரங்களை இணைத்துக் கட்டியது. சேம அச்சு பற்றிக் கூறும் புறப்பாடல். சேமக்குப்பியும் உண்டு.

பொன் வெள்ளி செம்பு என்பவற்றைப் பார்க்கிலும் செய்பொருளுக்கு மதிப்புடைய காலம் இவ்வறிவியல் காலம்!

வள்ளுவர் **"செய்க பொருளை"** என்றதை எண்ணினால் அதன் அருமை புலப்படும். அதே போல் அறிவை, **"அற்றம் காக்கும் கருவி"** என்றதன் அருமையும் நோக்க வைக்கும்.

தீயவற்றில் உண்டாம் பற்றுமையை வள்ளுவர் தெளிவிக்கிறார்! உலகநலம் கருதிய உயர் நெஞ்ச வெளிப்பாடா? தீயவற்றின் கொடுமையை உரைத்துத் திருந்தி வாழச் செய்தலில் சான்றோரும் அரசும் செய்ய வேண்டும் கடமையை வற்புறுத்தியதா? இல்லை! இரண்டுமே தானா?

கையில் இருந்த பொருளை இழக்க இழக்க மேலும் விடாமல் ஆடும் ஈடுபாட்டை ஏற்படுத்துவது சூது என்கிறாரே! (940)

மதுவில் மயங்க மயங்க மாறா மயக்கமே நாட்டமாம் என்கிறாரே (1145)

"இழத்தொறூஉம் காதலிக்கும் சூது" (940)

"களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால்" (1145)

இவற்றை அறிவியல் உலகம் அறியாதா? அறிவியலாளர் இக்கேடுகளைத் தடுக்க வேண்டும் கடமை உண்டல்லவா!

அறிவியலும் ஐம்பூதங்களைப் போலவும்,

ஐம்பூதக் கூட்டமாம் உடலமைந்த மாந்தரைப் போலவும்,

ஐம்பூத ஆய்வாகி, ஆக்கமும் அழிவுமாம்

பகுதியாய்க் காணுதலாலும் விடிவு ஏற்படாமல் தான் போகுமா?

வள்ளுவ அறிவியல் அறவியல், அருளியல் சார்ந்ததேயன்றி, அழிவியல் சார்ந்தது இல்லையே!

வள்ளுவ வாழ்வியல் வையக வாழ்வியல் ஆனால், அறிவியல் அறவியலாய் அருளியலாய் இயங்கும்!

ஒன்று படாத் தமிழரா உலகுக்கு ஒன்றுபடக் குரல் கொடுப்பார்!
உலக மெய்யன் ஒருவன் பார்வையில்
பெய்யா மொழியாம் வள்ளுவம் வாய்த்தால்
நம் கனவு நனவாகலாம்!

✦✦✦

4. கலைச்சொல்

நாம் அறிவியல் வளர்ச்சிக்குத் தக்க கலைச் சொற்களைக் கொண்டிருக்கவில்லை. வளரும் துறைகளுக்குத் தக வளமான கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கிக் கொள்ள இயலாது என்கின்றனர் அறிவுத் துறைகளில் ஈடுபட்ட அறிஞர் சிலர்.

முன்னர்க் கணினி, அதன் முன்னர்த் தட்டச்சு, தொலைவரி ஆகியவற்றுக்குத் தமிழ் மொழி பயன்படாது என்றனர். அவற்றை ஆங்கிலம் போலவே பயன் கொள்ள முடியும் என்பதை மொழிப் பற்றுமையும் மொழியறிவும் துறையறிவும் உடைய அறிஞர்கள் மெய்ப்பித்துக் காட்டிய பின் அவர்கள் வாயடைத்துப் போகாமல், கலைச் சொல் வளம் தமிழில் இல்லை என்றும், புதிது புதிது தோன்றும் அறிவியல் வளர்ச்சிக்கு அவ்வயற் சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

தமிழில் கலைச்சொல் தொகுக்கப்பட்டு பல இலக்கம் சொற்கள் ஆட்சியர், அலுவலர், அயலர், மொழிப்பற்றுமை இல்லார் என்னும் **பல்குழுப் பாழ்களால் முடக்கப்பட்டு முகம் காட்ட இயலாமல் உள்ளனவே அல்லாமல், கலைச் சொற்கள் இல்லை என்னும் கற்பனை பொய்யானதாம்!** இந்தியில் தடையில்லையாம்; தமிழில் தடையாம் போலிமை வாழ்வே வாழ்வெனக் கண்டார் வாயுரை இவையாம்.

ஊர்தி, வானவூர்தி, நாவாய், கலங்கரை விளக்கம், திசைகாட்டும் கருவி, வானக்குடை என்பனவெல்லாம் தமிழ் வழக்குச் சொற்களா இல்லையா?

மிதிவண்டி, தொடரி, உந்து, பேருந்து, வானொலி, ஒலியிழை, திரைப்படம், தூக்கி, எக்கி, உழுபொறி, இழுவை, அகழ்வான் இவையெல்லாம் வழக்கில் உள்ளனவா இலவா?

"விசும்பின் வலவன் ஏவா வான ஊர்தி"

என்பது பழந்தமிழ்ப் புறப்பாடல் அல்லவா! அதில் வான ஊர்தி வருகின்றதே! அதிலும், இயக்குவோன் இருந்து இயக்காமல் தானே இயங்கவல்லது என்பதை "வலவன் ஏவா ஊர்தி" என்கிறதே! இன்று நாம் காண்கிறோம் இல்லையா?

இழுக்கும் மாடு குதிரை யானை மான் என்பவை இல்லாமல் பொறியால் இயங்கும் ஊர்தி,

"பூணி பூட்டி இழுப்பதும் இன்றியும்
பொறியின் இயங்கும் மாண் வையம்"

(ஊர்தி) என்பது பேசப்படுகின்றதே!

கப்பல் கவிழ்ந்தால் தப்புதற்கு 'ஏமப்புணை'
வண்டி அச்சு முரிந்தால் 'சேம அச்சு'
குளிர்க்கும் வெயிலுக்கும் தன்னிலை மாறாமல்
காக்க வல்ல - 'சேமச் செப்பு'

என்பனவெல்லாம் சொல்லப்பட்டால் அவை இல்லாமல் - கலைச்சொல் இல்லாமல் - நாம் அறிய முடியுமா?

கோயில் கோட்டை கோபுரம் அணைக்கட்டு சுரங்கம் குடைவரை என்பனவற்றையெல்லாம் கண்ட தமிழினம் கலைச் சொல் வறிய இனமாக இருக்க முடியுமா?

சிலப்பதிகாரத்தில் வரும் கோட்டைப் பொறிகளை மட்டும் எண்ணுங்கள் :

மிளையும் கிடங்கும் வளைவில் பொறியும்
கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய் பொன் னுலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில்"

என்பது சிலப்பதிகார அடைக்கலக் காதைச் செய்தி. மதுரை அரண்மனைக் கோட்டை கொத்தளம் பற்றியது.

ஒரு நாட்டின் அடிப்படைத் தேவை ஊண், உடை உறைவிடம். இம்மூன்றும் தட்டில்லா நிலையமைந்த நாடே நாடு! "நாடென்ப நாடா வளத்தன" என்னும் இலக்கணம் உடையது. அவ்வளம் குன்றா நாட்டிலே தான் கலைவளப்பெருக்கு வெள்ள மெனப்பாயும். நம்மவர் இசைக்கலைப் பெருக்கு தோற்கருவிகளை எண்ணிய அளவாலே புலப்படும் :

"பேரிகை படகம் இடக்கை உடுக்கை
சீர்மிகு மத்தளம் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழா தக்கை கணப்பறை
தமருகம் தண்ணுமை தாவில் தடாரி
அந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளம் துடுமை சிறுபறை அடக்கம்
மாசில் தகுணிச்சம் விரலேறு பாகம்
தொக்க உபாங்கம் துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே.

என்பதில் தோற்கருவிகள் 31 இடம் பெற்றுள்ளன. இவற்றின் மேலே விரிந்த அளவும் மிகப் பலவாம். இவையெல்லாம் கலைச்சொற்கள் தாமே.

இனி நம்மவர் கலைச் சொற்களை ஆக்கிக் கொண்ட உத்திகள் எவை? ஒன்றன் ஈர்ப்பாற்றல் எங்கே அடங்கியுள்ளது? அதுகொண்டு சொல்லாக்கம் செய்தனர். கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி என்பவை ஏன் அப் பெயர்களைப் பெற்றன. நேர் நேர் இலைகளையுடையவை ஆதலால் கண்ணி எனப்பட்டன. பசிய இலை எனினும் அதன் சாறு காய்ந்த அளவில் கருநிறம் கொள்வதால் கரி யாயது. இலை பொன்னிறம் உடைமையால் 'பொன்' எனப்பட்டது. தாமரையின் நிறம் கொண்டதால் 'தாமிரம்' ஆயது. சிவப்பு நிறம் கொண்டதால் செம்பு, செப்பு, செம்பொன் எனப்பட்டது. ஊதும் வாயமைப்பும், மோர்கடையும் மத்தமைப்பும் கொண்டமையால்

ஊமத்தை எனப்பட்டது. சிவந்த கொண்டை உடைமையால் சேவல் எனவும், மைந்நிறம் உடைமையால் மயில் எனவும், கிள்ளி எடுக்கும் இயல்பால் கிள்ளி கிள்ளை கிளி எனவும், கொக்கொக் எனக்குரல் தரலால் கொக்கு எனவும் பெயர் பெற்றன என்பதை அறியின் சொற்படைப்பு உத்திகள் புலப்படும், நாம் வாழ்கிற நாள்களெல்லாம் வாழ்நாள்கள் என எண்ணுகிறோம். அது சிலர்க்குத் தான் வாழ் நாள்களாக உள்ளன. வள்ளுவர், வாழாமல் வாழ்கின்ற பேர்களை ஒருபொழுதும் வாழ்வதறியார் எனச் சுட்டுகிறார்.

அவர்களைத் தம் வாழ்நாளை அன்றி உலகியல் வாழ்நாளையும் நாள் நாளாகக் கொண்டுள்ளமையைத் தவறாமல் நாள் காட்டிகள் காட்டிக் கொண்டும், கிழிபட்டுக் கொண்டும் இருக்கும் நாள்காட்டிகள் நமக்கு நன்றாகக் காட்டிக் கொண்டே உள்ளன. இருபதாம் நூற்றாண்டு நாட்காட்டி, நாட்குறிப்பு, நாள் வழி நடை என்பவற்றை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த வள்ளுவனார் தந்த கலைச்சொல் கொண்டே வழங்குகின்றோம்.

அவர் வாழ்நாளையும் அதன் நிலையாமையையும் கண்ணிற் காணக் கதிரோனைக் காட்டி ஓவியமாகத் தீட்டி அறிவுறுத்துவார் போல்,

> **"நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்**
> **வாளது உணர்வார்ப் பெறின்"** (334)

என்றார். நாள் என்பது கதிர். அது எழலும் விழலுமாகக் காட்டி ஒரு கால அளவைத் தருகின்றது. அதனை நாள் என்கிறோம். ஒருநாள் கழிவு என்பது காலக்கழிவு அன்று; நம் வாழ்நாளில் ஒன்று கழிந்தது என்பதைக் காட்டுவது; ஒவ்வொரு நாளும் நம் உயிரைத் தவறாமல் அறுத்துக் கொண்டே இருக்கும் வாள் அது. அதனால் நிலையாதொழியும் வாழ்வை நிலைபெறு – செயல்களால் அழியாமையை ஆக்கிக் கொள்ளுங்கள் என ஏவுகிறார். நுண்ணிய ஆய்வு வல்லார் நாளென ஒன்று போல் காட்டி என்று வரும் வள்ளுவத் தொடரைக், கலைச் சொல்லாகக் கண்டு நாளையும் காட்டியையும் கொண்டு இடையே தள்ளுவ தள்ளி 'நாட்காட்டி' எனக் கொண்டனர். அதன் பின்னர், நாட்காட்டி, நாட் குறிப்பு முதலாம் கலைச் சொற்கள் விரிந்தன.

'உயிரீரும் வாள்' என்பதன் நுணுக்கம் தெரிந்தவர் உயிரைத் தவறாமல் தின்னுவதால் 'தினம்' என்றனர். தின் + அம் = தினம். இவ்வாறு நாள் தின்னுதலைக் கலிப்பாடல் ஒன்று கரைகின்றது (119). அது :

"அகல்ஞாலம் விளக்கும் தன் பல்கதிர் வாயாகப்
பகல் நுங்கியது போலப் படுசுடர் கல்சேர"

என்பது. நுங்குதல் - தின்னுதல். நுங்கு தின்னல், நோண்டித் தின்னல் என்பவை. **நுங்கு தின்றவனை விட்டு விட்டு நோண்டித் தின்றவனைப் பிடித்துக் கொண்டது** போல என்பது பழமொழி. "நுங்கினான் பசிகள் ஆற" என்பது இரட்சண்ய யாத்திரிகம் :

நாள்தொறும் என்னும் பழஞ்சொல் தினந்தோறும் என்னும் புதுவடிவு தமிழ்வடிவு பெறுகின்றது என்பதை அறியின்,

தினமணி, தினத்தந்தி, தினசரி, தினமலர் முதலிய நாளிதழ்களின் பெயர்களில் உள்ள 'தினம்' வேற்றுச் சொல் அன்று; தமிழ்ச் சொல்லே என்பதைத் தெளியலாம்.

வள்ளுவர் காலம் ஏடும் எழுத்தாணியும் வழக்கில் இருந்த காலம். ஆணி, ஊசி என்பவை எழுத்தாணியைக் குறிப்பன. ஏடும் எழுத்தாணியும் என்பவை இணைச்சொற்கள். ஆனால், 'எழுதுகோல்', இன்றைய ஆட்சி. இக்கலைச் சொல்லை வழங்கியவர் எவர்? திருவள்ளுவர் தாமே!

கணவனைப் பிரிந்த தலைவி, அவன் மேல் குறை பல காண்கிறாள். அவன் பிரிவு நீங்கி வந்து சேர்ந்தான். அவன் மேல் கண்ட குறைகள் எல்லாமும் காணாது ஒழிந்தன. இதனைத் திருக்குறள்,

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து" (1285)

என்கிறது.

"எழுதுங்கால் கோல்' என்பதில் இடைநின்ற கால் என்பதைத் தள்ளி எழுதுகோல் ஆக்கிக் கொண்ட அருமையால் ஒருகலைச் சொல் ஆகிவிட்டது.

வண்டி, பொதி, தூக்கு, கழஞ்சு, மஞ்சாடி, குன்றி என்பனவெல்லாம் நிறை கோல் தொடர்பான சொற்கள். நிறைகோல் சமன் கோல், ஞமன் கோல் எனவும் வழங்கப்பட்டன. தூக்கி நிறை காண்பதால் தூக்கு என்றும், 'துலை' என்னும் ஏற்றம் போன்ற அமைவால் துலை என்றும், வெள்ளியால் பூண்பிடிக்கப்பட்டமையால் வெள்ளிக் கோல் என்றும் பெயர் வழங்கின.

சரியான நடுவுநிலைச் சான்றாய அது சீர்தூக்கும் கோல், செப்பம், சீரை எனவும் பட்டது. சீரை புக்க தூயோன் என்பது செம்பியன் ஆகிய

சிபியின் புகழ். சீர்த்தி மிகு புகழ் என்பது தொல்காப்பியம். சீர்த்தியின் இடத்தைக் கீர்த்தி பற்றிக் கொண்டது.

'சமன் செய்து சீர் தூக்கும் கோல்'

என்னும் வள்ளுவத் தொடர் வழியே 'சமன்கோல்' என்பதும் 'சீரை' என்பதும் கலைச் சொற்களாம் தகவு பெற்றன.

தண்ணுமையாசிரியன் கையால் செய்யும் கலைத்திறத்தைக் கைத்தொழில் என்கிறது சிலப்பதிகார அரும்பத உரை (3 : 54). அதனையே அடியார்க்கு நல்லாரும் ஏற்றுப் போற்றினார்.

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்"

என்பது நாமக்கல்லார் பாடல். கைத்தொழில் பெருக்கமிக்க இக்காலத்துக் கலைச்சொல் பழங்கொடை அல்லவா.

"வித்தகத் தியன்றதன் கைத்தொழில் காட்டி" பெருங்.1:38:196

"தத்தம்.. கைத்தொழில் தோன்ற" பெருங். 1:58: 45

"கைத்தொழில் நுனித்த வித்தக வாளர்" பெருங். 2:4:138

கைத் தொழில் 'கைவினை' எனவும் படும். சிலம்பு. 16:105

திருவள்ளுவர் உழவரைக் 'கைசெய் தூண் மாலையவர்' என்கிறார். அவர் தம் **கைம்மடங்கின்** துறவர்க்கும் வாழ்வில்லை என்கிறார் (1035, 1036) கைப்பொருள் என்பதையும் சுட்டுகிறார் (371). கை என்பதற்கு ஒழுக்கப் பொருள் தந்தமண் தமிழ்மண். கைக்கோள்; கைக்கிளை; கைம்மை என்பவற்றை நினைக.

வான் ஒழுக்கே ஒழுக்க மூலம் ஆவதுபோல்

கையால் செய்யும் தொழில்களின் செப்பமே செவ்விய வாழ்வுமூலம் என்பது காட்டும். செயல் என்பதன் பொருளே செம்மையானது என்பதாம். கையறுதல் என்பது செயலற்றுப் போதலாம்.

ஒன்று இல்லாமல் முடியாது எனின் அதனை 'இன்றியமையாதது' என்கிறோம். இதனை இவ்வடிவிலேயே திருக்குறள் தருகிறது.

'இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்' (961)

இச்சொல் இன்றுவரை தேயாமல் தன்நிலையில் உள்ளது. வேண்டியது, தேவை என்பன இப்பொருளில் வரினும் இச்சொல் போன்ற அழுத்தம் அற்றவையாம்! அவசியம் என்பது அவசியம் இல்லா அயன்மை!

இது கால் வாரியங்கள் பெருகியுள. வாரியத் தலைமையராதல் அமைச்சர்க்கு ஒப்பாம் ஒரு பதவியாக உள்ளது. சோழர் காலத்திலேயே வாரியங்கள் இருந்தன.

"புயலென்னும் வாரி" (4)

"வாரி பெருக்கி வளம்படுத்து" (512)

வாரியின் கொடை, வாரியமாம்.

நாளைப் பகல் என்றும் இரவு என்றும் பகுத்தல் பண்டு தொட்ட வழக்கு. பகல் இரவுகளையும் முற்பகல், பிற்பகல்; முன்னிரவு பின்னிரவு எனப்பகுத்தலும் பண்டு தொட்ட வழக்கு!

வள்ளுவர்,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" (319)

என்பது ஆங்கிலவர் கூறும் ஏ.எம்; பி.எம்; என்பவற்றுக்கு இயல்பாக வாய்த்த கலைச் சொல்லாக்கம் ஆகிவிட்டது. நம் வழக்கில் பெருக ஊன்றிய செய்தி இது.

கோயில் அறங்காவலர் துறைக்கு அறங்காவலரை அமைத்து அவர்கள் பதவிக்குத் தக்கார் எனப் பெயர் சூட்டியுளர். அத் தக்காரை வழங்கியவர் திருவள்ளுவர்,

"தக்கார் இனத்தனாய்" (446)

"தக்கார் தகவிலர் என்பது" (114)

என்பவை அவை.

ஆழ்மனம் பற்றி மெய்யியல் ஆய்வாளர் பொழிகின்றனர். அவ் வாழ்மனத்தை 'உள் உள்' என்பார் வள்ளுவர்;

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து. (1057)

உள்ளவற்றையெல்லாம் இழந்துவிடுதல் 'திவாலா', ஐ.பி. - வாங்கல், மஞ்சள் கடிதம் வாங்கல் என வழங்கப்படுகின்றது. இதனைத் திருவள்ளுவர் 'உள்வீழ்தல்' என்கிறார்.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று" (955)

என்பது அது. உள்ளனவெல்லாம் இல்லையாய் வீழ்ந்துபடுதல் உள்வீழ்தல் எனப்பட்டதாம்.

இது கால் பெருகிக்காணும் நோயுள் ஒன்று மாரடைப்பு என்பது. இன்பமா துன்பமா இழப்பா பெருநிறைவா இவற்றுவழி உண்டாகும் இன்பதுன்ப அதிர்வுகளால் ஏற்படுவது மாரடைப்பு! இதனை 'அதிர்வு நோய்' என்கிறார் வள்ளுவர்.

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்." (429)

என்பது அது.

வானொலியில் 'மனைமாட்சி' என ஒரு நிகழ்ச்சியுண்டு. மனை மாட்சி கற்பிக்கும் மனையியல் கல்லூரிகளும் இந்நாளில் உண்டு. இவை, 'மனைத்தக்க மாண்பு' (51)

"மங்கலம் என்ப மனைமாட்சி" (60), "மனைமாட்சி இல்லாள் கண்" (52) என்னும் வள்ளுவக் கொடையாம்.

'ஊதியம்' என்பது பெருவழக்குச் சொல்லாக இந்நாள் உள்ளது. வேலைக்கு ஊதியம், ஊதியத்தின் மேல் ஊதியம் என்பவை உள். மிகுதல்பொருளது அது. ஊதும் வாய், பலூன் என்னும் ஊத்தாம் பெட்டி, குளிர்மிக்க ஊதைக் காற்று, மிகச் செலவழிக்கும் ஊதாரி, ஊதுகாமாலை, ஊத்தம் போடல், ஊதி விட்டது என்பனவெல்லாம் பருமை வழிப்பட்டவை.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு". (231)

"முதலிலார்க்கு ஊதியம் இல்லை" (449)

"ஊதியம் என்ப தொருவர்க்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்". (797)

"பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்
டூதியம் போக விடல்." (831)

இவை வள்ளுவத்து வரும் ஊதியம் காட்டும் குறள்கள்.

பல்கலைக்கழக மானியக் குழு என ஒன்று உள்ளமை உலகறி செய்தி. மானியக் குழு இக்காலத்து வழங்கப்படுவது "நல்கைக்குழு" என்பது. நல்குதல் வழங்குதல் கொடுத்தல். தொல் பழஞ்சொல்லாகிய நல்குதல்.

"தாம் வேண்டின் நல்குவர் காதலர்" (1150)

"அவர் நல்குவர் என்னும் நசை" (1156)

நல்கைக் குழு நல்காமையும் உண்டு தானே!

"நசை இயார் நல்கார் எனினும்" (1199)

"பரிந்தவர் நல்கார்" (1248)

என்பவை வள்ளுவர் கூறும் நல்காமை.

வெளிநாட்டுக் கல்வி, வெளிநாட்டுவேலை, வெளிநாட்டுச் செலவு என உலகமயம் ஆகிவருதல் கண்கூடு. உலகமயம் என்னும் பெயரால் மொழி, இனம், பண்பாடு, நாகரிகம் முதலானவை அழிவு வழியில் விரைந்து செல்லுவதும் கண்ணுள்ளார்க்கு வெளியாம் கண்கூடு.

வெளி நாடும், வெளி நாட்டவரும், புத்தேளிர் நாடு என்றும் புத்தேளிர் என்றும் வள்ளுவக் கலைச் சொல் வழங்குதல் அறியலாம். புதியதோர் இடத்தில் இருந்து வந்தவரும் அவர் நாடும் புத்தேளிர் நாடு எனவும் புத்தேளிர் எனவும் வழங்கப்பட்டனர் என்பது நச்சினார்க்கினியர் வழங்கிய கலித்தொகை உரையால் விளங்கும்.

இந்நாளில் உள்நாடு வெளிநாடுகளில் தூதர் என்பார் உளர். அவர் அவரவர் அரசு சொல்வதைக் கூட்டாமல் குறைக்காமல் மாற்றாமல் மறைக்காமல் கூறியது கூறிய வாறே கூற வேண்டியவர். அவர் தம் தனித்த எண்ணம் சொல் ஆயவற்றுக்கு ஆங்கே வேலை இல்லையாம். இதன் இலக்கணத்தை இரண்டே எழுத்துக்களில் 'தூது' என்கிறார் வள்ளுவர். தூவானம் மழைத் துளியைத் தூவுவது கண்டது தானே (தூறல்). காற்றில் தூசிபோகத் தவசத்தைத் தூற்றுவதும் காண்பது தானே! ஒருவரை ஒருவர் பழிதூற்றுவது அறியாததா? சொல்லியதைச் சொல்லியவாறு சொல்லல் 'தூ தூ' என்றாம். அவ்வாறு கூறல் வெறுப்புக் குறியாகிவிட்டமையால் அதனை விலக்கத் தூது எனக் குறிலாகி நின்றதாம்.

ஒரு கூட்டம்! இவர் தலைவர் என்பதை ஒருவர் முன் மொழிகிறார்; அதை ஒருவர் வழிமொழிகிறேன் என்கிறார். இவ்வழி மொழிதல் என்பது

வள்ளுவத்தில் 'வழியுரைத்தல்' எனப்படும். தூதுரைப்பான், வினையுரைப்பான், எண்ணியுரைப்பான் எனப்படும். அவன் வழியுரைப்பான் எனவும் சொல்லப்படுவான், -

"தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு" (688)

என்பது அது. அதுவே வழிமொழிதல் மூலமாம்.

சூது என்பதோர் அதிகாரப் பெயர். சூது, 'சூழ்து' என்பதன் இடைக்குறை. வட்டமாகச் சூழ்ந்து அமர்ந்து ஆடுவது ஆதலால் அப்பெயர் பெற்றது. சூழ்ந்தாடும் அது சூழ்ச்சிக்கும் ஏமாற்றுக்கும் குடிகேட்டுக்கும் காரணமாக இருக்கும். சூது, சூதர், சூழ்ச்சி என்பவை எல்லாம் ஏமாற்று, வஞ்சம், குடி கேடு என்னும் பொருள் தருவதை அறிக. இச் சூதே குதிரைப் பந்தயம், பரிசுச்சீட்டு, குலுக்கல் சீட்டு முதலாய பொருள்பறி ஆட்டங்களாம். அதிகாரத் தலைப்புகள் கலைச் சொல் சிறப்புடைமை என்பதை எண்ணல் ஒரு தனி ஆய்வாம்.

இறைமைக் கேடு செய்வாரெல்லாம் 'இறையாண்மை' பேசத் தவறுவது இல்லையே! இறைமாட்சி என்பது வள்ளுவப் பொருட்பால் முதல் அதிகாரம் ஆயிற்றே !

"ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை" (541)

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்" (547)

இவையல்லவோ இறையாண்மையாம் செங்கோன்மை!

தவம் என்பதோர் கலைச் சொல். அதன் மூலம் 'தவ்' என்பது. தவ் என்பது சுருக்குதல் பொருளது.

"கவ்வையால் கவ்விது காமம் அதுவின்றேல்
தவ் என்னும் தன்மை இழந்து ". (1144)

தவ் என்பது தவிர், தவிர்த்தல் என்றாகிச் சுருக்குதல் விலக்குதல் நீக்குதல் பொருள்களைத் தரும்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" (941)

"யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்" (36)

என்பனவற்றில் நீக்குதல் பொருள் வருதலால் விலக்கலும் சுருக்கலும் தெளிவாம்.

பிறப்பறுக்க, லுற்றார்க்கு உடம்பு மிகை (345)

என்பதால் மேலும் பற்றறல் தெளிவாம்.

' ஊழ்' என்பதோ உலகத்து இயற்கை என்பதைக் கூறும் அரிய கலைச் சொல் (374) இருவேறு உலகத்து இயற்கையது ஊழ். இருவேறு இயற்கை என்பது ஆக்கமும் அழிவுமானவை. அவை ஆகூழ், போகூழ்; இழவூழ் ஆகலூழ் எனவும் படும் (371,372) நன்று அன்று, நல்லவை; தீயவை என்பனவும் அவை (375, 379).

எந்த நீர் நலமாக்குமோ அந்த நீர் கேடாக்கவும் செய்யும். இது வான் சிறப்பில்,

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை." (15)

எனவரும்.

சோறாக்க உதவும் தீ, வீட்டையே எரிப்பதில்லையா?

நிலைவைத்து வாழவைக்கும் நிலம், நடுக்கத்தால்

நிலை குலுங்க வைப்பதில்லையா?

இவை ஒவ்வொன்றும் இருவேறியற்கையாதலை விளக்கும்.

'காலாழ் களர்' 'அண்ணாத்தல் செய்யா தளறு' என்பவை நிலத்தின் ஊழ். உலகம் உருண்டை என்பதை 'உலம்' வேரே காட்டும்.

உலகம் உலவுவது (சுழல்வது என்பதை 'உலா', 'உலவுதல்' என்பவை காட்டும்

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்"

அது வலமாகச் சுழலும் என்பது ஊர்வலம், நகர்வலம், திருக்கோயில் வலம், வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு என்பவை காட்டும்.

ஞாலம் என்னும் சொல் உலகப் பொருளதே.

காலத்தினால் செய்த நன்றி ஞாலத்தின் மாணப் பெரிதாம் என்பது குறள்.

ஞாலுதல் தொங்குதல். ஞான்று கொண்டான் (நான்று கொண்டான் என்பது கழுத்தில் கயிறுகட்டித் தொங்குதல் போல்வது.

வையம், வையகம், வைப்புழி என்பவை உலகத்தைக் குறிக்கும் சொற்கள். இவற்றின் மூலம் 'வை'. வைத்திருக்கும் பேழையன்னதாம் நெல் 'வை' என்பதாம்.

வையம் இருக்க வாழ வழியில்லையே எனச் சோர்ந்திருக்கும் இழிமையை,

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்". (1040)

என்னும் குறள்.

என்னிடம் வளமும் விளைவும் இருக்க உழைத்துப் பயன் கொள்ளாமல் வாளா கிடக்கிறாயே, நீ வாழவா செய்வாய்? என நகைக்குமாம் நிலம்.

பயிர்வகை, செடி கொடி மரவகை என்பவை எவ்வளவு வளங்கள்! உயிர்வகை தாம் எத்தனை வளங்கள்! நீர்வளம் எண்ணி முடியுமோ?

மண்எண்ணெய், கல் எண்ணெய், நிலக்கரி, தங்கம் முதலாம் வளங்கள் எத்தகையவை! இவற்றையெல்லாம் வைத்திருத்தலால் தான், வையம், வையகம், வைப்புழி எனப்பட்டதாம்.

வையகம் மட்டுமா, இப்படி வானகத்துத் தோன்றுவன எத்தனை விண்மீன்கள்! நாள்மீன் ஒளியைக் கொண்டு ஒளிசெய்யும் கோள்மீன்கள் எத்தனை? இவையெல்லாம் கூடிய பேரண்டத்திற்கு என்ன பெயர்?

'வியனுலகம்' - வியல் வியன்; விரிந்த உலகம்

'விரிநீர் வியனுலகம்' என்பது வள்ளுவம் (13, 19) 'வியன் ஞாலம்' என்பதும் அது (1018)

பறவைகள் சிறகுடையவை. அச்சிறகு இருபாலும் அமைந்தவை. பருந்து வட்டமிடக் காணும் பெட்டைக் கோழி குஞ்சுகளைச் சிறகுள் ஒடுக்கும். இவ்வாறு பறவைகள், குஞ்சுகளைச் சிறகுள் ஒடுக்கிக் காத்தலை,

"புள்ளினம்தன்கைச்சிறகால் பார்ப்பொடுக்கும்"

என்பது முத்தொள்ளாயிரம். சிறை வள்ளுவரால் ஆளப்படும்.

"சிறை காக்கும் காப்பு எவன்செய்யும்?" (57)

"சிறைநலனும் சீரும் இலரெனினும்" (499)

கற்சிறை என்பது அணைக்கட்டு. வழியடைக்கும் கல் சிறையை வள்ளுவம் கூறும். சிறை என்பது பாதுகாப்புப் பொருளது. ஆனால் அது பாதுகாப்பா செய்கின்றது? அது செய்யும் பாழுக்கு இணை அப்பாழேயாம்!

'நோன்பு' நாளும் பொழுதும் பெருகுகின்றது. ஆனால் அது பெயரையும் பெயர்ப் பொருளையும் இழந்து விட்டது. நோம்பு ஆயது! முப்பொழுதும் நாற்பொழுதும் உண்ணலாம் - பழம் - பண்டம் எனச் சிற்றுண்டி வகை! பருகலாம் பால் மோர் இளநீர் பிற பிற குடிவகை. ஒரே ஒரு வேளை சோறுண்ணல் தான் வேண்டும்! அவ்வளவே!

'நெய்யுண்ணோம் பாலுண்ணோம்'

என்னும் ஆண்டாளர் நெறிமுறை மாண்ட வகை இது.

நோன்பு = வலிமை; மனக்கட்டுப்பாடு. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும்; இன்னாச் சொல் நோற்பாரின் பின் என்பது நோன்பும் நோன்பினும் நோன்பும். மனவரன் உடையார்க்கு அன்றிப் பிறர்க்கு இந்நோன்பு கூடுமோ?

- நீத்தார் என்பதொரு கலைச் சொல்! என்ன நீத்தார்?

தம்நலம் நீத்தார்! தம் உடம்பும் மிகையென நீத்தார்! அவரே செயற்கரிய செய்யும் பெரியார்.

'ஓம்' என்பதோர் அரிய சொல்! இணைப்புச் சொல்!

அதன் வழிப்பட்டது ஓம்புதல்! 'விருந்தோம்பல்' ஓர் அதிகாரப் பெயர்.

'ஓம்' சமயச் சொல்லாயது; தன் சார்பு வன்மையால், தன் சால்பு இழந்து வெறுமையுற்றது. குப்பையில் எறியப்பட்ட குல வயிரம் ஆயிற்று! ஓம் இணைக்குமேயன்றி எவரையும் எதனையும் பிரிக்காது.

'துப்புக் கெட்டவன்' துப்புரவு என்கிறோம்.

துப்பு என்பதற்கு வலிமை, செம்மை முதலாம் பொருள்கள் உண்டு. அதன் மூலம் 'துய்ப்பு'.

வள்ளுவர் நாளிலேயே துய்ப்பு 'துப்பு' ஆகிவிட்டது. அதனால்,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை" (12)

என்றார். 'துய்ப்பார்' 'துய்ப்பு' என்பவை அவை. துப்புக் கெட்டவன் - துய்ப்புக்கு வழியற்றவன் என்பதாம். துய்ப்பால் உண்டாம் வலிமை துப்புரவாம். அது தூய்மைப் பொருளில் துப்புரவு ஆகிவிட்டது.

நன்றி என்பது நல்லது என்னும் பொருளதே; அது பொது நலம் சுட்டுவது. செய்ந்நன்றி என்பது தனிப்பட்ட ஒருவர்க்குச் செய்யப்பட்ட நல்லதாம். இவ்வேறுபாட்டை வள்ளுவர்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு". (110)

என்று விளங்க வைத்தார். செய்ந்நன்றி என்பது செய்த நன்றி என்பது மட்டுமன்று; செய்தநன்றி செம்மையான நன்றி என்பதுமாம்!

பதனீரை வழங்குதலும் கள்ளை வழங்குதலும் ஒப்பாகுமா? ஆதலால் செய்வது செம்மையானதாக இருப்பதே செய்ந்நன்றியாம்.

இனிப் பகுத்து உண்பது 'பாத்தூண்' ஆகும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற அவரே, 'பாத்தூண்' மரீஇயவனை என்றும் ஆள்வார். வள்ளலார் வாழ்வியல், இவ்வள்ளுவக் கொடையாம்!

'அகராதி' புதுவரவு! ஆனால் அச்சொற்கொடை, தொல்காப்பியமும் வள்ளுவமும் தந்தது.

"அகர முதல னகர இறுவாய்" என்றது தொல்காப்பியம்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்றது வள்ளுவம்.

அகர முதலி, 'அகர முதல' என்பது கொண்டு வந்தது.

அகராதி, அகரமுதலவும் ஆதியும் கொண்டு அமைந்தது.

கலைச்சொற் பஞ்சம் காணா மொழி கன்னித் தமிழ் மொழி! அதனால் கலைமலி தமிழ் என்றனர் முன்னவர்.

✦✦✦

5. பெண்மை!

1. பெண்ணே பெருந்தக்கது

திருவள்ளுவர் பார்த்த பார்வையின் ஆவணச் சான்று திருக்குறள். அதில் 'பெண்ணே பெருந்தக்கது' என்பதை முப்பாவிலும் சுட்டியுள்ளார். பெருந்தக்கது –பெருமைக்குரிய தகுதியுடையது. 'வாளா' கூறும் பெருமை அன்று அது. தன் தகுதியால் கொண்டது என்பதை விளக்கப் "பெருந்தக்கது" என்று ஒரு வாய்பாடு கொண்டார். அவ்வகையால்,

"பெண்ணில் பெருந்தக்கது யாது?" என்று அறத்துப் பாலில் வினா எழுப்பி,

"பெண்ணில் பெருந்தக்கது இல்" என்று பொருட் பாலில் உறுதி செய்து,

"பெண்ணே பெருமை உடைத்து" என்று காமத்துப் பாலில் முடிவு கட்டினார்.

2. பெண்ணே கற்பகம்

கற்பகம் என்பது புனைவாளர் கற்பனை வழியாகத் தோன்றித் தமிழ்மண்ணில் பரவியுள்ள முள் வேல மரம் போல் பரப்பப்பட்ட ஒரு மரம். அது, விண்ணகத்து மரமாம். அதனை அடைதல் பெரும் பேறாம்; அவர் வேண்டுவன வெல்லாம் கிட்டுமாம்! இக்கதையைக் கேட்ட திருவள்ளுவர் மெய்யாகவே கண்காணக் கற்பகம் ஒன்று வீடுதோறும் பெண் வடிவமாக இருக்கவும் அதனை உவந்து போற்றமாட்டாப் போலிப் பிறவியர் உளரே என எண்ணினார். அதனால் கற்பைத் தன்னகத்தே கொண்ட மகளிரே கற்பகம் என்றார்.

அக்கற்பகம், குடும்பத்தின் தேவை, விருப்பு, வேண்டுதல் என்பவை எல்லாமும் உணர்ந்து எவ்வொன்றும் குறைவுபடாமல் செய்து குடிநலம் காக்கும் பெருமையது. அக் கற்பகம் குடும்பத்திற்கு வாய்ப்பது அரிது. வாய்த்து விட்டால் அக்குடும்பத்திற்கு இல்லாத நலங்கள் என எவையும் இல்லை. அப்படி வாயாவிட்டால் அக்குடும்பத்திற்கு என்ன என்ன வளமாக வாய்த்திருந்தாலும் அவை வாய்த்ததாகுமா? என்றார் அக்குறள்;

“இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை”. (53)

என்பது.

3. பெண்ணே அமிழ்து

அமிழ்து என்பதையும் புனைவாளர் இட்டுக் கட்டிப் பரப்பினர். பாற்கடல் என்பது ஒன்று; மந்தரம் மலை மத்து; வாசுகி பாம்பு: தேவர் ஒருபக்கம்; அசுரர் ஒரு பக்கம் நின்று கடைய அமுதம் வந்தது என்றனர். அதனை ‘அப்படிப் போடுடா தமுக்கு’ என்னும் தலையாட்டிகள் ஏற்றனர்.

திருவள்ளுவர் அறிவறியா இவர்களைக் கண்டார். கண்காண உண்ணும் நீராகவும் உண்ணும் உணவாகவும் உயிரும் பயிரும் வளர்க்கும் வான் மழை அல்லவோ அமிழ்து என எண்ணினார். அதனால்,

“வானின்று உலகம் வழங்கி வருதலால், தான் அமிழ்தம் என்றுணரல் பாற்று” என்றார்.

அவ் வான்மழை ஒப்பக் குடும்பத்தின் தேன் மழையாய்த் திகழும் மகளிர் அமிழ்து அல்லவோ என்பதை உணர்ந்து,

“வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி” (1192)

என்றும்,

“உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்” (1106)

என்றும் கூறினார். அவ்வளவில் அமையாராய், அமிழ்தம் தந்த அமிழ்தாக வாய்த்த குழந்தைகள் இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் உண்டு பெற்றோர்க்கு ஊட்டும் உணவு அமிழ்து என்பதல்லவோ என்பாராய்,

“அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்” (64)

என்றார்.

அமிழ்துக்கு ஓர் அரிய பெயர் சூட்டு விழா நிகழ்த்தினார் திருவள்ளுவர். அது ‘சாவா மருந்து’ என்பது.

அமிழ்து, அமுது, அமிர்து, அமுதம் எல்லாம் அமிழ்த்துவது? எங்கே வெள்ளத்திலா, புகையிலா, தீமையிலா - இல்லை! இன்பத்தில் அமிழ்த்துவன.

தாய் அமிழ்து; அவள் பேணுதல் அமிழ்து; அவள் கொடுப்பது அமிழ்து; அவள் ஊட்டுவது அமிழ்து! குடும்பத்தை இன்ப அமிழ்த நிலையம் ஆக்க வைத்த பெண்மைத்தாயே பேரமிழ்து! கண்காண. வாய்த்த அமிழ்தைப் புறத்தே தள்ளி பொய்ப்புனைவாம் அமிழ்தைக் கட்டி அழலாமா என்பது வள்ளுவ வினா.

4. பெண்ணே வீடுபேறு

தம்முயற்சியால் தாம் இனிது வாழக் கட்டியது வீடு; வெளியுலகத் துயரில் இருந்து விடுபட்டு இன்பநிலை காண அமைத்தது வீடு; வழிவழியாக மக்கள் பெருகி உலக நலமோம்ப வாய்த்தது வீடு. இவ்வாறு கண்காண வீடு இன்ப நிலையமாக இருப்பதை உணர்ந்து போற்றல் உயர்ந்தவர் கடமை. உலக நலம் கருதுவார் செய்ய வேண்டும் செயல்முறை. ஆனால் இவ்வீடு வீடன்று; விண்ணகத்திலே தான் வீடு உள்ளது. அவ்வீட்டை அடைவதற்காக இவ் வீட்டையும், இவ்வீட்டு வாழ்வையும் வெறுத்து ஒதுக்குதல் வேண்டும் என்று வெறுப்பின் உச்சத்தில் நின்று பரப்பினர். அவ்வாறு பரப்பியவர்கள், தாமரைக் கண்ணான் உலகு (வைகுந்தம்) என ஒன்று இருப்பதாகவும் அதனை அடைந்து பெறும் இன்பமே வீட்டின்பம் என்றும், தாம் கட்டிய வீட்டில் அடையும் இன்பம் சிற்றின்பம் என்பது மட்டுமின்றிச் சிறுமை இன்பம் என்றும், இவர்கள் பேரின்ப வாழ்வை இழந்து போகின்றவர் என்றும் கூறினர். திருவள்ளுவர், இப் பொய்மைக் கருத்தை மக்கள் ஏற்கின்றனரே எத்தகைய அறியாமை என உணர்ந்தார். அதனால், ஒருவரை ஒருவர் விரும்பும் ஒப்புடைய காதலன் காதலியர் அடையும் இன்பத்திலும் தாமரைக் கண்ணான் உலகத்துக் காணலாம் என்னும் இன்பம் பெரிதாகக் கூடுமோ? அப்படி ஒன்று உண்டா, உண்டு என்று கண்டு வந்தவர் எவர், அவரைக் கண்ணாரக் கண்டவர் எவர், என வினாவின் மேல் வினா எழத்,

"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு" (1103)

என்றார். வீழ்வார் - விரும்புவார். காதலர் காணும் இன்பத் துயிலுக்குக் கண்டறியாத வைகுந்தத் துயில் இனிதாமோ என்கிறார்.

பாற்கடல் என்பது ஆண்பால் பெண்பால் கடலுக்கு இணையோ?
அரவணை எனப்படும் பாம்புப் படுக்கை, காதலர்
அரவணைப்புக்கு ஒப்போ?
அறிதுயில் எனப்படும் உலகெல்லாம் அறிந்து கொண்டு
துயிலும் துயில், காதல் இன்பியல் அறிந்த துயிலுக்கு நிகரோ?
துயில் என்பது என்ன? துய்ப்பதற் கென்றே வாய்த்த இடம்
தானே அது. துய் + இல் = துயில். -

புனைகதையில் எப்படிப் பொருத்தி மயக்கியுள்ளனர் என்பது புலப்படவில்லையா?

5. பெண்ணே விருந்து

"விருந்தே புதுமை" என்பது தொல்காப்பியம். புதிய புதிய சுவை விருந்துகளைப் படைக்கும் நா விருந்தா அது?

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல விருந்து ஒருங்கே தருபவள் பெண்ணே ! விருந்தாக இருக்கும் அவ்விருந்து பொறிவாயில் ஐந்தவிக்கும் பொய்தீர் ஒழுக்க நெறி நின்று, தன்னைக் கொண்டானையும் அந்நிலையில் நிலைக்க வைக்க வல்லாளும் அவள்!

அன்பால் கூடி அவ்வன்பை விரிக்கும் மகப்பேற்றைத் தந்து உற்றார் உறவு சுற்றம் சூழல் உலகு என விரிய வைக்கும் பண்பாட்டு விருந்துக்கு மூலவளாகவும் இருப்பவள் அவள்.

வெளிப்படச் சொல்லப்படும்,

"தேனொடு பால்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்." (1121)

என்னும் சுவை மட்டுமா? ஒரு காலத்து ஓரிடத்து ஐம்புல இன்பமும் ஒருங்கே தரும் பேற்றை அவள் தாங்கி இருக்க இயற்கை அவளை வைத்த பேற்றால்தான் அவனுக்கு அவளே உயிராகவும், அவளுக்கு அவனே உயிராகவும் உயிர் பகுத்துவைத்த மாட்சியும், அவ்வுயிரொடு உயிர் இணையத் தடையுண்டானால், உயிரைத் துறக்கவும் முடிவெடுக்க வல்ல துணிவாவதும் சான்றாம்.

"உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு" என்பதும் "நிலத்தொடு நீரியைந் தன்னார்" என்பதும் வள்ளுவங்களாம்! நாச்சுவைக்கு மட்டும் விருந்தோ பெண்மைவிருந்து?

6. பெண்ணே மருந்து

"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து."

நோய்கள் பலவகையால் ஆவன; அவற்றுக்கு மருந்து வகைகளும் பலவகையால் ஆவன; பெண்ணியலால் உண்டாம் நோய் எது? அது தீர்க்க வல்ல மருந்து எது?

நோயைத் தந்த அதுவே நோயைத் தீர்க்கும் மருந்துமாம் என்பது விந்தையில் விந்தையாம்.

"இருநோக் கிவள்உண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கு ஒன்றந்நோய் மருந்து". (1091)

மருந்து என்பது விருந்தில் உயர் விருந்தாம் அமிழ்தையும் குறிக்கும். அதற்குச் சாவா மருந்து என்பது வள்ளுவம். அச்சாவா மருந்தாக இருப்பதாலேயே உயிர்தளிர்க்க வைக்கும் அமிழ்தாக அவள் இருப்பதை வள்ளுவம் சுட்டியது.

7. பெண்ணே தெய்வம்

பெண்மையின் உயர்வுகண்ட தமிழர் தாய்த் தெய்வ வழிபாடு கொண்டனர். உயர்வாக மதிக்கும் மண்ணும், நீரும், கலையும் திருவும் ஆற்றலும் பிறவும் பெண் தெய்வமாகவே போற்றினர். நிலமகள், வையைத் தாய், கலைமகள், திருமகள், மலைமகள், கொற்றவ்வை என்றெல்லாம் கொண்டனர். முயற்சி திருவினை ஆக்கும் , செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும். பெண்ணைத் திருவாகவும், செய்யவள் ஆகவும் காட்ட வில்லையா? தெய்வத்தை வழிபடாளாய்க் கணவனை வழிபாடு செய்பவள், வழிபடத்தக்களாக – அவனால் வழிபடத் தக்கவளாக ஆகிவிடுகின்றாள் அல்லவா! அவளுக்கு அவனும், அவனுக்கு அவளும் துணையாம் இணை என்றால் ஒருவரை ஒருவர் வழிபடல் இயல்பு என்பது வெளிப்படை தானே! தாயைத் தெய்வமாகக் கொள்ளல் தமிழ் மண்ணுக்கு வரத்துப் பொருளாகுமா?

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" அல்லரோ! அவளே குடும்பக் காவல் தெய்வமாதலால் தானே தற்காத்தாள்; குடிநலம்காத்தாள்; புகழ்ச்சொல் காத்தாள்!

8. பெண்ணே குருவர்

குருவர் இருவகை; தாமே கூறிக் கற்பாரை அறியச் செய்பவர் ஒருவகை; சொல்லாமலே தம்மியல் கண்டு பற்றிக் கொள்ளச் செய்வார் ஒருவகை. இவ்விரு வகைக் குருவருமாக அமைந்தவள் பெண்ணாம்.

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு". (947)

என்பது கற்பிக்காமல் கற்றுக் கொள்ளுமாறு செய்யும் கட்டொழுங்கு.

ஒரு முகப்பட்ட ஒழுக்கத்தவளாக வாழும் உன் மனைவியைப் பார்; அவள் ஒழுக்கத்தை நீ பற்றிக் கொள். பற்றிக் கொண்டால் அவளுக்குரிய பெருமை உனக்கும் உண்டு என்பது இக்குறள்.

தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய் கொள்ளும் மகிழ்ச்சி மக்களை உயர்த்துகிறது!

தன் மகன் மதுவால் மயங்கித் திரியின் மகனென மதிக்காத தாயின் மாண்பு குடும்பத்தைப் பெருமைப் படுத்துகிறது.

முறை கேடாம் வழியில் வறுமையுற்ற மகனை மதிக்காத தாயின் மாண்பு அவனைத் திருத்தி நன்னெறியனாக்கத் துணையாகிறது!

இவ்வாறு இருவகைக் குருவர் நிலையையும் பெண்மை ஏற்கும் பெருமையாக வள்ளுவம் உவந்து உவந்து கூறுகிறது.

9. பெண்மை நிமிர்வு

கணவன் கூனனா, குறளனா? நெடியனா, வலியனா? எவனாயின் என்ன? அவன் தெருவில் நிமிர்ந்து நடையிட வேண்டுமா? அவன் நிமிர்ந்து நடையிடச் செய்பவள் அவனுக்கு வாய்த்த நன்மனையாளே யாம். எவர் முன்? பழித்துக் கூறித் திரிவதே வாழ்வாகிப் போனவரும் பழிக்க வாயெடுக்க மாட்டாமல் அடைத்து வைக்க வல்லவர் அவர் மனைவியரே!

"புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை". (59)

இகழ்வார் முன்னும் பீடு நடையிட வல்ல வலிய முதுகெலும்பாக இருப்பவள் பெண்மைப் பிழம்பே என்பது எத்தகு பாராட்டு; எத்தகைய பேறு.

10. பெண்ணே மனைமாட்சி

குடும்ப நலம், குடும்ப வளம், குடும்பப் புகழ், குடும்பத் தொடர்ச்சி என்னும் குடிமைச் சிறப்பு எல்லாவற்றுக்கும் முற்றும் இடமாக இருப்பவள் பெண்ணே ஆதலால் இல் ஆள், மனை ஆள், அகத்து ஆள் என்னும் ஆளுரிமை வழங்கினர் முந்தையர். அவர்கள் எப்படி, அப்படியே குடி நலம் என்பதாம். இவற்றாலேயே இல்வாழ்க்கையை அடுத்த வாழ்க்கைத் துணை நல இறுதியில் மக்கட்பேற்றையும் இணைத்துத் தொடர் மாலையாய்,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்நலம் நன்மக்கட் பேறு"

என்றார் பொய்யா மொழியார்.

இங்குச் சுட்டப்பட்ட பத்தும் பிற உண்டாயின் அவையும் பெண்ணின் பெருமை விளக்கம் ஆகும்.

11. பெண்ணே பண்பாட்டுக் காப்பரணம்

1. பெண்ணின் பெருமை கோலோச்சுமிடம் தாய்மை. அத்தாய்மை சான்றோர் எனப் பாராட்டும் - சான்றோர் பாராட்டும் சான்றோர் எனும் மக்களைப் பெறவே விரும்பும்.
2. தான் பசிப்பினும் தகாச் செயலால் தன் மகன்/ள்/பொருள் தேட ஒப்பாள்; பசியாற்ற நினையாள்.
3. குடிகாரன் - பழிகாரன் - என - சூதாடி என - மனம் ஒப்பாள்!

இப்பதினொன்றாம் பேறு தாய்மையே, பண்பாட்டுக் காவல் என்பதை விளக்கும் சான்றாம்.

✦✦✦

6. உடைமை

உடைமை என்பது உடையனாம் தன்மையாம். திருக்குறளில் உடைமை என்னும் பெயர் கொண்ட அதிகாரங்கள் பத்துள. அவை எக்காலும் நாம் விட்டு விடாமல் நம் உடைபோல் பேணிப் போற்ற வேண்டியவை. அவர் சொல்லாமல் விட்ட ஓர் உடைமை பொருள் உடைமை. ஏன் அதனை வள்ளுவர் உடைமை வகையில் சேர்க்காது விட்டார்?

பொருளைப் போக விடப் போக விடத்தான் உலகியக்கமாம். அதனைக் கொண்டிருந்தானுக்கும் ஆக்கமாம். அதனை ஓரிடத்தில்

குவிந்து கிடக்க விடுவதோ, கட்டுக் கிடைப்படுத்துவதோ, கருமித்தனம் செய்வதோ உலகுக்கு மட்டுமன்று உடையானுக்கும் கேடாம்.

அதனால் அதனை உடைமை எனச் சொன்னார் அல்லர். ஆனால் அதன் பயன்பாட்டையும் சிறப்பையும் சொல்லாமல் விட்டாரும் அல்லர்.

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை"

"பொருளானாம் எல்லாம்"

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர்"

"செல்வரைச் செய்வர் சிறப்பு"

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்"

"இருளறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று"

என்றும் பிறவாறும் பாராட்டும் அவரே, அப்பொருள் தக்காரிடம் சேர்ந்து தக்க வகைக்குப் பயன்படாமையைக் கருதி,

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியன் மூத்தற்று" (1007)

"பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள." என்றார்.

வள்ளுவர் வகுத்த பத்து உடைமைகளையும் தனித்தனியே ஆய்தல் வேண்டும். அவை தனித்தனி நூலாதலும் வேண்டும். இவண் நாம் உடைமை என்னும் சொல்லாட்சியுடைய பன்னீரிடங்களை மட்டும் எண்ணுவோம்.

மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில் குடும்பக் கொடை வழியதே உலக நலம் என்பதைத்,

"தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது" (68)

என்கிறார். உலக நலப்பாட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பங்களிப்பு உண்டு; அதனைச் செய்தல் ஆன்ம நேயக்கடன் என்பாராய் உரைத்தது இது.

அடுத்து அன்புடைமையிலே,

"அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு" (74)

என்கிறார். "அன்பு என்னும் தாய் பெற்ற அருமைக் குழந்தையே அருள்" என்ற அவர், இங்கே "ஆர்வம் என்னும் குழந்தையை அன்பு ஈனும்" என்கிறார். அன்றியும், "அவ்வார்வமும் தாய்மைப் பேறெய்தி நட்பு என்னும் எண்ணரிய சிறப்பைத் தரும்" என்று கூறும் வகையால், அன்பைப் பாட்டியாக்குகிறார்.

"அன்பின் ஆக்கமே ஆர்வம்
ஆர்வத்தின் ஆக்கமே அரிய நட்பு" (74)

என ஈருடைமைகளை இயைத்துரைக்கிறார்.

விருந்தோம்பற் சிறப்பைக் கூறும் வள்ளுவர்,

"உடைமையுள் இன்மை விரும்தோம்பல் ஓம்பா
மடமை; மடவார்கண் உண்டு". (89)

என்கிறார்.

"அடுக்கிய கோடி கொண்டும், அடுத்து வந்த விருந்தைப் பேணாதவன் உடுக்கவும் உண்ணவும் இல்லா வறியன் ஆயவனே! இவ்வறிவிலாச் செயல் பொருளியல் வாழ்வியல் மாந்த நேயம் என எவையும் அறியாத அறிவிலியர்க்கே உள்ள இயல்பாம்" என்பது இது கூறும் செய்தி.

ஈகை அதிகாரத்திலே உருகிநின்று கேட்கிறார் வள்ளுவர் :

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கண் அவர்" (228)

"நாளெல்லாம் தேடிக்குவிக்க வல்ல திறம் இருந்தும் அப்பொருளைப் பயன்படுத்தும் அறிவைப்பெற்றிலரே! கொடுத்தலால் தாமுறும் இன்பமும், பெறுதலால் பிறருறும் இன்பமும் காணக் கொடுத்து வைத்திலரே! இவர் தம் கன்மனம் தான் என்னே! கற்பாறையும் கரும்புச் சாறன்ன நீர் கொண்டுளதே! கல் எத்தனை மணிகளைக் கொண்டுளது. கல்லைத் தோண்டிக் கன்னெய் கொளலாமே! இக்கடுமையன் நிலை என்னே ! என்னே ! என இரங்குகிறார் வள்ளுவர்.

துறவிலே வள்ளுவர் கூறும் உடைமைக்கு இணை அவ்வுடைமையே எனலாம்.

"இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து". (344)

என்பது.

பற்றற்ற துறவின் கடைப்பிடிச் சான்றுக்கு ஒப்பற்ற ஒன்று பொருட் பற்று அற்ற தன்மையே. அதனை உடைமையாகக் கருதின் பற்று அற்றேம் என்னும் எல்லாமும் அற்று, மீண்டும் பற்றை விடாப் பற்றாளன் என்பதையே உண்டாக்கும். துறவிக்குப் பொருட்டுறவே தலைத்துறவு என்கிறார்.

கொடுங்கோன்மையில் வரும் உடைமை,

"இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்". (568)

என்பது. அறமுறை அருள்முறை என்பவை அறியாக் கொடுங்கோலன் ஆட்சி செய்வனாயின் அவன். கீழ்வாழும் செல்வத்துள் செல்வமிக்கானும் வறியனுக்கு வறியனாகவே அல்லலுறுவான். **வறுமைக்கும் வறுமை தீயோன் ஆட்சியில் ஒருவன் திருவுடையவனாக வாழ்வது** என்கிறார்.

ஊக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் பிறந்த நாள் தொட்டு இறுதி மூச்சுவிடும் வரை உடனாகி உள்ளாகி ஒன்றாகி உயிராகி இருக்கும் ஒப்பற்ற உடைமையை வள்ளுவர் வழங்குகிறார். அது

"உள்ளம் உடைமை உடைமை"

என்பது. பொருளுடைமையே உடைமை என்பாரைத் தெளிவுறுத்தும் வகையில், பொருளுடைமை, நில்லாது நீங்கி விடும் . என்கிறார். ஒற்றை அடியில் இரட்டை மாங்காய் வீழ்த்த மூன்று உடைமைச் சொற்களை ஆள்கிறார்.

'உழவு'த் தொழில் எல்லாத் தொழில்களுக்கும் தாய்த் தொழில். உயிர் காக்கும் தொழில்! அதனைச் செய்வார் ஏர் உழவர்! இவ்வுழவரைக் கொண்ட ஆட்சிப் படைப்பு. சொல்லேர் உழவர், வில்லேர் உழவர், வாளேர் உழவர் முதலியவை. வள்ளுவரே

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை". (872)

என்பார். சொல்லேர் உழவர் செய்யும் நலம் 'நாநலம்'. அதனை,

"நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று". (641)

என்பார். நாநலமே நற் செல்வம்; அச் செல்வம் தரும் நலம் பிற எச் செல்வத்திலும் இல்லை என உறுதி மொழிகிறார்.

தூது என்னும் அதிகாரத்தில் அன்புடைமை, துணிவுடைமை, பண்புடைமை ஆகிய மூவுடைமைகளும் தூதுரைப்பார்க்கு இன்றியமையாத உடைமைகள் என்கிறார்.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு". (681)

"தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு". (688)

என்பவை அவை.

பேதைமை என்னும் அதிகாரத்தில் உடைமை ஒன்றைக் காட்டுகிறார் வள்ளுவர். அது 'கையொன் றுடைமை' என்பது.

கையில் உடைமையாக உள்ளது ஒன்றே ஒன்று; அதுவும் பாராட்டும் பரியதும் அன்று. ஆனால், அவ்வற்ப ஒன்று பேதையனிடம் இருக்கிறது அதனால், அவன் பார்வையில் வானினும் பெரியதாக அவனுக்குத் தோன்றுகிறது.

"மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்றுடைமை பெறின்". (838)

என்பது அது.

குடித்து மயங்கியவன் மேலும் குடித்தால் வெறிமயக்கம் தீரான். பேதையும் வையகத் தொன்று உடைமை பெறின் அவ்வுடைமை. வெறி அகலாது.

"அற்பனுக்குப் பவிசுவந்தால் அர்த்தராத்திரியில்
குடைபிடிப்பான்" என்பது பழமொழி.

நாணுடைமை அதிகாரத்திலே வரும் உடைமை, அப்பெயருடைமையாம் பேருடைமையே. அது,

"ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாண் உடைமை மாந்தர் சிறப்பு." (1012)

ஊணும் உடையும் எல்லா உயிர்களுக்கும் பொது வாயவை. ஆனால், மாந்தர்க்கு அவைமட்டும் உடைமைகள் அல்ல. நாணுடைமை என்னும்

மாணுடைமையே தனிச்சிறப்புடைய உடைமையாம் என்கிறார். நாணுதல் என்பது என்ன எனின்,

"கருமத்தால் நாணுதல் நாணு"

என்பார் வள்ளுவர்.

"உடைமைச் சொற்களாக வருவன கொண்டு
எண்ணிய எண்ணப் பதிவு இஃதாம்".

✦✦✦

7. ஒப்புரிமை

பனி கொட்டுகிறது; விடியற்பொழுது; ஒரு பெரியவர் சாலையில் நடக்கிறார். அவரைக் கண்ட ஒருவர் வணங்குகிறார்; கையை நீட்டி ஏதாவது காசு கேட்கிறார்.

பெரியவர் கை, சட்டைப்பையைத் துழாவுகிறது; ஏதும் இல்லை ; "தம்பி, காசு ஏதும் கொண்டுவரவில்லை" என்கிறார்.

கைநீட்டியவர், மீளவும் இருகைகளையும் தூக்கி மிகப் பணிவுடன் வணங்குகிறார்.

"தம்பி, நான் சொன்னேனே! காசு கொண்டுவரவில்லை" என்றார். ஐயா, இப்பொழுது உங்களை வணங்கியது காசுக்காக இல்லை; என்னையும் ஒரு மனிதனாக நினைத்துத் தம்பி என்று உரிமையுடன் அழைத்தீர்கள் அல்லவா! அதற்காக வணங்கினேன் என்றார்!

ஒரு மனிதன், இன்னொரு மனிதன் தன்னை ஒத்தவனாக எண்ணி மதிக்க வேண்டும் என்பதையே பெருங்கொடையாக எண்ணுகிறான் என்பது இதனால் விளங்கும்.

ஒப்புரிமை இல்லா நிலைமையை ஒரு மானப்பிறவி ஏற்காது! ஒப்புரிமைக் கேட்டைத் தருவாரும் பெறுவாரும் ஆகிய இருவரும் மானக் கேடரேயாம்!

தோற்பைக்குள் அமைந்தது நம் உடற்கூடு! அத்தோற்பைக்கு "மேல்" என்பது பெயர். மேனி என்பது அதன் வழியது; அத்தோலுக்கு ஒரு பெயர் 'உரி' என்பது.

'தோலை உரித்து விடுவேன்' என்பது ஒரு கடு மொழி! புலவுக்கடைக்காரர் தோலை உரித்துத் தொங்கப் போடுதலே தொழிலாகிப் போனவர். தொன்மம் சிவனை 'வாரணத் துரிவையான்' என்று கூறும்.

நிலக்கடலையைத் தோலை உரித்தே பருப்பை எடுப்பது கண்கூடு! நம் பிறவிக்கு முதல் உறுப்பு - தொன்மை உறுப்பு -தொல், 'தோல்' எனப்பட்டது. ஆதலால் 'தோல், உரி' என்பவை உரைப்பதென்ன? பிறப்பொடு வந்தது 'உரிமை' என்பதாம்.

விடுதலை எங்கள் பிறப்புரிமை என்றார் திலகர். தமிழ்ச்சொல் படைப்பாளன் அவ்வுரிமையைத்தன் படைப்புச் சொல்லாலேயே காட்டி விட்டான்! **ஒப்புரிமை பிறப்புரிமை** என்பதை உணர்ந்து போற்றும் பிறப்பே பிறப்பு. மற்றைப் பிறப்பு உயிருடைய பிறப்பு ஆகாது என்பதால் தான் திருவள்ளுவர்,

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்".

என்றார். அவ்வாறு ஒத்ததறிந்து போற்றாதான் உயிர் வாழ்வான் ஆகான். அவனைச்,

சொத்தாருள் வைக்கப்படும்

என்றார். உயிரோடேயே செத்தாரோடு அடக்கஞ் செய்ய வேண்டியவன் என்றது ஏன்?

அன்பால் பிறந்தவன்; அன்பொடு வாழவில்லை என்றால் அப் பிறவி என்ன பிறவி? அன்பின் வழியது உயிர்நிலை அல்லவா! அன்பிலா உடம்பு உடம்பா?

என்புதோல் போர்த்த உடம்பே அன்றி, உயிருடைய உடலன்றே!

உயிரன்பு, உயிரை உடையவற்றை எல்லாம் ஒப்ப மதித்துப் போற்றும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

என்பதை உயிராகக் கொள்ளும். பிறப்பு வேறுபாட்டை எண்ணவே எண்ணாது. எண்ணின் அப்பிறப்பு மனிதப் பிறப்பு அன்று என்கிறது வள்ளுவம். "ஒழுக்கம் உடைமை குடிமை" என்று, ஒழுக்கமுடையரே உயர்குடியர் என்றார்.

ஒருவர் செய்யும் **தொழிலால் உயர்வு தாழ்வு** கொள்ளலாமா? எத்தொழில் உயர் தொழில்? எத்தொழில் தாழ் தொழில்! தொழிலில் ஏற்றத்தாழ்வு கொள்ளல் போலியானது!

அமைச்சுத் தொழில், நடுவர் தொழில், மருத்துவர் தொழில், பொறிஞர் தொழில், ஆசிரியர் தொழில் என்பவைக்குக் குறைந்ததோ, உழவுத்தொழில்?

உழவினார் கைம்மடங்கின் என்னாம்? துறவர் தாமும் வாழ்வாரா! மற்றை எவர்தாம் வாழ்வார்?

கைசெய்தூண் மாலையவராம் உழைப்பாளர் உழைப்பு இல்லையேல் ஊணுண்டா? உடையுண்டா? உறைவகம் உண்டா? உறுபொருள்கள் உண்டா? உழுதுண்டு வாழ்வார் தாமே வாழ்வார்க்கெல்லாம் வாழ்வார். அவர் தொழில் தாழ்வுற்றதா?

தெருத்தூய்மை பேணுவார் தொழில் தாழ்ந்ததா? அவர் பேணாவிட்டால் நாம் வாழ்வைத் துளியாவது பெற வாய்க்குமோ?

தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை; தொழில் செய்யும் வகையாலேயே உயர்வு தாழ்வு உண்டாகிறது. தொழில் செய் செம்மை, செம்மை இன்மை என்பவற்றைப் பொறுத்ததே உயர்வு தாழ்வு? தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை. அதனால் தான் வள்ளுவர்,

"சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்"

என்றார். செய்தொழில் வேற்றுமை என்பதைத் தொழில் செய் வேற்றுமை எனக் கொண்டு பொருள் காணின் தெளிவாம். மேலும்

"தவம் செய்வார் தம் கருமம் செய்வார்".

என்றதை எண்ண வேண்டும். தத்தம் கடமையைத் தகவாகச் செய்வார் எவரோ அவரே தவம் செய்வார் என்பதை எண்ணினால் கருமமாம் கடமையில் பெருமை சிறுமை இல்லை. அதனைச் செய்யும் வகையாலேயே பெருமை சிறுமையாம்

மேலும் தெளிவிப்பார் திருவள்ளுவர்:

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்". (505)

என்பது அது.

மாற்றுக் காண் கட்டளைக் கல் தங்கத்தின் மாற்றையே காட்டும். அத்தங்கம் கொண்டு வந்தானையோ, கொண்டு வந்த வகையையோ, ஏறிவந்த ஊர்தியையோ கொண்டு மதிப்பிடுவது இல்லை. அதுபோல்

அவரவர் செய்யும் செயலே பெருமை சிறுமைச் சான்று! அவர் செல்வம், செல்வாக்கு; பதவி பட்டம்; கருதி மதிப்பிடப்படா!

மேலே ஒருவன் இருக்க, கீழே சிலர் சிவிகை சுமக்க உலாக் கொள்வார் உளரே! இவர் செயல் அறச் செயலா?

உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அல்லவோ தவம்? அத்தவம் கருதா இவர் செயல் அவம்! அறமற்றது. என்பாராய்,

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை" **(37)**

என்றார்.

கல்வியை மாந்தரின் ஒப்புரிமையாகக் கண்டவர் வள்ளுவர். அதனால் கண்ணுடையர் என்பவர் கற்றோர் என்றார். எண்ணும் எழுத்துமே கண் என்றார். ஆதலால் கல்வி ஒப்புரிமையைக் கண்ணாலேயே காட்டினார் வள்ளுவர், கண்ணுடையவரும் கண்டார் அல்லரே! அதனால் அல்லவோ பிறப்பொப்பை வேற்றுமைப்படுத்தி, நான்காம் ஐந்தாம் பிரிவினர் கல்வி அறிவில்லாக் கடையராகவே இருக்க வைத்தனர். அந்நெறியை உடைக்கவே, "கண்ணுடையர் என்பவர் கற்றோர்" என்று ஒப்புரிமைக் கல்வியை உடைமையாக்கினார்.

வேதத்தைக் கற்றால், ஓதினால், கேட்டால், மனத்து வைத்தால் முறையே கண்ணைத் தோண்டல், நாவை அறுத்தல், ஈயத்தைக் காய்ச்சி விடல், பன்னிரு விரலச் சூட்டிரும்பைச் செலுத்தல் எனச் சண்டாளர்கள் வகுத்த கொடுமையை எண்ணிக்குமைந்து,

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை" **(411)**
"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்" **(415)**
"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்." **(416)**

"கேள்வியால் தோட்கப்படும்" செவியே செவி என்றெல்லாம் வள்ளுவர் கூறிக் கேள்வி ஒப்புரிமை காட்டினார்.

இனிக் கொடையிலும் வேற்றுமை காட்டினர்; அந்நிலை வள்ளுவர் உள்ளத்தைச் சுட்டது. ஊர் ஊராய் வேதியர்க்குக் கொடை, பொற்பசு

வழங்கல், வேள்விக் கொள்ளை என வேந்தரை வளைத்தமையைக் கண்டார். திருமங்கலம், மங்கலம், உத்தமதானபுரம், மகாதானபுரம், பிரமதேயம், சதுர்வேதிமங்கலம் என ஒரு கூட்டம் கொள்ளை அடிப்படைக் கண்டு, "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என்றார். மற்றவர்க்கு ஈவதைக் "குறியெதிர்ப்பை நீரதுடைத்து" என்றார். குறி எதிர்ப்பாவது கொடுத்ததற்கு ஒப்பப் பெறலாம். என்ன கொடுப்பதாக வேதியர் வேந்தரை ஏமாற்றினர் எனின், உங்களுக்கு வீடுபேறு - சுவர்க்கம் - கிட்டும், எங்களுக்குக் கொடுத்தால் என்றனர். அதனால், வேதியரே உங்களுக்குக் கொடுப்பதே நல்வழிக் கொடை என்கிறீர்; கொடுத்தால் வீடுபேறு கிட்டும் - இன்ப உலகத்து என்றும் இருக்கலாம் என்று ஏமாற்றுகிறீர்; இவற்றை நம்பிக் கெடும் வேந்தரும் செல்வரும் உளர் என எண்ணியவராய்,

"நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று" (222)

என்றார். மேலும்,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" (231)

என்று கூறிக் கொடை ஒப்புரவும், கொடைப் பயன் ஒப்புரவும் காட்டினார்.

செல்வம் என்பது வினைப் பயனால் வருவது; வறியர் சிலரும் வளமையர் சிலரும் உளதாதல் அவர் தம் செய்வினைப் பயன் என்று மயங்கினர். செல்வம் முயற்சியால் வருவது.

"முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" (616)

இந்த வெளிப்படை அறிவு தானும் இல்லாராய்த்தம் உழைப்பை நம்பாமல் தலைவிதி என இட்டுக் கட்டியதை நம்பிக் கொண்டுள்ளனரே என்று வெதும்பியவராய்த் திருவள்ளுவர்,

"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள" (241)

என்றார். முயற்சியாளர் தமக்கெல்லாம் உழைப்புப் பயன் இல்லாமல் போகாது என்பாராய்த்,

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" (619)

என்றார்.

தலைவன் தலைவி; **கிழவன் கிழத்தி என ஒப்புரிமை கண்ட** மண்ணில் பெண்ணை அடிமைப்படுத்தும் நிலை உண்டாவதை உணர்ந்தார் திருவள்ளுவர், அவனினும் அவளே உயர்ந்தவள் என்பதை,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள"

என்றார்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்"

என்றார்.

"ஒருமை மகளிரே போலப் பெருமை"

என்றார்.

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்"

என்றார்.

"உறுதோறுயிர் தளிர்க்க வைக்கும்"

என்றார். பெண்ணின் பெருமை பேசுதலால் பெண்மையை வளைத்த கொடுங்கோலை நிமிர்த்திச் செங்கோலாக்கினார் வள்ளுவர். மேலும் பெருவிளக்கம் வேண்டுவார், திரு.வி.க. இயற்றிய

"பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை நலம்" பயில்வாராக.

பெண்ணை ஒப்புநிலையில் இருந்து ஒதுக்கியவர்கள் அவர்களுக்கு "நாணம் அச்சம்" என்பவை வேண்டும் பண்புகள் என்றனர். நாணப் பண்பு பெண்ணுக்கு மட்டுமா வேண்டும்? ஆணுக்கு வேண்டாவா? நாணமில்லாப் பிறவி எப்பிறவி ஆனால் என்ன? மாந்தப் பிறவி அன்று; விலங்கு முதலாம் கீழ்ப்பிறவியே, என்பாராய்க்,

"கருமத்தால் நாணுதல் நாணு; திருநுதல்
நல்லவர் நாணுப் பிற" (1011)

என்றார்.

சான்றோர் சால்புகளுள் நாணுதல் மீச்சிறப்பினது என்பாராய்,

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்று
ஐந்துசால் பூன்றிய தூண்" (983)

என்றார். நாணுமை கொள்ளாமை ஆள்பவனுக்கு இழிமை என்றார். பொதுவாக, "நாணுடைமை மாந்தர் சிறப்பு" என்றார்.

அச்ச ஒப்புரிமையை,

"அஞ்சுவ தஞ்சாமை பேதமை; அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்" (428)

என்றார்; ஒப்புரிமை அச்சத்தையும் நாணத்தையும் ஒருபாலுக்கு ஒதுக்காதீர் என்றார். அன்றியும்,

"அச்சமே கீழ்களது ஆசாரம்"

என்று இடித்துக் கூறினார்.

"அச்சம் இலார்க்கு அரணில்லை"

என்று தெளிவுறுத்தினார்.

வேதியரே அந்தணர் என்றனர்; அவர் செய்வேள்வியே தெய்வம் உவப்பது என்று பறை அறைந்தனர்.

அகம் தண்மையர் எவரோ அவரெல்லாம் அந்தணர்;

வருவிருந் துவப்ப ஊட்டுவார் எவரெவரும் வேள்வியர்;

ஓயாது ஒழியாது ஓதுவார் எவரும் பார்ப்பார்;

வழிபாடு என்பதையும் தெளிவாக்கினார்; நினைத்தல், பின்பற்றல், செயலாற்றல் என்பனவே வழிபாடு என்றார். ஆகவே வழிபாட்டிலும் ஒப்புரிமை வைத்தார்.

சடங்குகளை அடுக்கிக் காட்டின் சார்பாகி விடுமே!

ஓருருவம் ஒரு நாமம் ஒன்று மில்லான் என்றாரும்

ஆயிரம் திருநாமம் கூறினர் அல்லரோ!

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்றவரும் அத்தடம்

மாறியதுண்டே !

நினைப்பவர் மனமே கோயில் என்றவரும் கோயிலை வலம்

வந்தனர் அல்லவா?!

ஊனுடம்பு ஆலயம் என்றவர்க்கு ஆலயம் அமைந்துள தன்றோ!

இறையிலிக் கொள்கையை வைத்தவரை இறைநிலையில்

வைத்து விடவில்லையா?

"சார்பு உணர்ந்து, சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" (359)

என்றவாறு சார்பு கடந்த சால்புப் பொதுமையை எப்பாலும் போற்றியதே முப்பாலாம் திருக்குறள் ஒப்புரிமை என்க.

✦✦✦

8. செயல்வீறு

உன் உழைப்பால் - உறுதிப்பாட்டால் - ஊக்கத்தால், ஊழையும் வெல்லலாம் என்பவர் திருவள்ளுவர்.

"என் குடியை எழுச்சி மிகச் செய்யப் போகிறேன் என்று நீ பாடுபட்டால் நீ வழிபடும் தெய்வமும் வரிந்து கட்டிக் கொண்டு வந்து உன்முன்னே நின்று உன் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு முன்னே போகும்" என்பவர் திருவள்ளுவர்.

"உடைமைகள் என்பவற்றில் எல்லாம் உயர்ந்த உடைமை உள்ள முடைமை" என்பவர் வள்ளுவர்.

அவர் கூறும் செயல் வீறு படிமானப் பெருமையுடையது.

"அடி அடியாக ஏறி, ஏற அரிய மலைமேல் ஏறி, எட்டா முடியைத் தொட்டுத் துலங்கலாம்" என வழிகாட்டி அன்று, வழிகூட்டிச் செல்பவர் வள்ளுவர்.

"தெரிந்து செய்!
வலிமை அறிந்து செய்!
இடம் அறிந்து செய்!
காலம் அறிந்து செய்!
தெளிந்து செய்!
சுற்றத்தோடு எண்ணிச் செய்!
மறவாது செய்!
இடையீடு இன்றிச்செய்!
இடுக்கண் பாராது செய்!
வெற்றி உறுதி என்று செய்!

என அதிகார வரிசையாகச் சொல்கிறார்!

"என்ன தவறு செய்துவிட்டேன் என நீயே பின்னர்
எண்ணும் செயலைச் செய்யாதே!"
"ஆக்கம் கருதி முதலிழக்கும் செயலைச் செய்யாதே!"
"அஞ்சத் தக்க - வெறுக்கத் தக்க - செயலைச் செய்யாதே!"
"பழிபாவம் வரும் செயலைச் செய்யாதே!"
"ஈவிரக்க மற்ற செயலைச் செய்யாதே!"
"தன்னலப் பேராசையால் செயலில் ஈடுபடாதே!"

"அரை குறையாகச் செய்யும் செயலைத் தொடாதே!"
"எதிர் வரும் விளைவை எண்ணாமல் செய்யும் செயலைச் செய்யாதே!"

– என மறுதலைப் பகுதியையும் சொல்கிறார் அவர்.

ஏனெனில்,

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்" **(466)**

என இருபாலும் சுட்டிச் செயலாற்றச் சொல்வதன் விளக்கம் வேண்டும் அல்லவோ!

இனி,

வினை செயல்வகை	(68)
வினைத்திட்பம்	(67)
வினைத்தூய்மை	(66)

என மூன்று அதிகாரங்களை முழு முழு மணிகளாகச் செயல் வீறுக்குப் படைத்துள்ளார்! தூய வினையைச் செய்க! ஊக்கத்தொடு செய்க! செய்யும் வகையால் செய்க! வெல்க என்கிறார்.

வினைத்தூய்மை

வினை நல்லதாக இருந்தால் அது வேண்டுவ எல்லாவற்றையும் தரும்.

ஆதலால், புகழ் தருவதும் நலந்தருவதும் அல்லாத செயலைச் செய்யாதே!

எத்தகு இடருற்ற போதும் இழிவாம் செயலைச் செய்ய நினையாதே!
முன் செய்து பின்வருந்தும் செயலைச் செய்யாதே!

தாயின் பசிதீர்க்கவும் தவறாம் செயலில் தலைப்படாதே!

சான்றோர் மதிக்கும் செயலை மட்டும் செய்க!

பிறரை வருத்தித் தேடிய ஆக்கம், நீயும் வருந்தப் போயே போகும்!

வஞ்ச வழியால் எடுத்த செயலை முடிக்க முயலாதே!

– இவை வினைத் தூய்மைக் குறள்களின் பிழிவு.

"அழக் கொண்ட எல்லாம் அழப்போம்; சான்றோர் கடிந்தவை செய்தால், முடிந்தாலும் பீழை தரும்"

– என்பவை சாவிப்புகளாம்.

வினையில் தூய்மை ! வினையில் உறுதி!

இவை இரண்டும் பணத்தாளின் இருபக்கங்கள்!

செயலில் தூய்மை மட்டும் வெற்றிக்குப் போதாது, வினையில் உறுதி வேண்டும்! வினையில் உறுதி மட்டும் போதாது, செய்யும் செயலில் தூய்மை இருக்க வேண்டும்!

ஒன்றை விட்டு ஒன்று வாழா அன்றில் பறவைகள்

அன்னவை வினைத் தூய்மையும், வினைத் திட்பமுமாம்!

என்பவர் திருவள்ளுவர்.

வினைத்திட்டம்

வினைத்திட்டம் அல்லது வினை வீறு எங்கே இருக்கிறது? கையிலா, காலிலா, கருவியிலா, துணையிலா - இவற்றில் இருப்பது உண்மை தான்! ஆனால் இவற்றினும் மேலாம் ஒன்றே வினைத்திட்பம்! அது மனத்திட்பம்! மற்றை எல்லாம் பிற திட்பங்களே!

மனத்திட்பம் இல்லான் எத்தனை எத்தனை திட்டங்களைப் பெற்றிருந்தாலும், அவை மனத்திட்பங்கள் ஆகா! வினைத் திட்ப உயிர்ப்பிடம், எடுத்த எடுப்பிலே வள்ளுவரிடமிருந்து துள்ளி எழுகின்றது! வினைத்திட்பம் என்பது மனத்திட்பம்!

மனத்திட்பம் உடையார்க்கு இடையூறு என்ன செய்யும்?

உடல் தளர்வு என்ன செய்யும்?

மனத்திட்பம் உடையார், இடையூற்றுக்கு இடையூறு செய்பவர்! தளர்ச்சியைச் சுட்டெரிக்கும் தாளாண்மையர்!

மண்ணா மணலா சரளையா கற்பாறையா தலைதாழ்த்திக் கொம்புயர்த்திக் காது விடைத்து முதுகு வளைத்து பாரம் இழுத்துச் சேரிடம் சேர்க்கும் பகட்டுக்கு இணையான பாரிய முயற்சியனுக்குத் தடை என்ன தடை?

எடுத்த செயலை இறுதிவரை எழுச்சியாக நிறை வேற்றுதல் அன்றி, இடை நிறுத்தம் என்பது இல்லா வீறுடையானுக்கு, வெற்றி வாய்க்காமல் வேறு என்ன வாய்க்கும்?

எவர் பாராட்டு? எவர் பரிசு? எதிர்பார்ப்பு இருந்தால் தானே! ஏமாற்றம் எவர்க்கு? எதிர்ப்பார்ப்பு உடையவர்க்குத் தானே! அதனால்

எதிர்பார்த்தல் இல்லாத வீறுடையார், தக்கார் கண்ணில் கருத்தில் பாராட்டில் சீராட்டில் விடுபட்டுப் போவாரா? போகார் போகவே போகார்!

ஆளுமையுடையார் ஊரில் இல்லையா? நாட்டில் இல்லையா? உலகில் இல்லையா? ஒருவர் கண்ணில்பட்டால் போதும்! அவரால், ஓராயிரவர் கண்ணில்பட்டுக் கருத்தில் பதிந்து கண்டு கொள்ளப்படுவார்! எண்ணியறியாத எண்ணிலாப் பாராட்டுக்கும் உரியவரும் ஆவார்! ஆதலால்,

"வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்" (665)

இம்மணிக்குறள், மலைமேல் விளக்காய் – கலங்கரை விளக்காய் – அவர்க்கு ஒளிகாட்டி வழிகாட்டி உயர்த்தும் ஒண்சுடர்க் கதிராய் விளங்கும்!

எண்ணியவர் எளியர் அல்லர்!

அவர் திண்ணியர்!

அவர் எண்ணியது திண்ணமாக வெற்றியன்றி

வேறொன்று தராது!

தடையென்றால், "ஒரு சிறு புட்டி போதும்! கட்டிலோ தொட்டிலோ வேண்டா இச் சிறுகுழந்தைக்கு" எனப்பட்ட ஐசக் நீட்டன் உலகப் புகழாளி ஆவானா?

உருசிய நாட்டிலேயே ஒரோ ஒரு அழகிலியைத் தேர்ந்தெடுங்கள் என்றால், தேர்ந்து எடுக்கக் கூடிய தோற்றம் உடைய காரல் மார்க்கசை, உலகிலேயே இப்படியோர் அழகியா எனப் பாராட்டத்தக்க சென்னி, காதலித்துக் கடிமணம் கொண்டு **சொன்னிமார்க்கசு** ஆகிய "பெண்ணின் பெருந்தகை" இருந்திருப்பாரா?

தேர் என்ன? வண்டி என்ன? ஆழி என்ன? சட்டம் கூடு என்ன? அச்சு என்ன? **அச்சாணி என்ன?**

அச்சாணி இல்லாமல் எவ்வூர்தி ஓடும்?

"உருவு கண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு

அச்சாணி அன்னார் உடைத்து" (667)

என்பது வள்ளுவம்!

வினைத் திட்பம் உடையவர் அச்சாணி அன்னார்! அவர் கலங்கார்! மலைப்புறார்! சோரார்! குதியின்எல்லை கண்டே தீர்வேம் என்னும் குறிக்கோளாளியர் அவர்.

துன்பத்தை இன்பமாகக் காண்பார் முன், துன்ப மென்ன துன்பம்? வினைத் திட்பத்தை எதிரிட்டு வெல்ல எனைத் திட்பமும் இல்லை! அவர் வினைத்திட்பம் மனத்திட்பம் ஆம்! வினை செயல் வகை

வினை செய்வார்க்கு வீறு எப்படி வாய்க்கும்?

எண்ணாமல் வினை செய்யத் துணிவார் அல்லர் அவர்!

எண்ணித் துணிவர்! திண்ணிதில் எண்ணித் துணிவர்!

என்ன என்ன எண்ணுவார் அவர்?

துணிவே அவர்க்குத் துணை!

துணிவு உள்ளதென்று வேண்டா வகையில் வீறி எழுவாரா? மாட்டார்! அமைந்து செய்வதை அமைந்து செய்வார்! விரைந்து செய்ய வேண்டியதை விரைந்து செய்வார்! அமைந்து செய்வதை விரைந்தோ, விரைந்து செய்வதை அமைந்தோ அவர் செய்யார்!

எடுத்த செயலை முடிக்க வேண்டியதே!

முடிக்க இயலாது; இயலவே இயலாது; என்னும்

நிலை உண்டானால், வீம்பாக - போலி மானமாக

எடுத்ததை விடலாகாது என்பதற்காக அவர் அதனைத்

தொடரார்! தமக்குத் தக்க வகையில் மாற்றிக்

கொண்டு செயலை முடித்தே தீர்வார்!

எடுத்த செயலை இடைவிட்டு அதுகாறும் செலவிட்ட

உழைப்பை - பொருளை - வீணாக்கும் செயலை

ஒருநாளும் செய்யார்!

வினை வீறுடையார் எண் வகையாக எண்ணுவார்;

பொருளை எண்ணுவார்; கருவியை எண்ணுவார்;

காலத்தை எண்ணுவார்; இடத்தை எண்ணுவார்;

எடுத்த செயல் முறையை எண்ணுவார்; அதன் முடிவை

எண்ணுவார்; இடையூற்றை எண்ணுவார்; வினையைச்

செய்து முடித்தால் உண்டாம் பயனையும் எண்ணுவார்.

தன்னால் எடுத்த செயலை வீறுற முடிக்க வேறொருவர்

துணை – அவ் வினையின் நுணுக்கங்களை யெல்லாம்

தீர அறிந்த ஒருவர் துணையைத் – தேடிக் கொள்ளத் தயங்கார்!

இச்செயல் வினையால் வினையாக்கிக் கொள்ளும் வெற்றியாம்!

இனி, ஒரு செயலை எடுத்துக் கொண்டால் அச் செயல் சார்ந்த வேறு சிலவற்றையும் எடுத்துக் கொள்ளல் வினையால் வினையாக்கிக் கொள்ளும் வித்தகமாகும்.

யானையைப் பிடிக்க முயல்வார், இன்னொரு பழகிய யானையைக் கொண்டே பற்றிப் பிடிப்பர்.

"வீட்டுப் புறாவைக் கொண்டு காட்டுப் பறவையைப் பிடித்தல்"

"வீட்டுக் காடையைக் கொண்டு காட்டுக் காடையைப் பிடித்தல்"

எனப் பொது வழக்கு உண்டு. இதனை வள்ளுவர்,

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையார்த் தற்று"

என்பார்.

இரண்டு திருமணங்கள் நிகழ்கின்றன. இரண்டிலும் கலந்து கொள்ள வேண்டும்! இரண்டும் எதிர் எதிர் இடத்தவை! இதனை நாலடியார் கவட்டை நெறி என்று கூறும்! போகும் போது ஒரு திருமணம்! திரும்பும் போது ஒரு திருமணம்! இரண்டிலும் கலந்து கொள்ளலாம் என்பார். அதுபோல் ஒரு செயலைச் செய்வார் அதன் தொடர்பான வேறு சில செயல்களையும் துணைச் செயலாகக் கொள்ளல் பலப்பல பயனாம்.

தென்னை மிகவுடைய உழவர்! அவர் எண்ணெய் ஆலை, எண்ணெய்க் கடை பிண்ணாக்கு வணிகம் கயிறு பின்னல் கயிற்று விற்பனை கீற்றுமுடைதல் தொழில் எனத் துணைத் தொழிலாக்கல் ஆயவை மேற்கொள்ளல் வினையால் வினையாக்கிக் கோடலாம்! ஒன்றில் வருவாய் குன்றினும், ஒன்று நின்று நிமிர்த்துமே!

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்தல் 462

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்." (471)

"எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்." **489**

"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்" **494**

"வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு " **519**

"புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்" **538**

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" **596**

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு" **610**

"அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்". **611**

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்" **622**

என்னும் குறள் மணிகளைக் கடைப்பிடிப்பார் செயல்வீறு, எய்தாத பேறுகளை எல்லாம் எய்துவித்தல் உறுதியாம்.

❖❖❖

ஐ. திருக்குறளின் விழுமியம்

1. நலம் புனைந்துரைத்தல்

வாழ்த்த வாயும்

"வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்" என்றார் அப்பரடிகள். மடநெஞ்சு = மென்மையான நெஞ்சு.

வாழ்த்தும் வாய், வாழ வைக்கும் வாய்!
வாழ்த்தும் வாய், வாழ்த்துப் பெறும் வாய்!
வாழ்த்தும் வாய், கேட்பாரைக் கிளரச் செய்து
கேளிரைப் பெருக்கும் வாய்!

குறுந்தொகையில் ஒரு காட்சி!
"புத்துடைப் பூரிப்பில் நின்று பொங்கல் ஆக்கும்
பொலிவுடைய மனையாள்!
அவள் பொங்கிப் படைக்கும் பொங்கல் பூரிப்பிலே
தவழும் தலைவன்!"

கட்டித்தயிர்! கெட்டித்தயிர்! தாளிதம் போடுகிறாள். கடுகு – கடுகவே பொரிதலாலும் கரியது ஆதலாலும் பெயர் பெற்றது.

தாளிதப் புகை சுழல்கிறது, வீடெல்லாம் வளைகிறது, அதன் பதம்கெடாமல் எடுக்காவிட்டால் கசந்து விடும்! கசப்பொடு இனியன் உண்ணக்கூடாது எனக் கருத்தொடு துளாவி எடுக்கப் பார்க்கிறாள்! அது தீம்புளிப்பாகு!

புத்தாடை மெல்ல நழுவுகிறது; ஒரு கையால் உடையை அணைத்துக் கொண்டு பதன்கெடாமல் பணியை முடிக்கிறாள்! நெற்றியிலோ முத்துக்கோத்து நிற்கும் வியர்வை! முகத்திலோ முல்லையரும்பு, முள்முருக்கம் பூவின் இடையே இருந்து பட்டும் படாதும் அரும்பும் அரும்புதல்!

படைக்கிறாள்! மகிழ்கிறாள்!
சுவையோ! சுவை! 'இனிது' என்றான்!
அதுவரை ஆக்கிய அரும்பாடு அனைத்தும் அகன்றது!

'இனிது' என்னும் நேயன் பாராட்டு மொழியில் நெஞ்சம் கலந்து முகமலர்ந்தது!

ஒருசொல்! இனிது! அது புனைவு இல்லை!

நலம் பாராட்டுதல்! நலம் பாராட்டா நா, நாவா?

சுவைத்துச் சுவைத்துச் சொட்டச்சொட்ட உண்ட நா, 'நல்லது', 'இனிது' என்று கூறவும் கூடாதா?

"வேம்பின் காயையும் தேம்பூங் கட்டி"

என்று பாராட்டும் காதலர்.

"ஏனது சுவைப்பினும் தேனது வாகும்"

என்று பாராட்டும் காதலர் என இல்லாவிட்டாலும், நல்லதை இயல்பாகப் பாராட்டல் கடனல்லவா!

நலம் பாராட்டல்

அகப்பாடல் இலக்கணத்தில் ஒன்று, "நலம் பாராட்டல்" என்பது. திருவள்ளுவரோ செய்ந்நன்றி அறிதல் வழியாக அறவாழ்வில் நலம் பாராட்டல் கடனை உரைத்தார். அகவாழ்வில் நலத்தைச் சற்றே உயர்த்திக் கூறினால் என்ன குறை என்பாராய்,

"நலம் புனைந்துரைத்தல்" (112)

என்றார்.

நலம் புனைந்துரைத்தல்

எதுகை மோனை உவமை முதலியவை அமைய, நல்ல நல்ல மலர்களை எடுத்துத் தகுமாறு தொடுக்கும் மாலை போலத் தொடுப்பதே நலம் புனைந்து உரைத்தலாகும்.

நலத்தக்க தன்மையைக் கொண்டுள அனிச்சமலரே நீ வாழ்வாயாக! யான் விரும்பும் நயத்தக்காள் உன் மென்மையினும் மென்மையள் என்பதை அறிவாயாக! அறிவிலாத என் நெஞ்சமே, பலர் காணும் கண்ணையுடையாள் என நினைக்கின்றாய்! இவள் கண் என் ஒருவனால் மட்டுமே காணும் கண், என் ஒருவனையே காணும் கண்!

குவளை ஏன் மேலே எழாமல் தலை தாழ்ந்து நாணி நோக்குகின்றது என்பதை யான் அறிவேன். நிமிர்ந்து நின்றால் இவள் கண்ணுக்கு ஒப்பாக மாட்டோம் என்பதால் தானே!

என் உயிரன்ன தலைவியின் மென்மையை அறியாத எவளோ ஒருத்தி அனிச்சப்பூவின் காம்புகளை எடாமல் மலரைக் கோத்துச் சூட்டிவிட்டாள். இவள் மெல்லிடை தாங்காத் துயராக்கினாள். மங்கல இசைக்கு மாறான இசை கொட்டச் செய்து விட்டாளே?

விண்மீன் கண்ணை மூடிமூடி விழிக்கும் காரணம் யான் அறிவேன்! அவற்றுக்கு மதி எது? இவள் முகம் எது? என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளமுடியாமல் ஏற்பட்ட மயக்கத்தின் விளைவே அது.

என் உள்ளம் கொள்ளை கொண்ட இவள் எழில் முகத்தில், முழுதுற நிறைந்த மதிக்கு உரிய கறை சிறிதாவது உண்டா? இல்லை! முழுமதியே! என் பெருகிய காதல் அன்புக்கு நீ உரியது ஆனாலும் ஆகக்கூடும்! அதற்கு என் காதலி முகம் போல் களங்கமிலாத ஒளி வீச வேண்டும்! அது உனக்கு உண்டாகுமா?

மலர் போலும் கண்ணையுடைய என் காதலியின் முகத்திற்கு ஒத்ததாக விளங்க வேண்டும் என்றால் முழுமதியே நீ, பலரும் காணுமாறு தோன்றாது இருப்பாயாக! இம்மதி என்மதி! எனக்கு மட்டுமே வாய்த்த மதி! பொதுமதிக்கு அப்பேறு இல்லை!

என் இனிய காதலியின் மெல்லிதில் மெல்லிய அடிக்கு அன்னத்தின் மெல்லிறகுகள் ஆனால் என்ன? அவை, நெருஞ்சி முள்போலத் துயரூட்டுவனவே - இவ்வாறு நலம் புனைந்துரைத்த தலைவன் தமிழர் காதல் உணர்வை எல்லாம் திரட்டி மொழிவான் போல் ஓர் அரிய உத்தியில் உரைக்கிறான். அது,

> **"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்**
> **வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு"** (1113)

என்பது.

அவளுக்கு (என்னவளுக்கு)

மாந்தளிர் போன்ற உடல்;

முத்துப் போன்ற பல் ;

இயற்கை மலர்ச் செறிவின் நறுமணம் ;

வேல்போலும் ஒளியுடைய - மையுண்ட - கண் ;

இளமூங்கில் போலும் தோள் ;

(ஐந்து உவமை, ஐந்து உறுப்பு (பொருள்) ஐந்து ஒப்பு.)

முறி = மாந்தளிர்; மருதவளம்.

முத்தம் = முத்து; கடல் வளம்.

வெறி = நறுமணம்; குறிஞ்சி வளம்;

வேல் = பாலை நிலத்தவர் படைக்கலம்;

வேய் = மூங்கில்; முல்லைவளம். (ஐந்து நிலம்)

மேனி - உடல்

முறுவல் - ஒளியும் ஒலியும் (கண்ணும் செவியும்)

வெறி - நறுமணம், மூக்கு

வேல் - கண்

வேய் - கலை (ஆடல், பாடல்) (ஐம்பொறி)

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்

(ஐம்புலனுடைமை)

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிதல் -

(ஐந்தொழில் உடைமை)

குறட்பாவின் ஏழுசீர்களில் 'அவட்கு' ஒருசீர்.

எஞ்சிய ஆறுசீர்களில் ஐந்து உவமை!

ஐந்து நிலம்; ஐந்து பொறி; ஐந்து புலன்; ஐந்து தொழில், ஐந்து உவமை இருந்தும் உவமை உருபு ஒன்றுமில்லை. அனைத்தும் தொகை (மறைப்பு).

ஒவ்வோர் உவமையும் பொருளும் ஒரு சீர்!

அப்படி நான்கு.

ஓர் உவமை மட்டும் இருசீர்! அவையும் இயற்சீர்,

"முத்தம் முறுவல்"

ஒன்பது குறள்களில் நீராளமாகவும், நெய்யாளமாகவும், தேனாளமாகவும் ஒழுகவிட்டு நலம் புனைந்துரைத்த திருவள்ளுவர், பொன்னுருக்கென்ன ஒழுகவிட்டது இம் 'முறிமேனி'க் குறள்!

எண்ணி எண்ணி அகத்தே துய்க்க அமைந்ததே 'காதலகம்' என்பதைக் காட்டும் உள்ளுறையது இக்குறள்.

மேனியில் இயற்கை மணம் உண்டா?

செயற்கை மணம் இல்லாக்கால் மூக்கைப் பொத்த வேண்டும். வியர்வையும் அருவறுப்பாம் செச்சையும் உடையாரை நோக்கி இயற்கை மணம் என்பது இல்லை என்று கூறிவிடலாமா?

மணிமேகலையார் ஆடையணி, பூச்சுப்பொடி, மலர் மாலை எனப் புனைவிலா நின்றார்? சாத்தனார் சொல்கிறார்;

"புனையா ஓவியம் போல" என்று.

உச்சி முகர்ந்தால் உள்ளம் கள்வெறி கொள்கிற தாமே பாரதியார்க்கு!

"புறந்தூய்மை நீரான் அமையும்"

என்னும் நெறி ஒன்று பற்றின், இயற்கை நறுமண வெறி எப்பொழுதும் ஒன்றியே நிற்றல் உறுதியாம்!

சிலர், பூச்சுப் பொடி - மணக்கலவை என்பவற்றைப் பயன்படுத்துவது இல்லை! வழலை (சோப்) கடலைமாவு என்பவை கொண்டு பசை நீக்கம் செய்வது இல்லை! எனினும் நாறாமை ஏன்?

அவர் 'உணவு' வகையாலும், 'உணர்வு' வகையாலும், உடலைக் கெடுத்தார் அல்லர் என்பதை எண்ணல் வேண்டும்!

உட்சென்ற பொருளுக்குத் தக்க காற்று வெளிப்படுகிறதே!

அது சொல்லிக் காட்டும் பாடம் என்ன? உடலை நாற்றம் ஆக்காதே! எண்ணிப் பார்த்து நறுமையாக்கு என்பதே!

உழையா உடலில் வியர்வை நாற்றம் இராது!

உழைப்பார் உடலில் வியர்வை நாற்றம் இல்லாமல் போகுமா? என்பார் உளர். அவர் உண்மையறியார்.

உழைப்பார் உழைப்பு வியர்வை உட்கசடு அனைத்தும் வெளியே தள்ளி விடுகின்றது. உழைத்து வியர்வை வாரார் உடலிலோ கசடு தேங்கி நிற்கின்றது.

முன்னவர் நீராடினாலே இயற்கை உடலர் ஆகிவிடுவார்!

பின்னவர் தாம் நறும்பொருளால் நறுமையர் ஆவார்!

பூண்டு, உள்ளி, காயம் என்பவை நலப்பொருள்களே!

ஆனால் அவற்றின் மணம் தமக்கும் பிறர்க்கும் இன்பம் சேர்ப்பவை இல்லை.

புலவூண் கடையில் வைக்கும் பெருஞ்சீரகம்

புல்லூண் கடையில் வைக்காமை ஏன்?

வைக்கா வழக்கம் மாறி வைக்கும் வழக்கம் உண்டாகி வருவது ஏன்?

புலவூண் சேர்ப்புப் பொடி, பொருள் என்பவை

புல்லூண் வகைக்கும் சேர்த்துப் போலிமையாய்ப் புலவுண்ட உணர்வைப் பெறுவதற்கே ஆகும்!

இது புலவு விட்டும் விடாத பற்றின் சான்று!

"அற்றது பற்றெனின் முற்றிலும் விடுக"

என்பது சாலும்.

இயற்கை மணம், செயற்கை மணச் செய்தி 'தருமி' திருவிளையாடல் கதையாயிற்று. குறுந்தொகையில் வரும் 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாடலில் தலைவன் வண்டை நோக்கி, நீ அறியும் பூக்களில் இவள் கூந்தல் மணம் போல் மணப்பது உண்டா? என்று புனைந்துரைத்தது அது.

முத்துதல், முத்தம்; முத்தும், முத்தம்; ஒரு மணி.

முற்றும், முட்டும் இரண்டும் (ற், ட்) வல்லினமே!

முத்தும் (த்) வல்லினமே! ஆனால் வல்லினத்தில் மெல்லினம் முத்து!

முத்து வெண்மை, ஒளி, தூய்மை.

பல்லின் வெண்மை ஒளி தூய்மையொடு வடிவும் முத்துக்கு ஒப்பானது முறுவலாம் பல். வால் எயிறு என்பதும் அது. "தேனொடு பால் கலந்தற்றே பணிமொழி வாலெயிறு ஊறிய நீர்" எனப் புகழ் பெற்றது. பல் அழுக்கு நாற்றம் மட்டும் அன்று; பல நோய்களுக்கு நாற்றங்காலும் ஆவது! அரிசிப்பல், அரும்புப்பல், முத்துப்பல் என்பவை பெரும்பேறு.

முறிமேனி : முறியாவது தளிர். என்ன தளிர்? மாந்தளிர். மாவின் தளிர் பசும்பொன் வண்ணத்தது; மென்மையது; சற்றே வலிய காற்றாலும் முறிவது; ஆதலால் முறி எனப்பட்டது. 'மாமேனி' என்பர்.

தென்றலில் 'முறி' மெல்லென அசைதலை நோக்கல் வேண்டும். அதே நோக்கில் வள்ளுவர், பெண்ணுக்கு இட்ட 'அசையியல்' என்னும் பெயரையும், அதன் சிறப்பியலையும் காணவேண்டும்.

"அசையியற்கு உண்டுஆண்டு ஓர்ஏர் பசையினள்
போலப் பைய நகும்" **(1098)**

என்பது அது. ஏர் – அழகு! ஓர் ஏர் – ஒப்பற்ற அழகு; தனிப் பேரழகு என்பது அது. அசைவதை இயல்பாகப் பெற்றமையால் அசையியல், பொற்புஏர் பூவோடு அசைதலால் அசைவது அது. அப்பொலிவு தன்னகத்துக் கொண்டது அது.

அவள் பச்சைப் பசுங்குழந்தையெனக் களங்க மில்லாமல் பொருந்தி விடுபவள். அவள் நகையோ பிறர் அறிய வாராக் குறுநகை – மென்நகை! 'பைய' என்னும் மென்மை பழநாள் உரிச்சொல். பை, பைதல், பைம்மை, பையன், பசை, பசலை, பச்சை, பாசம், பாசி என்பன 'பை' வழிப்பட்டவை. பை – பசுமை, மென்மை. பைய – மெல்ல, மெதுவாக (தென்தமிழ் நாட்டுமக்கள் வழக்கு) 'பையை' என்பது பையினை என்னும் பொருளது. துணிப்பை, கோணிப்பை, தூக்குப்பை என்பது, 'பய்ய' என்பது (பைய), பையைக் குறியாது. மெதுவாக – பின்னே – காலம் தாழ்ந்து என்பது குறிக்கும். இவ்வழக்குச் சொல்லால் இடரும் உண்டு.

'நகு' தல் தானும் பிறர் அறியாவாறு இருத்தல் கருதுவர் காதலர். அதனைத் தொல்காப்பியர்,

"நகு நயம் மறைத்தல்"

என்பார்.

"புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மை"

காதல் முதல்நிலை மெய்ப்பாடு.

✦✦✦

வேல் உண்கண்

வெற்றிக் கருவி வேல். வெல் வேல். வேல் உடையவன் வேலன். வேல் பழநாள் யானைப் போர்க்கருவி.

வேந்தன், 'வேலொடு நின்றான்'! கொள்ளையனும்
வேலொடு நின்றான்! உள்ளமே வேறுபாடு!
களப்போரிலும் வேல் விளையாடும்!

வேல் உள்புகுந்து தைக்கும், ஊடுருவும்.

கண்ணும் உட்புகுந்து தைக்கும், ஊடுருவும்.

வேல் உட்புகுதலால் சிவப்பு வரிகொள்ளும்

கண்ணும் செவ்வரி கொள்ளும்.

வேலும் துருவேறா திருக்க நெய் தடவப்படும்.

கண்ணும் கரு 'மை' தீட்டப்படும். எழுதுகோல்

எனப்பட்டது அத்தீட்டு கோல்.

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணே போல்"

என்பது வள்ளுவம்.

வேலின் 'இலை' யாவது நுனைப் பகுதி. அதன் வடிவு. இலை வடிவு நோக்கி இலை வேல் எனப்படும்! வேல் வடிவு கண்வடிவு. வண்ணமும் வடிவும் உவமை.

✦✦✦

வேய்த்தோள்

வேய் = மூங்கில்; வெதுப்பு உடையது.

"வெம்மை வேண்டல்"

என்பது தொல்காப்பியம். வெப்பால் தீப்பற்றி எரிவது மூங்கில். இசையின் மூலம் மூங்கில். வண்டு துளையிட்டு வைத்ததில் காற்று என்னும் பாணன் இசைமீட்டல் இயற்கைக் குழலிசை.

"குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட"

என்பது மணிமேகலை.

வளைக்க வளையும் வேயால் அமைந்தது வளை. மூங்கிலின் ஒரு பெயர் வளை. எலியின் இருப்பிடம் வளைந்து வளைந்து செல்லுதலால் வளை என்பது பெயராயிற்று.

வளைய வேண்டுமென்று கருதுமாறெல்லாம் வளைய வாய்க்கும் கை வளையற் கையாம். மகளிர் கை. ஆதலால் ஆடல் வல்லார்; இசை வல்லார் என இணைத்த இணைப்பு வேய்த் தோளாம்.

அவள் + கு = அவட்கு. அவள் எவள்?

அவள் பெயர் சொல்லப்பட்டால் புறமாவாள்!

அகமாகாள்! அது அக இலக்கணம்!

சுட்டி ஒருவர் பெயர் சொலப்படார்!

சுட்டாமல் சொல்லும் நாகரிகம், நனி நாகரிகம் என்பது மட்டுமா?

இல்லை! பெரும் பயனுமாம்.

எப்படி?

காதலன் காதலியர் என உலகத்து வாழ்வார்.

எவர் தமக்கும் உரிமையுடையதாய் 'அவள்' அமைந்து விடலாம் அல்லவோ!

ஒரு பெயர் என்றால் ஒடுங்கிப் போய் நின்று விடும்!

'அவட்கு' என்பது கம்பனைக் கவர்ந்தது போலும்!

"அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன்"

என ஐந்து சொற்களில் அவனைக் கூறி,

'அவளும்' என ஒரு சொல்லால் குறித்தான்!

கம்பன் போல வள்ளுவத்தைப் பயன்படுத்திய பாவல்லான் எவனொருவனும் இல்லான் என்பது மெய்ம்மையிலும் மெய்ம்மையாம்!

அவட்கு : முறிமேனி!

முத்தம் முறுவல்!

வெறிநாற்றம்!

வேலுண்கண்!

வேய்த்தோள்!

❖❖❖

2. ஊடுபயிர்

1. தம்மில்

ஒருவர் ஒரு பொருள் பற்றி எழுதுகிறார்; அல்லது பேசுகிறார்; அப்பொருளை இடைநிறுத்தி வைத்து வேறொரு பொருளைச் சொன்னால் அதன் பொருள் என்ன?

அப்பொருள் இன்றியமையாப் பொருள்! வலியுறுத்தத் தக்க பொருள்! சொல்லுவார் உள்ளம் கவர்ந்த பொருள்! என்பவை விளக்கமாம்!

ஒரு விளைநிலத்தில் ஒரு பயிர் போடப்படும்! அதில் முன்னோ, பின்னோ நற்பயன் செய்வதாக ஊடுபயிர் ஒன்றோ இரண்டோ இருக்கும்! இது வேளாண்மைத் தொழிலின் தேர்ச்சியாம். வள்ளுவர் தம் நூலாம் விளைநிலத்தில் விளை பயிரோடு ஆங்காங்கு ஊடு பயிர் போட்டு உயரிய விளைவு காண்கிறார். உழவு பாடிய கிழவர்க்கு உரிய உத்தி ஈதாம்.

புணர்ச்சி மகிழ்தல் என்னும் அதிகாரத்தில் (110)

ஈடிலா இன்பம் துய்க்கும் தலைவன் கூற்றாக,

"தம்இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" (1107)

என்கிறார்.

"அரிவை முயக்கு - புணர்ச்சி இன்பம் - அம்மவோ எவ்வளவு பெரிது! அரிது!

குடி செயல்வகை உணர்ந்த குடிமையன் கடன்கள் இரண்டு அவன் எண்ணத்தில் முந்து முந்து நிற்கின்றன. ஒன்று தம் இல் இருத்தல். இரண்டு தமது பாத்துண்ணல். அந்நாள் வாழ்வியல் நெறிகள் இரண்டு அரிய பதிவாவணம். இக்குறள் வழியே ஆக்கப்பட்டுள்ளன.

ஒரு தலைவியொடு வாழப்போவான், பெற்றவர் உழைப்பால் இனி வாழ்தல் முறையன்று. தன் உழைப்பால் வாழ்தல் வேண்டும். ஒருவன் ஒருத்தியைக் கிழத்தியாகக் கொண்ட கிழவன் என்றால் அவன், தான் உருவாக்கிய வீட்டில் தன் துணையுடன் வாழ்தல் கடன்!

அவ்வாறு அவன் செய்தற்கு அவன் பொருள் நிலை இடம் தாராது எனின், திருமணத்தை உறுதி செய்துவிட்டு மணத்திற்கும், மணத்திற்குப் பின்னாம் வாழ்வுக்கும் வேண்டும் பொருள் தேடச்செல்வான். வேண்டும் பொருள் தேடிக் கொண்டு மீண்டு வந்து மணம்புரிவான். இதற்கு,

"வரைவு இடைவைத்துப் பொருள்வயின் பிரிதல்"

என்பது பெயர். வரைவாவது திருமணம்.

பொருளில்லார்க்கு இவ்வுலகியல் இல்லை! அறமும் இல்லை! இன்பமும் இல்லை! அவன் சொல்கிறான். பொருளின் தேவையை! அவள் புரிகிறாள்! பிரிகிறான்! பொருளோடு மீள்கிறான்! மணமுடித்து வாழ்வியலை எங்கே தொடங்குவது. தம் பெற்றோர் கட்டி வைத்த வீட்டிலா? இல்லை! அது, முயற்சி இல்லான் செய்யும் செயல்!

சிறுவீடு கட்டி விளையாடும் பருவத்திலேயே, பிறர் கட்டிய வீட்டில் விளையாட வரமாட்டேன் என்றவள் தலைவி! ஆதலால் நானே கட்டிய - இல்லை - நாங்கள் இருவரும் இணைந்த உளத்தால் கட்டிய வீட்டிலேயே மனையறம் கண்ட இன்பம், இப்பொழுது நான் அடைகின்ற இன்பம் எனப் பூரிக்கிறான்.

அடுத்தும் பூரிப்பு எழுகின்றது.

எங்கள் உழைப்பால் தேடிய உணவு - உணவாக்கம் - அறவோர் அருளாளர் துறவர் பிறர் என விருந்தோம்பி - யாங்கள் அதன்மேல் உண்ணும் இன்பம் இவ்வின்பம் என்கிறான்.

குடிநலம் காப்பார் அவரவர் உழைப்பால் வாழ்தலும் உலகுக்காக வாழ்வார்க்கு உள்ளதைப் பகுத்துத் தந்து விருந்தோம்பி மகிழ்தலும் போல்வது, இல்லறத்து இன்பப் பேறு என்பது இது!

காதல் வாழ்வு உயிர் கலந்து ஒன்றிய வாழ்வு! உயிர் தளிர்ப்ப வாழும் வாழ்வு! அவர் வாழ்வு அவரொடு அடங்கி விடுவது அன்று! உலகாக விரிய வேண்டிய உயர்வினது. அது உழைப்பை மதிக்கும்! உரிமையைப் பெருக்கும்! உலகுக்கு வாழ்வோர்க்கு உவந்து உதவும்! அதற்கு அடிமூலம் - தம் இல் இருத்தல்! தமது பாத்து (பகுத்து) உண்ணல் என்னும் இரண்டும்!

பழந்தமிழர் பண்பாட்டுப் பட்டயம் இது.

✦✦✦

2. அறிதோறு

இதே புணர்ச்சி மகிழ்தல் அதிகாரத்து இறுதிக்குறள்.

அறிவு - அறிவியல் - ஆய்வியல் - கலை இயல் - சுவையியல் இவற்றின் இலக்கணமாக இணையற்று விளங்குகின்றது. கூறவந்த பொருளை இடை நிறுத்தித் தலையெடுப்ப உரைத்தது!

"அறிதோ றறியாமை கண்டற்றால் இன்பம்
செறிதோறும் சேயிழை மாட்டு" (1110)

என்பது. "அறிதோ றறியாமை" எண்ண எண்ண விரிவது அல்லவா!

முன் அறியாத ஒன்றை அறியும்போது என்ன தோன்றுகின்றது? இதுவரை நாம் இதனை அறிந்து கொள்ள வில்லையே என்பது

தோன்றுகின்றது. அவ்வறியாமை பெருகப் பெருகவே அறிவுப் பெருக்கம் ஆகின்றது. அறிதோறும் அறியாமை காணல் இது.

ஒருவர் ஒன்றைக் கண்டுபிடிக்கிறார். அக்கண்டுபிடிப்பை ஆழ்ந்து நோக்கும் ஒருவர் அதனினும் மேம்பட்ட ஒன்றைக் கண்டுபிடிக்கிறார். முன்னே கண்டுபிடித்தவர் இது நமக்குத் தோன்றவில்லையே எனத் தம் அறியாமையை உணர்கிறார். அறியாமை அறியாமையாய் நிற்பது இல்லை! அறியத் தூண்டுகிறது. அறிவைத் தூண்டுகிறது. மேலும் மேலும் தூண்டிக் கொண்டே இருக்கிறது. அத்தூண்டல் வளர்ச்சியே உலக வளர்ச்சி - படைப்புவளர்ச்சி - தொழில்வளர்ச்சி - கலைவளர்ச்சி - நாகரிகவளர்ச்சி - பண்பாட்டு வளர்ச்சி என விரிகின்றது. அறிவு பெருக வேண்டுமானால், அறியாமை தோன்றிக் கொண்டே இருக்கவேண்டும். அறியாமை தோன்றவில்லையானால் அறிவு தோன்றற்கு இடமே இராது.

அறியாமை தோல்வி அன்று - வெற்றியின் படிக்கட்டு! தலைவன் தன் தலைவியிடம் காணும் இன்பம் புதிது புதிது; அறிய அறிய அறியாமை ஆக்கும் புதிது! புதிய இன்பம்! புதிய சுவை! புதிய வகை! இணையிலா வீடுபேறு! எதனாலும் எவ்வகைகளாலும் எய்த முடியா இன்ப நிலைக்களம்! அதனால், இன்பம் செறிதோறும் - செவ்விதாம் அணிகலம் அணிந்த தலைவி மாட்டு - இடத்து அடையும் இன்பம்.

பெருஞ்சிந்தனையாளி, பெரும் படிப்பாளி - சாக்கிரடீசு! அவரிடம் ஒருவர் வருகிறார். அவர்தம் ஆழிய சிந்தனை வளத்தைப் பாராட்டுகிறார். இத்தனை அறிவை எப்படிப் பெற்றீர்கள் என்று வியக்கிறார். சாக்கிரடீசர் சொல்கிறார். எனக்கு ஒன்றே ஒன்று தான் தெரியும். அது, எனக்கு ஒன்றும் தெரியாது என்பது தான்!

திருமூலர் சொல்கிறார்,

"என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்"

சிறைச் சாலையில் இருந்து நிரம்ப நிரம்பப் படித்தார் சவகர்லால் நேரு! பின்னர்ச் சொன்னார்.

"நான் எவ்வளவு அறியாதவனாக இருக்கிறேன் என்பதை உணர்கிறேன்".

"கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு" என்ற ஔவை மொழி என்ன? பெரிய ஞானி என்று பாராட்டிய ஒருவரிடம் புத்தர், தம் கைக்குள் ஓரிலையை வைத்துக்காட்டி "என்னிடம் உள்ளது இவ்வோரிலை. ஆனால் இம்மரத்தில் எத்தனை இலை! இப்படி மரங்கள் எத்தனை! இவற்றோடு இவ்வோரிலை எம்மட்டு" என்றார்.

வள்ளுவரின் நுண்மாண் நுழைபுலப் பார்வை, காதலன் ஒருவன் வழியாக அறிவியல் இலக்கணம் சொல்லும் உத்தியாக மலர்கின்றது.

✦✦✦

3. அரிதரோ

தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லும் கட்டாயம் ஏற்படுகின்றது. தன்னிடத்துக் கொண்டுள்ள தீரா அன்பால் பிரியமாட்டான் என்றே நினைக்கிறாள். பிரிந்தால் அப்பிரிவைத் தாங்கமாட்டேன் என்னும் பரிவால் கட்டாயம் பிரியமாட்டான் என்ற உறுதி பொய்த்துப் போகுமாறு அவன் பிரிந்து போய் விடுகிறான். அந்நிலையில் அவள் கூறுகிறாள்:

"அரிதரோ தேற்றம்! அறிவுடையார் கண்ணும்
பிரிவுஓர் இடத்துண்மை யான்" (1153)

"அறிவுடையார் கண்ணும் அரிதரோ தேற்றம்" என்கிறாள். அறிவு மிகப் பெற்றார் என்பாரைத் தாமும் உறுதியானவர் என்று நம்பி விடுதல் இயலாது என்கிறாள். ஏனெனில் பிரியேன் என்றவர் பிரிந்தார் ஆதலால்.

பிறர்துயர் காணப்பெறாமல் தீர்ப்பவர் அறிவாளர்! அவரே பிறர்க்குத் துயர்தந்தால் அவரை நம்பமுடியுமா? உறுதியானவர் எனக் கொள்ளமுடியுமா? முடியாது. ஏன்!

எத்தகு அறிவர் எனினும், அறவர் எனினும், துறவர் எனினும் எப்போதும் எவ்விடத்தும் எந்நிலையிலும் நிலையில் திரியா மலையாக இருத்தல் அரிது. பெரிதும் இருப்பர். இருக்க இயலா நிலைக்கு ஆட்படலும் இல்லாமல் இல்லை.

காமம் வெகுளி மயக்கம் என்பனவற்றைக் கடந்தார்க்கும், கடற்கரை வளையில் இருந்து வெளிப்பட்டு ஊரும் நண்டு போல உலகியல் நிலைப்பாடு ஊரச் செய்து விடுவது உண்டு!

இவரா இது செய்தார்! நம்பமுடியவில்லையே என்று நெருங்கிய நேயமும் மெய்யாக உணர்ந்து உள்ளுருகி உரைக்கும் மாறான நிகழ்ச்சியில் ஈடுபட்டு விடுவது உண்டு. நம்ப முடியாது! ஆனால் நம்பாமல் இருக்கமுடியாது என்னும் நேரிடைச் சான்று கண்டு மறைக்க இயலுமா? இதன் விளக்கம் என்ன?

பரிமேலழகர் உளவியல் கொண்டு சொல்வார்,

"முக்குண வயத்தால் முறை திறம்புவர்".

முக்குணம் வள்ளுவப்படி காமம் வெகுளி மயக்கம்! முற்றாகத் துடைத்து விட முடியாதது. துடைத்த பின்னரும் களிம்பாக இருந்து அயர்ந்த போது கிளர்ந்து விடுவது! கிளர்ச்சிக்கு ஆட்பட்ட பின்னர் 'என்ன செய்தேன்!', 'என்ன செய்தேன்!' என்ன கீழ்மை செய்தேன் என்ன எண்ணி எண்ணிக் காலமெல்லாம் வருந்த வைப்பது - ஒருநொடியில் மின்னல் என வந்து மீளாப்பழிக்கு ஆட்படுத்துவது உண்டாதலால், அறிவுடையார் கண்ணும் அரிதரோ தேற்றம் என்னும் வயிரமொழி, பொய்யாமொழி யாயிற்றாம்!

வள்ளுவர் மேதக்க மெய்யியல் மாட்சிச் சான்று

இஃதாம். இதற்கு வெளிப்படு விளக்கம் வள்ளுவரே செய்துளார். அது;

"அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு" (503)

என்பது தெரிந்து தெளிதல் அதிகாரம். ஆசற்றார் = குற்றமற்றவர். வெளிறு = உள்ளீடு இல்லாமை; அறியாமை.

✦✦✦

4. இன்னாது

பிரிவாற்றாமையிலேயே ஓர் அரிய ஊடுபயிர் இன்னொன்று. அது.

"இன்னாது இனன்இல் ஊர்வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு" (1158)

என்பது. இது தலைவன் தலைவியர்க்கு மட்டுமா? ஊர்ப் பொதுமை இது!

இனம் என்பது எது? இன் + அம் = இனம். தமக்கு இன்பம் செய்வதும், தாம் இன்பம் செய்வதுமாம் ஒத்தியல்புக் கூட்டம் இன்பமாம்.

உள்ளத்தைத் திறந்து பேச ஒருவர் தாமும் இல்லாத ஊரில் வாழ்வது ஒரு வாழ்வா?

அவ்வூரில் வாழ்வதினும் காட்டு விலங்கொடு வாழ்ந்தாலும் அவற்றின் கரவிலா வாழ்வு இன்பம் சேர்க்குமே!

மாந்தர் சேர்ந்து வாழும் பிறவி அல்லவா!

கல்லொடு மண்ணொடு மரத்தொடு வாழ்வாகிப் போவது உண்டே!

கொடுமையில் கொடுமை கூடிப்பேசி அளவளாவி இன்புறும் ஒருவர் தாமும் இல்லாத ஊர் வாழ்வு! (523) ஏனெனில், அளவளாவு இல்லாதான் வாழ்க்கை என்ன வாழ்க்கை. கரை இல்லாக் குளத்தில் நீர் நிற்குமா? நீர் நிலத்திலுள்ள பயிர்க்குச் சென்று பயன்படுமா? நிலத்தை அரித்து, உள்ள பயிரையும் விளைவையும் ஊரையும் அழித்துத் தானே ஓடும்! இனம் இல்லா ஊரில் இருந்து, அளவளாவுதல் இல்லாத வாழ்வு வாழ்வு ஆகுமா!

அதனினும் கொடிய வாழ்வு ஏதேனும் உண்டா? உண்டு! அதே ஊரில் காலமெல்லாம் தேடிக் கண்டடைந்த ஓரன்பர்! இனியர்! இனத்தில் எல்லாம் இனமாக ஒன்றி விட்டவர்! நினையும்தோறும் காணும்தோறும் பேசும் தோறும் அளவளாவும் தோறும் புத்தம்புது இன்பக் கொள்கலமாக வாய்ந்தவர்! அவர்தாமும் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டார் என்றால் அத்துயர்க்கு ஈடு உண்டா?

அவர் இனமாகத் தோற்றம் தராமல், இனமல்லா ஊரவர் போலவே இருந்திருந்தால் இவ்வதிர்ச்சி உண்டா? நம்பிய வாழ்வு நட்டாற்று வெள்ளத்துப் போகும் துயரவாழ்வு ஆகியிருக்குமா?

காணாத உறவைக் காட்டி, நேயத்தைக் காட்டி, நெஞ்சத்தைப் பறித்துக் கொண்டது எல்லாம் வஞ்சத்தை மொத்தமாகக் காட்டி வாட்டுவதற்காகவா?

"இன்னாது இனனில் ஊர்வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு" (1158)

இது, காதலுக்கா? நட்புக்கா? நல்வாழ்வுக்கா? எல்லாவற்றுக்கும் அல்லவா இந்த மாமணிக்குறள்!

✦✦✦

5. ஒருநாள்

"ஒருநாள் எழுநாளே போலும் சேண்சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு" (1269)

இக்குறள் தலைவனை எதிர்பார்க்கும் தலைவியின் பாட்டைப் பாடும் பாட்டே தான்! ஆனால் தலைவன் தலைவியர் தமக்குத் தாமா?

ஒரு மேடைநாடகம். கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலே நிகழ்ந்தது!

ஒரு முதியவர்! அவர் மக்கள் பலர்! மக்கள் மக்களும் பலர்! ஆனால் அவர்கள் அனைவரும் நாட்டுக்கு ஏற்பட்ட தீய சூழலால் - தீயைக் கக்குவார் கொடுமையாக எவரெவர் போனார்? ஒருவருக்கு ஒருவர் கொண்ட தொடர்பு என்ன? பற்றியெரியும் தீக்குத் தப்பியோடு பறவைச் சிதறல் போலப் பட்டவர் பட்டனர்; தப்பியவர் தப்பினர்! தஞ்சம் புகுந்த மண்ணின் நிலை தெரிந்தும் தெரியாதும் புகுந்தனர்!

இந்நிலையில் முதியவர் தம் குடியிருப்பில் தங்கினார்! பார்வையும் குறைந்தது! பக்கத்தார் துணையே துணையாய்ப் படுக்கையதாய்க் கிடக்கிறார்! ஊடே ஊடே எழுவார்! அலறுவார்! யாரொலி கேட்டாலும் வந்துவிட்டாயா என்று ஆவலொடு பார்ப்பார்! அஞ்சலா! தொலைவரியா! வாயில் வந்து நிற்பார் வருமென்று! வந்தால் தானே! அவலமிக்க வாழ்வு. அவலத்தொடு பக்கத்தார் பரிந்திரங்க முடிகின்றது!

புலம் பெயர்ந்தாரை எண்ணித் தவிப்பார், தலைவன் தலைவி மட்டுமா? தந்தை, தாய், மகன், மகள், அன்பு, நண்பு, என எல்லாம் ஏக்க மிக்க நோக்காகிய நிலையில் ஒருநாள் எழுநாள் - ஏழுதிங்கள் - ஏழு ஆண்டு என நீளல் ஆர்வத்தின் ஆழத்தைப் பொறுத்து ஆமையினும் முட ஆமையாய் நகரல் கண்காணும் நிகழ்ச்சி.

காதலர் பிரிவு என வள்ளுவர் காட்டியது இன்று நாடு விட்டு நாடு சென்று தொழில் புரிவார் நிலையில் குடும்பந்தோறும் - குடும்ப உறுப்பினர் தோறும் ஒருநாள் எழுநாள் போல் காணமுடிகிறது.

மகிழ்வான பொழுதா, கவின்மிக்க காட்சியா, அன்பர்களின் இன்ப உரையாடலா, மணிக்கணக்கும் மணித்துளி ஆகிப் போகின்றது.

மாறாக் கால அளவும், மன ஓட்டத்தால் நீண்டும் குறுகியும் தோற்றும் உளவியல் நுட்பம் எந்நாளும் இருக்குமே அல்லவோ!

காலக்கணியர் காணாக் கவினுளக் காட்சி ஓவியம் இப்பாடலாம்.

"நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து". (1278)

என்பதும் இதனோடு எண்ணத்தக்கதாம்.

✦✦✦

6. துன்பத்திற்கு

துன்பத்திற்கு யாரே துணையாவார்? - நல்ல வினா. "கெட்டார்க்கு நட்டாரோ இல்" என்பது பொதுவான விடை.

"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்". (796)

என்பது நன்னம்பிக்கை யூன்றுகோல்!

"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்". (799)

என்பது தள்ளுபடியாளர்.

"கெட்ட காலை விட்டனர் என்னாது
நட்டோர் என்பது நாட்டினை நன்று"

என்பது நட்புக்கு வாய்த்த நயனார்ந்த பாராட்டு. இது பெருங்கதை.

"அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் அல்லியும் போலுமே
ஒட்டி உறுவார் உறவு"

என்பது இருவகையர்க்கும் உவமை! மூதுரை.

துணையாவார், துணையாகார், துணையாக்கிய துயர், துணைதந்த பாடம் என்பவை என இன்னும் பல எண்ணலாம்! ஆனால் துன்பத்திற்கு யாரே துணையாவார் என வெளியே தேடவேண்டுமா?

தேடின் வாயாமல் போகவும் கூடும் அல்லவா!

உள்ளம் உடைமை தானே உயருடைமை!

உள்ளம் போன்று ஒதுங்காது ஒன்றிய

உறவு ஒன்று உண்டா?

அவ்வுள்ளம் அல்லவோ, என்றும் நீங்காத துணையாக இருக்கவேண்டும்!

தலைவி தலைவனை நினைக்கிறாள்!

அவனோ பிரிந்து போயிருக்கிறான்!

அந்நிலையில் அவள் நெஞ்சம் அவள் துணையாக இருக்கவேண்டும் அல்லவா!

அவள் நெஞ்சம்! உருகும் நெஞ்சம்!

நிணம் (ஊன்) தீயில் இட்டன்ன நெஞ்சம்!

அந்நெஞ்சமும் அவனுக்குத் துணையாகப் போய்விட்டது.

தனியே இருந்தும் தின்றது. அந்நெஞ்சு! இதுகால் பிரிந்த தலைவனோடு போயும் வாட்டுகிறது. அந்நெஞ்சு! அந்நிலையில் புலம்புகிறாள்!

"துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி?" **(1299)**

எனத் தன்னைத் தானே கேட்கிறாள்!

வள்ளுவர் சொல்கிறார் துன்பம் தீர்ப்பார் எவர் இலர் எனினும் அவரவர் நெஞ்சமாவது துணையாக இருக்கவேண்டும்! நெஞ்சத்துணை யற்றாரே துயரர்.

பிறர் எவரும் அவர்க்குத் துயரர் – துயரூட்டுவார் அல்லர்!

நெஞ்சம் தன்னது!

நெஞ்சமே தன் உடைமை!

நெஞ்சமே அகலாது!

அதற்கு 'உரம்' என்பது ஒரு பெயர்!

அந்த 'உரம்' ஒருவற்கு உள்ள வெறுக்கை!

வெறுக்கையாவது செல்வம்!

உரம் இல்லாப்பிறவி மரப்பிறவி!

எது நடந்தாலும் எப்படி நடந்தாலும்

கண்டு கொள்ளமாட்டாத – தடுக்கமாட்டாத – மரப்பிறவி!

மரப்பிறவியாம் இயற்கைப்பிறவி, பழிப்புப் பிறவியன்று!

மாந்தப்பிறவியாகப் பிறந்தும் மரப்பிறவி போல, மரத்துப் போன பிறவியே பழிப்புக்கு உரிய பிறவி என்கிறார்!

"உடையர் எனப்படுவது ஊக்கம்! அஃதிலார்
உடையது உடையரோ மற்று". (591)

இடரினும் தளரினும் இருந்து ஊக்கும் துணிவுடையவர்க்கு அவர் தம் நெஞ்சத் துணையே நீங்காத்துணை என்க.

✦✦✦

7. உணலினும்

எது இன்பம் என்றால் பலப்பலரும் பலவாறு கூறுவர். உண்பது இன்பமா? செரிப்பது இன்பமா? என்றால் சிந்தியாமல் சொல்பவர் உண்பது இன்பம் என்பார். அகவையால் மூத்து, சிக்கல் என மலச்சிக்கலில் நாளும் பொழுதும் மாட்டிக் கிடப்பாரைக் கேட்டால், "உண்பதா இனிது, "உண்டது செரிப்பதே இன்பம்" என்பார்! ஏன்?

உண்டதால் – சுவை என உண்டதால் – அவர் படும் பாடு; "உணலினும் உண்டது அறல் இனிது" என்று சொல்ல வைக்கிறது!

அவரே ஒருவேளை அச்சிக்கலுக்கு ஆட்படாதவராய் இருந்தால் அப்படி முடிவுக்கு வந்திருத்தல் அரிதே! மெய்யாகச் சொன்னால், "உணலினும் உண்டது அறல்" தான் இனிதாம்!

உண்டது அறாவிட்டால் குத்தும் குடையும்! மேலே உண்ண எண்ணம் வருமா? உணவே வெறுக்கும்! மலச்சிக்கல் வந்துவிட்டால் மனச்சிக்கலும் தானே வரும்! நோய் மூலம் மலச்சிக்கல்! அதனால் மலச்சிக்கலைப் பொய் கூறலுக்கு ஒப்பாகக் கூறினார். பொய் சொல்வார்; புரட்டுப் பேசுவார்; களவு செய்வார்; கொலையும் புரிவார்; மலச்சிக்கல் வந்தால் புண் பொரி காய்ச்சல் என நோய் தொடரும் என்றார்.

ஒருவர் ஆராய்ந்தார்; திருவள்ளுவர் இதனை இவ்வளவு தெளிவாகக் கூறவேண்டுமானால் அவர் முதுவருள் முதுவராய் வாழ்ந்து மலச்சிக்கலுக்கு ஆட்பட்டிருக்க வேண்டும். ஆதலால் நெடிய வாழ்வினர் எனற்குச் சான்றாக்கினார். இப்படி இதனைச் சான்றாக்கலால் குறையில்லை! குடியை - சூதை - அவர் சொல்லும் மெய்ம்மச்

சொற்களைக் கொண்டு அவரொடு சார்த்திப் பார்க்கும் பார்வை வந்து விடக்கூடாதே!

"உணலினும் உண்டது அறல் இனிது"

மருந்திலே, 'அருந்தியது அற்றது', 'அற்றால் அளவறிந்து உண்க'. 'அற்றதறிந்து கடைப்பிடித்து', 'இழிவறிந்து உண்பான்', 'தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணின்', என்றெல்லாம் சொல்லியும், மேலும் வலியுறுத்துவாராய் நூல்முடிவில் நிறை வாழ்வுக்கு நீடுவாழ்வுக்கு உரிய ஒப்பரிய வழியை உரைத்தல் வேண்டும் என்று கூறிய குறிப்பு ஆகலாம். ஏனெனில் நிலமிசை நீடுவாழல் எவர்க்கும் வேண்டும் எனத் தொடங்கியவர் அவர்! அதற்கு நெறி நிற்றல் காட்டியவரும் அவர்!

உரிய பயிரொடு ஊடு பயிரும்
சிறந்த வளந்தரும் என்பது சிந்திப்போம்!
செயலூக்கம் பெறுவோம்!

❖❖❖

3. திருக்குறளில் வடசொல் உண்டா?

திருக்குறளில் வேற்றுச்சொல் ஒன்றுதானும் இல்லை என்பது கால்டுவெலார் முடிபு.

தமிழாய்ந்த வையாபுரியார் திருக்குறளில் 150 -க்கு மேற்பட்ட வடசொல் உண்டு என்கிறார்.

பிற்கால உரையாசிரியர்களில் வை.மு. கோபால கிருட்டிண ஆச்சாரியார் பி.சுப்பிரமணிய சாத்திரியார் என்பார் நோக்குமிடமெல்லாம் வடமொழிக் கண்ணாடி கொண்டே சொல்லும் பொருளும் கண்டனர்.

உலகம் என்றால் 'லோக்' அவர்கள் தலையில் ஏறிவிடும்!

திசை என்றால் 'திசா' என்பது அவர்கள் உச்சியில் குந்தும்!

அவ்வாறாகப் பகவன், அதி, ஆதி, பாக்கியம், ஆசாரம் என்பனவற்றை விடுவரா?

பாவாணரும் வடசொல் உண்டு என ஏற்றுக் கொண்டு பதினாறு சொற்களைக் காட்டியுள்ளார். ஆனால் மெய்ம்மை என்ன?

திருக்குறளில் வடசொல் உண்டா? இல்லையா? எனக் கண்டு முடிவு செய்யலாம்.

ஒருசொல் வடசொல் என்றால் அதன் வேர்வழி - விரிவாக்கம் - தமிழில் இருத்தல் ஆகாது. இருவகை வழக்கிலும் இடம் பெற்றிருத்தலும் பயன்படுத்தலும் அறிந்தே முடிவு செய்ய வேண்டும்! தமிழில் உள்ள சொல் செயல்நெறி முறைக் கட்டொழுங்கு உண்டாயின் கொள்வதை அன்றி, அவர் சொன்னார், இவர் சொன்னார், அச்சொல் வழியது என்னல் ஆகாது. இந்நோக்குக் கொண்டு எண்ணி நாம் இயன்றதொரு முடிபு காண்போம்.

1. **அகரம் :** முதற்குறளில் முதற்சொல்லாம் 'அகரம்' வடசொல்லாம்! தமிழே வடசொல் வழியது என மொழிப் பெயர் தானும் தமிழில்லை என்னும் முரண்டர்க்கு 'அகரம்' என்ன, ஆதி என்ன?

இயல்பாக வாயைத் திறந்து - ஆம்! அகலச் செய்து - எழுப்பும் முதல் ஒலி அகரம்! அகலம் என்பதன் வழியது அது. 'அ ஆ அங்காந்து (வாயைத்திறந்து) இயலும்' என்பது நன்னூல்.

2. **ஆதி :** அது சேய்மைச் சுட்டு. அது > ஆது; எனது, எனாது; வடது, வடாது, தெனது, தெனாது; குடது, குடாது; குணது, குணாது; இவையெல்லாம் (எனாது, வடாது, குடாது, குணாது) சங்கநூல் ஆட்சிகள். அது , ஆதி > தொன்மையது; எட்டாத் தொலைவினது.

3. **பகவன் :** பக்கு, பகு, பகவு, பகுத்து, பாத்து; பகல், பகை என்பனவெல்லாம் பகு அடிச்சொற்கள். பகுத்து வழங்குவது எது பகவு அது. படியளப்பது என்பது மக்கள் வழக்கு.

4. **உலகு :** உலம் = உருண்டை; உலா - சுற்றிவருதல். உலா > உலவு, உலாவல், உலாத்துதல், சுற்றிவருதல்.

உல் > உலம் = உருண்டை. உலண்டு - உருண்டை வடிவப் பட்டுப்புழுக் கூடு. உலம் = உருண்டைக்கல். உருண்டை > உண்டை.

5. **ஆசாரம் :** ஒழுக்கம் எனப் பொருள் கொண்டு வடசொல் ஆக்கினர். 'அச்சமே கீழ்களது ஆசாரம்'; ஆசு + ஆரம் = ஆசாரம் = பற்றுக்கோடு. இப்பொருள் என்பது கொள்ளாமல் வேறுபொருள் கண்டு வடசொல் என்றனர். 'ஆசாரக்கோவை' முன்னின்றது போலும்! ஆசிடை எதுகை (ஆசு - பற்றாசு) ஆசுவைத்தல் (கொல்லு, கொற்று, வேலைச் சொல்) முன் நிற்கவில்லை.

6. பாக்கியம் : 'பலர் அறியார் பாக்கியத்தால்' என்பது வள்ளுவம். பக்கு , பாக்கு + இயம் = பாக்கியம். ஈவுப்பேறு. பகுத்தளிக்கப் பட்ட ஈவுப்பேறு என்பது பொருள்.

7. சோகாப்பர் : சோகு + ஆர்ப்பர். சோகார்ப்பர் > சோகாப்பர். சோகு = அரிப்பு, எரிவு, உளைச்சல், கரும்பின் இலை, சோளத்தட்டை, இலை அரிப்பு உடைமையால், கரும்புச் சோகை, சோளச் சோகை. எனவே மக்களால் வழங்கப்படும் அரிப்புண்டாக்கும் குறுமுள்ளும் சுணையும் அவற்றில் உண்டு.

8. நாமம் : "காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன், நாமம்" நாமம் = பெயர் எனப் பொருள் கொண்டனர்.

"பேம் நாம் உரும் அச்சம்"

என்பது தொல்காப்பியம். நாம் அம் > நாமம். அம் ,ஒட்டு.

போகும்போது அச்சம், புகும்போது அச்சம், மீளும் போது அச்சம் என எங்கும் அச்சம் செய்வன இவை.

வெகுளுங்கால் தோன்றா அச்சம், வெகுண்டு ஆறியபின் ஆட்டிப்படைக்கும். மயக்க அச்சமோ மாறா அச்சம்!

9. அமரர் : அமிர்தத்தை உண்டவர், தேவர் எனப் பொருள் கண்டனர். அமர் + அர் = அமரர். அமரர் = போரில் இறந்தவர். அவர் பெயரும் பெருமையும் எழுதிய கல்நட்டு வழிபட்டமையால் அமரர் எனப்பட்டார்.

10. அமிழ்து : ம்ருத என்பதன் வழியது அன்று. இன்பத்து அமிழ்த்துவது யாது? அது அமிழ்து. அம்மம் = பால்.

11. பூசனை : பூவைக் கொண்டு செய்வது அன்று. ஈயம் பூசுதல், சுவர் பூசுதல், முகம் பூசுதல் போல நீர்விட்டுத் துடைத்து வழிபடுதல். பூசுதல், பூசனை. உண்ட வாயைத் துடைக்கும் பூனையின் பெயர் பூசை, பூச்சை என்பதாம்.

12. தானம் : தன் > தான் + அம் = தானம். தன்னையும் ஈயும் ஈகம். "தானம் தவம் இரண்டும்".

13. தவம் : தவ் = சுருங்குதல் : 'கவ்வையால் கவ்விது' காமம். அதுவின்றேல், தவ்வென்னும் தன்மை இழந்து" (1144). தவ் + அம் = தவம். தேவையைச் சுருக்குதல் தவப்பொருள்.

14. இந்திரன் : ஐந்திரன் ஐம்புல அடக்கத்தன். தொல்காப்பியருக்கு முன்னவன். "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்". ஐந்திரன் > இந்திரன்.

15. அந்தணர் : அந்தத்தை அணவுவோர் அல்லர்; அகம் தண்மையுடையார் (அருளாளர்) அந்தணர்.

"அகமுனர் செவிகை வரின் இடையன கெடும்"

என்றும் விதிப்படி, அகம் கண் = அங்கண்.

அகம் + தண் = அந்தண்.

அந்தண் + அர் = அந்தணர்.

அந்தணர் என்போர் அறவோர்.

16. சிவிகை : வளைதல். கிளை சிவ்வென வளைகிறது என்பது மக்கள் வழக்கு. கம்பை வளைத்து அல்லது வளைந்த கம்பால் ஆக்கப்பட்டது சிவிகை. மூங்கிலின் பெயர் வளை.

"வளைக்க வளைகின்ற வேய்"

17. தெய்வம் : தெய்,தேய் ,தேய்த்தல் தீ. தே.

தீ > தெய்வம். தீ = இனிமை. தீம்.

தே > இனிமை தேன், தேம்.

தேயம் = இனியநாடு.

18. மங்கலம் : மன்கலம் = நிலைபெற்ற அணிகலம்.

மன் கலம் > மங்கலம். இயன்திரம் = இயந்திரம்

மன்திரம் > மந்திரம்

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

தொல்காப்பியம் - 1434

19. கதம் : சினம். கதம் = வெப்பு.

கதகதப்பு = வெதுவெதுப்பு

கதம் = மனவெப்பு. சினம்.

கதவு = வெப்ப தட்பக் காப்பு.

கதழ்எரி எரிநெருப்பு. "கதம்காத்து".

20. ஓத்து : ஓதப்படும் நூல்.

ஓத்துமுறை வைப்பு - ஓதத் தக்க முறை வைப்பு.

32 உத்திகளுள் ஒன்று.

21. பாவம்-பாவி : பரவும் தன்மையது.

பா = பாடல் = 'பரந்து பட்டதோர் ஓசை'; நெல் பாவுதல்; நெசவுப்பாவு. விரிவது. பாவி - குற்றம்பெருக்கி.

22. காமம் : கமம் > காமம்! 'கமம் நிறைந்தியலும்' தொல்காப்பியம். வளர்பிறையென வளர்ந்து நிறைமதியாவது போல்வது காமம். "காமத்துக் காழில் கனி".

23. மாதர் : காதல். அன்புக்குரிமையர்.

"மாதர் காதல்" தொல்காப்பியம். "மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல் காதலை வாழிமதி". (1118)

24. அவி : அவித்தல். அவிப்பு - சுடவைத்தல், வெதுப்பல், வேக்காட்டால் பக்குவமாதல், அவித்தல், கெட்டுப்போதல். "கண் அவிந்து போக", "வாயுர்ணவின் மாக்கள் அவியினும் வாழினும் என்". (420)

25. நிச்சம் : நிற்றம் > நித்தம் > நிச்சம். நிற்கும் நாள் = நிச்சம். "நிச்ச நிரப்பு".

26. படிவம் : ஒன்றன் படி ஒன்று அமைவது படிவு. படிவு, படிமம். ஏட்டுப்படி. "துறந்தார் படிவத்தர்".

27. அதி : மிகுதி > அதிகம்; ,. அதி, அதிர், அதிர்வு, அதிர்ச்சி, அதிகாரம், அதிகாரி, அதிகரித்தல் - சிலப்பதிகாரம்.

28. மந்திரி : மன்திரம் - மந்திரம் சூழ்நிலை ஆய்வு. மன்திரத்தன் மந்திரி.

எ.டு : தன்திரம் - தந்திரம்; தந்திரி.

முன் திரி, முந்திரி. முன் நீண்டு உருண்டது.

29. சலம் : சலசலப்பு = சலசலத்து ஓடுவது சலம். நிலைபேறற்றது. சலம் = வஞ்சம், ஏமாற்று.

30. அங்கணம் : அகம் + கண் + அம் = உள்ளே துளை அமைத்தது. அகம் + கண் = அங்கண். சலதாரை.

31. மாத்திரை : அளவு. மாத்தல் - அளத்தல்.

மா, ஒன்றில் இருபதில் ஒன்று.

"உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே"
கண்ணிமை கைந்நொடி அவ்வே மாத்திரை.

- நன்னூல்.

32. ஏது இன்மை : ஏதின்மை. பகைமை தொடர்பு இல்லாமை. இயைவது இன்மை, ஏது இன்மை

இயைவது > ஏது.

இவ்வளவு எழுத்து இடைவீடு உண்டா? உண்டு:

எ.டு: கையகத்தது , கையது , கைத்து , கைது.

33. பீழை : பீழிக்கும் பீழை பீழ் > பீழை

பிழை > பீழை பீழிப்பது

பீடை என்பதும் அது. பீழை > பீடை.

34. பூரியர் : பூரித்தல், பூரிப்பு, செருக்கு, ஆணவம், உப்பு மண்ணின் மேல் எழுதல் பூரித்தல், பூர்தல், பூரித்தல், மகிழ்தல், பூரிப்பு அடைதல். பூரி

35. ஆயம் : ஆராய்ந்து - ஆய்ந்து - எடுக்கப்பட்ட கூட்டம். அவையம்.

36. சூது : சூழ்து > சூது. சூழ்ந்து - வட்டமாக இருந்து - ஆடும் ஆட்டம்.

எ.டு: தீர்வு , தீவு

37. புத்தேள் : புத்தேளிர், புத்தேளிர் நாடு.

புதியதோர் நாட்டில் இருந்து வந்த அயலார் = அயலார் நாடு. இந்நாள் : அயல்நாடு போல.

38. கவ்வை : பற்றிக் கொண்டு - கவ்விக் கொண்டு சொல்லும் பழி. கவ்விப் பிடித்த விரல் போன்ற கதிர் கவ்வை. கேழ்வரகு. 'கவ்வை கறுப்ப' "கூர்த்து நாய் கவ்விக் கொளக் கண்டும், பேர்த்து நாய் கௌவினார்". கௌவை, கவ்வை. கவை, கவர், கவி.

39. காரிகை : கார், காரி, காரிகை. மழை முகில் கொண்ட அழகு, மழைப் பயன் ஒப்பவள் காரிகை.

40. ஆகுலம் : ஆகு உலம். ஆவது போலும் கேடு. உலம் - ஆரவாரம். ஆடம்பரப்பொருளது அன்று. உலம், உலர்தல், அற்றுப் போதல்.

41. அந்தம் : இறுதி, அந்தி, சந்தி இணைச் சொல். அந்திப்பொழுது; அந்திக்கடை, அந்தி மந்தாரை மக்கள் வழக்கு. அந்திமாலை - சிலம்பு. பகல் பொழுது முடியும் பொழுது அந்தி > அந்தம். உள்ளீட்டை உறிஞ்சியழிக்கும் பூச்சியின் பெயர் 'அந்து'.

42. கணம் : கண் இமைக்கும் பொழுது.

கண் + அம் = கணம். மன் + அம் = மனம் போல்.

43. கவரி : கவரி ஒன்றை ஒன்று பற்றி நிற்கும் மயிர்க்கற்றை. குளிர்க்காப்புப் போர்வை அன்னது! சடைமான் - யாக் - கவரிமான் என்பன ஓரின உயிரிகள்! பனிப்பகுதி வாழ்வின அவையே! மயிர் நீப்பின் வாழாக் கவரிமாவாம்.

❖❖❖

4. சொல்லாமல் சொல்லாடல்

திருவள்ளுவர் ஓர் அரிய உத்தியைக் கையாண்டார். அது "சொல்லாமல் சொல்வது" என்பது. நிரம்ப நிரம்பச் சொல்ல வேண்டும் ஒன்றைச் சொல்லாமல் சொல்வது என்பது அது. வியப்பாகத் தோன்றும்! சொல்லாமல் எப்படிச் சொல்வது? என வினாவவும் தோன்றும். ஆனால், இலக்கணர் வியப்பு அடைந்திலர். அதற்கு 'நுவலா நுவற்சி' என்றும், 'ஒட்டு' என்றும், 'பிறிது மொழிதல்' என்னும் முடிசூட்டி அணியாக்கி வீற்றிருக்கச் செய்தனர்.

1. பீலிபெய்

வலியறிதல் என்பதோர் அதிகாரம். வலியறிதலாவது வலிமையை அறிதல். தன்வலிமை, தான் செய்ய இருக்கும் செயல் வலிமை, அதற்கு இடையே தடையாக வருவதன் வலிமை, துணையாக அமையும். வலிமை எனப் பலவும் அறிதல் வலியறிதலாம். அதில்,

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்" (475)

என்பது ஒரு பாடல்.

பீலி – மயில்தோகை. பஞ்சினும் மெல்லியது அது. பஞ்சில் அழுக்கு எண்ணெய் தண்ணீர் பற்றி எடையைக் கூட்டல் உண்டு. ஆனால் மயில்தோகையில் அவை படிய மாட்டா. இறகு வெறும் கூடு! அதன் மயிர்க்கால் மிகமிக மெல்லியது.

ஆயினும் அதற்கென ஓர் கனம் இல்லாமல் போகாதே. மெல்லிய மயில்தோகை என அள்ளிப் போட்டுக் கொண்டே போனால், தாங்காப் பாரமும் ஆகிவிடக் கூடுமே! தாங்காப் பாரத்தை வலிய இரும்பால் ஆகிய அச்சும் தாங்க மாட்டாது ஒடிந்து விடும் தானே! என்கிறார். இதனால் என்ன சொல்கிறார் திருவள்ளுவர்.

'அளவுக்குமேல் பாரம் ஏற்றாதே என்பது மட்டுமா?

'அளவுக்குமேல் பாரம் ஏற்றினால் அச்சும் ஒடியும்

என்பது போல், எந்த ஒன்றையும் அளவுக்குமேல் செய்தால் கெடுதலே ஆகும். ஆதலால், அளவு பாராமல் எதனையும் செய்யாதே என்கிறார்.

உழைப்பா, ஓய்வா, உறக்கமா, உண்ணுவதா, செலவு செய்வதா, கொடை புரிவதா, திட்டுவதா, அடிப்பதா, பகைப்பதா – எவை எனினும் அளவோடு இருக்கட்டும்! அளவுக்கு மிஞ்சினால் அழிபாடு தான் ஆகும் என்கிறார்.

இருபது முப்பது வகையாகச் சொல்லிக் காட்டி, அறிந்து கொள்ள வைக்கிறார் அல்லவா!

✦✦✦

2. நுனிக்கொம்பர்

இதனை அடுத்த குறளில் இதே உத்தியை ஆள்கிறார்,

"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க் கிறுதி ஆகிவிடும்" (476)

என்பது அது. உச்சி வரை மரத்தில் போனவன் அதன் மேலும் போனால் என்ன ஆகும்? நுனிவரை போவதே கூடாச் செயல். ஏறியவனைத் தாங்காமல் முரியும், ஓடியும்; வளைந்தும் வீழ்த்தி விடலாம்! தாங்கும் அளவு தானே தாங்கும்! தாங்க முடியாநிலையில், தானும் ஒடியும், தன்மேல் ஏறியவனுக்கும் அழிவு ஆக்கும். ஆதலால் மேலும்மேலும் ஏறாதே என்று எச்சரிக்கும் இதுவும், அளவறிந்து, அதன் வலிமை அறிந்து செயலாற்று என்பது தானே!

மரத்தின் மேல் ஏறுவது பற்றியோ,

வண்டிமேல் பாரம் போடுவது பற்றியோ,

திருவள்ளுவர் நூல் எழுதினாரா? அறநெறி கூற வந்தவர் அப்பொருள் சொல்லல் அப்பொருளை வற்புறுத்துதற்கே எனக் கொள்ளல் முறையாம்.

இந்த இரண்டில் ஒன்று போதுமே என்றால், முன்னது, ஏற்றப்பட்ட வண்டியின் அச்சு ஒடிதல், பின்னது, ஏறியவன் உயிர்க்கு அழிபாடு. அளவறியாமை கொள்வார், கொள்ளப் படுவார் இருவருக்கும் தீமையாம் என்பதை விளக்க இரண்டும் கூறினார் என்க.

✦✦✦

3. நெடும்புனல்

இனி, இடனறிதலில் மூன்று குறள் கூறுகிறார்.

> **"நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
> **நீங்கின் அதனைப் பிற"** (495)

என்பது ஒன்று. நீரில் இருக்கும்போது முதலைக்கு வலிமை மிகுதி. நிலத்தில் இருக்கும்போது அதற்கு வலிமையில்லை. நீரில் எவ்வளவு வலியதையும் வெல்ல வல்ல முதலை, நீரை விட்டு நீங்கி நிலத்திற்கு இடைவெளி குறைத்து வந்துவிட்டால் எவ்வளவு வலிமை குறைந்ததானாலும் வெல்லப்பட்டுவிடும்! ஒன்றன் வலிமை எவ்விடத்தும் ஒரு நிலையில் இருப்பது இல்லை! இடந்தோறும் வேறுபடும்! உள்ளூரில் வலிய ஒருவனுக்கு அயலூரில் அந்த வலிமை இல்லை! பனி நிலத்தில் வாழ்ந்தவன் வெயில் நிலத்தில் திண்டாடுவான்! வெப்பநிலத்தில் பழகியவன் தட்பநிலத்தில் திணறுவான். இடம் பார்த்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்கிறார்.

✦✦✦

4. கடலோடா

இதனை அடுத்த குறள்,

> **"கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்**
> **நாவாயும் ஓடா நிலத்து"** (496)

என்பது. நிலத்திலே செல்லும் தேர், நீரிலே செல்லாது. நீரிலே செல்லும் கப்பல் நிலத்திலே செல்லாது. இரண்டும் செயலற்று ஒழியும் என்கிறார்.

இரண்டும் நிலமும், நீரும் தானே! ஒன்று போதுமே என்றால் போதும்! ஆனால் ஒன்றை வலியுறுத்த மூன்று முறை சொல்லல் உண்டு. அவ்வழக்கம் ஒரு பொருள் மேல் மூன்று வரல் என்பது.

கலிப்பாவில் வரும் தாழிசை என்னும் உறுப்பு, ஒரு பொருள்மேல் மூன்று வரும் என்பது இலக்கணம். கலித்தொகை, திருக்குறளுக்குப் பிந்தியநூல் அல்லவா! அதன் இலக்கணம் குறளுக்குக் கொண்டு கூறல் ஆகுமா? என்றால் ஆகாது!

வள்ளுவருக்குப் பிந்தியது கலித்தொகை.

வள்ளுவருக்கு முந்தியது தொல்காப்பியம்.

அதில் கலித்தொகை இலக்கணம் உண்டு.

அதில் ஒருபொருள் மேல் மூன்றடுக்கிய தாழிசை இலக்கணம் உண்டு.

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்கும் கலிப்பாவிற்கு அடிப்படை. ஆதலால் தொல்காப்பியர்க்கு முன்னமே கலிப்பா தமிழில் பாடப்பட்டது உண்டு! அதன் இலக்கணம் இருத்தலால் இலக்கியம் இல்லாமல் இலக்கணம் ஏற்படாது என்பது இலக்கணம்! இனி வேறொரு வகையால் எண்ணலாம்.

முன்னது ஒன்றற்கே ஈரிடத்து இருநிலை!

பின்னது, ஓரிடத்து மட்டுமே இயக்கம்! மற்றோர் இடத்து இயக்கமே இல்லாமை!

முன்னது வலிமை குறைதல்! பின்னது இயக்கமே இன்மை - வேறுபடவில்லையா?

✦✦✦

5. காலாழ்

இன்னும் இதே இடனறிதலில் ஒருகுறள்:

> **"காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா**
> **வேலாழ் முகத்த களிறு"** (500)

களப்போரில் வேற்படைக்கும் அஞ்சாத யானை! அது களர் - அளறு - உள்வாங்குமண் - நிலத்தில் இயல்பாக நடக்கிறது! என்ன ஆகிறது. அவ்வலிய பெரிய யானையை அம்மண் உள்வாங்கிச் செயலறச்

செய்துவிடுகிறது! அரையோ முக்காலோ முழுவதோ மூழ்கிப் போகிறது. முழுகும் நிலையில் ஒரு நரி பார்க்கிறது! யானை மேல் ஏறுகிறது! கவ்வுகிறது; கடிக்கிறது! யானையால் எதுவும் செய்யமுடியாமல் போகிறது. யானை நரிக்குத் தோற்றுப் போகிறது. ஏன்? உள்வாங்கு மண்ணால் தன்வலிமை இழந்து போய்விட்டதால்!

நரியை உள்வாங்கு மண் வாங்காது. நரி பெரியது இல்லை! பூனை நடையிடத் தாங்கும் மண், புலி நடையிட முடியாமல் ஆக்கிவிடும்! நரி நடையிட இடம் தரும் அளறு - களர் - நரியை உள்வாங்குவது இல்லை!

எறும்பு ஊர்ந்து கரையேற உதவும் இலை, எலி ஏறி ஊர்ந்து கரையேற உதவுமா?

அதனதன் உடலும் கூட இடத்தைப் பொறுத்து இயக்கமாகின்றது! இரண்டு சக்கரங்கள் - இரண்டு தண்டவாளங்கள் - ஊடே அசையாமல் கிடக்கும் ஒரு குழந்தை! தொடர்வண்டியே ஓடினாலும் ஊறுபாடு இல்லாமல் தப்பிவிடும் வாய்ப்பு உண்டு!

ஆனால், உருத்திரண்ட ஒருவர் தண்டவாளத்தின் ஊடு கிடந்தால் துண்டாவது அன்றித் தப்புவாரா? தனித்தனியே நோக்கித் தக்க முடிபு எடுக்க வேண்டியதற்கு ஒரு முடிந்த முடிபு இல்லை என்பது இதன் விளக்கமாம்!

ஆதலால் சொல்லாமல் சொல்லும் இதில், சொல்லாமல் அறியவேண்டும் குறிப்புகள் பல இருத்தல் எண்ணுவார் எண்ணத்திற்குத் தக விளக்கமுறும் என்க.

இரண்டு அதிகாரங்களில் ஐந்து குறள்களைச் 'சொல்லாமல் சொல்லும்' பொருள் குவியலுக்குச் சான்று காட்டியுள்ளார் வள்ளுவர்.

காலம் அறிதல்,

"பகல் வெல்லும் கூகையைக் காக்கை" (481)
"பொருதகர் தாக்கற்குப் பேருந்தகைத்து" (486)
"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து" (490)

என்பவையும், பிறவும் உவமைகள். ஆதலால், இவ்வகையில் கொள்ளப்படாவாம்.

✦✦✦

6. பரியது

சொல்லாமல் சொல்லாடலில்,

"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்" (599)

என்னும் ஊக்கமுடைமைப் பாட்டும் ஒன்று. யானை பருத்த உருவினது; கூர்மையான கொம்பாம் கருவியையும் இயல்பாகக் கொண்டது. ஆயினும் என்ன? அப்பருமைத் தோற்றமோ, வாய்த்த கருவியோ கொள்ளாப் புலியைக் கண்டு அஞ்சுகிறதே யானை? வெருண்டு ஓடுகிறதே புலியைக் கண்டு! புலி யானை மேல் பாய்ந்து ஏறி, வெற்றிக் கொடி நாட்டிவிடுகிறதே! புலியின் வலிமைதான் என்ன? அதன் உள்ளத்துறுதி தான் என்ன? என்கிறார். இதன் வழியாக என்ன சொல்கிறார் வள்ளுவர்?

நாட்டின் வளம் பரப்பு, வலிமை மிக்க படைப்பெருக்கம் - கருவி வாய்ப்பு என்பவற்றை ஓர் அரசு கொண்டிருந்தாலும், படைத்தலைமை ஊக்கமின்றி இருந்தால், அரசு ஆற்றலின்றி இருந்தால் - வலிய பகைவன் எளிதாக வென்றுவிடுவான் என்கிறார்.

"உருவமும் கருவியும் இருந்தால் போதா?
உள்ளத்து உறுதியே வெற்றி என்பது இது!
எச்செயல் செய்தாலும் அதன் வெற்றி
உள்ளம் சார்ந்தே - ஊக்கம் சார்ந்தே" - உள்ளது

என்றார். இதன் விளக்கம் போல,

"வேந்தமை வில்லாத நாடு" பயமின்று (740)
"வினைமாட்சி இல்லார்கண் இல்லதுஅரண்" (750)
"தானை தலைமக்கள் இல்வழி இல்" (770)

என வருவனவற்றைக் காண்க.

"உள்ளம் உடைமை உடைமை"
"உள்ளத் தனையது உயர்வு"
"உடையர் எனப்படுவது ஊக்கம்"
"உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை"

என வருவனவெல்லாம் இதன் விளக்கம் போல்வனவே.

✦✦✦

7. ஒலித்தக்கால்

இனிப் படைமாட்சி மூன்றாம் குறள்,

"ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்" (763)

என்பது கடற்பரப்புப் போலப்பரவிப் பெருகி நிற்கின்றன எலிகள்! ஒரோ ஒரு நாகப்பாம்பு படமெடுத்து நிற்கின்றது! அவ்வளவு தான்! எலிகள் அனைத்தும் எதிர்நிற்க மாட்டாமல் ஓடி ஒளிந்து தப்பின; என்பது எலி, பாம்பு பற்றிய ஆய்வா? இதன் வழியாக என்ன சொல்கிறார்?

துணிந்த வீரன் ஒருவன் முன், துணிவற்ற வீரர் நூற்றுவர் ஆயிரவர் எனக் கூடி நிற்பினும் எதிரிட மாட்டார்! முதுகிட்டு ஓடுவர் என்பதாம். மற்றும் துணிவாக ஒரு முயற்சியில் இறங்குவான் முன் ஆயிரம் தடைகள் வந்தாலும், அவையெல்லாம் உடைபட்டு ஒழிந்து போகும் என்பதாம்.

"படையின் எண்ணிக்கையே வெற்றி தந்துவிடாது,
படையின் உள்ளத்திண்மையே வெற்றி தரும்"

என்பது போர்க்களத்திற்கு மட்டும் உரியது அன்று. எத்தொழிலுக்கும் எத்துறைக்கும் ஏற்றது.

துணிவே வெற்றி என்பதாம்!
எண்ணிக்கை வெற்றியன்று!
எண்ணமே வெற்றி! என்க.

❖❖❖

ஓ. திருக்குறள் களஞ்சியம் - 1

நிறை மணிகள் (சுருக்கப்பட்ட மணிகள் இவை)

தனித்தமிழ்த் தந்தை மறைமலை அடிகள், தமிழ்த் தென்றல் திரு.வி.க, தமிழ்க் காசு, மொழி ஞாயிறு பாவாணர், செந்தமிழ் அரிமா சி. இலக்குவனார், மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார், அருட் போராளி வள்ளலார், பாராட்டுக் குயில் பாரதியார், கவிமணி தேசிய விநாயகர், பாவேந்தர் பாரதிதாசனார் ஆகிய நற்றமிழ் அறிஞர்களின் படைப்புகளை எல்லாம் கற்றுணர்ந்து ஆராய்ந்ததுடன் அவற்றுள் செறிந்து காணப்படும் மொழி, இனம், பண்பாடு நாட்டுப்பற்று ஆகிய நல் உணர்வுகளைப் பரப்புவதைக் கடனாகக் கொண்டதுடன், சங்க கால இலக்கியப் பரப்பெல்லாம் தெள்ளிதின் கற்று உணர்ந்ததுடன், தமிழர் வாழ்வியல் இலக்கணம் தொல்காப்பியத்தை நுண்ணிதின் கற்று புலமை வளத்தைப் பெருக்கியதுடன், தமிழர் வாழ்வியல் இலக்கியமாம் திருக்குறளைக் கற்று ஆராய்ந்து. உரையாசிரியர்கள் போட்டிருந்த திரைகளைக் கண்ணுற்று அவற்றை விலக்கித் திருக்குறளைத் திருக்குறளாகக் காட்டுவதே தம் வாழ்வியல் குறிக்கோள் எனக்கொண்டு, தாம் படைத்த ஐந்நூறு நூல்களில் திருக்குறள் தொடர்பாக மட்டும் தொண்ணூறு நூல்கள் படைத்த செந்தமிழ் அந்தணர் முதுமுனைவர் திருமிகு. இரா. இளங்குமரன் அவர்கள் திருக்குறளில் தேடித் தொகுத்த **ஒளிமணிகளின் வைப்பகமே இத்திருக்குறள் களஞ்சியம் ஆகும்.**

'தெய்வத் திருக்குறள், தேனெென இனிக்கும், வளத்தால் வானென உயர்ந்தது, கிடைத்தற்கரிய பெருஞ்செல்வம், கட்டிப்பாகு, வாய்த்த வனப்பு, வருங்கால வைப்பகம். காய்த்த கனிமரம், கண்கண்ட பொன்னேடு, தண்டமிழர் செய்த தவப்பயன், ஞாலத்துக் கோலோச்சும் நல்லரசு, மூத்த தமிழ்க்குடியின் மூவா வளச்சுடர், யாத்த அறவாழ்வு, யாண்டைக்கும் ஆகும் சுரப்பு, வற்றாப் பெருக்காறு, வாடாக் களஞ்சியம், கற்றார்க்கு அமைந்த கருவூலக் காப்பகம், பாட்டுள் பயின்று பலகாலும் நின்று பின் கூட்டுள் அமுதாகிக் கொஞ்சும் கொடை வாழ்வு. வாட்டும் அனற்கோடை வாழ்வை இளந்தென்றல் ஊட்டும் நிலா முன்றில் ஆக்கும் ஒளிப்பேறு, கற்பார் தமை எல்லாம் காதல் மகவாக்கி நற்பால் நயமூட்டும்

நாடறியாத் தாய் வடிவு. முந்தைத் தமிழ்ச் சான்றோர் மன்னு சுருத்தெல்லாம் 'இருந்தா' என வழங்கும் ஈடில்லாச் செம்பொருள், வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி காட்டித் தெய்வத்துள் வைக்கத் திறம் சொல்லும் தெய்வம்" எனத் **திருக்குறள் விடு தூதில்** சொல்லிய சொல்லெல்லாம் வெறும் சொல்லல்ல உண்மை, உண்மை என்பதை மெய்ப்பித்துக் காட்டும் நற்சான்று இத்திருக்குறள் களஞ்சியம் என்பதைக் கற்பவர் அனைவரும் உணரத் தவறார்.

'திருக்குறள் களஞ்சியம்' பயன்படுத்தும் முழுஉரிமை தம்பி தங்கையர்க்கே என்பதைச் சொல்லாமல் சொல்லவே **'தம்பி தங்கையர்க்கு'** எனத் தொடங்குகிறது. திருக்குறள் இறைவாழ்த்து குழந்தைகட்கு ஏற்ற கோலம் தாங்கி வருவது சாலப் பொருத்தமானதாகும்.

குழந்தையை 'வெல்லக் கட்டி நீயே தான்' என அழைத்து 'வெல்லக் கட்டித் திருக்குறளால் வெற்றி கொள்வாய் என்றுமே!' என வாழ்த்தில் தொடங்குவது மிக உயர்ந்த நோக்கத்திற்கு அடித்தளம் ஆகும்.

திருக்குறள் போற்றி 108-ம், உலகம் போற்றுமாறு வாழ வழி காட்டும் வாழ்வியல் வழி காட்டியாகும். சமய வெறி அகன்று, உண்மை வழிபாடு மேலோங்கத் தொகுக்கப் பட்ட உயரிய இறை வழிபாட்டு நெறியாகும்.

பெரு நாவலரும் பேரர்களும் என்னும் அறிவுக்கு விருந்தான கற்பனை உரையாடல்களில் பெரு நாவலர் கூறிவரும் விளக்கம் குழந்தைகள் மனத்தில் எளிதாக அமர்ந்து கொள்வதுடன் திருக்குறளுக்குப் பேரர்கள் கூறும் உரை, பெயரும் பெருமையும் மிக்க நய உரையாகும்.

527 ஆம் குறட்பாவிற்குப் பேரர்கள் இணைந்து,

"காக்கை கரைதல் கேட்டிடுவீர்!
கலந்தே உண்ணல் பார்த்திடுவீர்!
ஆக்கம் உடையார் கடமையினை
அந்தக் காக்கை உரைத்திடுமே!"

இது குழந்தையர் நடையில் அவர்கள் பாடுவது.

ஊழ் என்னும் மயக்கப் பொருளின் அடி வேர் முதல் முடி வித்து வரைக்கும் கண்டு, மூழ்கி எடுத்த முத்துப் போல "உலகத்து இயற்கை"

என ஒரு முறைக்கு மும்முறை பலாச் சுளையாகப் பளிச்சிடத் தந்த கொடையாளர் வள்ளுவர், அதன் இருவேறு தன்மையும் இயம்பியவர், பிறர் பிறர் போல் நாற்பால் கூறாமல் தமிழ் நெறி முப்பாலே எனப் பண்டையோர் நெறியைக் கண்டு பகுத்து வைத்து, முப்பால் எனப் பின்னவர் பெயரீடு செய்யப் பெருவளம் அருளிய பெருந்தக்கார் திருவள்ளுவரே மொழிந்ததுடன், திருவள்ளுவர் சிறப்புகள் என்பவை திருக்குறளின் சிறப்புகளே. படைப்பாளர் தாமே படைப்பின் மூலவர் எனக் கூறி நிறைவு செய்துள்ளமை திருவள்ளுவர் பிறந்த தமிழினத்தில் பிறக்கும் பேறு பெற்றமை பெரும் பேறு எனப் பெருமிதம் கொள்ளத் தூண்டுவதுடன் நம் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து செயல்படத் தூண்டுதலாகவும் அமைவதைக் காண முடிகிறது.

மூச்சீர் மணிகள் 108-ம் நாற்சீர் மணிகள் 90-ம் கற்பவர்களைச் சீர்மையுடைய நன்மணிகளாக மாநிலத்தில் ஒலிக்கச்செய்யும் ஆற்றல் பெற்றன. வள்ளுவ நெறியில் வாழ விரும்புவார் 1330 குறட்பாக்களையும் படிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. எளிமையாய் இனிமையாய் இலக்கணம் போன்று கட்டமைப்புடன் அமைந்துள்ள மணிகளைக் கற்று உணர்ந்து கடைப்பிடித்து வாழக் கிடைத்த மணிக்குவை இவையாம்.

திருக்குறள் பதிப்பு - பரப்புநர். திருக்குறள் கவனகம் பற்றிய செய்திகள் நல்லதொரு ஆவணமாகும்.

நினைக்கும் நெஞ்சில் திருக்குறள் பரந்து விரிந்த ஆலமரமாய்க் காட்சி அளிக்கிறது. நன்னடை நடக்கத் திருக்குறள் ஊன்றுகோலாய் உதவுகிறது. திருவள்ளுவர் நாம் வாழ்க்கைப் பாதையில் சரியாக நடக்கப் பயிற்சி அளிக்கிறார். தாய்மை உணர்வுடன் ஆக்கிப் பரிவுடன் வழங்கும் அன்புத் தாயே திருவள்ளுவர். திருக்குறள் விந்தை மிகு அறிவுப் பூங்கா; திருக்குறள் உலக வைப்பகம்; திருக்குறள் ஒப்பற்ற துறைவாரி அங்காடி! தொகுப்பங்காடியும் ஆகும். தேவைக்குத் தக எடுத்துத் தேவைக்குத் தகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இருப்புச் சரக்காகவும் வைத்துக் கொள்ளலாம். எந்தவொரு இடரும் இல்லாமல் எவரும் போற்ற வெளிப்பட்ட பாகு நூல் திருக்குறள். உள்ளத்தின் உள்பொருளாம் உணர்வைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்ட வல்ல 'உருவு கதிர்' திருக்குறள்.

உடலும் உள்ளமும் உணர்வும் ஒருங்கே மகிழச் செய்வது உயிர் தளிர்க்க வைக்கும் ஒப்பற்ற இன்ப அமிழ்து திருக்குறள். உயிர் மருந்துக் கடை திருக்குறள், அங்கே ஒவ்வொருவர் நிலைக்கும் – நோய் நிலைக்கும் – தகத்தக உரிய மருந்துகளைச் சுவை விருந்தென வழங்க உயிரிரக்க மருத்துவர் வள்ளுவப் பெருந்தகையும் உண்டு. வானின்று வழங்கிவரும் அமுத மழை போல மண்ணின் மதிநலச் சுரப்பெல்லாம் ஒன்று திரட்டிப் பொழியும் அமுதசுரபி திருக்குறள்; எண்ணிய எண்ணியாங்கு எய்தி இன்புறத் தமிழ் மண்ணிலே வாய்த்த அமுத சுரபி திருக்குறள்.

அக வாழ்வுக்கே அருங்குவைப் பொருளாக – அரிதின் அரிதாகக் குளித்தும், கழுவியும், பிளந்தும் பட்டை தீற்றி எடுத்தும் வள்ளுவரால் வழங்கப்பட்ட மணிகளைக் கொண்ட பேழை திருக்குறள். வேண்டும் வனப்பெல்லாம் ஈண்டியமைந்தது இன்பத் திருக்குறள்.

உலகெல்லாம் கூட்டுண்டு ஒழுக்கத்தின் தலைமணியாகக் கொள்ளத்தக்க ஒப்பற்ற ஒரு நூல் திருக்குறள். நேற்றைச் சோறு இன்று பழஞ்சோறு! ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளாம் நம் மறை – இன்றும் புதிது நாளையும் புதிது! என்றும் புதிது!

ஈராயிர ஆண்டுகளின் அறிவு வளர்ச்சி – குமுகாய வளர்ச்சி – எத்தனை விரிந்தது! அது விரிய விரியத் தானும் விரிந்து தன்னைப் பெருக்கிக் காட்டுகிறதே திருக்குறள். விரும்பிய வாழ்வு நலங்களை நயங்களைத் தரும் குறளுக்கு இணை ஏது?

அமிழ்தக் கொள்கலமாகத் திகழ்வது திருக்குறள்! உயிர் தளிர்க்கச் செய்வது திருக்குறள்! என்னவர் என் மண்ணில் என் மொழியில் இயற்றிய உலக நூல் திருக்குறள். அதனால் தமிழனாக, தமிழ் மொழி பேசுபவனாக, தமிழ் மண்ணில் வாழ்பவனாக இருக்கும் பேறு – பிறவிப் பேறு பெரும் பேறு ஆகும்.

நம் மறையாம் திருக்குறள் உடலும் காக்கும்; உயிரும் காக்கும்; குடிமையும் சுற்றமும் இனமும் ஒருங்கே காக்கும் மெய்மறை ஆகும். காலம் கடந்தும் இடம் கடந்தும் கருதுவார் கருத்துப் பொருள்களை எல்லாம் காட்டிக் காட்டி விழிப்புறுத்தும் அளவில் நில்லாமல் விழுப்பம் சேர்க்கவும் வல்லது திருக்குறள்.

அக இருள் நீங்க அகத்தே ஒளி செய்யும் ஒரு விளக்கு வேண்டும். அது திருக்குறள்.

"அறம் தகழி; ஆன்ற பொருள் திரி; இன்பு
சிறந்த நெய்; செஞ்சொல் தீ தண்டு - குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு."

மாசுகளுக்கு மூலம் மனமாசே! மனமாசு இல்லாமையே அறம், அன்பு, அருள், ஆக்கம் எல்லாம் எல்லாம்! "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" என்பது வள்ளுவர் வாய்மொழி. பண்புக் காப்பும் தற்காப்பும் வேண்டுவோர் வாழ்வுக்கு முற்காப்பாகவும் முதற் காப்பாகவும் கொள்ள வேண்டும் சேமக்காப்பு முப்பாலாகும்.

பொன்னாய், பவழமாய், முத்தாய், மணியாய், வயிரமாய், ஏன் ஒளியமாய், ஒள்ளியமாய் ஓரிடத்துக் கொள்ளத் தக்க சுரங்கமாக புதையலாக - கருவூலமாக இருப்பது திருக்குறள்.

திருக்குறள் போல ஒரு நூலேணி உலகில் உண்டோ? மாந்தரைப் பிரித்தும் பிளந்தும் பிணக்கியும் காட்டாத சால்பு நூல் திருக்குறளை அன்றி உலகில் ஒன்று உண்டோ? இல்லை என்பதே விடை. வாழ்வியலுக்கு வாய்த்த சிக்குவாரி திருக்குறளாம். மாறாச் சுவை, மறவாச் சுவை மனம் தளிர்க்கும் உயிர் தளிர்க்கும் மாண் சுவையினது முப்பால். அப்பால் இருக்க எப்பால் வேண்டும்?

பனித் துளியில் பனை முழுதாகத் தெரிவது போல், குறள் வெண்பாவில் மலை மலையாம் பொருள்கள் காணரிய காட்சியாய்த் திகழ்கின்றன. 'ஆலமர் வித்தின் அருங்குறள்' என்பது கம்பர் இரட்டுறல். அவ்வித்தினை உளம் கொண்டால் வானளாவிய ஆலினைக் கண்டு தெய்வ நிலை எய்தலாமே!

ஆலில் தோன்றி ஆலில் நிறைவது, ஆலாய்ப் பறக்கும் இந்நினைக்கும் நெஞ்சம்!

குறள் நெறி வாழ்வு எளியது; இனியது; ஏற்ற மிக்கது என்பதை முப்பத்து நான்கு வகையில் முறையில் எடுத்துக் காட்டி வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வ நிலை பெறத் தூண்டும் உள்ளத்துடிப்பின் வெளிப்பாடே நினைக்கும் நெஞ்சம் ஆகும்.

திருக்குறள் நினைவாற்றல் வழிகாட்டியாய் விளங்கும் திருமழபாடி, பன்மாண் முனைவர் அ. ஆறுமுகனார் அவர்கள் காட்டும் பத்துப்

படிகளிலும் படிப்படியே ஏறி நினைவாற்றல் எனும் மாளிகையின் உச்சம் தொடக்காட்டும் வழிமுறை பின்பற்றத் தக்கதாகும்.

குடிமை, குடி செயல் வகை இவையென வகுத்துக் கூறிய அவர் 'ஒழுக்கமுடைமை குடிமை' என்றார்.

உயர்வாவது உயர்திணை ஒழுக்கம். அவ்வொழுக்கம் இல்லாப் பிறவி அஃறிணை. அதனால், ஒழுக்கமுடைமை குடிமை என்ற அவர் "இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" என்றார்.

பிறப்பு ஒப்புக் கூறிய அவர் இழிந்த பிறப்பு என்று கூறிய உண்மை உணராமல். இழிந்த சாதிமை எனக் கொண்டனர். சாதி என்பதே விலங்கின் சாதி, பறவைச் சாதி, மீனின் சாதி என அஃறிணை உயிர்களின் இனப்பகுப்புக் குறிப்பதே அன்றி மக்கட் பிறப்புச் சுட்டாதாம். தொல்காப்பியம் கற்றார் இதனைத் தெளிவாக அறிவர். ஆதலால், இழிந்த (குறைந்த) ஐயறிவு, நாலறிவு முதலாம் பிறப்பு ஆகிவிடும் என்பதாம்.

கற்றார்க்கும் கல்லார்க்கும் உள்ள வேற்றுமை மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேற்றுமை என்றதும். மக்கட் பண்பு இல்லாதவர் அரம் போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர் என்றதும் எண்ணினால் இவ்வுண்மை புலனாம். (நல்ல அகச் சான்று)

எழுமையும் ஏமாப்புடைத்து, எழு பிறப்பும் உள்ளுவர் என வரும் இடங்களை நோக்கி வள்ளுவர் பிறப்பு, மறுபிறப்பு, எழுபிறப்பு ஏழேழு பிறப்பு என்றெல்லாம் கருத்து உடையவர்.

எழுபிறப்பும் உள்ளுவர் என்றால் உயிரோடும் உடலோடும் இருப்பவரால் தாமே கூடுவது? (நல்ல வினா)

எழுமையும் 'ஏமாப்பு' என்றால் பாதுகாப்பாக இருத்தல் காண்பார்க்கும் புலப்பட வேண்டும் அல்லவோ! மாறிப் பிறக்கும் பிறவியை அவரவரே உணரா நிலையில், பிறரோ உணரக் கூடும். (நல்ல சிந்தனை)

முட்டைக்குள் இருக்கும் குஞ்சுக்கு வெளியுலகம் தெரியாவாறு போல, இவ்வுலகில் இருக்கும் வரை அப்பாற்பட்ட உலகோ, அப்பாற்பட்ட பிறப்போ இருத்தல் மெய்ப்பிக்கப் பெறாச் செயல்களாம். (நல்ல ஆய்வு)

விண்ணூர்தியும் செயற்கைக் கோள்களும், இயற்கைக் கோள் ஆய்வுகளும் கொள்வார் தாமும் இது 'இன்ப உலகம்' (சுவர்க்கம்) இது நிரயம் (நரகம்) என்று கண்டு வந்தது உண்டா? கூறியது உண்டா? (அறிவியல் நோக்கு அணுகு முறை)

ஆதலால், எழு பிறப்பு என்பது ஏழு தலைமுறை என்பதேயாம். மரபு வழி ஆய்ந்து மகவைத் தீர்மானிக்கும் அறிவியலை அறிக! ஒருவர் ஒரு குடும்பத்திற்குச் செய்த உதவியை அவர்தம் வழிமுறையர் பலரும் பாராட்டல் காண்க!

நூலறிவும், நுண்ணறிவும், பட்டறிவும் வாய்ந்த நல்லறிஞர் வள்ளுவரின் நோக்கைப் புலப்படுத்தும் பாங்கு பாராட்டத் தக்கது. "மெய்ப்பொருள் காண்பது தானே.

'வாழ்வியல் சிக்கல்களும் வள்ளுவத் தீர்வுகளும்' என்னும் இந்நூற் பகுதி தனி வாழ்வு. குடும்ப வாழ்வு, பொது வாழ்வு ஆகிய முத்திற வாழ்வுச் சிக்கல்களை முன்வைத்து தீர்வுகளை எடுத்து மொழியும் வாழ்வியல் வழிமுறை காட்டும் மிகப் பயனுடைய பகுதியாகும்.

களஞ்சியத்தின் ஐந்தில் ஒரு பாகத்தை நன்மணிகளால் நிரப்புவது: ஐம்பது உட்தலைப்புகளில் 240 திருக்குறள் மணிகளின் ஒலியையும் ஒளியையும் கண்டு கேட்டு மிகு பயன் எய்தலாம்.

"நாம் தாமா உலகின் முதற்பிறப்பு. நம் சிக்கல் தானா உலகின் முதற்சிக்கல்; உலகம் எத்தனை எத்தனை கோடிப் பேர்களைக் கண்டது! எத்தனை எத்தனை கோடிச் சிக்கல்களைக் கண்டது! அவர்களெல்லாம் சிக்கலுள் சிக்கிச் சீரழிந்தோ போய் விட்டனர். சிக்கலை அவிழ்த்துச் சீர்மையாய் வெற்றி கண்டு அச்சிக்கல்களெல்லாம் மண்டியிட்டுக் கிடக்கப் பலப்பலர் சிக்கல்களையும் தாமே தீர்க்கவல்ல திருத் தோன்றல்களாக எத்தனை பேர் விளங்கியுள்ளனர்? அத்தகைய பெருமக்களுள் உலகுக்கு ஒரு மாமணியாய் ஓங்கிய திருமாமணியாம் ஒருவர் திருவள்ளுவப் பெருந்தகை!"

"வாழ நூல் செய்த வள்ளுவர் வாழ்வாங்கு வாழ வழிகாட்டியாகவும் வள்ளுவம் செய்தார். வாழ்வாங்கு வாழ்வார்க்கு உண்டாகும் வாழ்வுச் சிக்கல்களையும் வளமாக எண்ணித் தீர்வுக் காணவும் வழிகாட்டினார் என்பது தக்கமுடிவாம்.

தனியாளால் செய்ய முடியாததைச் செய்வதற்காகத் தானே, தனியாளர் வழங்கிய வாக்குகளைப் பெற்று ஆட்சிக் கட்டில் ஏறியது?

அதனைச் செம்மையாகச் செய்ய முடியாமல் சோரம் போகும் அரசு, ஆட்சிக் கட்டிலில் இருக்கும் உரிமை உடையது ஆகுமா?"

"நாட்டில் வன்முறைகள் தலைதூக்கி விட்டன; அலை கொலைகள் பெருகிவிட்டன. குண்டு நாகரிகம் உண்டாகி விட்டது என்பார் உளர் எனின், அவர் எண்ணிப் பார்த்தல் வேண்டும். பிறக்கும் போதே வன்முறையாளராய் – போராடியராய் தற்கொலைப் படைஞராய்ப் பிறந்து விட்டனரா? அவர்க்கு என்ன நெஞ்சம் என்பது இல்லவே இல்லையா? அவர்களுக்கும் பெற்றோர், மனைவி, மக்கள், சுற்றம் என்பன இல்லவே இல்லையா? வாழவே விரும்பாமலா போய் விட்டனர். நல்வாழ்வு வாழவே- அனைவரும் விரும்பாமலா போய் விட்டனர். நல்வாழ்வு வாழவே- அனைவரும் ஒருமித்த நல்வாழ்வு வாழவே விரும்பியவர் அவர் என்னும் உண்மையை உணர வேண்டுமே! அவ்வாழ்வுக்குத் தடையும் இடைக்கேடும் தாங்காத எத்துயரும் உண்டாயதால் தானே வலிய பாறையாய் இறுகிப் போயினர். வாழ்வா சாவா என்னும் நிலையிலே தானே வாழ்வதற்காகச் சாவை மேற்கொள்ளலாயினர்.

அது தன்னலமா, பொது நலன் போற்றிக் கொள்ள முடியாத இக்கட்டால் மேற்கொண்ட முடிவா? இவற்றைச் சுட்டிக் காட்டினால், வன்முறையாளர் போராடிகள் எனப்படுவார். ஆளும் கொடுமையாளர்களாலும் வஞ்சத் தலைமையர்களாலும் அதிகார வல்லூறுகளாலும் அந்நிலை தவிர வேறு வழி இல்லை என்னும் கொடுநிலைக்குத் தள்ளப்பட்டவர்களேயாம்."

நூலாசிரியர், பேச்சை விரும்புவதை விட எழுத்தை விரும்புபவர், எழுத்தை விரும்புவதை விட செயலை விரும்புபவர். வள்ளுவர் காட்டும் நெறியில் செயல்படுபவர். ஆகவே, இற்றை நாளில் வள்ளுவத்திற்குப் புறம்பான நடைமுறைகளைக் காணுங்கால் வேதனையில் துடிக்கும் துடிப்பின் வெளிப்பாடுகளே மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. நூலாசிரியர் யாரும் புண்படக் கூறும் இயல்பினர் அல்லர். ஆனால், தவறை உணர்ந்தும் எடுத்துச் சொல்லவில்லையானால் அது நாட்டுக்கு நல்லதல்ல என்பதாலும்! எதிர்காலம் குற்றம் குறை நீங்கிய நன்னாடாக மிளிர வேண்டும் என்னும் நன்னோக்கில் மொழிவதும் வள்ளுவ நெறியே ஆகும்.

திருக்குறள் வழி ஒப்புரவமைந்த நாட்டின் பேறு எனும் தலைப்பில் வழங்கும் பன்னிரு நெறிகளும் நூலாசிரியரின் ஆழ்ந்த புலமையின் வெளிப்பாடு மட்டுமன்று, எதிர்கால நலம் கருதிய முதிர்ந்த நாட்டுப்பற்றின்

வெளிப்பாடாகும். நாடாள்வோருக்கும் ஆளத் துடிப்போருக்கும் நல்ல வழிகாட்டியாகும்.

1. உழைப்பு இல்லாமல் பொருள் சேர்க்கும் வழிகளை அகற்றல் வேண்டும்.
2. உழைப்பவர்க்கு உணவு இல்லை என்னும் நிலை இருக்கவே கூடாது.
3. ஒருவன் தனிவாழ்வுக்காக இரத்தலும், அவனுக்கு ஈதலும் சட்டப்படியான குற்றமாக்கப்பட வேண்டும்.
4. பொது நலப் பணிக்குப் பொருள் திரட்டலும், கொடுத்தலும் போற்றிப் பாராட்டப்பட வேண்டும்.
5. கண்மூடி வழக்கத்தைத் தூண்டும் காட்சியும் பொழிவும் கட்டாயம் தடுக்கப்பட வேண்டும்.
6. மாந்தனை மாந்தன் தாழ்த்தி அடிமைப்படுத்தும் எவ்வழக்கத்தையும் அடியோடு அகற்ற வேண்டும்.
7. பிறப்பால் உயர்வு தாழ்வு எண்ணப்படாத நிலையும், செய்யும் தொழிலால் உயர்வு தாழ்வு கருதப்படா நிலையும் இருத்தல் வேண்டும்.
8. கல்வி என்பது பண்பாட்டுக்கும் தொழில் திறத்துக்கும் உதவும் கருவியாக இருக்க வேண்டுமேயன்றி, அலுவல் தேடும் கருவியாக மட்டும் இருத்தல் கூடாது.
9. தனிக்குடும்பம் எனினும் கூட்டுக் குடும்பம் எனினும் எல்லை இல்லாமல் நிலம் புலம் சொத்து வைப்பு எனப் பொருள் குவிப்பகமாக இல்லாமல் கட்டுப்படுத்தப்பட்ட அளவினதாக இருத்தல் வேண்டும்.
10. மயக்கும் குடிவகைகள், பொருள் பறிக்கும் களியாட்டங்கள், பரிசுச் சீட்டுகள் ஆகியவை முற்றாகத் தடுக்கப்பட வேண்டும்.
11. படைத்துறை, காவல் கடனோடு, வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் தொழில் இயக்கமாகவும் விளங்குதல் வேண்டும்.
12. ஏற்றுக் கொண்ட திட்டத்தை முற்றாக நிறைவேற்றும் ஆளுமை அரசே அரசெனத் தொடரும் வகையில் மக்கள் விழிப்புடையவராக விளங்க வேண்டும்.

இளங்குமரனாரின் ஒப்புரவுக் கோட்பாடு மலரும் நாளே நாட்டிற்கு நன்னாளாகும்.

வள்ளுவர் காட்டிய வழியில் வாழ முடியுமா? முடியும். குறளைக் கற்றும் கற்காமலும் குறள் நெறியில் வாழ்ந்தோர். வாழ்வோர் உலகில் எண்ணற்றவர் உள்ளனர். அவர்கள் அனைவரையும் உலகம் அறியாது. வள்ளுவ நெறி வாழ்பவரை உலகிற்குத் தெரிவிக்கும் உயர்ந்த நோக்குடன் படைக்கப்பட்டதே **"வையகம் தழுவிய வாழ்வியலாகும்"**

களஞ்சியத்தில் சேர்த்து வைத்துள்ள மணிகளில் இதுவே பேரளவினதாகும்.

ஐம்பது அதிகாரங்களில் தெரிவு செய்த, அறுபது குறள் நெறிக்கு உரிய சான்றாளர்களின் வாழ்க்கை நிகழ்வுகளில் ஒன்றை இனிய செந்தமிழ் நடையில் கற்பவர் உள்ளத்தைத் தன்பால் ஈர்த்து, தாமும் உடன்பாட்டுக் குறள் வாழ்வராய் வாழ்ந்து சிறக்க வேண்டும் என்னும் கூர்ந்த பார்வையை உருவாக்கி அமைகிறது.

வாழ்ந்தவர் வரலாறு நல்லதொரு வழிகாட்டியும் ஆகும்.

அறிஞருள் அறிஞன் எடிசன்!

தட்டுத் தடுமாறி வந்தான்:

தள்ளாடிக் கீழே விழுந்தான்:

விழுந்த இடமோ சாலையோரச் சாய்க்கடை;

விழுந்ததைக் கண்ட ஒருவன் ஓடிப் போய்த் தூக்கினான்;

நினைவே இல்லை;

ஆனால் மூச்சு இருந்தது.

அருகில் இருந்த கடைக்கு ஓடித் தண்ணீர் கொணர்ந்தான். முகத்தில் வீசி நன்றாய்த் தெளித்தான். மெல்லெனக் கண்ணைத் திறந்து பார்த்தான்.

முகத்தில் தண்ணீர் தெளித்துப் பிழைக்க வைத்தவன்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது." 102.

"பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது." 103.

"உதவி உதவிவரைத்தன்று, உதவி
செய்யப்பட்டார் சால்பின் வரைத்து." 105.

என்னும் மூன்று குறட்பாக்களுக்கும் இலக்கியமாய் அமைவதை ஆசிரியர் விளக்கும் பாங்கே தனிச் சிறப்புடையதாகும்.

புகழ் - நூல்

திருவள்ளுவர் வரலாறு.

திருவள்ளுவர் வரலாற்றை உள்ளவாறு அறியத் திருக்குறளைத் தவிர்த்து வேறு மெய்ப்பிக்கும் உண்மை ஆவணம் எதுவும் அகப்படவில்லை. ஆகவே, பொய், புனைவு, கற்பனைக் கதைகளை வரலாறாகக் கொள்வது பயனற்றது.

ஆகவே, திருவள்ளுவரைத் திருவள்ளுவராகவே காணவும் காட்டவும் விரும்பும் நூலாசிரியர். திருவள்ளுவர் ஒப்பற்ற ஓர் உலகம் : அவர் வாழும் உலகத்தைத் தம்முள் கொண்டு, அவ்வுலகுக்காகத் தம் வாழ்வை ஒப்படைத்து, ஒப்பற்ற ஒரு நூலை ஆக்கிய பெருமகனார் "------" எனத் தொடங்கி 447 ஆம் பக்கத்தில் "பெரு மூதாளராக இலங்கிய நிலையில் தம் உண்மையறிவும் படிப்பறிவும் பட்டறிவும் மெய்யுணர்வுமாகிய எல்லாம் உலகை உய்விக்குமென்னும் அருளுள்ளத்தால் திருக்குறளை உலகுக்குத் தந்து தெய்வமாப் புகழ் எய்திய இறைமையர்" எனக் கூறுவதுடன் 'இவை வள்ளுவ வழிக் கண்டவை' என்றும் குறித்துத் தம் கடமையைச் செல்விதின் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கீடு, திருவள்ளுவர் நாள் கொண்டாட்டம் திருவள்ளுவர் ஆண்டு முறையை அரசு ஏற்று நடைமுறைப்படுத்தி வருவதையும் பதிவு செய்துள்ளார்கள்.

தனித்தமிழ் நடையில் அனைத்து நிலையினரும் பயன்பெறுமாறு அழியாக் கருவூலமாக ஐந்நூறு நூல்களை தமிழன்னைக்கும் படைத்த அறனறிந்த மூத்த அறிவுடையாராம் நூலாசிரியர் 4.4.2018ஆம் நாள் சங்கரன் கோயிலில் நிகழ்த்திய தமிழ் முறைத் திருமணம் 4604 வது திருமணமாகும்.

அவர்கள் திருவள்ளுவர் தவச்சாலை நிறுவியவர்கள், குறளிய, குறளாயப் பணியில் முதன்மையராய் அமைந்து பணிபுரிந்தவர்கள். அவர்கள் இயற்றிய 'திருக்குறள் போற்றியும் திருக்குறள் வாழ்வியல் உரையும் உலகெல்லாம் பரவி போற்றப்பட்டு வருகின்றன.'

'வாழ்வியல் படம் என்றால் இப்படி அமைய வேண்டுமென்று வாழ்வியல் படங்கள் பல எடுத்த அமெரிக்க நாட்டு அன்பர் பாராட்டுமாறு நெய்வேலி மருத்துவர் அ. செந்தில் ஓவியர் திரு செல்வம் எடுத்த ஆவணப்படம் நல்ல வரவேற்றையும் பரப்புதலையும் பெற்றது.

இணையற்ற பரப்பகமாக விளங்கும் இணையத்தின் வழி அன்னாரின் பிறப்பு, படிப்பு, பணி, தொண்டு, நூலாக்கம், பொழிவு, பெற்ற விருதுகள் பண்பு நலன்களைப் பரப்பியவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் திருநிறை கல்பனா சேக்கிழார் ஆவர்.

அவர்கள் பணியை மலையகத்தில் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டவர்கள் போற்றுதலுக்குரிய மாரியப்பனாரும் சிவனாரும். அவ்வாறே சிங்கையில் பயன்படுத்திக் கொண்ட பேரறிவாளர் கோவலங்கண்ணனார். அமெரிக்க நாட்டிற்கு அழைத்துப் பெருமைப்படுத்தியவர் மருத்துவத் தோன்றல் பிரபாகரர் ஆவார். கானாடு காத்தான் பெருந்தக்கார் இராம் மோகன் பயன்படுத்திக் கொண்டமை எனப் பரந்து விரிந்தது.

களங்கமிலாத் தொண்டு கடலென மாக்கடலென விரிவுறும் என்பது திண்ணமாம்.

திருக்குறள் களஞ்சியம். பன்மணிக்குவியலை ஒருங்கே சேர்த்து வைத்துள்ள அறிவுக் களஞ்சியமாகும். திருக்குறளை எந்தக் கோணத்தில் ஆராய முற்படுவார்க்கும் ஒப்பற்ற கருவி நூலாகும். ஆசிரியரின் பரந்துபட்ட நுண்மாண் நுழை புலத்தையும் அயரா உழைப்பையும், வாழ்வியல் துலங்க வள்ளுவத்தைப் பரப்ப வேண்டும் என்னும் உட்கிடக்கையையும். தெற்றெனப் புலப்படுத்தும். அரிய செயல் அரிய முயற்சி! தமிழன்னைக்கு நிறைவை உண்டாக்கும் அருங்கலமாகும். படைப்பாளர் மேலும் பலப்பல படைத்து நின்ற புகழுடன் நீடுவாழ அன்னையை வணங்கி வாழ்த்துகிறேன்!

"வள்ளுவம் வாழ்வியலாய்த் துலங்க வேண்டும்"

மு. படிக்கராமு



இரா. இளங்குமரனாருடன் மேத்தா வாணர்

Print@ The Printing House, Try-23. Ph:2420121